
திருத்தலப் பெருமை

தஞ்சைக் கோயில்கள்

பாகம் – 4



சண்டேச அனுக்ரக மூர்த்தி
(கங்கை கொண்ட சோழபுரம்)

பரணீதரன்

திருத்தலப் பெருமை

பாகம் நான்கு

பரணீதரன்

கலைஞன் பதிப்பகம்
10 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை - 600 017

Price. Rs. 32

Thiruthalap Perumai (Part. IV)

By

Bharanidharan ©

First Edition : April 1992.

Published by

Kalaignan Pathipagam
10 Kannadasan Salai
T. Nagar, Madras - 600 017.

Printed at

Alaigal Achagam
Madras - 600 024.

நன்றியுரை

இந்த நான்காவது பாகத்துடன் 'திருத்தலப் பெருமை' நூல் நிறைவு பெறுகிறது. இதில் பெரியவையும், சிறியவையு மாக ஏறக்குறைய ஐம்பது ஆலயங்கள் இடம்பெற்றுள்ளன. 'திருத்தலப் பெருமை'யில் மொத்தமாக ஏறக்குறைய தஞ்சை மாவட்டத்திலுள்ள இருநூறுக்கும் மேற்பட்ட ஆலயங்கள் அடங்கியுள்ளன.

தஞ்சை டவுனில் மட்டும், பெரிய கோயில் என்றழைக் கப்படும் ஸ்ரீபிருகதீச்வரர் ஆலயத்தைத் தவிர, சுமார் பதினைந்து கோயில்கள் உள்ளன. இதுவரை அவற்றைத் தரிசிக்காதவர்களுக்கு இந்நூல் பெரும் உதவியாயிருக்கும். டவுனை அடுத்துள்ள தஞ்சை மாமணிக் கோயில், ஸ்ரீ தஞ்சை புரீச்வரர், திருத்தட்டாங்குடி ஸ்ரீ வசிஷ்டேச்வரர் கோயில்களைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

சோழ மன்னர்களின் கலைப் படைப்புக்குச் சான்று களாக இன்னும் காட்சி தரும் தாராசுரம், கங்கைகொண்ட சோழபுரம் கற்கோயில்களும் கண்டு பிரமிக்கத் தக்கவை.

நன்னிலம் வட்டத்திலுள்ள சில முக்கியமானப் பாடல் பெற்ற ஆலயங்களும், வேறு சிறிய, ஆனால் அபூர்வக் கோயில்களுமாக சுமார் இருபது தலங்கள் இடம் பெற்றுள்ளன.

ஆனந்த விகடனில் வெளியான எனது அனைத்துப் படைப்புக்களையும் நல்ல முறையில் நூல் வடிவில் கொண்டு வந்துள்ள 'கலைஞன்' திரு. மாசிலாமணி அவர்களுக்கும் அவரது மகனார் திரு. நந்தா அவர்களுக்கும் எவ்வாறு நன்றி கூறுவதென்றே எனக்குத் தெரியவில்லை.

என் ஆலய தரிசன யாத்திரைகளுக்கு உற்சாகமளித்து, உதவி புரிந்ததோடு, நூல் வடிவங்களில் புகைப்படங் களைப் பயன்படுத்தவும் அனுமதி தந்த ஆனந்த விகடன் ஆசிரியருக்கு நெஞ்சார நன்றி செலுத்துகிறேன்.

அன்பன்

பரணீதரன்

இந்நூலில் இடம்பெறும் தலங்களும் ஆலயங்களும்

தஞ்சை மாமணிக்கோயில்

தஞ்சாவூர் என்ற பெயரைக் கேட்டதும் எல்லோ ருக்கும் பெரிய கோயில் என்று அழைக்கப்படும் ஸ்ரீபிரஹ திச்வரர் கோயில்தான் உடனே நினைவுக்கு வரும். அங்குள்ள வானளாவிய விமான கோபுரமும் பெரிய சிவலிங்கமும் பெரிய நந்தியும் கண் முன் தோன்றும்.

தஞ்சாவூரில், தஞ்சைபுரீச்வரர் என்ற சிவன் கோயில் இருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்? தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில், வெண்ணாற்றங்கரையில் அக்கோயில் உள்ளது. தஞ்சை நாயகித் தாயாரும் வெண்ணாற்றங்கரையில் உள்ள ஸ்ரீவீரநரசிங்கர் ஆலயத்தில் தான் உறைகிறாள்.

விண்ணாற்றாங்கரையைத் தான் வெண்ணாற்றங்கரை என்று அழைக்கிறார்கள். அவ்வழியே செல்பவர்கள், அங்கு ஐந்தாறு கோயில்கள் இருப்பதைப் பார்த்திருக்கலாம்.

வடவாறு, வெட்டாறு, விண்ணாறு, குடமுருட்டி, காவிரி என்னும் ஐந்து ஆறுகளை உடைய ஐயாறுத்தலம், திருவையாறாயிற்று. இவற்றில் விண்ணாற்றங்கரையில் உள்ள மூன்று கோயில்கள் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசமாக விளங்குகின்றன. பூதத் தாழ்வார், நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்—மூவரும் தரிசித்துப் போற்றிப் பாடிய, வீரசிங்கப் பெருமாள், மணிக்

குன்றப் பெருமாள், நீலமேகப் பெருமாள் மூவரும் இத்திருத் தலத்தில் கோயில் கொண்டிருக்கின்றனர்.

தஞ்சை மாநகரத்தை பராசர க்ஷேத்திரம் என்று புராணங்கள் பெருமையாகப் பேசுகின்றன. ஆதி காலத்தில் இது குபேரனால் நிர்மாணிக்கப் பெற்று, 'அளகாபுரி' என்று பெயர் பெற்று விளங்கியது. 'தஞ்சையாளி நகர்' 'தஞ்சை மாமணிக் கோயில்' என்று ஆழ்வார்களால் சிறப்பாகப் பேசப்பட்டது. திருமால் 'தஞ்சகன்' என்ற அசுரனைக் கொன்று, அவனது வேண்டுகோளின்படி இந்நகருக்குத் 'தஞ்சாவூர்' என்று பெயர் ஏற்படும்படி அனுக்கிரகித் துள்ளார் என்று தலபுராணம் கூறுகிறது.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில்,

'எம்பிரானெந்தை யென்னுடைச் சுற்றம்
எனக்கர சென்னுடை வாணாள்,
அம்பினாலரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்த வெம்மண்ணல்,
வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி,
நம்பிகாளுய்ய நான் கண்டுகொண்டேன்,
நாராயணாவென்னும் நாமம்'

என்கிறார்.

'தஞ்சை மாமணிக் கோயில்' என்பது மணிக்குன்றப் பெருமாளைக் குறிப்பதாகக் கூறப்பட்டாலும், அப்பெயர் தற்போது வெண்ணாற்றங்கரையிலுள்ள இந்த மூன்று சந்நிதி களையும் சேர்த்தே குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

இம்மூன்று சந்நிதிகளும் முன்பு தஞ்சையின் உட்பகுதியில், பெரிய கோயிலின் வடமேற்குப் பகுதியில் மேல வெளித் தோட்டம் என்று கூறப்படும் இடத்தில் இருந்தனவாம். ரெட்டிப்பாளையத்திற்குச் செல்லும் பாதையிலுள்ள சிங்கப்பெருமாள் குளத்திற்கு மேற்புறத்தில்

ஸ்ரீவீரசிங்கப் பெருமாள் சந்நிதியும். அதற்கு நேர் வடக்கே யுள்ள காளிமேடு என்ற பகுதியில் ஸ்ரீமணிக்குன்றம் ஆலயமும், தற்போது 'ராஜா கோரிக்குளம்' என்று கூறப் படும் புராதன 'அமிர்த புஷ்கரணி'யின் மேற்கில் ஸ்ரீ நீலமேகர் சந்நிதியும் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இவை தஞ்சையிலிருந்து விண்ணாற்றங்கரைக்குச் சென்ற விவரங்களைக் குறித்து சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாகியிருக்கின்றன. அவற்றின்படி, இக்கோயில்கள் 11-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் தஞ்சை மாநகரின் மேற்குப் பகுதியில் இருந்ததாகவும், பின்னர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இவை சில காரணங்களுக்காக விண்ணாற்றங்கரையை அடைய நேர்ந்ததென்றும் கூறப் படுகிறது. இங்கு புதிய கோயில்களை அமைத்தவர், 16-வது நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட ஒரு நாயக்க மன்னர் என்பதையும் அறிய முடிகிறது.

முன் காலத்தில் தனித்தனியே இருந்த இக்கோயில்களை ஒன்றாக இணைத்துப் பாடினார்கள் ஆழ்வார்கள். அதன்படி இம்மூன்று சந்நிதிகளையும் ஒரே இடத்தில் இணைத்தான் நாயக்க மன்னன்.

இக் கோயில்கள் பற்றி பவிஷ்ய, பிரும்மாண்ட புராணங்களில் சில விளக்கங்கள் கிடைக்கின்றன.

இந்தத் தலத்தில் பராசர முனிவர் தவம் புரிந்து வந்தார். அதற்கு இடையூறு விளைவிக்க அரக்கர்கள் வந்தாக வேண்டுமே! தண்டகன், தாரகன், தஞ்சகன்— இம்மூன்று கொடிய அரக்கர்களும் எங்கிருந்தோ வந்து சேர்ந்தனர். அவர்கள் தங்களுக்குள் 'அழிவுப் பணி'யைப் பிரித்துக் கொண்டு தவத்தைக் கலைக்க முற்பட்டனர். பராசரரின் தவ வலிமையால் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

பராசரர் அருகிலிருந்த திருக்குளத்தில் அமிர்தத்தைக் கலந்து விட்டு அதன் வாடையில் கடும் தவமியற்ற அமர்ந்தார். அந்நீரைப் பருகியவர்கள் அழிக்க முடியாத பலம் பெற்று வாழ்ந்தார்கள். இந்த ரகசியம் அரக்கர்களுக்குத் தெரியாமல் இருக்குமா? அவர்களும் அந்நீரைப் பருகத் தொடங்கினார்கள். அதன் பலனாக, அவர்கள் எல்லையற்ற வலிமை பெற்று, பராசரரையே திணற அடித்தார்கள். மக்களையும் துன்புறுத்தினார்கள்.

பராசரர் சிவபெருமானிடம் சென்று முறையிட்டார். பரமன் மாகாளியை அனுப்பி வைத்தார். அரக்கர்கள் அமிர்தம் உண்டு பெரும் பலம் பெற்றிருந்ததால், அவர்களை அவளாலும் வெல்ல முடியவில்லை. பின்னர் பராசரர் மகாவிஷ்ணுவிடம் தஞ்சம் அடைந்தார். திருமால் கார்முகிலாய்த் தோற்றம் கொண்டு அமிர்த புஷ்கரணியின் நீரைப் பருகி விட்டார். நீர் அடியோடு வற்றி விட்டதால், அரக்கர்களால் அமிர்தத்தைப் பருக முடியவில்லை. அதனால், அவர்கள் சிறுகச் சிறுகப் பலமிழந்தார்கள். நீலமேகப் பெருமாள் மணிபர்வதப் பெருமாளாக வடிவெடுத்து தஞ்சாசுரனோடு போரிட்டார். அவன் யானை உருக்கொண்டு தாக்கினான். உடனே நாராயணன், வீரசிங்கப் பெருமாளாய் உருமாறி தஞ்சகனைக் கொன்று வீழ்த்தினார்.

இறக்கும் தறுவாயில் அவன் சரணாகதியடைந்து, மூன்று பெருமாள்களும் என்றென்றும் அங்கு தரிசனம் அளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும், தன் பெயரில் அந்த நகரம் அழைக்கப்பட வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான். கருணாமூர்த்தி அவ்விதமே அவனுக்கு அருளாசி வழங்கினார். எம்பெருமான் அந்த அருள் வழங்கக் காரணமாக இருந்த பிராட்டியே தஞ்சை நாயகித் தாயாராக ஸ்ரீ வீரசிங்கப் பெருமாள் சந்நிதியில் காட்சி தந்து கொண்டிருக்கிறாள்.

திருமங்கையாழ்வார்,

'என் செய்கேனடியேனுரையீர் இதற்கென்று
மென் மனத்தே யிருக்கும் புகழ்.
தஞ்சையாளியைப் பொன்பெயரோன்
நெஞ்சு மன்றிடந்தவனை தழலே புரை
மின் செய்வாளரக்கன் நகர்பாழ்படச்
சூழ்கடல் சிறைவைத்து இமையோர் தொழும்
பொன் செய்மால் வரையை மணிக்குன்றினை
யன்றி என்மனம் போற்றியென்னாதே'

என்று பெரிய திருமொழியில் கூறுகின்றார்.

'தஞ்சையாளியை' என்று திருமங்கை ஆழ்வாரால் போற்றப்பெற்ற ஸ்ரீ வீரசிங்கப் பெருமாள் ஆலயத்தின் கருவறை விமானம் வேத சுந்தர விமானம் என்ற பெயருக்கேற்ப சிற்ப எழிலுடன் அழகு வடிவமாகக் காட்சி தருகிறது.

கருவறையில் ஸ்ரீ நாராணப் பெருமாள் நரசிம்ம மூர்த்தியாய்த் திகழ்கிறார். சாதாரணமாக யாளி முகத்துடன் திகழும் சிங்கப் பெருமாள், இங்கு சிம்ம முகத்துடனே வீற்றிருப்பது அபூர்வமாகவும், அருள்பாலிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

கருவறையில் ஓர் ஓரமாக இருக்கும் மார்க்கண்டேயரின் சிறிய வடிவம், ஸ்ரீ வீரநரசிங்கர் அவருக்குத் தரிசனம் அளித்து ஆட்கொண்ட நிகழ்ச்சியை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

அரண்மனை தேவஸ்தானத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வரும் இம்மூன்று கோயில்களிலும் 1964-ம் ஆண்டு திருப்பணிகள் நடந்து குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. தற்போது இக்கோயிலில் ஆண்டாளுக்குத் தனிச் சந்நிதி கட்டியிருக்கிறார்கள். இக்கோயிலின் தல விருட்சம் மகிழ மரம்.

ஸ்ரீ மணிக்குன்றப் பெருமாள், ஸ்ரீ அம்புஜவல்லித் தாயாருடன் எழிலுற அமைந்திருக்கும் மணிகூட விமானம் அழகிற்கு அழகூட்டும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

'தஞ்சை மாமணிக் கோயில்' என்று குறிப்பிடப்படும் மூன்று கோயில்களிலும் மூல மூர்த்தி ஸ்ரீமந் நாராயணனே. அப் பரம்பொருளே மூன்று விதமான பெயர்களைச் சூட்டிக் கொண்டு பக்தர்களை அருள்பாலிக்கிறார்.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் கூறுகிறார்:

'உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றானை, அன்று பேய்ச்சி
விடம் பருகு வித்தகனைக் கன்று மேய்த்து
விளையாடவல்லானை வரைமீகானல்,
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும்
கடும்பரிமேல் கற்கியை நான் கண்டு கொண்டேன்
கடிபொழில் சூழ்கடல்
மல்லைத்தலசயனத்தே'

நம்மாழ்வார், திருவாய்மொழியில் 'மாசறுசோதி யென் செய்யவாய் மணிக்குன்றத்தை' என்று கூறியுள்ளதால், அவர் இந்தக் கோயிலை மங்களாசாசனம் செய்துள்ளதாகக் கொள்ளப்படுகிறது. கடந்த குடமுழுக்கின்போது இந்தக் கோயிலில் தாயாருக்குத் தனிச் சந்நிதி கட்டியிருக்கிறார்கள். சிறிய கோயிலேயானாலும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கு சொர்க்க வாசல் உண்டு.

அடுத்துள்ளது ஸ்ரீ நீலமேகப்பெருமாள் ஆலயம். திருமங்கையாழ்வார் இவரைக் 'கருமுகில்' என்று தூய தமிழில் அழகுற அழைக்கிறார். கருவறையின் மீதுள்ளது சௌந்தர்ய விமானம்.

இறக்கும் தறுவாயில் தஞ்சகாசுரன் ஸ்ரீ நீலமேகப் பெருமாளிடம் சரணடைந்து தன் பெயரில் அந்த ஊர் விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பெருமாள், 'அளகாபுரி'க்குத் 'தஞ்சைபுரி' என்று பெயர் வழங்கி, அதுவே பின்னர் தஞ்சாவூர் என்று மருவியதாகத் தல புராணம் கூறுகிறது அல்லவா? அந்த நிகழ்ச்சியை நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருப்பது மூல மூர்த்தியின் திருவடியில் காணப்படும் தஞ்சகாசுரனின் உருவம். அதை அர்ச்சகர் அக்கறையோடு நமக்குக் காட்டுகிறார்.

ஸ்ரீ செங்கமலவல்லித் தாயார் சமேதராக இங்கு எழுந் தருளியிருக்கும் ஸ்ரீ நீலமேகப் பெருமாள், கருவறையில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சியளிக்கிறார். இக்கோயிலில் லட்சுமி நரசிம்மரும் லட்சுமி ஹயக்ரீவரும் இருக்கின்றனர். மண்டபத் தூணில் ஸ்ரீ யோகநரசிம்மரும், ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியும் இடம் பெற்றிருக்கின்றனர்.

கருவறையில் சற்று மறைவாக, அற்புதமான அரிய விக்ரகங்கள் இருப்பதைக் கண்டேன். திருமங்கையாழ் வாரும், நம்மாழ்வாரும், உடையவரும் இருக்கிறார்கள். அதிசயக் காட்சியாக, நம்மாழ்வார் பீடத்தில் ஸ்ரீ ராமா னுஜரும், ஸ்ரீ ராமானுஜரின் பீடத்தில் சுவாமி தேசிகனும் அமர்ந்திருக்கிறார்கள். இம்மாதிரி வேறெங்கும் நான் கண்டதில்லை.

ஸ்ரீ நீலமேகப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகரின் உருவச்சிலை ஒன்று உள்ளது. அது சுமார் 650 ஆண்டுகளுக்கு முன் அவருடைய திருக்குமாரர் ஸ்ரீ நைனாச்சாரியார் அளர்களால் பிரதிஷ்டை செய்யப் பட்டது. ஒவ்வோர் ஆண்டும் ஸ்ரீ தேசிகனுக்கு வாகனங்கள், வேத பாராயணங்களுடன் பத்து நாட்கள் உற்சவம் நடத்தப்பட்டு வருகிறது. ஸ்ரீ நைனாச்சாரியார் வசித்து வந்த இடமாக அருகில் ஒரு சிறு கட்டடத்தைக் காட்டு கிறார்கள்.

இந்தக் கோயிலில் ஓர் அழகான நர்த்தன கிருஷ்ணன் விக்ரகம் இருக்கிறது. மிக நேர்த்தியான வார்ப்பு. பழைமை யானதும்கூட. இவரை 'ஓடத்துறை கிருஷ்ணன்' என் கிறார்கள். இது திருவையாற்றிலுள்ள ஓடத்துறைப் பெருமாள் கோயிலைச் சேர்ந்ததால் அந்தப் பெயர் நிலைத்து விட்டது.

இந்தக் கோயிலில் ஸ்ரீ நீலமேகப் பெருமாள் ஸ்ரீ லட்சுமி சமேதராய்க் கருட சேவை சாதிப்பது ஒரு சிறப்பான நிகழ்ச்சியாகும். சாதாரணமாக மற்ற எல்லாத் தலங் களிலும் பன்னிரண்டு கருட சேவைதான் உண்டு. இங்கு வைகாசித் திருவோணத்தன்று பதினெட்டு கருட சேவை நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கும்.

ஸ்ரீ நீலமேகப் பெருமாள் கோயிலுக்குப் பக்கத்தில் தெருவையொட்டி ஒரு பழமையான பெருமாள் கோயில் இருக்கிறது. அவரை வேளூர் வரதராஜர் என்றழைக் கின்றனர். விண்ணாற்றங்கரைக்குப் புராதனப் பெயர் வேளூர். அதனால் அப் பெயரைக் கொண்டுள்ளார். ஆனால், பழைய கோயில் அழிந்து போய்த் தற்போது கருவறையும் அர்த்த மண்டபமும் மட்டும் இருக்கின்றன.

அப் பகுதியில் ஸ்ரீ கல்யாண வெங்கடேச்வரர் ஆலயமும் உள்ளது. அந்தக் காலத்து கல்-சுண்ணாம்புக் கட்டடம். காரையெல்லாம் உதிர்ந்து சிதிலமடைந்திருக்கிறது. விமானம் பெருமளவில் பழுதடைந்திருக்கிறது. உடன் வந்த பெரியவர் ஒருவர், 'இந்தக் கோயிலைப் பற்றி ஒருவருமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இக் கோயிலிலிருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி மகா வரப்பிரசாதி. இந்தக் கோயி லுக்குத் திருப்பணி நடைபெற வேண்டும் என்று அவரை நான் பிரார்த்திக்காத நாளில்லை' என்று ஆதங்கத்தோடு கூறினார்.

ஸ்ரீ கல்யாண வெங்கடேச்வரர் ஆலயத்திற்கு அருகில் ஒரு புதிய காசி விச்வநாதர் கோயில் இருக்கிறது. அது ஒரு

ப்ரைவேட் கோயில். சொந்தக்காரர்கள் மட்டும்தான் வழி படுகிறார்கள். வெளியார் அனுமதிக்கப்படுவதில்லை. முன் கதவு பூட்டப்பட்டேயிருக்கிறது.

வெண்ணாற்றங்கரையில் 'சந்தியா மண்டபம்' என்ற பெயரில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. அதுவும் ஒரு காலத்தில் பெரிய கோயிலாக இருந்து, தற்போது கருவறையுடன் மட்டும் நிற்கிறது. விமானத்தில் செடிகள் மண்டிக் கிடக்கின்றன. அம்பாள் சிலை கொள்ளையழகு.

பன்னிரண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 வைணவத் தலங்களைத் திவ்விய தேசங்கள் என்கிறோம். '108 திவ்ய தேச யாத்ரா ப்ரபாவ சந்திரோதயம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளபடி சோழ நாட்டில் நாற்பது திவ்விய தேசங்கள் உள்ளன. திருவரங்கம் முதலாவதாகவும், தஞ்சை மாமணிக் கோயில் ஏழாவதாகவும் இதில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது. மாமணிக் கோயில் இரண்டாவது திவ்விய தேசம் என்றும் மூன்றாவது என்றும் கூறப்படுவதும் உண்டு. மூன்று கோயில்கள் அடங்கிய இந்தத் திவ்விய தேசத்திற்கு 'மாமணிக் கோயில்' என்று திருமங்கையாழ்வார் பெயர் சூட்டியிருக்கிறார்.

திருமங்கையாழ்வார் பூர்வ காலத்தில் தமது நான்கு சீடர்களின் உதவியோடு, செல்வங்களையும் பொருட்களையும் அபகரித்து பாகவத சமாராதனை செய்து வந்தார். ஒரு சமயம் இத்தகைய வேட்டைக்குச் சென்ற போது, தமது பிறந்த தலமான சீர்காழிக்கு அருகிலுள்ள திருவாலிக்கு ஒரு மைல் தொலைவிலுள்ள ஒரு தோப்புக்கு வந்து சேர்ந்தார்.

எம்பிரானும் பிராட்டியும் புது மணத் தம்பதி கோலத்தில் பட்டாடைகளுடனும், தங்க, வைர, ரத்ன நகைகளுடனும் அங்கு எழுந்தருளினார்கள்.

அவர்கள் மீதிருந்த அணிகலன்கள் திருமங்கை மன்னனைக் கவர்ந்தன. அவர்களை வழி மறித்து, ஆபரணங்களைப் பறித்து ஒரு மூட்டையாகக் கட்டி ஓரிடத்தில் பத்திரப்படுத்தினார். பின்னர், அவரும் சீடர்களும் அதை எடுக்க முனைந்தபோது, முடியாமல் திணறினார்கள்.

புது மணத் தம்பதி ஏதோ மந்திர சக்தியினால் மூட்டையைத் தரையுடன் பந்தனம் செய்து விட்ட ரகசியம் திருமங்கை மன்னனுக்குப் புரிந்துவிட்டது. அந்த மந்திரத்தைத் தனக்குச் சொல்லித் தரும்படி கேட்டார். எம்பிரான் கருணையோடு பக்தரை நோக்கி, 'ஓம் நமோ நாராயணா' என்ற எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தருளினார்.

திருமங்கை மன்னன் ஞானக் கண்ணால் இம்மூன்று சந்நிதிகளையும் ஒன்றாகத் தரிசித்துக் கண்ணைத் திறந்த போது, புது மணத் தம்பதி மறைந்து விட்டனர்.

பின்னரே, எம்பிரானைக் குறித்து 1,130 பாடல்களைப் பாடினார் திருமங்கை மன்னன். 'வாடினேன் வாடி' என்ற முதல் பத்துப் பாட்டிலேயே குடந்தைக்கு முதலிடத்தைத் தந்து, இரண்டாம் நிலையாகத் தஞ்சை மாமணிக் கோயிலையும் பாடியிருக்கிறார் அவர். அஷ்டாக்ஷர சொரூபியாக ஸ்ரீமந் நாராயணன் திருமங்கை மன்னனுக்கு இத்தலத்தில் காட்சி தந்தருளினார்.

ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீநிகமாந்தமகா தேசிகன் இவர்களுடைய விக்ரகங்களுடன் திருமங்கையாழ்வாரின் அழகிய விக்ரகம் ஒன்றும் ஸ்ரீநீலமேகப் பெருமாள் ஆலயத்தில் உள்ளது.

தஞ்சைபுரீச்வரர்

ஸ்ரீ தஞ்சைபுரீச்வரர் ஆலயத்தின் தல புராணம், அளகாபுரி புராணத்திலும் பிரமாண்ட புராணத்திலும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கல் தளம் போடப்பட்டுள்ள பெரிய வெளிப் பிரகாரங் களுடன் கூடிய பெரிய கோயில். கருங்கல்லால் ஆன பழைய மண்டபம். மூன்று நிலைகள் கொண்ட சிறிய ராஜகோபுர மாயிருந்தாலும் சிதிலமடையாமல் எழிலுடன் திகழ்கிறது. மதிற்சுவர்களில் காரை பெயர்ந்திருந்தாலும் அவற்றின் மீது அமர்ந்திருக்கும் சுதையினாலான நந்தி பிம்பங்கள அம்சமாக விளங்குகின்றன. துர்க்கையம்மன், சண்டி கேச்வரர், தட்சிணாமூர்த்தி, நடராஜர் அனைத்தும் அருளைப் பொழியும் வடிவங்கள். நவக்கிரகங்கள் சிறிய சிற்பங்களானாலும் சிந்தையைக் கவர்கின்றன. உள் மண்ட பத்திலுள்ள பெரிய துவாரபாலகர்கள் பழமைச் சிறப்போடு திகழ்கின்றனர்.

இங்குள்ள உற்சவ மூர்த்திகளும் வனப்புடன் வார்க்கப் பட்டிருக்கின்றன. இங்குள்ள முருகப் பெருமான், கரத்தில் வில்லுடன் காட்சியளிக்கிறார். அதனால் 'வில்லேந்திய வேலன்' என்று சிறப்புப் பெயரும் பெற்றிருக்கிறார்.

ஆனந்தவல்லி அம்பாள் கையில் சூலம் உள்ளது.

இக் கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது என்றும், தஞ்சைபுரீச்வரர் அவனுடைய குலதெய்வம் என்றும் தெரிய வருகிறது.

இத் திருத்தலத்தின் புராணத்தைப் பார்ப்போம்.

தஞ்சகன், தண்டகன், தாரகன் ஆகிய மூன்று அரக்கர் களும் இழைத்த இன்னல்கள் தாங்க முடியாமல் பராசர

மகரிஷி பிரும்மா, விஷ்ணு, சிவன் இவர்களைக் குறித்துப் பிரார்த்திக்கிறார். சிவபெருமான், மகாசக்தியான பத்ர காளியை ஏவுகிறார். தாரகன் காளியின் மீது அம்புமாரி பொழிகிறான். அவற்றையெல்லாம் தன் உடலில் ஏற்றுக் கொண்ட காளிதேவி மிகவும் உக்ரமூர்த்தியாகி, தாரகனை வீழ்த்துகிறாள்.

பின்னரே, மாயவனான மகாவிஷ்ணு, பல மாய உருவங்கள் எடுத்துப் போரிட்டுத் தண்டகனையும் தஞ்சகனையும் வெவ்வேறு உருவங்கள் எடுத்துக் கொன்று வீழ்த்துகிறார்.

அரக்கர்களின் வதம் முடிந்தவுடன், வானுலகிலிருந்து முப்பத்து முக்கோடி தேவர்களும் மும்மூர்த்திகளின் மீது மலர் மாரி பொழிந்தனர்; வாழ்த்தி வணங்கினர். அப்போது காளிதேவி, உடலெங்கும் விழுப்புண்களுடன் காட்சியளிக்கிறாள். அவளையே, பட்டணத்தின் எல்லைக் காளியாக அமரும்படி பகவான் அருளுகிறார். அவளே தஞ்சைபுரீச்வரர் கோயிலிலிருந்து ஒரு பர்லாங் தொலைவில், கோடியம்மனாக வீற்றிருக்கிறாள்.

அவளைச் சாந்தப்படுத்தும் கோலத்துடன், அவளது திருச்சந்நிதிக்கு நேரே ஆனந்தவல்லியையும், பக்கத்தில் சிவபெருமானையும் பிரதிஷ்டை செய்து பராசரர் பூஜிக்கத் தொடங்கினார். மேலும் அவர் மகாவிஷ்ணுவை, வீர நரசிம்மராகவும் லட்சுமீ சமேத நீலமேகப் பெருமாளாகவும் மணிக்குன்றனாகவும் சேவை சாதிக்கும்படி வேண்ட, எம்பிரான் அவ்வாறே அவருக்குக் காட்சிகள் தந்தருளினார்.

இத் திருத்தலத்தில்தான் பராசரர் ஸ்ரீ விஷ்ணு புராணத்தை இயற்றியதாகவும் தல புராணம் கூறுகிறது.

ஆனந்தவல்லியின் திருச்சந்நிதியிலிருந்து பார்த்தால் கோடியம்மன் கோயில் தெரியும். கோடியம்மன் மூலமூர்த்தி, சுதையினாலானது. அவளது திருவடியில் தாரகனின்

வடிவம் இருக்கிறது. எதிரில் நந்திகேச்வரர் இருக்கிறார். சூலாயுதமும் இருக்கிறது. அம்மனுக்கு இருபுறமும் பச்சைக்காளி, பவழக்காளி இருக்கின்றனர்.

இக்கோயிலில் செவ்வாய்-வெள்ளி முக்கியமான நாட்கள். மாசி-பங்குனியில் உற்சவம்.

புன்னைநல்லூர் ஸ்ரீராமர்

திருச்சியையடுத்த சமயபுரத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் மாரியம்மன் சிறப்புப் பெற்றிருப்பது போல், தஞ்சையையடுத்த புன்னைநல்லூர் மாரியம்மன் மிகவும் புகழ் வாய்ந்தவள். ஆனால், அந்த மாரியம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள ஸ்ரீராமர் கோயிலைப் பற்றி வெளியுலகிற்கு அதிகமாகத் தெரியாது. அரண்மனை தேவஸ்தானத்தைச் சார்ந்த அந்தப் புராதனக் கோயில் நாங்கள் கண்டபோது மிகவும் பழுதடைந்த நிலையி லிருந்தது. கோபுரங்களும் மதிற்சுவர்களும் சிதிலமடைந் திருந்தன. இந்தக் கோயிலுக்கும் வெண்ணாற்றங்கரை ஸ்ரீ நீலமேகப் பெருமாள் கோயிலுக்கும் ஒரு தொடர்பு உண்டு.

தஞ்சையிலிருந்து கிழக்கே மூன்றாவது மைலில் மாரி யம்மன் கோயிலிருக்கிறது. கோயிலின் பெயரிலேயே அவ் வூரும் விளங்குகிறது. புராணத்தில் அது புன்னை ஹவன க்ஷேத்ரமாகக் கூறப்பட்டுள்ளது. புன்னை மரக் காடுகள் மண்டிக் கிடந்த இடமாதலால் 'புன்னைநல்லூர்' என்ற பெயரும் அதற்குண்டு.

மாரியம்மன் கோயிலுக்கு வடக்கே வெகு அருகில் அமைந்திருக்கிறது ஸ்ரீ கோதண்டராமசுவாமி ஆலயம். ஆனால், இங்கு வரும் கூட்டம் அங்கில்லை. ஓர் ஊரில் ஒரு

கோயில் பிரபலம் ஆகிவிட்டால், அவ்வூரிலுள்ள இதரக் கோயில்களில் கூட்டம் இருப்பதில்லை. இதற்குப் புன்னை நல்லூரும் ஓர் எடுத்துக்காட்டு.

ஸ்ரீராமர், இளையபெருமாள், சீதாப் பிராட்டியார், ஆஞ்சநேயர்—நால்வரும் கம்பீர ீதாற்றத்துடன் கூடிய பெரிய சாளக்ராம மூர்த்திகள். அழகுடன் அருள் ஒளிரும் திவ்ய சேவை சாதிக்கும் திருமேனித் தோற்றங்கள். மனம், சொல், செயல் மூன்றையும் ஒருநிலைப் படுத்தும் விசேஷ தரிசனம்.

மூன்று உற்சவமூர்த்திகளும் அபூர்வ பிம்பங்கள், கோதண்டராமனாகச் சேவை சாதிக்கும் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை விட்டுக் கண் அகல மறுப்பதில் வியப்பில்லை. மந்தஹாசம் மலரும் திருமுக மண்டலமும், மணிகள் அசைந் தாடிச் சிற்றொலி எழுப்பும் வளைந்த கோதண்டத்தை ராகவன் லாவகமாக ஏந்தியிருக்கும் எழிற்பாங்கும், மூன்று வளைவுடன் கூடிய திருமேனியும் நம்முள் பக்தியுணர்வுடன் கலையுணர்வையும் தூண்டி நம்மைப் பரவசத்தில் ஆழ்த்து கின்றன. வலப்புறம் சாமுத்திரிகா லட்சணங்களுடன் அன்னை ஜானகியும், இடப்புறம் மூத்தவன் சேவைக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு விட்ட இளவல் இலக்குவனும் எழுந்தருளியுள்ளனர்.

இக் கோயிலில் தவறாமல் தரிசிக்க வேண்டியவர் ஸ்ரீஜய வீர ஆஞ்சநேய மூர்த்தி. தனி அலங்கார மண்டபத்தில் இவர் எழுந்தருளியிருக்கிறார். தூக்கிய வலக் கையும், வெற்றிச் சின்னமாகிய தாமரை ஏந்திய இடக் கையுமாக விச்வ ரூபமாக, நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக் கிறார். இவர் வரப்ரஸாதி. நம் பிரார்த்தனைகளை ஸ்ரீ ராமபிரானிடம் சேர்ப்பித்து, நமக்குப் பலன் பெற்றுத் தருபவர்.

இந்த ஆலயத்தில் ஸ்ரீ நிகமாந்த மகா தேசிகனுக்குத் தனிச் சந்நிதி உள்ளது. நம்மாழ்வாரும், திருமங்கையாழ்

வாரும், உடையவரும் சேவை சாதிக்கிறார்கள். தென் பிராகாரத்தில் சங்கு சக்ரத்துடன் கூடிய துதிக்கை ஆழ்வாருக்கும் தனிச் சந்நிதி இருக்கிறது. தல விருட்சமான புன்னை மரத்தடியில் ஸ்ரீ ராமபிரானது திருவடிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

இக் கோயில் தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னரான பிரதாபசிங் மகாராஜா அவர்களால் கட்டப்பட்டது. அவரது காலம் கி.பி. 1739 முதல் 1763 வரை. அந்த வம்சத்தில் வந்த ராணி எமுனாம்பாள் பாஹிசாகேப் அவர்களால் கோயிலுக்காக நாற்பது வேலி நஞ்செய் நிலங்கள் அளிக்கப்பட்டன. அதைத் தவிர வேறு பல திருப்பணிகளும் செய்துள்ளார். அவர் நினைவாக அவருடைய பெயரை முன்வைத்து எ. ஸ்ரீகோ. என்று இக் கோயில் அழைக்கப்படுகிறது. இவருக்குப் பின்னர் வந்த பட்டமகிஷியான மாது ஸ்ரீ காமாட்சியம்பாவும் இக் கோயிலில் திருப்பணிகள் செய்து, இங்கு பணிபுரிபவர்களுக்குச் சௌகரியங்களும் செய்து தந்திருக்கிறார். தற்போதும் அரண்மனை தேவஸ்தானத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

இங்கு பங்குனி மாதம் அமாவாசை தொடங்கி ஸ்ரீராமநவமி பிரும்மோற்சவம் நடைபெறுகிறது. சதுர்த்தியன்று கருட சேவையும், அஷ்டமியன்று நவநீத சேவையும், நவமியன்று திருத் தேரும் சிறப்பான உற்சவங்களாகும்.

ஸ்ரீ கோதண்டராமர் சந்நிதி, தஞ்சை மாமணிக் கோயில் ஸ்ரீ நீலமேகப் பெருமானால் அபிமானிக்கப்பட்ட சந்நிதியாகும். ஆழ்வார்கள் பாடிய சந்நிதிகள் திவ்விய தேசம் என அழைக்கப்படுகின்றன. மங்களாசாசனம் ஆகாத சந்நிதியில், குடமுழுக்கின்போது, திவ்விய தேச எம்பிரானை எழுந்தருளப் பண்ணி, அவர் முன்னிலையில் நந்நீராட்டு விழா செய்வித்து, பின் ஒரே சிம்மாசனத்தில், இரு

பெருமாள்களுக்கும் திருமஞ்சனம், ஆராதனைகள் செய்விப்பதுதான் அபிமானமாகும்.

இதன்படி, 18 வருடங்களுக்கு முன் கோதண்டராமர் சந்நிதியில், அஷ்டபந்தன விமானப் பிரதிஷ்டையின் சமயம், வெண்ணாற்றங்கரையிலிருந்து ஸ்ரீ நீலமேகப் பெருமாள் பல்லக்கில் ஸ்ரீ கோதண்டராமன் கோயிலுக்கு எழுந்தருயுள்ளார்.

ஸ்ரீ கோதண்டராமரைத் தரிசித்து ஓராண்டு ஆகிறது என்றாலும், ஸ்ரீ நீலமேகப் பெருமாளை எழுதிய பிறகே அவரால் அபிமானிக்கப்பட்ட இத் தலத்தை எழுதுவேன் என்றோ, இக் கட்டுரையை பிரும்மோற்சவ துவஜாரோகண தினத்தன்று (25-3-82) எழுதுவேன் என்றோ, அது ஸ்ரீ ராமநவமியன்று பக்தர்கள் கைக்குப் போய்ச் சேரும் என்றோ நான் கனவிலும் நினைக்கவில்லை. எல்லாவற்றையும் அவன் தன் திட்டப்படி நடத்திக் கொள்கிறான்.

புன்னைநல்லூர் மாரியம்மன்

அழகாபுரி என்று புராண இதிகாசங்களில் குறிப்பிடப்படும் தஞ்சை மாநகரின் எட்டுத் திக்குகளிலும் ஈச்வரன் அஷ்ட சக்திகளை காவலுக்கு வைத்தாரென்றும், அவர்களில் கிழ்த்திசையில் எழுந்தருளிய தேவிதான் புன்னை நல்லூர் மாரியம்மன் என்றும் 'சோழ சம்பு' என்னும் பண்டைக்கால நூல் பறைசாற்றுகிறது.

சோழ மன்னர்களின் வரலாற்றிலும் இத்தேவியின் மகிமை புலனாகிறது. கீர்த்தி சோழன் என்ற அரசன் மக்கட் செல்வமின்றி வருந்தியதாகவும், அம்மனின் அருளால் அவனுக்கு ஒரு மகன் பிறந்ததாகவும் அவனுக்கு தேவ

சோழன்' என்ற பெயர் சூட்டப்பட்டதாகவும் 'பிருகதீச்வரர் மகாத்மியம்' என்ற நூல் கூறுகிறது.

தஞ்சைத் தரணியில் மகாராஷ்டிர ஆட்சியை நிறுவிய மகாராஜா சத்திரபதி ஒரு சமயம் ஆலயதரிசனம் செய்து கொண்டு வரும் வழியில் கண்ணபுரமென்னும் சமயபுரத்தில் சிறிது காலம் தங்கி, அங்கு உறையும் மாரியம்மனை வழிபட்டார். ஒரு நாள் அம்பிகை அரசனின் கனவில் தோன்றி, தஞ்சைக்குக் கிழக்கே மூன்று மைலில் உள்ள புன்னைக் காட்டில் புற்றுருவில் தான் வசிப்பதாகவும், அங்கு வந்து தன்னை தரிசிக்கும்படியும் பணித்தாள். தலைநகருக்குத் திரும்பிய அரசன் புன்னைக் காட்டைத் தேடிச் சென்று, அம்பிகை இருக்குமிடத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அக்காட்டிற்குள் மக்கள் சௌகரியமாக வந்து போவதற்காக ஒரு பாதை அமைத்துக் கொடுத்தான். பின்னர், திறந்த வெளியில் இருந்த அம்மனுக்கு ஓர் ஓலைக் கூரை போட்டுக் கொடுத்து, புன்னைநல்லூர் என்ற கிராமத்தையும் அதற்குச் சொத்தாக வழங்கினான்.

அடுத்து பட்டத்துக்கு வந்தவர் அவரது புதல்வர் துல்ஜா மகாராஜா. அவரது புதல்விக்கு வைசூரியால் கண் பார்வை மங்கியது. மாரியம்மனைப் பிரார்த்தித்தார் அரசர். அம்பிகையும் ஓர் அந்தணச் சிறுமி உருவில் அவரது கனவில் தோன்றி புதல்வியுடன் தன்னை வந்து வழிபடும்படி கூறினாள். அரசனும் தேவியின் கட்டளைப்படி மகளை அழைத்துக் கொண்டு புன்னைநல்லூர் சென்று, அபிஷேக ஆராதனைகள் செய்தார். இறுதியில் கற்பூரார்த்தி நடக்கும் போது, அதிசயத்திலும் அதிசயமாக ராஜகுமாரியின் பார்வையை மறைத்திருந்த திரை விலகி, அவளது கண் பார்வை மீண்டதும் அம்மனை மிகத் தெளிவாகத் தரிசித்தாள். அவள் திருவடிகளில் விழுந்து வணங்கினாள். அம்மனின் அருளை நினைந்து நினைந்து மன்னன் கண்ணீர்

மாலை உகுத்தான். நன்றியின் காணிக்கையாக அம்மனுக்கு ஒரு சிறு கோயில் எழுப்பித்தான். அதற்குத் திருச்சுற்றும் அமைத்தான்.

துல்ஜா மகாராஜாவின் மூத்த சகோதரர் சஹாஜி மகாராஜா. தபோபலம் மிக்கவரும் ஞான அருள் பெற்றவருமான ஒருவரை குருவாகப் போற்றி வந்தார். அவரது திருநாமம் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர். அவதூதரான அந்த மகான் சகல சித்திகளும் பெற்றிருந்த மிகப் பெரிய யோகியாவார். அவரைப் புன்னைநல்லூருக்கு அழைத்து வரச் செய்தார் மன்னர். அம்மகான் தமது திருக்கரங்களால் புற்று மண்ணை எடுத்து, அதனாலேயே மாரியம்மன் வடிவமொன்று அமைத்து, ஸ்ரீசக்ரப் பிரதிஷ்டையும் செய்தார். அதே போன்று பின்னர் உற்சவ மூர்த்திக்கும் ஸ்ரீசக்ரப் பிரதிஷ்டை செய்துள்ளார். அன்று முதல் அம்மனின் மகிமை மேலும் பரவிற்று.

துவஜ ஸ்தம்ப மண்டபத்தில் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரரின் சுதை பிம்பம் ஒன்று இருப்பதைக் காணலாம். அருகிலேயே துலஜாஜி மகாராஜாவின் சிலையொன்றும் இருக்கிறது.

சரபோஜி மகாராஜா, தன் முன்னோர்களைப் போன்றே ஈகைத் தன்மையில் சிறந்தவராக விளங்கினார். அவர் மகாமண்டபம், நர்த்தன மண்டபம், பெரிய திருச்சுற்று, முன் கோபுரம் முதலியவற்றைக் கட்டுவித்து, ஆலயத்திற்குக் கும்பாபிஷேகம் செய்து வைத்தார். அவரது புதல்வர் சிவாஜி மன்னர், முன் மண்டபம், மூன்றாம் திருச்சுற்று ஆகியவற்றைக் கட்டுவித்தார். பின்னர், வெளி மண்டபத்தையும் போஜனசாலை முதலிய கட்டடங்களையும், வடக்கு வாயில் கோபுரத்தையும் சிவாஜி மன்னரின் பட்டமகிஷியான காமாட்சியம்பா கட்டித் தந்தார்.

இதற்குப் பிறகு சீனியர் பிரின்ஸின் தந்தை ராஜஸ்ரீ சிவாஜி ராஜா சாகேப் சத்திரபதி, பக்தகோடிகள் இளைப் பாறுவதற்காக முன்புறம் ஒரு தகரக் கொட்டகை அமைத்தார். பின்னர் 1950-ம் ஆண்டு திருப்பணிகள் நடை பெற்றபோது. கொட்டகையின் முன்புறம் ஒரு கோபுரம் கட்டப்பட்டு, குடமுழுக்கு நடைபெற்றது. அண்மையில் திருக்குளமும் சுத்தம் செய்யப்பட்டு, படித்துறைகள் நன்கு செப்பனிடப்பட்டு, பொதுமக்களின் ஆதரவோடு புரட்டாசி மாதம் தெப்பத் திருவிழா நடைபெற்று வருகிறது. ஆடியில் முத்துப் பல்லக்கும், ஆவணியில் பிரும்மோற்சவமும் நடை பெறுகின்றன.

இதற்கிடையில், ஆண்டு முழுவதும் பக்தர்கள் பெருங் கூட்டமாக வந்து பல்வேறு பிரார்த்தனைகளைச் செலுத்து கிறார்கள். நாங்கள் சென்றிருந்தபோது, ஒரு குடும்பத் தினர் பால் குடம் எடுத்தனர். மங்கள வாத்தியத்துடனும், நையாண்டி மேளத்துடனும் இரு பெண்டிர் முன்னால் நாட்டியமாடி வர, அந்தப் பால்குட வைபவம் மிகக் கோலாகலமாயிருந்தது.

மாரியம்மன் கோயிலில் தரிசனம் செய்து கொண்டி ருந்தபோது, ஒருவர் சுப்பிரமணிய குருக்களிடம் வந்து, ''ஜலம் விடலாமான்னு பார்த்துச் சொல்லுங்க சாமி'' என்று அழைத்தார்.

அங்கு அது சர்வ சாதாரணம். வீட்டில் வசதியோ ஆசாரமோ இல்லாவிட்டால் வைசூரி போட்டிருப்பவர் களை ஆலயத்திற்கே அழைத்து வந்து வைத்துக் கொள் கிறார்கள். தன் திருவடியே கதியென்று வந்து விட்டவர் களுக்கு அடைக்கலம் தந்து குணப்படுத்தி வீட்டுக்கு நலமாக அனுப்பி வைக்கிறாள் அம்மன்.

காய்ச்சல், வைசூரி முதலியவை விரைவில் இறங்கு வதற்கு இக்கோயிலில் 'தண்ணீர் கட்டும்' பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். மாரியம்மனுக்கு வலப்புறம்,

வெளியே தனிச்சந்நிதி கொண்டிருக்கும் துர்க்கையம்மனின் அர்த்த மண்டபத்தில், தண்ணீர் கொட்டித் தேக்கி வைக் கிறார்கள். இத்தனை செம்புகள், குடங்கள் என்று நாம் பிரார்த்தனை செய்து கொண்டால் அந்த அளவு நீரை ஊற்றுகிறார்கள். இதே போல் அம்மன் கருவறையை யொட்டி வெளிப்புறம் சுற்றிலும் நீர்த் தொட்டி கட்டி வைத்திருக்கிறார்கள். அங்கேயும் பிரார்த்தனைகளைச் செலுத்தலாம்.

கருவறைக்குப் பின்புறம் பாடகச்சேரி சுவாமிகளின் உருவச் சிலை ஒன்றிருக்கிறது. பல ஆலயத் திருப்பணிகள் செய்து குடமுழுக்குச் செய்து வைத்த இம்மகான், இக் கோயிலில் திருப்பணிகள் தொடங்கி வைத்து, குடமுழுக் கிற்கு முன்பே மறைந்து விட்டாரென்றும், அவரி நினைவாக இந்தச் சிலை வைக்கப்பட்டதாகவும் அர்ச்சகர் கூறினார்.

மாரியம்மனுக்குத் தென்புறம், மேற்குப் பார்த்த சந்நிதியில் பேச்சியம்மன், லலாட சந்நியாசி, மதுரை வீரன், கருப்பன் முதலியோர் இருக்கின்றனர்.

சிவன், சக்தி, விஷ்ணு மூவரும் அடுத்தடுத்து அமர்ந்து அருளாட்சி புரியும் திருத்தலமாகும் புன்னைநல்லூர். மாரியம்மன் கோயிலில் உறையும் ஆதிபராசக்திக்கு சைவாகமப்படி நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

மாரியம்மன் கோயிலுக்கு வலப்புறமுள்ளது ஸ்ரீ கோதண்டராமர் கோயில். தென்புறம் கைலாசநாதர் கோயில் இருக்கிறது. அக்கோயில் கவனிப்பாரற்றுக் கிடக் கிறது. மாரியம்மன் கோயிலுக்கு வரும் வருமானத்தைக் கொண்டு சிவன் கோயிலில் திருப்பணி செய்வது கடினமல்ல. நிர்வாகிகளுக்கு மனமிருக்க வேண்டுமே!

உற்சவ காலத்தில் ஸ்ரீராமர் வீதிவலம் வரும்போதும், மாரியம்மன் உலா புறப்படும்போதும், கோபுரவாயிலில்

நிறுத்தி, சந்நிதியிலிருந்து தேங்காய் பழம் கொண்டு வந்து மேளவாத்தியங்களுடன் சகல மரியாதைகளும் செய்து உபசரித்து, நிவேதனம் செய்து கற்பூராரத்தி செய்து அனுப்பி வைப்பது இரு கோயில்களிலும் தொன்றுதொட்டு இருந்துவரும் பழக்கமாகும். இந்தப் பழக்கத்தை சிவன் கோயிலுடனும் இணைத்து வைத்தால், புன்னைநல்லூரில் மூன்று சக்திகளின் அருளாட்சியும் பரிபூரணமாகத் திகழும்.

வடுவூர்

தஞ்சையிலிருந்து பதினைந்து மைல் கிழக்கே, மன்னார்குடி பஸ் பாதையிலிருக்கிறது வடுவூர் என்ற திருத்தலம். அவ்வூரின் மேற்கு திசையில் அமைந்திருக்கும் ஆலயத்தில் உறையும் ஸ்ரீ கோதண்டராமர், 'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்' என்ற கம்பனின் வர்ணனைக்கு இலக்கணமாகத் திகழ்கிறார்.

நாங்கள் சென்ற நாள் அன்று ஆலயத்தில் கொடியேற்றத் திருநாள். அதற்காக அழகின் திருவுருவான உற்சவமூர்த்தி, சர்வாலங்காரங்களுடன் முன் மண்டபத்தில் ஏகாந்த சேவை சாதித்துக் கொண்டிருந்தார். கன்னி மாடத்தில் நின்றபடி சீதை மனத்தைப் பறிகொடுத்தாளே, அந்த மோகனப் புன்னகை இதுதானோ? ஒரு கையில் கோதண்டமும், ஒரு கையில் அம்பும் ஏந்தி இத்தனை ஒய்யார எழிலுடன் வேறு யாரால் நிற்க முடியும். பல கோணங்களில் நின்று கலையுணர்வோடு ரசித்தோம்; பக்தியுணர்வோடு பரவசமடைந்தோம்.

அந்தத் திருமேனி சௌந்தர்யக் கவர்ச்சியினின்று கண்களை அகற்ற மனமின்றி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே கருவறையை நோக்கிச் செல்கிறோம். ராகவ

பட்டரும் பிறரும் ''வாங்கோ, வாங்கோ'' என்று அழைப்புடன் வரவேற்கிறார்கள். சிரமம் பாராமல், முகம் சுளிக்காமல், வருபவர் அத்தனை பேருக்கும் மூலவரை தரிசனம் செய்து வைக்கிறார்கள்.

அற்புதமாக அர்ச்சனை செய்கின்றார் ராகவ பட்டர். நூற்றெட்டு நாமாவளியில் ராமாயண காண்டத்தையே அடக்கி விடுகிறார். கண்களை மூடிக்கொண்டு அந்த அர்ச்சனையை கேட்கும்போது, ராமனின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் டி.வி. வண்ணக் காட்சிகளாக மனக்கண் முன் விரிகிறது.

இந்தக் கோதண்டராமர் தலைஞாயிறிலிருந்து வடுவூருக்கு வந்தவராம். அவரது அழகில் ஈடுபட்ட நாயக்கர் மன்னர் ஒருவர் அந்தக் காலத்தில் இவரையும் சீதையையும் இங்கே கடத்திக் கொண்டு வந்து விட்டாராம். இலக்குவன் மட்டும் அங்கேயே தங்கி விட்டாராம். முன்பு இங்கே இருந்த ராஜகோபாலசுவாமி ஒதுங்கித் தனியறைக்குச் சென்று விட்டாராம். இச்செய்திகளை அங்கு யாரும் எனக்குக் கூறவில்லை. பாஸ்கரத் தொண்டைமான் நூலில் படித்து அறிந்தவை.

இக் கோயிலில் ஸ்ரீ ஹயக்ரீவரும் ஸ்ரீ வேதாந்த தேசிகரும் தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ளனர். தேரடியில் வரப்பிரசாதியான ஓர் ஆஞ்சநேயமூர்த்தி கோயில் கொண்டிருக்கிறார்.

ஓவியத்து எழுத வொண்ணா உருவத்தாய் என்று வாலியின் மூலம் கம்பன் புகழ்ந்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, வடிவழகுடன் எழுந்தருளியிருக்கும் ஊர், வடிவு ஊர் என்று பெயர் பெற்று 'வடுவூர்' என்று தற்போது அழைக்கப்படுகிறது. அது மன்னார்குடியிலிருந்து மேற்கே ஒன்பது மைலில் இருக்கிறது. தஞ்சையிலிருந்தும், குடவாசல், கும்பகோணம், ஒரத்தநாட்டிலிருந்தும் இங்கு பஸ்கள்

அடிக்கடி வருகின்றன. இங்கிருந்து திருத்துறைப் பூண்டிக்கும் வேதாரண்யத்திற்கும் செல்லலாம். இந்த ஊரிலுள்ள பெரிய ஏரிக்கு ஸ்ரீ கோதண்ட ராமசுவாமி ஏரி என்று பெயர். இந்த ஏரியில்தான் வடவாறு முடிவடைந்து கண்ணனாறு தொடங்குகிறது.

இத் திருத்தலத்திற்கு வகுளாரண்யம், தட்சிண அயோத்தி, பாஸ்கர க்ஷேத்திரம் என்ற பெயர்கள் உண்டு. தஞ்சை அரசர் பண்டிதர்களுக்கு ஏகாதசியன்று இந்தக் கிராமத்தை மான்யமாக அளித்த பின்னர், இதற்கு 'ஏகாதசி கிராமம்' என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது.

தல புராணம். செவிவழி வந்த செய்திகளாக நடமாடிக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீராமன், சீதை இலக்குவனோடு தண்டகாரணியத்தில் எழுந்தருளியிருந்த போது, முனிவர்கள் அங்கிருந்து செல்லக் கூடாது என்று அவரை வேண்டிக் கொண்டார்கள். அவர்களைச் சமாதானப்படுத்த ஸ்ரீராமன் ஓர் உபாயம் செய்தான். தன்னைப் போன்ற ஒரு சிலையைச் செய்து, ''உங்களுக்கு இது வேண்டுமா? நான் வேண்டுமா?'' என்று கேட்டான். முனிவர்கள் அதன் அழகில் மனத்தைப் பறி கொடுத்து, ''அர்ச்சா மூர்த்தியே இருக்கட்டும்'' என்றார்கள். ஸ்ரீராமன் தன் சிலையை அங்கே வைத்து விட்டு அவர்களிடமிருந்து விடை பெற்றான்.

இந்த விக்ரகம் பின்னர் திருக்கண்ணபுரத்தில் இராமர் சந்நிதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த இராமரைப் போற்றித்தான் குலசேகர ஆழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

ஏதோ ஒரு கலகம் விளைந்த போது இந்த விக்ரகம் இதர மூர்த்திகளுடன் தலைஞாயிறுக்கு எடுத்துச் செல்லப் பட்டு மண்ணில் புதைக்கப்பட்டதாகவும், தஞ்சை அரசனின் கனவில் ஸ்ரீராமர் தோன்றி, தன்னை அங்கிருந்து எடுத்துச்

செல்லுமாறு பணித்ததாகவும், அரசன் வந்து தோண்டி எடுத்த போது ஊர் மக்கள் எதிர்த்ததாகவும், அதற்காக லட்சுமணன், பரதன் பிம்பங்களை அவர்களிடம் கொடுத்து விட்டு ராமர், சீதை, அனுமனுடன் மட்டும் தஞ்சைக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது. வழியில் அரசன் வடுவூரில் தங்கினான். விக்ரகங்களைக் கண்டு ஆனந்தித்த அவ்வூர் மக்கள், அவற்றை அங்கேயே விட்டுச் செல்ல வேண்டும் என்று மன்றாடியதோடு, கோரிக்கை மறுக்கப்பட்டால் மொட்டைக் கோபுரத்திலிருந்து குதித்து உயிரை விடவும் தயாராகி விட்டனர். அதனால் மனம் மாறி, ஸ்ரீராமரை அக் கோயிலிலேயே எழுந்தருளச் செய்தான் அரசன்.

இதற்குப் பிறகு இலக்குவனின் விக்ரகம் ஒன்றை வார்த்தார்களாம். அதில் பெண்மை சாயல் மிகுந்து காணப் படவே, அந்த பிம்பத்தை ஊருக்குக் கிழக்கே 'அழகிய சுந்தரி அம்மன்' என்ற பெயரில் பிரதிஷ்டை செய்துவிட்டு, இலக்குவனுக்கு வேறொரு சிலை வடித்து அதை மூல சந்நிதியில் வைத்தார்களாம்.

இச் செய்திகள் 1972-ஆம் ஆண்டில் தேவஸ்தானத்தார் வெளியிட்டுள்ள தல புராணத்தில் காணப்படுகிறது.

மூலவருக்கும் உற்சவருக்கும் ஸ்ரீ கோதண்டராமன் என்றே திருநாமம். குடந்தை ஸ்ரீ ஆராவமுதனால் அபிமானிக்கப்பட்ட தலமாகும் இது. இக்கோயிலின் ஆதி பெருமாளான ஸ்ரீ கோபாலன் ருக்மிணி, சத்தியபாமாவுடன் மகா மண்டபத்திலுள்ள 'பெருமாள் திருப்பள்ளியறை'யில் எழுந்தருளி நித்தியாராதனம் கண்டருளி வருகிறார்.

கோயிலுக்குப் பின்னால் உள்ள திருக்குளம் செப்பனிடப்பட வேண்டிய நிலையிலுள்ளது.

தில்லை விளாகம்

வடுவூர் வரையில் வந்துவிட்டுத் தில்லை விளாகம் ராமரைத் தரிசிக்காமல் செல்லலாமா?

மாயவரம்-காரைக்குடி ரயில் பாதையில், திருத்துறைப் பூண்டியையடுத்த ஸ்டேஷன் தில்லைவிளாகம். ரயில் நிலையத்திலிருந்து தெற்கே மூன்று கிலோ மீட்டரில் ஸ்ரீவீர கோதண்டராமர் கோயில் இருக்கிறது. இத்தலத்தின் வடக்கு எல்லை வேதாரண்யம். தெற்கெல்லை, வங்கக் கடல்.

திருக்கோயிலில் உறையும் மூலமூர்த்தி கற்சிலையல்ல. கம்பீர எழிலோடு மோகனப் புன்னகை சிந்தும் திருமுக மண்டலத்தோடு, திரிபங்கி லட்சணத் திருமேனியுடன் ஐந்தடி உயர ஐம்பொன் விக்ரகமாக எழுந்தருளியுள்ளார் ஸ்ரீ சக்கரவர்த்தித் திருமகனார். வெளி மண்டபத்தில் நின்ற வாறே ஆனந்த தரிசனம் பெறுகிறோம். அந்த சௌந்தரிய வசீகரத்தில் கட்டுண்டு சற்று நேரம் கற்சிலையாய் நின்று விடுகிறோம் நாம்.

அர்ச்சகரின் அன்பான அழைப்பு நம்மை நினைவு உலகிற்கு மீட்க, உள்ளே செல்கிறோம். திருத்தலத்தைப் பற்றிய செய்திகள் காதில் விழுகின்றன. புராதனப் பெயர் தில்லைவனம். ராமேச்வரம் செல்லும் யாத்திரிகர்களுக் காக 1862-ல் மடம் ஒன்று கட்டவேண்டும் என்று ராமசாமி ஐயங்கார் வேலுத் தேவரிடம் கூற, தற்போது கருவறை யுள்ள இடத்தில் அவர் நிலத்தைத் தோண்டத் தொடங்க, செங்கல் கட்டடத்துக்குள் மூல விக்ரகங்கள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். கோதண்டமும் அம்பும் தனிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. அந்த நாள் கார்த்திகை மாதம், உத்திராட நட்சத்திரம், பஞ்சமி

திதி. சில வருடங்கள் மூர்த்திகள் ஓலைக் கொட்டகையில் கோயில் கொண்டிருந்தனர். 1908-ல் லால்குடியைச் சேர்ந்த இன்ஜினீயர் கோபாலகிருஷ்ணன், குழந்தைச் செல்வம் வேண்டி அங்கு தரிசனத்திற்கு வந்தார். ஸ்ரீ சந்தான கோபாலகிருஷ்ணன் எடுத்தார். சந்தான பாக்கியம் பெற்றார். பெரும் செலவில் இக் கோயிலைக் கட்டினார்.

அர்ச்சகர் மூல மூர்த்திகளைத் தரிசிக்கச் சொல்கிறார். அடி-முடி ஈறாகத் திருமேனியழகை அள்ளிப் பருகுகிறோம்.

மணி மகுடத்தை, காதணியை, கண்ட சரமாலையை, யக்ஞோபவீதத்தை, உதாரபந்தத்தை, கைவளையை, கால் கொலுசை—அனைத்தையும் தீப ஒளியில் காட்டிக் கொண்டு வந்த அர்ச்சகர், மலர் மாலைகளை ஒதுக்கித் திருமார்பில் லட்சுமிதேவி அமர்ந்திருப்பதைக் காட்டுகிறார். அடையாளம் அல்ல; திருமகளின் திருவுருவமே அமர்ந்த திருக்கோலமாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

கை அழகையும், விரல் அழகையும் காட்டுகிறார் அர்ச்சகர். நம் கை போல் தனித்தனியே பிரிந்திருக்கும் விரல்கள். மோதிரங்கள் பளபளக்கும் பட்டு விரல்கள். மானிடருக்கு இருப்பது போன்று நகங்கள், உள்ளங்கையில் ஓடும் ரேகைகள்—இடக் கையில், கானகம் செல்லும் முன் அன்பு மகனுக்கு அன்னை கௌசல்யை ரட்சையாகக் கட்டியனுப்பிய ரட்சாபந்தனம் இருக்கிறது. நோயாலும் கொடிய விலங்குகளாலும் தீண்டப்படாமல் இருக்கும் பொருட்டு ஔஷதங்களால் ஆன ரட்சை அது. அன்புத் தாய் தெய்வ மகனுக்குக் கட்டிய இந்த ரட்சைதான் அரணாக இருந்து அண்ணலைக் காப்பாற்றியிருக்கிறது. தாய் அன்புக்கு மிஞ்சிய சக்திதான் இவ்வுலகில் உளதோ!

இடக் காலிலும், முழங்காலுக்குக் கீழே ஒரு பந்தனம் இருக்கிறது. வைகுண்டத்தில் தேவதைகள் இராமாவ

தாரத்திற்காக ஸ்ரீமந் நாராயணனுக்கு அணிவித்த ரட்சையாம் அது.

வலக் கையில் ராமசரம். அந்த பாணத்தில் அந்த எழுத்துக்கள் இருக்கின்றனவாம். சாதாரணமாக ஸ்ரீ ராமரின் கரத்தில் அர்த்த சந்திர வடிவத்தில்தான் பாணம் காணப்படும். இது ஓர் அபூர்வ காட்சி. ராமாயணத்தில் மூன்று நிகழ்ச்சிகளின் போதுதான் ஸ்ரீராமர் ராமசரத்தைப் பயன்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஜானகிக்குக் கொடுமையிழைத்த காகாசுரனைத் தண்டிக்க, வாலியை வதைக்க, இறுதியாக இராவணனை அழிக்க—அர்ச்சகரிடமிருந்து அறிந்து கொள்கிறோம்.

இடப்புறம் இருக்கும் இலக்குவனின் முகம் சற்றுக் கடுகடுப்பாகவே இருக்கிறது. பதினான்கு ஆண்டுகள் கண் துஞ்சாது புரிந்த சேவையின் அலுப்போ? போரின் களைப்போ? அயோத்திக்கு விரைவில் மீள வேண்டும் என்ற துடிப்போ? அல்லது சுபாவத்திலேயே சற்று சுமுகக் குறைவோ!

அன்னை ஜானகி, கற்பின் அணங்காய், அழகிற்கு அணி செய்யும் அழகாய் வலப்புறம் நிற்கும் பாங்குதான் என்னே! மனைவிக்குக் கணவனின் திருவடியை விட உயர்ந்த காப்பும் துணையும் பெருமையும் உண்டோ என்று கேட்கிறதோ நிலம் நோக்கும் அந்தப் பார்வை?

அடடா! அந்த அனுமனைச் சற்றுப் பாருங்களேன். வழக்கமான அஞ்சலி ஹஸ்தம் இல்லை. இடக்கை தொடையின் மீது வைத்து, வலக் கையால் வாய் பொத்தி, சொல்லின் செல்வன் ஞான மௌனியாய், தியாகத் திருவுருவாய், அடியார்க்கு அடியனாய், எளிமையிலும் எளிமையாய் எத்தனை பவ்யமாக நிற்கிறார்! பாவம், அந்த நைஷ்டிக பிரும்மச்சாரி எத்தனை மெலிந்து போயிருக்கிறார்! ராமனுக்கு மகுடாபிஷேகம் ஆகும்வரை

தீர்த்த பானமும் செய்யமாட்டேன் என்று வைராக்கிய உண்ணா நோன்பு நோற்கிறாரோ...? நினைக்கும் போதே கண்களில் நீர் திரையிடுகிறது.

தில்லைவிளாகத்தில் ஸ்ரீராம, லட்சுமண, சீதா, ஆஞ்சநேயர் விக்ரகங்கள் கிடைத்த முப்பது ஆண்டுகள் கழித்து, அதாவது 1892-ல், ஆலயத்திற்குத் தென் கிழக்கே ஒரு பர்லாங் தொலைவிலுள்ள 'அம்பலக்குளம்' என்ற இடத்தில் சிவகாமியம்மையோடு ஓர் அழகிய நடராஜர் சிலை கிடைத்தது. ஐந்தடி உயரமுள்ள அந்த ஐம்பொன் சிலையின் பீடம், திருவாசி எல்லாம் ஒரே வார்ப்பு. அங்கங்களெல்லாம் மிக அற்புதமாக வடிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ கோதண்டராமனுக்கு இருப்பது போன்றே ஸ்ரீ நடராஜரின் விரல்களும் தனித் தனியே பிரிந்திருக்கின்றன. சில வருடங்கள் கழித்து, நேர் கிழக்கே 'தியாகராஜ கட்டளை' என்ற குளக்கரையில் மற்றொரு நடராஜ மூர்த்தி சிவகாம சுந்தரி, மாணிக்கவாசகரோடு அகழ்ந்து எடுக்கப் பட்டனவாம்.

பகைவர்களுக்குப் பயந்து தெய்வச் சிலைகள் புதைக்கப் பட்டிருக்கலாம்; பின்னர் எடுத்துக் கொள்ளலாம் என்று கள்வர்கள் புதைத்து வைத்திருக்கலாம். வெள்ளம் போன்ற இயற்கையின் கொடுமையால் பூமியில் புதையுண்டும் போயிருக்கலாம். இவற்றைத் தவிர, தனிப்பட்டவர்கள் பூஜையில் வைத்திருந்த விக்ரகங்கள் தங்களுக்குப் பின் யாருக்காவது பயன்படட்டுமே என்று பூமிக்கடியில் கட்டடங்கள் கட்டி மிகப் பாதுகாப்பாக வைத்துவிட்டுப் போவதும் உண்டாம். தில்லைவிளாகத்திலும் அம்பலக் குளத்திலும் கிடைத்துள்ள விக்ரகங்கள் கடைசி ரகத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

தில்லைவிளாகத்தை ஆதி தில்லை, ஆதி சிதம்பரம் என்றும் குறிப்பிடுகிறார்கள். இங்கு ஸ்ரீ நடராஜ கடவுள்,

சிருஷ்டி காலத்தில் ஆனந்தக் கூத்து ஆடியதாகத் தல புராணக் குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அதற்கேற்றாற் போல், நடராஜர் விக்ரகங்களும் கிடைத்துள்ளன. காரைக்குடி முத்துப்பட்டணத்தைச் சேர்ந்த பெரி. நா. நா. குடும்பத்தாரின் பக்தியின் காரணமாக அறுபது ஆண்டு களுக்கு முன் தில்லைவிளாகத்தில் இந்த நடராஜ மூர்த்தி களுக்கு ஒரு திருக்கோயில் அமைந்தது. கூத்தபிரான், ஸ்ரீவீர கோதண்டராமர் சந்நிதிக்கு வலப்புறம் தனிக் கோயிலில் தெற்கு நோக்கிக் காட்சி தருகிறார். சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜரையும் ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாளையும் ஓரிடத்தில் நின்று ஒருசேரத் தரிசிப்பது போல், தில்லை விளாகத்தில் ஸ்ரீ ராமபிரானையும் ஸ்ரீநடராஜப் பெருமானையும் ஒருசேரத் தரிசிக்கலாம். கிடைத்தற்கரிய பிரும்மானந்தக் காட்சி. நடராஜர் கோயிலுக்குள் சிதம்பரேச்வரர், உமையாம்பிகை, கணபதி சுப்ரமணியர் அனைவருக்கும் தனித் தனியே சந்நிதிகள் உள்ளன.

ஸ்ரீராமர் கோயிலைச் சுற்றி மூன்று புறமும் ராமர் தீர்த்தம், சீதா தீர்த்தம், அனுமார் தீர்த்தம் ஆகிய மூன்று தீர்த்தங்கள் உள்ளன. இவ்வூருக்கருகில் கழுகுக் காடு (ஜடாயு தொடர்புடையது), ஜாம்பவான் ஓடை, தம்பிக் கோட்டை (இலக்குவன் தொடர்புடையது)· முதலிய ராமாயணத்தோடு தொடர்பு கொண்ட இடங்களும் இருக் கின்றன. ஸ்ரீவீர கோதண்டராமர் கோயில் முன் மண்ட பத்தில் ஸ்ரீ தியாகய்யாவின் சமாதியில் உள்ளது போல் ராம கீர்த்தனைகள் சிலவற்றைச் சலவைக் கல்லில் வடித்து வைத்திருக்கிறார்கள். பல வருடங்களுக்கு முன் அங்கு தியாகராஜ உற்சவம் விமரிசையாக நடைபெற்று வந்த தாகவும் தற்போது நின்று போய் விட்டதாகவும் கேள்விப் பட்டேன். ஸ்ரீ ராம பக்தர்களும் இசை வல்லுனர்களும் அந்த விழாவை இங்கு மீண்டும் தொடங்கி வைத்தால் ஸ்ரீ ராமபிரானின் பரிபூரண அருளுக்கு நிச்சயம் பாத்திர ராவார்கள்.

திருத்தட்டாங்குடி

கரந்தை தமிழ்ச் சங்கம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வூரின் முழுப் பெயர் கருந்தட்டாங்குடி. திருவையாற்றிலிருந்து தஞ்சாவூருக்குள் நுழையும் போது இடப்புறம் உள்ளது. இதைக் 'கருத்திட்டைக்குடி' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் தமது அடைவுத் திருத்தாண்டகத்தில் குறிப்பிடுகிறார். இங்குள்ள ஸ்ரீ வசிட்டேச்வரர் ஆலயம் வைப்புத் தலங்களில் ஒன்றாகும். வசிஷ்ட முனிவர் வழிபட்டதால் இப்பெயர் ஏற்பட்டது.

முதற் குலோத்துங்கச் சோழன் காலத்தில் இவ்வூர் 'சுங்கந் தவிர்த்த சோழநல்லூர்' என வழங்கியது. இதற்கு 'அழகாபுரி' என்ற புராணப் பெயரும் உண்டு. குபேரனின் அழகுப் பட்டணமாக இது காட்சியளித்ததாக இதன் தல புராணம் கூறுகிறது. கருவேலமரங்கள் அதிகம் இருந்ததால், 'கருவேலங்குடி' எனவும் ஒரு காலத்தில் இது வழங்கப்பட்டிருக்கிறது.

சம்பந்தப் பெருமான் இதை 'திரு விட்டக்குடி' என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கோயில் ஏழாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு. இக்கோயில் பொதுவாக 'கருணாசாமி கோயில்' என்று அழைக்கப்படுகிறது. 'கருணாகரசுவாமி' என்பதுதான் 'கருணாசாமி' என்று மருவியிருக்கிறது. சோழ மன்னனின் குட்ட நோயைத் தீர்த்ததால் சுவாமி இப் பெயர் பெற்றார் போலும்! கோயிலைச் சார்ந்த திருக்குளத்தில் நீராடியதால் தான் மன்னன் தன் நோயினின்றும் குணமடைந்தான்.

முன் காலத்தில் கருவேல மரத்தடியில் சுவாமி எழுந்தருளியிருந்ததால் 'கருவேல நாதர்' என்றும் அழைக்கப்படுகிறார்.

அழகாபுரி என்னும் 'சமிவன க்ஷேத்திர புராணத்தில்' இக்கோயிலைப் பற்றிய புராணக் கதை கூறப்பட்டுள்ளதாகவும், ஆனால் தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் பல முறை தேடியும் இந்நூல் கிடைக்கவில்லை என்றும் ஆலய அர்ச்சகர் பாலசுப்பிரமணிய குருக்களின் மகன் புலவர் பா. நடராஜன் எம்.ஏ.பி.எட்., (எம்.பில்.) வருத்தத்துடன் கூறினார். ஆனால், 'வசிஷ்டேச்வரர் திருப்பதிகம்' என்ற நூலில் காணப்படும் தல புராண வரலாற்றைச் சுருக்கமாகச் கூறினார்.

காவிரிக்குக் கரை கண்ட சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தான் என்ற திருமாவளவன் ஒரு சமயம் வேட்டைக்குச் சென்று திரும்பும் போது, பின்னால் வேங்கைப் புலியொன்று தன்னைத் துரத்திக் கொண்டு வருவதைக் கண்டு நடு நடுங்கிப் போய் உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்தான், வழியில் குளம் ஒன்று இருக்கக் கண்டு அதில் குதித்து விட்டான். சற்றைக்கெல்லாம் தலையைத் தூக்கிப் பார்த்த போது, வேங்கையைக் காணவில்லை. அருகில் ஒரு கருவேல மரத்தடியில் அது மறையக் கண்டு, குளத்தினின்றும் எழுந்து வந்தான்.

வேங்கை மறைந்த இடத்தில் புலித்தோல் போர்த்திய புண்ணியமூர்த்தி, சிவலிங்க வடிவில் சுயம்புவாகத் தோன்றியதைக் கண்டு ஆனந்தப்பரவசம் அடைந்தான். அது மட்டுமா? தன் உடலைப் பீடித்திருந்த கரியதோர் பெருநோயும் மறைந்திருந்த அதிசயத்தையும் கண்டான். நல்வினையால் இறைவனே வேங்கையுருவில் வந்து தன்னை விரட்டி, குளத்தில் விழச் செய்து நோயைப் போக்கியருளினார் என்று அறிந்து நெஞ்சம் நெகிழ்ந்த பக்தியால் கரைந்து போனான். தன்னைத் தடுத்தாட் கொண்ட பெருமானுக்கு அங்கு திருக்கோயில் ஒன்றும் எழுப்பித்து உய்ந்தான்.

'மணி முத்தா நதி' என்று வழங்கப்படும் வடவாற்றின் கரையில் அமைந்துள்ளது இத் திருத்தலம். இக்கோயிலுக்கு இரண்டு புறங்களில் நுழைவாயில்கள் உள்ளன. கிழக்குப் புறமாக சிவன் சந்நிதியும், தென்புறமாகப் பெரிய நாயகி அம்பாள் சந்நிதியும் உள்ளன. ஆலயத்தின் கிழக்குப்புறம் தான் சோழ மன்னனின் நோயைத் தீர்த்த சூர்ய புஷ்கரணி என்ற சுதா புஷ்கரணி உள்ளது.

இரண்டு பிராகாரங்கள் கொண்ட இக்கோயிலில், மிகப் பழமையானதும், மிக மிக அற்புதமானதுமான சிற்பங்களும் சிலா வடிவங்களும் காணப்படுகின்றன. வசிட்டருக்கும் அருந்ததிக்கும் கல் வடிவங்களும் உலோகச் சிலைகளும் உள்ளன.

மகிஷாசுரமர்த்தனியாக எழுந்தருளியிருக்கும் துர்க்கையம்மன் எழில் குலுங்கும் அருள்வடிவமாகத் திகழ்கிறாள். துர்க்கையம்மனை வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் வழிபடும் பெண்களுக்கு விரைவிலேயே திருமணமாவதாக நம்புகிறார்கள். தட்சிணாமூர்த்திக்குப் பக்கத்தில் வசிட்டர் அமர்ந்திருக்கிறார்.

இக் கோயிலில் காண வேண்டிய அற்புதச் சிற்பம் கருவறையின் பின்புறச் சுவரில் இருக்கிறது. அங்குள்ள அர்த்தநாரீச்வரரின் சிற்பத்தில் வழக்கத்துக்கு மாறாக, இறைவனின் வலப் பக்கத்தில் தேவியின் வடிவம் அமைந்திருந்தது. இந்த அமைப்பிற்குரிய சிறப்போ பொருளோ விளங்கவில்லை. கருவறை அடிப்பகுதி கருங்கல்லால் ஆனது. மேற் பகுதியில் பல்வேறு மூர்த்தங்களின் லட்சணமான சுதை பிம்பங்கள் நிறைய இருக்கின்றன.

இக் கோயிலில் உறையும் பெருமானை தமிழ்ப் பெருங்குடி மக்கள் பலரும் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர். மார்கழி மாதத்தில் சூர்ய புஷ்கரணியில் நீராடுவதால் நம் வினைகள் நீங்கும் என்று கருதுகிறார்கள்.



மால் ராவுதர்!



கரநதை ஆலயத்தில் உள்ள ஸ்ரீவசிஷ்டரின் சிலை



பங்காரு காமாட்சியம்மன் ஆலயம் (தஞ்சை).




புன்னை நலலூா கோதண்டராமர்




பூமால் வைத்தியநாதர் கோயில்
(தஞ்சை கிழக்கு வாசல்)



ஜுரஹர விநாயகா
(குடந்தை நாகேச்வரசுவாமி ஆலயம்)




ஒட்டக்கூத்தர்
(குடந்தை வீரபத்திரர் கோயில்)



ஸ்ரீ வீரட்டானேச்வரர்
ஆலயம்
(திருவிற்குடி)



ஸ்ரீசரபமூர்த்தி
(தாராசுரம்)



ஸ்ரீ ஐராவதேச்வரர் ஆலயம்
(தாராசுரம்)



ஸ்ரீவாதாபி கணபதி


(திருச்செங்காட்டங்குடி)




ஸ்ரீ இராமனந்தீச்சரம் ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

ராஜகோபுரமும் லட்சுமித் திருக்குளமும்

(திருமருகல்)






ஸ்ரீ அக்னீச்வர சுவாமி ஆலயம்


(திருப்புகலூர்)

திருச்செங்காட்டங்குடி ஆலயம்






தோரணவாயில்
(திருப்பனையூர் ஆலயம்)



ஸ்ரீராமர் சந்நிதியும் பெருமாள பளளியறையும்
(திருக்கண்ணபுரம்)

ஸ்ரீ கைலாசநாதசுவாமி கோயில் (அகரக்கொநதை)





திருக்கண்ணபுரம் ஆலயத்தின் உட்புறத் தோற்றம்



ஸ்ரீ அயவந்தீச்வார் ஆலய கோபுரம்
(சாத்த மங்கை)

படங்கள்— 'நன்றி: ஆனந்த விகடன்)

வைகாசி மாதம் நடைபெறும் பிரும்மோற்சவத்தில் ஒன்பதாம் நாள் திருத்தேர் பவனியும், பன்னிரண்டாம் நாள் கண்ணாடிப் பல்லக்கும் கண்டு ஆனந்திக்கப்பட வேண்டிய தெய்வீகக் காட்சிகளாகும். கேட்டை நட்சத்திரத்தன்று கண்ணாடிப் பல்லக்கு, சப்தஸ்தான யாத்திரையாக, வெண்ணாறு தஞ்சைபுரீச்வரர், திருத்தென்குடி திட்டை, கூடலூர், கடகடப்பை, புன்னைநல்லூர், பூமாலை நாகநாதர் முதலிய தலங்களுக்குச் சென்று வருகிறது. வைகாசி ரோகிணியில் வசிட்டர்-அருந்ததி திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

தஞ்சை சக்கரபரணி கோயில்

தஞ்சாவூர் டவுனுக்குள் உள்ள ராஜகோபால சுவாமி கோயில் தெருவில் உள்ள ஒரு பெரிய, பழைய செங்கல் கட்டட கோபுரத்தைப் பற்றி விசாரித்தபோது, அது ஸ்ரீ சக்கரபாணி கோயில் என்று தெரியவந்தது. ராஜகோபாலசுவாமி கோயில் தெரு என்ற பெயர் ஏற்பட்டதன் காரணத்தை வினவியபோது, மன்னார்குடி ராஜகோபால சுவாமி முன்பு இங்குதான் இருந்ததாகவும், பின்னரே மன்னார்குடி சென்றதாகவும் ஓரிருவர் விளக்கம் தந்தனர். அர்ச்சகரோ, முன்பு எப்போதோ கலகம் நடந்தபோது மன்னை ராஜகோபால சுவாமி இங்கே சிறிது காலம் தங்கியிருந்தார் என்று கூறினார்.

ஏழு நிலை ராஜகோபுரத்தையடுத்து ஒரு சிறு கோபுரம். அதில் ஓர் அழகான நர்த்தன கிருஷ்ணன். மூலஸ்தானத்தில் பதினாறு கைகளுடன் ஸ்ரீ சக்கரபாணி, அம்புஜவல்லி, விஜயவல்லித் தாயார்களுடன் எழுந்தருளியுள்ளார். மாத்வர் ஒருவர் பூஜை செய்கிறார்.

அக்கோயிலுக்குள்ளேயே தனியாக ஒரு பழைய மண்டபம் இருக்கிறது. அதைக் காளி கோயில் என்கிறார்கள். அதனுள் நுழைந்த போது, பேராச்சரியத்தில் மூழ்கிப் போனோம். அங்கு நூற்றுக்கணக்கில் காணப்பட்ட பல்வேறு தெய்வ வடிவங்களைப் பார்த்துப் பார்த்துப் பிரமித்துப் போனோம்.

தஞ்சை ஸ்ரீ சக்கரபாணி கோயில் மதிற்சுவருக்குள்ளிருக்கும் அந்த மண்டபத்திலுள்ள தெய்வச் சிலைகளையெல்லாம் மன்னர் ஒருவர்தான் அங்கே சேர்த்து வைத்திருக்க முடியும் என்று தோன்றுகிறது. அங்கு ஒரே தெய்வத்தின் உருவை வெவ்வேறு அளவில் செய்து வைத்திருப்பதைப் பார்த்தால், பல கோயில்கள் கட்டுவதற்குத் திட்டமிட்டு இவற்றை வடிக்கச் சொன்னாரோ, அல்லது கலகம் நடந்த போது, சிலைகளைக் காப்பதற்காக அவற்றைத் திரட்டிக் கொண்டு வந்து இங்கே வைத்தாரோ என்று நினைக்கத் தோன்றியது. புதிதாகக் கோயில் எழுப்ப நினைப்பவர்களுக்கும், அல்லது புதிய சிலைகள் வடித்து வைக்க வேண்டும் என்று திட்டம் வைத்திருப்பவர்களுக்கும் அங்கு ஒரு புதையல் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது.

அடேயப்பா! எத்தனைவிதமான விநாயகர் சிலைகள்! சங்கு சக்கரத்துடனும், நெற்றியில் திருமண்ணுடன் விளங்கும் தும்பிக்கை ஆழ்வார், வல்லப விநாயகர், நின்ற திருக்கோலத்தில் ஒரு விநாயகர், நர்த்தன கணபதி...

தண்டாயுதபாணி, பன்னிரண்டு அடி உயரத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர், பஞ்சலிங்கங்கள், நாராயணமூர்த்தி, தேவியருடன் கூடிய நவக்கிரகங்கள், முழுப் பிரபையுடன் மூன்று சூரியன் சிலைகள், மிகப்பெரிய பாண்டுரங்க விட்டல், அதே மாதிரி சிறியவை மூன்று, ராமர், லட்சுமணர், சீதை, வேணுகோபாலர், மீனாட்சி சுந்தரேச்வரர், அக்னி பஞ்சமுக ருத்ரர், தட்சிணாமூர்த்தி......

உள்ளுக்குள்ளே இன்னொரு மண்டபம். அதனுள் எட்டுக் கரங்களுடன் பெரிய மகிஷாசுரமர்த்தனி-மகிஷனின் நாக்கை இழுத்துப் பிடித்திருக்கும் பயங்கரக் கோலம்—அபூர்வத்திலும் அபூர்வமான வடிவம். ராணு பாய், சட்டு பாய் என்று தனியே இரண்டு அம்மன் சிலைகள் இருக்கின்றன... ராஜ குடும்பப் பெண்டிர் சுகப் பிரசவத்திற்காக இந்த சக்திகளிடம் பிரார்த்தித்துக் கொள்வது வழக்கமாம். இன்னும் சாமுண்டேச்வரி, கஜலட்சுமி, கங்கா யமுனா, கோலாப்பூர் மகாலட்சுமி, சிவ துர்க்கை, விஷ்ணு துர்க்கை (எல்லாம் 12 அடி உயரம்). விஷ்ணு துர்க்கைக்கு இராகு கால பூஜை மிகவும் விசேஷமாம். கல்யாணம் ஆகவேண்டிய பெண்கள் வெள்ளிக்கிழமையன்று ராகு காலத்தில் எலுமிச்சம் பழ மூடியில் விளக்கேற்றி வைத்துப் பிரார்த்தித்துக் கொள்கிறார்கள்.

ஐயன்தெரு ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசர்

அற்புதமான ஒரு சிற்பக் கலைக் கூடத்திலிருந்து ஐயன் கடைத் தெருவுக்கு வருகிறோம். அங்கு கிழக்கு நோக்கி நிற்கும் முகப்புக் கோபுரம் ஒன்று நம்மை அழைக்க, சில படிகளேறி உள்ளே செல்கிறோம். மூலஸ்தானத்தில் ஸ்ரீபிரசன்ன வெங்கடேச்வரர் உறைகிறார் என்பதை அறிகிறோம் துவஜஸ்தம்பம், பலிபீடங்களை அடுத்து இருபுறங்களிலும் உள்ள ஸ்ரீ பெருமாள் பாதங்களையும், ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தியையும் தரிசித்துக் கொண்டு தென் பிராகாரத்திற்கு வருகிறோம். ஆழ்வாராதிகளின் அருளைப் பெற்றுக் கொண்டு, ஸ்ரீதேவி, பூதேவியுடன் எழுந்தருளியிருக்கும் திருமாலின் திருவடிகளை வணங்கி, மதன

கோபாலனின் மோகனப் புன்னகையில் மனத்தைப்பறி கொடுக்கிறோம்.

அடுத்து நம்மை ஈர்ப்பது, மேற்குப் பிராகாரத்தில் கிழக்கு நோக்கி திருச்சந்நிதி கொண்டிருக்கும் ஸ்ரீ வேணு கோபாலரின் திவ்விய மங்கள வடிவம். இரு கரங்களில் சங்கு சக்கரம் துலங்க, மற்ற இரு கரங்களால் வேணுகானம் இசைத்துக் கொண்டிருக்கிறார் கருணாகர மூர்த்தியான கண்ணபிரான். இடக்காலை உறுதியுடன் கீழே ஊன்றி வலக்காலை மடித்து, உள்ளங்கால் தெரிய நின்றிருக்கும் திருக்கோலம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, கவலையையெல்லாம் பறந்தோட வைக்கிறது. எதிரில் கருடாழ்வார் அமர்ந்திருக்கிறார்.

இக்கோயிலின் கருவறை விமானத்திலுள்ள சுதை பிம்பங்கள் ஜீவ பாவத்துடன் திகழ்கின்றன. அங்கு புராணக் கதைகள் வனப்புடன் வடிக்கப்பெற்றிருக்கின்றன. உடைந்த பதுமைகளைச் சீர் செய்து, செடி வகைகளைக் களைந்து, பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் அரிய சிற்ப பொக்கிஷம் அது.

இக்கோயிலின் மண்டபத்தில் பழைய தஞ்சாவூர் சித்திரக் கலையின் உன்னத சின்னங்களாக ஸ்ரீ ராம பட்டாபிஷேகக் காட்சியும், ஸ்ரீவெங்கடேசப் பெருமாளின் திருவுருவமும் வண்ணங்கள் மங்கி, மறைந்தும் மறையாததுமாக இருப்பதைக் காண்கிறோம்.

ஆலயத்திற்கு வெளியே ஒரு தேர்ச்சப்பரம் இருக்கிறது. பழமையின் பெருமையைப் பறைசாற்றுவதுடன், அவ்விடத்தை விட்டு நகர்ந்தே வருஷக்கணக்காகிறது என்றும் கண்ணீர் வடிக்கிறது அது. அதையடுத்துள்ள ஒரு சிறு மண்டபத்தில் தென்புறம் நோக்கி ஒரு சிறு அனுமார் 'கொழுக்'கென்று அமர்ந்திருக்கிறார். உளியால் வடிக்கப் பட்டதாகத் தோன்றவில்லை. சுயம்பு மூர்த்தியாகக் காட்சி யளிக்கும் அவரது அருகில் சென்றாலே அவரது அருட்

சக்தி, ஒளிக்கிரணங்களாக நம் மீது படர்வதை உணர முடிகிறது.

மூலை அனுமார்

ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாளைத் தரிசித்துக் கொண்டு மேல ராஜ வீதிக்குள் நுழைகிறோம். அந்த வீதியை 'கோயில் தெரு' என்று பெயர் மாற்றம் செய்து விடலாம் என்று தோன்றுகிறது. அடேயப்பா! பெரியதும் சிறியதுமாக—பிள்ளையார் கோயில்களையும் சேர்த்து—அங்கு ஏறக்குறைய பத்து கோயில்கள் இருக்கின்றன.

வடக்குப்புறமிருந்து தரிசித்துக் கொண்டு வருவோம். முதலில் கிழக்கே பார்த்தவாறு 'மூலை அனுமார்' என்றழைக்கப்படும் பிரதாப வீர ஆஞ்சநேயர் திருச்சந்நிதி கொண்டிருக்கிறார். மிகப் பழைய கோயில். மிகவும் சக்தி வாய்ந்த ஆஞ்சநேயமூர்த்தி.

திருவாரூரிலிருந்து வந்த பங்காரு காமாட்சியம்மன் இந்தக் கோயிலில் ஒரு வேப்பமரத்தடியில் சில வருடங்கள் வாசம் செய்திருந்தாளாம். அதன் நினைவாக இப்போதும் நவராத்திரியின்போது, அங்கிருந்து மண் எடுத்துச் சென்று அம்மன் கோயிலில் பூஜையைத் தொடங்கும் வழக்கம் இருந்து வருகிறது.

இந்தக் கோயிலில் மண்டபத்தின் மேல் தளத்தில் பன்னிரண்டு ராசிகளும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த ராசிக்காரரர்கள் தங்கள் ராசிக்குக் கீழே நின்று உளமாரப் பிரார்த்தனை செய்து கொண்டால் அது உடனே பலிக்கிறதாகக் கூறுகிறார்கள். இக்கோயிலின் முகப்புக் கோபுரத்தில் துவாரபாலகர்கள் போல் இரண்டு அஞ்சநேய மூர்த்திகள் நிற்கின்றனர். ஒருபுறம் முருகரும் மற்றொரு புறம் விநாயகரும் இருக்கின்றனர்.

ஸ்ரீ நவநீதகிருஷ்ணன்

மூலை அனுமார் கோயிலுக்குத் தெற்கே உள்ளது ஸ்ரீநவநீதகிருஷ்ணன் ஆலயம்.

இதுவும் ஒரு புராதனமான ஆலயம். கோயில் சிறிய தாகவும், பிராகாரங்கள் விசாலமாகவும் இருக்கின்றன. மூலவரான ஸ்ரீநவநீதகிருஷ்ணன், ருக்மிணி சத்யபாமா வுடன் எழுந்தருளியிருக்கிறார். அவர் வலக்கையில் வெண்ணெயுடன் இடக்காலைத் தூக்கியிருக்க, உற்சவ மூர்த்தி வலக்காலைத் தூக்கி, நர்த்தனம் ஆடுகிறார். பீடத்திற்கும் தூக்கிய திருவடிக்கும் இடையே தாமரை மலர் இல்லை. அழகான வடிவம்.

வலக்கை வெண்ணெய் வைத்து மற்றதால் நிலையுங் கண்டு. வலதுபதம் உயர்த்திக் காட்டி மற்றதில் முழுவதும் தாங்கி, மாயக் கண்ணன் கோலமாய் மாறியாடித் தாண்டவம் புரியும் அழகை ஒரு பக்தர் அனுபவித்து ஓர் அரிய செய்யுளாக வடித்து இம்மூர்த்தியை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

அர்த்த மண்டபத்தில் தென்புறம், ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர், ஆஞ்சநேயர் தனிச் சந்நிதி கொண்டுள்ளனர். மாடத்தில் விஷ்ணு துர்க்கை இருக்கிறாள். வடபுறத்தில் முகுந்தன், விஷ்வக்ஸேனர் சந்நிதிகள் இருக்கின்றன. ஆண்டாளும் எழுந்தருளியிருக்கிறாள். கிழக்குப் பிராகாரத்தில் மேற்கு நோக்கி நம்மாழ்வார், திருமங்கை யாழ்வார், உடையவர், ஸ்ரீதேசிகன் முதலியோர் காட்சி யளிக்கின்றனர். இப்பிராகாரத்தில் வடக்கே ஊஞ்சல் மண்டபமும், தெற்கே 'பகவத் கீதா' மண்டபமும் இருக் கின்றன. தஞ்சை ஆஸ்திக மகாசபையார், பழுதடைந் திருந்த இந்தக் கோயிலை அரண்மனை தேவஸ்தானத்

தாரின் அனுமதியுடன் பழுதுபார்த்து 1959-ம் ஆண்டில் வெண்ணாற்றங்கரை ஸ்ரீ நீலமேகப் பெருமாளின் முன்னிலையில் அவரது அபிமானத்துடன் மகாகும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். 1959-ல் தொடங்கப் பட்டதிலிருந்து ஆஸ்திக மகாசபையார் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணமும் தோத்திர வகுப்புக்களும் நடத்தி வருகின்றனர். ஒரு வேதவிற்பன்னரைக் கொண்டு இலவசமாக வேத, உபநிஷத்து வகுப்புக்கள் நடத்தி வருகின்றனர். மாதர், நாம சங்கீர்த்தனம் செய்து வருகின்றனர். கீதா மண்டபத்தில் உபந்யாசங்கள், நாம சங்கீர்த்தனம், இசைக் கச்சேரிகள் ஆண்டு முழுவதும் நடைபெற்று வருகின்றன. சமயப் பெரியவர்கள் பலர் இங்கு அருளுரை வழங்கியிருக்கிறார்கள்.

மாதந்தோறும் ரோகிணி நட்சத்திரத்தன்று சிறப்பான திருமஞ்சனம், அலங்கார சேவை புறப்பாடும், ஸ்ரீஜயந்தி உற்சவமும் மிக விமரிசையாக நடைபெற்று வருகின்றன. நான்கு ராஜ வீதிகளிலும் அக்ஷயத்ருதியன்று உதய கருட சேவை, மற்ற விசேஷ தினங்களில் நவநீத சேவை, சந்தனக் காப்பு, லட்சார்ச்சனை, திருக்கல்யாண உற்சவம் முதலியவை நடைபெறுகின்றன. நவராத்திரியின் போது தினம் ஓர் அலங்கார சேவையும் ஆழ்வார்களின் திருநட்சத்திர உற்சவங்களும் ஆஸ்திக மகாசபையினரின் ஒத்துழைப்புடன் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். பக்தர்கள் அக்கறை எடுத்துக் கொண்டால் கோயில் வழிபாடும், உற்சவங்களும் தவறாது நடைபெறும் என்பதற்கு இக்கோயில் ஓர் உதாரணமாக அமைந்திருக்கிறது.

கேரள ஆலயங்களில் உள்ளது போன்ற துலாபார பிரார்த்தனைகள் சமீப காலமாக இங்கு அடிக்கடி நடைபெறுகின்றன. சுவாமி புறப்பாடு ஆகும்போதெல்லாம் சபையின் வேத வகுப்பு மாணவர்கள் வேத பாராயணம் செய்து வருவது போற்றத்தக்கதாகும்.

ஸ்ரீ பங்காரு காமாட்சி

தஞ்சை மேல வீதியில், ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் ஆலயத்தையடுத்து தெற்கே தெரியும் சிறிய அழகிய கோபுரம், ஸ்ரீ பங்காரு காமாட்சி ஆலயத்தின் ராஜ கோபுரம். அந்த தேவி, தொண்டை மண்டலக் காஞ்சியி லிருந்து புறப்பட்டுச் சோழ வள நாட்டுத் தஞ்சைக்கு வந்து குடியேறியது தெரிந்த பழைய கதை என்றாலும் தற்போது சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

கோ வடிவாய் அமைந்துள்ள பூமண்டலத்தின் இடைப் பகுதியாக இருப்பது காஞ்சி மாநகரம். காஞ்சி என்றால் ஒட்டியாணம் என்று பொருள். 'நகரங்களுக்குள் தலை சிறந்தது' என்று கூறப்படும் காஞ்சி மாநகரம், அயோத்தி, மதுரா, மாயாபுரி, வாரணாசி, அவந்தி, துவாரகா முதலிய ஆறு தலங்களைப் போல், தரிசித்த உடனேயே மோட் சத்தை அளிக்கும் பெருமை பெற்றது.

காஞ்சியில் திரிபுரசுந்தரி, காமராஜ பீடம் என்ற காமகோடி பீடத்தில் பிரகாசிக்கிறாள். ஸ்ரீசக்கர வடிவில் அமைந்துள்ள இந்நகரின் பிந்து ஸ்தானத்தில் காமாட்சி தேவி எழுந்தருளியிருக்கிறாள். இந்த ஆலயத்தில், அவள் ஐந்து வடிவங்களாக அருள்பாலிக்கிறாள்.

அவை, மூல காமாட்சி விக்ரகம், அம்பாளுக்கு முன் வட பாகத்தில் இருக்கும் பிலாகாசம், பின்புறமுள்ள தபஸ் காமாட்சி, முன்புறமுள்ள ஸ்ரீசக்கரம், ஆலயத்தின் துருவ ஸ்தானத்தில் உள்ள பங்காரு காமாட்சி. (இந்த ஸ்தா னத்தில் தற்போது அம்பாளது பாதங்கள் வைக்கப் பட்டுள்ளன.)

ஸ்ரீ பங்காரு காமாட்சி தோன்றக் காரணம் என்ன? அவள் எப்படித் தோன்றினாள்?

ஒரு சமயம் பிரும்மா ஸ்ரீ காமாட்சியைத் தரிசித்து, ஸ்ரீ ஏகாம்பரநாதருக்குத் திருக்கல்யாண உற்சவம் நடத்த வேண்டும் என்ற தமது விருப்பத்தை வெளியிட்டு, அதனை எப்படி நிறைவேற்றுவது என்று வினவினார்.

அதற்கு அம்பிகை கூறினாள்:

''எனது நெற்றிக் கண்ணிலிருந்து ஒரு திவ்விய ஜோதி தோன்றும். ஸ்ரீ ஏகாம்பரநாதருடைய தியான பலத்தினால் அந்த சக்தி ஓர் அழகான தேவி வடிவாக மாறும். அதைப் போலவே சுவர்ணத்தில் ஒரு விக்ரகம் வார்த்து, கோயிலின் துருவ ஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யுங்கள். ஆண்டு தோறும் இந்த திவ்விய மங்கள தேவியை அழைத்துச் சென்று ஸ்ரீ ஏகாம்பரநாதருக்குத் திருமணம் செய்து வைத்து மகிழுங்கள். அன்று இரவு அவள் அக்கோயிலிலேயே தங்கட்டும். மறுநாள் மாலை இருவரையும் வீதி உலாவாக இங்கு அழைத்து வந்து, சுவர்ண காமாட்சி இங்கு தங்கியதும், ஸ்ரீ ஏகாம்பரநாதர் அவர் இருப்பிடம் செல்லட்டும்.

தேவி திருவாக்கு அருளியபடியே, அவளது நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்ட தேஜஸ், ஒரு பெண் உருவம் பெற்றது. வலக் கையில் கிளியுடனும் நளினமாகத் தொங்கும் இடக் கையுடனும், திரிபங்கியெனும் மூன்று வளைவுகளுடன் கூடிய திருமேனி ஒயிலுடன் நின்ற தேவியை அப்படியே சுவர்ண விக்ரகமாக வடித்து வைத்தார் பிரும்மா. அந்த அற்புத, அரிய விக்ரகமே ஸ்ரீ பங்காரு காமாட்சியம்மன். பங்காரு என்றால் தங்கம்.

பதினாறாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் விஜய நகர சாம்ராஜ்யம் அழிந்து, இந்து மதத்திற்கும் ஆலய வழிபாட்டிற்கும் பகைவர்களால் தொந்தரவு ஏற்பட்ட வேளையில், விலை மதிக்க முடியாத பங்காரு காமாட்சி விக்ரகத்தைக் காப்பாற்ற முனைந்த ஆலய ஸ்தானிகர்கள்,

அதை பத்திரமாக எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டார்கள். வழியில் கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்ற அவளை புனுகுப் பூச்சியினால் கறுமைப்படுத்தி எடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது.

காஞ்சியிலிருந்து புறப்பட்ட அம்பாள் பதினைந்து ஆண்டுகள் செஞ்சியில் வாசம் செய்தாள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 1624-ம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் உள்ள உடையார்பாளையம் ஜமீன்தாரின் பேராதரவோடு, அவரது பாதுகாப்பில் சுமார் அறுபது ஆண்டுகள் அங்கு திருக்கோயில் கொண்டிருந்தாள். பின்னர், தஞ்சை மராட்டிய மன்னர்களின் நண்பரும் ஆனக்குடி மிராசுதாரருமா ஸ்ரீ சுவாமிநாதப் பிள்ளை, காமாட்சியைத் தங்களூருக்கு அழைத்துச் செல்ல விரும்பியதால், அம்பிகை கொள்ளிடத்தைக் கடந்து ஆனக்குடி வந்து சேர்ந்தாள்.

அரும் பக்தரும், பெரும் செல்வந்தருமான ஆனக்குடி மிராசுதாரின் ஆதரவில் ஸ்தானிகர்கள் பதினைந்து ஆண்டுகள் அங்கே தங்கினார்கள். பின்னர் நாகூர், சிக்கில், விஜயபுரம் போன்ற சில ஊர்களில் தங்கி விட்டு இறுதியாக திருவாரூர் வந்து சேர்ந்தார்கள். அங்கு கமலாம்பிகையுடன் பங்காரு காமாட்சி சுமார் அறுபது ஆண்டுகள் வாசம் செய்தாள். அச்சமயம்தான் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாமா சாஸ்திரிகள் அங்கு அவதரித்தார். அக்கணமே ஸ்ரீ காமாட்சி தேவி அவரை ஆட்கொண்டாள்.

1780-ம் ஆண்டில் ஸ்ரீ பங்காரு காமாட்சி திருவாரூரிலிருந்தும் புறப்பட வேண்டிய காலம் நெருங்கி விட்டது. அலைந்தது போதும் என்று கருதியதனாலோ என்னவோ, அகிலாண்ட கோடி பிருமாண்ட நாயகி, தஞ்சையிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடுவது என்று திருவுளம் கொண்டு ஒரு நாள் அங்கு வந்து சேர்ந்தாள். அப்போது ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த துளஜா மகாராஜா ஆனந்தக் கண்ணீர் பொங்க அன்னையை வரவேற்றார்.

ஆறு ஆண்டு காலம் அம்பிகை, மேல வீதியிலுள்ள கொங்கணேச்வரர் ஆலயத்திலும், மூலை ஆஞ்சநேயர் கோயிலிலும் குடித்தனம் இருந்து விட்டு, 1786-ம் ஆண்டு சொந்தக் கோயில் கட்டிக் கொண்டு குடியேறினாள். அந்தப் புண்ணியம் துளஜா மகாராஜாவுக்குச் சேரும்படி அருளாசி வழங்கினாள். பின்னர் 1788—89-ல், சத்ரபதி ஸ்ரீ துளஜா மகாராஜா (II)வின் சுவீகாரப் புதல்வரான சத்ரபதி ராஜஸ்ரீ சரபோஜி மன்னர் (II) ராஜகோபுரமும் சில மண்டபங்களும் கட்டியதோடு, ஸ்ரீ காமாட்சி, காமகோடி தேவி விமானங்களைப் பழுது பார்த்து வண்ணம் தீட்டினார். பின்னர் 1941-ல், ஸ்ரீ காமகோடி சங்கராச்சாரிய பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் பெரிய அளவில் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

ஸ்ரீ பெருமாள் கோயில்களில் இருப்பது போன்று காமாட்சியின் திருச்சந்நிதியில் 'சடாரி' ஒன்று இருக்கிறது. சில காலங்களில் அம்பிகைக்குப் புனுகுச் சட்டம் சாத்துகிறார்கள். பங்குனி உத்திர திருக்கல்யாணத்துக்குத் தஞ்சை இளவரசர்கள் திருமாங்கல்யம் அளிக்கிறார்கள். இதைப் பெற்று வர அம்பிகை பல்லக்கில் அரண்மனைக்குச் சென்று அவர்களுக்கு பிரசாதம் வழங்கி விட்டு வருவது வழக்கம்.

ஒவ்வொரு வருஷமும் வியாச பூஜையின்போது ஸ்ரீ காமகோடி சங்கராசாரிய சுவாமிகள் முதலில் ஏற்றுக்கொள்வது பங்காரு காமாட்சியின் பிரசாதமே. சாரதா நவராத்திரியின் போது, சரஸ்வதி பூஜையன்று சுவாமிகள் அம்பிகைக்குப் பட்டு வஸ்திரம் அளித்து, சிறப்பான அர்ச்சனைகளும் செய்து வைக்கிறார்.

ஆலயத்தில் தனிச் சந்நிதி கொண்டுள்ள காமகோடித் தாயார் பஞ்சலோகத்தினாலான விக்ரகம்.

திருவாரூரில் பிறந்த சியாமா சாஸ்திரிகள் (அவரது இயற் பெயர் 'வேங்கட சுப்பிரமணியம்'. தமது இல்லத்தில்

ஆராதிக்கப்பட்டு வந்த ஸ்ரீ கிருஷ்ண விக்ரகத்தின் பெய ரால், சியாம கிருஷ்ணன் என்று அழைக்கப்பட்டார்) தமது 18-வது வயதில் தமது தந்தை விச்வநாத ஐயருடன் தஞ்சைக்கு வந்தார். ஸ்ரீ பங்காரு காமாட்சியை ஆரா தித்து வந்த தந்தைக்கு சியாமா சாஸ்திரிகள் உறுதுணை யாக இருந்தார். திருவாரூரிலேயே இவரை ஆட்கொண்ட அம்பாள் தற்போது பரிபூரணமாகக் கடாட்சித்து சகல கலைகளிலும் பாண்டித்யம் பெறும் பேற்றை இவருக்கு நல்கினாள்.

அப்போது காசியிலிருந்து தஞ்சை வந்திருந்த 'சங்கீத சுவாமிகள்' என்ற துறவியார், சாஸ்திரிகளுக்கு சங்கீத நுட்பங்களைக் கற்றுத் தந்தார். அவரிடம் பரத சாஸ் திரத்தையும் லய சம்பந்தமான அரிய விஷயங்களையும் பயின்றார் சாஸ்திரிகள். சாதுர்மாஸ்ய சங்கல்பத்தை முடித்துக் கொண்டு விஜய யாத்திரை புறப்பட்டபோது காசி சுவாமிகள் சில அரிய சங்கீத நூல்களை அவரிடம் கொடுத்து 'பச்சி மிரியம் ஆதியப்ப ஐயரிடம் அடிக்கடி சங்கீதம் கேட்டு வா' என்று கூறியருளினராம். தஞ்சை அரண்மனையில் ஆஸ்தான வித்வானாக இருந்த ஆதியப்ப ஐயரிடம் நெருங்கிப் பழகியது இவருடைய சங்கீத வளர்ச் சிக்குப் பெரும் உதவியாக அமைந்தது.

பின்னர் அம்பாளின் அருளால் இவர் சிறந்த வாக்கேய காரராகவும் விளங்கினார். இதைத் தவிர, ஜோதிட சாஸ்திரம், கணித சாஸ்திரம், மந்திர சாஸ்திரம் முதலிய வற்றிலும் சாஸ்திரிகள் சிறந்து விளங்கினார். வெள்ளிக் கிழமைதோறும் ஆலயத்தில் தியானத்தில் ஆழ்ந்து விடுவார். மனம் உருகிப் பாடுவார். சில நேரங்களில் அம்பாள் இவருக்குப் பிரத்யட்சமாகியிருக்கிறாள்.

சியாமா சாஸ்திரிகள் பங்காரு காமாட்சியின் மீது 'வராளி'யில் ஒரு தெலுங்கு கீர்த்தனம் அமைத்துள்ளார்.

காமாட்சி பங்காரு காமாட்சி
நன்னுப் ப்ரோவவே (காமாட்சி)
தாமஸமெலே ராவே
ஸாமகான லோலே ஸுசீலே (காமாட்சி)
நாமனவி வினு தேவி நீவே கதியனி
நம்மினானு மாயம்ம வேகமே
கருணஜூடவம்ம பங்காருமொம்ம (காமாட்சி)
சியாமக்ருஷ்ண பரிபாலினி (அம்ப)சுக
சியாமளே சிவசங்கரி
சூலினி ஸதாசிவுனிகி ராணி-வி
சாலகருணி சாச்வத ரூபிணி (காமாட்சி)

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் தஞ்சை ஸ்ரீபங்காரு காமாட்சியின் அடிமையாகி, அன்னையின் பரிபூரணமான அருளால் அரிய சக்திகளைப் பெற்றிருந்தார், அவர் வாக்குப் பலித்தது. நடக்கப் போவதை முன்கூட்டியே கூறிவிடும் ஆற்றலையும் பெற்றிருந்தார். ஆனால், இச்சக்திகளைத் தீய வழிகளிலோ, சுயநலத்திற்காகவோ பயன்படுத்தாமல், 'அனைத்தும் அம்பாளின் லீலைகள்' என்று உணர்ந்து, அகங்காரமின்றி அமைதியான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார் அவர்.

சாஸ்திரிகளுக்கு வித்யா கர்வம் இல்லை; சுயநலமில்லை. மாறாக, தன்னடக்கம் மிகுந்திருந்தது. சதா சர்வகாலமும் ஸ்ரீ காமாட்சியின் திருவடிகளையே நினைத்துப் பக்தியில் கரைந்து கொண்டிருந்த அவருக்குப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமே ஏற்படவில்லை. கோயிலின் பணியிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு திருப்தியடைந்தார். தேவியின் கருணையால் முந்நூறுக்கும் மேற்பட்ட கிருதிகளைப் படைத்து அப்பிகைக்கு இசையலங்காரங்கள் செய்து மகிழ்ந்தார்.

திருவாரூரில் பிறந்த சங்கீத மும்மூர்த்திகளான ஸ்ரீ தியாகய்யர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் மூவரும் அருட்பிரசாதத்தால் தங்களுக்குக் கிட்டிய இசைத் திறனைப் பற்றிக் கர்வம் கொள்ளாமலும் ஒற்றுமையுடனும் பழகினார்கள். சாஸ்திரிகள் அடிக்கடி திருவையாறு சென்று தியாகய்யரிடம் தமது கிருதிகளைப் பாடிக் காட்டுவது வழக்கமாம். தீட்சிதரும் சாஸ்திரிகளிடம் பெருமதிப்புக் கொண்டு நேசமுடன் பழகி வந்ததாகவும் தெரிகிறது.

மகா உத்தமியும் பதிவிரதா சிரோன்மணியுமான சாஸ்திரிகளின் மனைவி 1827-ம் ஆண்டு சுமங்கலியாக இயற்கை எய்தினார். அத்துயரம் தாங்க மாட்டாமல், மனையாள் மறைந்த ஆறாம் நாள் சாஸ்திரிகளும் இம் மண்ணுலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

அம்பிகையின் அருள் ஆவேசத்தால் சாஸ்திரிகள் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாடல்களை இயற்றியுள்ளார். இவரது கிருதிகளைப் பாடிப் பழக, தீவிர பக்தியும், ஆழ்ந்த புலமையும், கடின உழைப்பும் தேவை. இப்பாடல்களை ஆத்மார்த்தமாகப் பாடினால் சித்தசுத்தியும் கலைத் தேர்ச்சியும் ஏற்படுவது உறுதி.

ஸ்ரீ காமாட்சியின் ஆராதனத்திற்கென்று தனியாக ஸ்ரீ துர்வாச மகரிஷி 'சௌபாக்ய சிந்தாமணி'யை இயற்றினார். அந்த நூலில் கண்டுள்ள பிரகாரமே ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு நித்திய, உற்சவ பூஜைகள் செய்யப்பட்டு வருகின்றன. தேவியை ஆராதிக்கும் அர்ச்சகர்களே ஸ்தானிகர்களாவார்கள். சாஸ்திரிகள் என்ற பட்டப் பெயருடன் அவர்கள் விளங்குகிறார்கள்.

அம்பாளுக்குத் தினமும் ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றன. உஷத் காலத்திற்கு முன் ஸ்ரீமேருவுக்கு அபிஷேகம் நடைபெறும். ஸ்ரீ காமாட்சிக்கு வருடத்தில்

பதினோரு அபிஷேகங்களே நடைபெறுகின்றன. அதுவும் மாலை வேளையில்தான் செய்கிறார்கள்.

ஸ்ரீ பங்காரு காமாட்சியம்மன் வீதி உலா வருவதில்லை. மூலஸ்தானத்திலேயே எப்போதும் காட்சியளிப்பாள். உற்சவ மூர்த்தியான ஸ்ரீ காமகோடி அம்பாள் தை மாதம் கனு அன்று மட்டும் சர்வ அலங்காரங்களுடன் முன் மண்டபத்தில் காட்சி தருகிறாள். அன்று மட்டும் ஸ்ரீ அம்பாளுக்குத் தேங்காயைப் பூர்ண பலமாகவே நிவேதிப்பது வழக்கம். தேங்காயை உடைப்பது இல்லை. இந்த ஒரு நாளைத் தவிர மற்ற நாட்களில், இருக்கும் ஸ்தானத்தை விட்டு உற்சவ மூர்த்தியை அகற்றுவது இல்லை. ஸ்ரீ காமகோடி அம்பாளுக்குப் பிரதி வெள்ளிக்கிழமையும், அமாவாசை, பௌர்ணமி, தைப் பொங்கல் போன்ற நாட்களிலும் ஸ்ரீ பங்காரு காமாட்சிக்குரிய விசேஷ தினங்களிலும் அபிஷேகம் நடைபெறுகிறது.

நிறைய நிலபுலன்கள் இருந்தும், நிலச் சீர்திருத்தச் சட்டங்களால் வருமானம் இல்லாமல் அவதிப்படும் ஆலயங்களில் ஸ்ரீ பங்காரு காமாட்சி ஆலயமும் ஒன்று. எனவே ஸ்ரீ அம்பாளின் நித்திய பூஜைகளும் இதர விழாக்களும் சிறப்புற நடைபெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனும் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகளின் அருளாசியுடனும் ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. ஒருவர் ரூ. 1500 மூலதனமாகச் செலுத்தினால், அதன் வட்டியிலிருந்து ஒரு நாள் பூஜை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரி 365 நபர்கள் சேர்ந்தால், ஸ்ரீ அம்பாளின் பூஜை இடையூறின்றி நடைபெற்று, நாடு வளம் அடைந்து, மக்கள் நலம் பெற்று வாழ வழி பிறக்கும். விருப்பமுள்ளவர்கள், (டி. எஸ். ராஜகோபாலன், மானேஜிங் டிரஸ்டி, 1818 மேல வீதி, தஞ்சை-613001) என்ற முகவரிக்கு ரூ. 1500-க்கு டிராப்டும் பதிவுச் செலவுக்காக ரூ. 175-ம் அனுப்பி வைத்து, அம்பா

ளுக்கு ஒரு நாள் பூஜையை நடத்தி வைக்கும் புண்ணியத்தைப் பெறலாம்.

ஸ்ரீவிஜயராமர் கோயில்

ஸ்ரீ பங்காரு காமாட்சி கோயிலின் முன்புறம் வரத மகாகணபதி அமர்ந்திருந்திருக்கிறார். இடப்புறம் ஸ்ரீநவநீத கிருஷ்ணன் எழுந்தருளியிருக்க, வலப்புறம் ஸ்ரீவிஜயராமர் திருக்கோயில் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ விஜயராமர் கோயிலின் ராஜகோபுரம் பழமையும் பொலிவும் கொண்டது. கோயிலை வலம் வரும்போது, அது திருப்பணிக்காகவும் குடமுழுக்கிற்காகவும் காத்திருப்பது போல் தோன்றியது. மூலசந்நிதியில் உறையும் மூர்த்திகள் அருள் வடியும் வடிவங்கள். கருவறைக்கு அருகில் ஸ்ரீநிவாசர் காட்சியளிக்கிறார். முன்னால் கருடாழ்வார் இருக்கிறார். முன் மண்டபத் தூண்களில் முருகன், கணபதி, திருமால், ஆஞ்சநேயர் உருவங்கள் சிற்ப எழிலுடன் செதுக்கப்பட்டுள்ளன. ஆஞ்சநேய மூர்த்திக்குத் தனி திருச்சந்நிதியும் இருக்கிறது.

ஸ்ரீகாசி விசுவநாதர் கோயில்

ஸ்ரீ விஜயராமர் கோயிலுக்குச் சற்றுத் தெற்கே தெரிவதுதான் ஸ்ரீகாசிவிச்வநாதர் கோயிலின் ராஜகோபுரம். ஒரே பிராகாரம் கொண்ட சிறிய கோயிலானாலும் சுவாமி, அம்பாள், சண்டிகேச்வரர் விமானங்கள் நேர்த்தியாக இருக்கின்றன. இக்கோயிலுக்கு எதிரே, மேற்கு நோக்கிய சந்நிதியாக மற்றொரு ஸ்ரீ காசிவிச்வநாதர் கோயில் இருக்கிறது. அச்சிறிய கோயிலில் விநாயகர், சுப்ரமணியர், பைரவர், சனீச்வரர், சூரியன் முதலியோர் காணப்படுகின்றனர். ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சிறிய, அழகிய வடிவம்.

இந்தக் கோயில் ஐயன் குளக்கரையில் இருக்கிறது. மேல வீதிக்குப் புதிதாக வருபவர்கள் இந்தக் குளம் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பது கடினம். வீதியில் நடக்கும்போது அது கண்ணுக்குத் தெரியாது. அவ்வூர்க்காரர்கள் அழைத்துச் சென்று காட்டினால்தான் பார்க்க முடியும்.

ஊருக்குள் இத்தனை பெரிய, ஓரளவு சுத்தமான குளம் இருப்பது ஓர் அதிசயம்தான். பல வருடங்களுக்கு முன் இதைத் தூர்த்துவிட வேண்டும் என்று தீவிர முயற்சிகள் நடந்ததாம். இறுதியில் பக்தர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். அதன் பிறகு, உரிமையைக் கொண்டாடுவதற்காக இதில் ஸ்ரீ கொங்கணேச்வரரும், ஸ்ரீ ராமரும் தெப்போற்சவம் கூட நடத்திக் கொண்டார்கள். திருக்குளத்தின் நடுவில், 'நடுவில்நாதர்' என்ற விநாயகர் அமர்ந்திருக்கிறார்.

இதே வரிசையில், தென்புறம் நாகநாதப் பிள்ளையாரும், அடுத்து சந்நிதிப் பிள்ளையாரும் எழுந்தருளியிருக்கிறார்கள். சந்நிதி விநாயகருக்கு நேர் எதிரில், ஸ்ரீ கொங்கணேச்வரர் சிவாலயம் இருக்கிறது.

ஸ்ரீ கொங்கணேச்வரர்

பெரியகோயில் என்று அழைக்கப்படும் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாகும். அதற்கும் முன்னால், சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் எழுப்பப்பட்டது மேல வீதியிலுள்ள ஸ்ரீ கொங்கணேச்வரர் ஆலயம். கொங்கண சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமான் அவர்.

ஸ்ரீ கொங்கணேச்வரரின் சிறப்பைத் தஞ்சைபுரி மகாத்மியம் தெளிவாகவும் சிறப்பாகவும் கூறுகிறது.

இறைவன் பெயர் கொங்கணேச்வரர். இறைவியின் திருநாமம் ஞானாம்பிகை. அன்னபூரணி என்ற திருநாமத்துடன் மற்றோர் அம்பாளும் எழுந்தருளியிருப்பது இக்கோயிலின் தனிச் சிறப்பாகும்.

மணிக்கட்டிப் பிள்ளையார், வள்ளி தெய்வானையுடன் மயில் மீதமர்ந்த முருகன், திருமால், கஜலட்சுமி, ஜுரஹரேச்வரர், காளஹஸ்தீச்வரர், மகிழவனேச்வரர், திரயம்பகேச்வரர், திரிபுரசுந்தரி, மகா காளி, மகா துர்க்கை, நவக்கிரகங்கள் ஆகிய பரிவார தேவதைகள் உள்ளடங்கிய அபூர்வ ஆலயம் இது. சூரியன், சனீச்வரர், பைரவர் ஆகிய மூவரும் தனிச் சந்நிதிகளில் எழுந்தருளியுள்ளனர்.

கொங்கண சித்தர், பதினெண் சித்தர்களுள் ஒருவர். இவர் தத்தாத்ரேயருடைய சீடர். போகருடன் கூட இவரும் திருமூலரிடம் சீடராக இருந்ததாகவும் தஞ்சைபுரி மகாத்மியம் கூறுகிறது.

கொங்கண சித்தர் தஞ்சையில் கடுமையான தவமியற்றி வந்தார். இதைக் கண்டு அஞ்சிய இந்திரன், அவரது தபசுக்குப் பலனில்லாமல் செய்யும் பொருட்டு மகரிஷிகளைக் கொண்டு பெரிய வேள்வி ஒன்று நடத்தினான். அவ் வேள்விக் குண்டத்திலிருந்து தோன்றிய கொடூரமான புலியை, கொங்கணரின் தவத்தைக் கலைக்கும் எண்ணத்துடன் அவர்மீது ஏவி விட்டான்.

கொங்கணரை அப்புலி நெருங்கியது. ஆனால், சித்தரின் கடுமையான தவத்தின் வெப்பத்தைத் தாங்க முடியாமல், அது வலுவிழந்து அவரது காலடியில் பூனை போல் அடங்கி ஒடுங்கிப் படுத்து விட்டது. அந்தப் புலியைக் கொங்கணர் தமது வாகனமாக்கிக் கொண்டு விட்டார்.

இதைக் கண்டு துணுக்குற்ற இந்திரன் சப்த ரிஷிகளை சித்தர் மீது ஏவினான். அவர்கள் முயன்றும் பயனில்லை.

இறுதியில் மாமுனிவர்களும் அவரிடம் தோற்று அவருக்குச் சீடராயினர்.

இதன் பிறகு கொங்கண சித்தரின் கர்வம் பதின்மடங்காயிற்று. இந்திரனும் தேவாதி தேவர்களும் ஈச்வரனிடம் சென்று முறையிட்டனர்.

ஈச்வரன், சித்தரின் தவ வலிமையின் பொருட்டும், அவரது அஞ்ஞான இருளை நீக்கும் பொருட்டும் அவருக்குக் காட்சி தந்தருளினார். தன் முன் அம்பிகையுடன் தோன்றிய சிவபெருமானை வணங்கி, கர்வம் நீங்கப் பெற்று மெய்ஞானம் பெற்றார் சித்தர். பின்னர், பரம்பொருளை வழிபட்டார். தூய பக்தியைக் கண்டு மனம் குளிர்ந்த பெருமான், 'என்ன வரம் வேண்டும், கேள்?' என்றார்.

அதற்குக் கொங்கண சித்தர், 'ஓராண்டு காலம் தாம் வழிபட்ட ஜோதியை, 365 திருவிளக்குகளாக ஏற்றி வழிபடும் பக்தர்களின் குறைகளை நீக்கி, அவர்களது பிரார்த்தனைகளை நிறைவேற்றி வைத்து அருள்பாலிக்க வேண்டும்' என்று வேண்டினார். 'அவ்வாறே ஆகுக' என்று அபயம் அளித்து ஈச்வரன் மறைந்தார். அந்தப் பரம் பொருளை சிவலிங்கமாகப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் சித்தர்.

ஆலயத்தில் கிழக்குப் பிராகாரத்தில் கொங்கண சித்தரின் சிலை ஒன்றுள்ளது. அதற்கு எதிரே கல்லாலான விளக்கு மாடம் ஒன்றிருக்கிறது. அதில் அகல் போல் உள்ள 365 விளக்குகளை ஏற்றி வைத்தால் இன்றும் நம் பிரார்த்தனைகள் பலிக்கின்றன.

பராசக்தி மதுரையில் மீனாட்சியாகத் தோன்றியது போல், தஞ்சையில் அன்னபூரணியாகத் தோன்றினாள். மேல வீதியிலுள்ள ஐயன் குளத்தில் அலர்ந்த ஒரு தாமரை மலரில் குழந்தையாக மலர்ந்தாள். குழந்தைச் செல்வ

மின்றி வருந்திய பக்தர் ஒருவர் வீட்டில் அன்னபூரணி என்ற திருநாமத்துடன் வளர்ந்து வந்தாள் லோக மாதா.

'பெற்றோர்' மகளின் திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினர். ஆனால். அம்பிகையோ மனத்தில் இறைவனையே கணவனாக வரித்துத் தவக்கோலம் பூண்டாள். திடீரென்று ஒரு நாள் அம்பிகையின் தவக் கோலம் தானாகக் கலைந்தது. இதைக் கண்டதும் பதைபதைத்துப் போய் விநாயகரிடம் தஞ்சம் புகுந்து மீண்டும் தவக்கோலத்தைப் பெற்றாள். இருப்பினும் பெற்றோர் திருமணத்திற்கான முயற்சிகளைக் கைவிட வில்லை. ஒரு நாள் அன்னபூரணி கருவறைக்குள் புகுந்து இறைவனுடன் ஐக்கியமாகி விட்டாள்.

அன்னபூரணிக்கு அருள் புரிந்த கணபதி யோக விநாய கராக வழிகாட்ட, கிழக்கில் துர்க்கையும், மேற்கில் காளி யும், முன்புறம் வீரமார்த்தாண்ட பைரவரும் காவலிருக்க, அம்பிகை பாசாங்குசத்துடன் பராசக்தியாகத் தனிச் சந்நிதியில் பத்மபீடத்தில் அமர்ந்து அருள்பாலித்து வருகிறாள்.

சுவாமி மண்டபத்தில் வடபுறம் தெற்கு நோக்கியவாறு திருச்சந்நிதி கொண்டிருக்கிறாள் ஞானாம்பிகை. சிவசக்தி சொரூபமாகக் கரங்களில் மான்மழுவுடன் காட்சி தருகிறாள்.

இத்தல விருட்சங்களாக வன்னி மரமும், மகிழ மரமும் இருக்கின்றன. வடக்குப் பிராகாரத்தில் நாகர் மேடை அடைக்கப்பட்டு அங்கு மகிழவனேச்வரர் மகிழ மரத்தடியில் தனிச் சந்நிதியில் காட்சி தருகிறார். ஆதியில் கொங்கண சித்தர் இந்த இடத்தில்தான் பெருமானைப் பூஜித்து வந்ததாக வரலாறு.

இக் கோயிலின் குடமுழுக்கு விழா கி.பி. 1734-ம் ஆண்டு துளஜா என்னும் துக்கோஜி மகாராஜாவினால்

செய்யப்பட்ட விவரம் மூலத்தான கோபுரத்தின் கலசம் நிறுவப்பட்ட வெண்கல கடப்பாரையில் மராட்டிய மொழியில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அறநிலையத்துறை ஆணையராக இருந்த உத்தண்ட ராமன் அவர்களால் 1959-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு குடமுழுக்கு செய்யப்படாமலே நின்று போய் விட்டது.

பின்னர் பெருமளவில் திருப்பணி செய்யப்பட்டு, 24-6-82 அன்று குடமுழுக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தமது பொற்கரத்தால் யாகசாலையில் குத்து விளக்கை ஏற்றி, குடமுழுக்கு விழாவைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினார்கள்.

ஸ்ரீ கோடியம்மன் கோயில்

தஞ்சை மேல ராஜ வீதியில் உள்ள ஸ்ரீ கொங்கணேச்வரர் கோயிலுக்குத் தெற்கே ஸ்ரீ கோடியம்மன் கோயிலும், ஸ்ரீ ஓம் அழகிய விநாயகர் கோயில்களும் உள்ளன. உண்மையில் இது ஒரே கோயில்தான். ஒருபுறம் ஸ்ரீ கோடியம்மனின் உற்சவ விக்ரகமும், மறுபுறத்தில் விநாயகர் சிலையும் இருக்கின்றன. வெண்ணாற்றங்கரையில் ஸ்ரீ தஞ்சை புரீச்வரர் கோயிலின் அருகில், பஸ் பாதையையொட்டிக் கோயில் கொண்டுள்ள மற்றொரு ஸ்ரீ கோடியம்மனை முன்பே தரிசித்திருக்கிறோம்.

ஓம் அழகிய விநாயகருக்கு மார்கழி மாதம் முழுவதும் சிறப்பான அர்ச்சனை, ஆராதனைகள் நடைபெறுகின்றன. இங்கு திருஞானசம்பந்தப் பெருமானது திருவுருவப் படம் வைக்கப்பட்டுள்ளது. வைகாசி மாதம் அவருக்குக் குரு பூஜை நடைபெற்று, திருவுருவப் படம் திருவீதி உலா வருகிறது. இங்குள்ள பஜனை கோஷ்டியினர் திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பரின் சப்தஸ்தான விழாவில் கலந்து கொண்டு ஏழு ஊர்களுக்கும் சென்று வருகிறார்கள்.

ஸ்ரீ சங்கர நாராயணர்

அடுத்துள்ளது ஸ்ரீ பாலாம்பிகா உடனுறை ஸ்ரீ சங்கர நாராயணர் கோயில். சிவலிங்கத் திருமேனியாகக் காட்சியளிக்கும் மூலவர், கிழக்குப் பார்த்து எழுந்தருளியிருக்கிறார். அம்பிகை தெற்கு நோக்கிச் திருச்சந்நிதி கொண்டிருக்கிறாள்.

பிராகாரத்தில் ஸ்ரீ சங்கரநாராயணமூர்த்தி, ஸ்ரீ பார்வதி, ஸ்ரீ லட்சுமிதேவிகளுடன் சிலை வடிவில் அருட் காட்சி தருகிறார். ஸ்ரீ விநாயகர், வள்ளி, தெய்வானை உடனுறை ஸ்ரீ சுப்ரமணியர், அருணாசலேச்வரர், கஜலட்சுமி, அனுமார், ராமர், விச்வநாதர், விசாலாட்சி, சண்டிகேச்வரர், ஜுரஹரேச்வரர், நவக்கிரகங்கள், சூரியன், சனிச்வரர், பைரவர் முதலியோர் அக்கோயிலில் உள்ளனர்.

கரிகாலச் சோழனின் குமாரன் பீம சோழராஜன். அவனது மனைவி வித்யுல்லா தேவி. அவள் அடிக்கடி திருநெல்வேலியில் உறையும் ஸ்ரீ சங்கரநாராயணரைக் குறித்து மானசீகமாக வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். ஒரு நாள் இறைவன், அரசியின் கனவில் தோன்றி, 'தஞ்சைப் பெரியகோயிலுக்கும், ஸ்ரீ கொங்கணேச்வரர் ஆலயத்திற்கும் இடையில் உள்ள மணல் மேட்டில் நானிருக்கிறேன்' என்று கூறி மறைந்தார். மறுநாள் அரசி தான் கண்ட கனவைப் பற்றி அரசனிடம் கூற, இருவரும் அம்மணல் மேட்டிற்கு வந்து தோண்டிப் பார்த்த பொழுது சங்கர நாராயணரின் சிலையொன்று கிடைக்கப் பெற்றது. அதை எடுத்து வைத்து, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து இக்கோயிலை நிர்மாணித்தனர். வைகாசி விசாகத்தன்று இங்குள்ள கிணற்றில் கங்கை பெருகுகிறதாம்.

அடுத்து, சிவகங்கை தோட்டத்திற்கு அருகில் ஸ்ரீ சஞ்சீவி ஆஞ்சநேயரும், அதையடுத்து ஸ்ரீ பாலசஞ்சீவி

ஆஞ்சநேய மூர்த்தியும் திருக்கோயில் கொண்டுள்ளனர். கோயில்கள் நிறைந்த தஞ்சை மேல வீதியின் இரு கோடிகளிலும் ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி நித்திய காவல் புரிந்து வருகிறார்.

ஸ்ரீ வரதராஜப் பெருமாள்

தஞ்சை கீழ ராஜ வீதியில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம உள்ளது. அங்கு இரண்டு ராஜகோபுரங்கள் தெரியும். ஆனால், தெற்கே உள்ள கோபுரத்தின் வழியே தான் செல்ல முடியும். அது பெருந்தேவித் தாயார் சந்நிதிக்குச் செல்லும் வழி. அதன் வழியாகத்தான் ஸ்ரீ வரதராஜரின் திருச்சந்நிதிக்கும் செல்ல வேண்டும். அதற்கு நேரேதான் மற்றொரு கோபுர வாசல் உள்ளது. ஆனால், தற்போது கதவு அடைக்கப்பட்டு, மூன்னால் சைக்கிள் கடை உள்ளது.

இதுவும் தஞ்சையில் உள்ள பழமையான கோயில்களில் ஒன்றாகும். இது சரியாகப் பராமரிக்கப்படாமல் இருப்பதாகத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் கருவறை விமானத்தில் வளர்ந்துள்ள செடிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்களா?

ஸ்ரீ காளிகாபரமேச்வரி

தெற்கு ராஜ வீதியில் உள்ள ஸ்ரீ காளிகாபரமேச்வரி ஆலயமும் பெரிய கோயில் தோன்றிய போது நிர்மாணிக்கப்பட்டதுதான்.

ஸ்ரீ ராஜராஜ சோழன் பெருவுடையார் கோயிலை நிர்மாணிக்க எண்ணம் கொண்ட போது, பற்பல நாடுகளில் சிதறுண்டிருந்த சிற்பாசாரியர்களை அழைத்து ஆலயம் எவ்வாறு அமைய வேண்டும் என்று தான் காணும் கனவைக் கூறினான். மன்னனின் கருத்திற்கிணங்க ஸ்ரீ பிரகதீச்வரர் ஆலயம் கட்டி முடிப்பது என்று முடிவாயிற்று.

விச்வகர்ம சமூகத்தினருக்குச் சக்தி வழிபாடு இன்றி யமையாததாகும். இதைக் குறித்துக் காளிகா புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவேதான் எந்த ஆலயம் கட்டுவதாக இருந்தாலும் சிற்பாசாரியர்கள் தங்கள் குல தெய்வமான ஸ்ரீகாமாட்சி எனும் ஸ்ரீ காளிகாபரமேச்வரிக்கு ஆலயம் எழுப்பி, சக்தியை ஆராதித்து அவளது பரிபூரண ஆசியைப் பெற்ற பிறகே ஆலயம் கட்ட வேண்டிய இடத்தை வாஸ்து விதிப்படி அளந்து ஆலயத்தை நிர்மாணிக்கத் தொடங்குவது வழக்கம். பெரிய தேவாலயங்கள் உள்ள தலங்களில் கம்மாளத் தெருவும், ஸ்ரீ காமாட்சி அம்மன் அல்லது ஸ்ரீ காளிகாபரமேச்வரி ஆலயமும் அச்சகசாலை விநாயகர் ஆலயமும் இருப்பதை இன்றும் காண்கிறோம்.

ஸ்ரீ பெருவுடையார் திருக்கோயிலை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்ட சிற்பாசாரியர்களின் விருப்பப்படியும், தொன்றுதொட்டு வந்த மரபுப்படியும் ஸ்ரீ ராஜ ராஜ சோழ மன்னனின் ஆதரவோடு தஞ்சை தெற்கு ராஜ வீதியில் ஸ்ரீ காளிகாபரமேச்வரி ஆலயம் கட்டப்பட்டது. இதற்குக் குடமுழுக்கு நடந்த அன்றே, பெருவுடையார் ஆலயத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது. அன்று முதல் இன்று வரை விச்வகர்ம சமூகத்தினர் ஸ்ரீ காளிகாபரமேச்வரியைக் குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். சுமார் 976 வருடங்களுக்கு முன் எழுப்பப்பட்ட இக்கோயிலில் மூலஸ் தான கோபுரம், திருமால்பத்தி, ராஜகோபுரம் அனைத்தை யும் புதுப்பித்து 1978-ஆம் ஆண்டில் விச்வபிரம்ம மகாஜன சபையார் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இக்கோயில் வடக்கு நோக்கியுள்ளது. அம்பாள் எட்டுக் கரங்களுடன் காட்சியளிக்கிறாள். சந்நிதிக்கு எதிரில் நந்தி யிருக்கிறது. பிராகாரத்தில் கணபதி, ஆறுமுகன், தண்டா யுதபாணி, உற்சவ மூர்த்திகளாக ராமர், சீதை, லட்சு மணர் முதலியோர் இருக்கின்றனர்.

அடுத்து, விசாலாட்சி உடனுறை ஸ்ரீ பாஞ்சாள விச்வநாத சுவாமி ஆலயம் உள்ளது. திருச்சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

ஸ்ரீ கலியுக வெங்கடேசப் பெருமாள்

தெற்கு வீதியில் இருக்கும் மற்றொரு கோயில், ஸ்ரீ கலியுக வெங்கடேசப் பெருமாள் கோயிலாகும்.

ஸ்ரீ கலியுக வெங்கடேசப் பெருமாள் நான்கு கரங்களுடன் ஸ்ரீ பெருந்தேவி நாச்சியாருடன் எழுந்தருளியிருக்கிறார். மகா மண்டபத்தில் சுமார் நாலரை அடி உயரமுள்ள பூர்வ சஞ்சீவி ஆஞ்சநேயர், நாகராஜன், கருடாழ்வார் முதலியோர் இருக்கின்றனர். இதற்கு வட பாகத்தில் விஷ்வக்ஸேனர் இருக்கிறார். பெருமாளுக்கு வடக்கே துர்க்கை எழுந்தருளியிருக்கிறாள்.

மிகவும் பழுதடைந்த நிலையிலிருந்த இந்தக் கோயில், சீனியர் பிரின்ஸின் உதவியோடும், டாக்டர் என். ராமநாதனின் முயற்சியாலும் சீர்ப்படுத்தபட்டு, 1964-ஆம் ஆண்டு நல்ல முறையில் குடமுழுக்கு செய்யப்பட்டது. பின்னர் சாயா, ஸ்வச்சலாம்பாள் உடனுறை சூரிய பகவானுடன் நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அதன் பலனாக, பக்தர்கள் கூட்டம் பெருகத் தொடங்கியது. முக்கியமாக செவ்வாய், புதன், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சேவார்த்திகள் பெருமளவில் வந்து, பெருமாளையும் பெருந்தேவித் தாயாரையும் நவக்கிரகங்களையும் சேவித்துப் பலனடைந்து வருகின்றனர்.

கல்யாணபுரம்

திருவையாறுக்கும் தஞ்சாவூருக்கும் இடையிலுள்ள கல்யாணபுரம் என்ற பழைய, அழகிய அமைதியான கிராமத்தைக் காணச் செல்வோம்?

திருக்கண்டியூரை அடுத்துள்ள நடுக்கடை என்ற இடத்திலிருந்து கிழக்கே ஒரு மைல் சென்றால் கல்யாணபுரத்தை அடையலாம். வலப்புறம் காவிரியும், இடப்பறம் குடமுருட்டி ஆறும் இருகரங்களாக இந்தக் கிராமத்தை ஆதரவோடு அணைத்துக் கொண்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் பாழடைந்து, பொலிவிழந்து காணப்படும் பல கிராமங்கள் போலன்றி இக்கிராமம் பண்டைய வளத்திற்கும் நல்வாழ்வுக்கும் சான்றாக இன்றும் காட்சியளிப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இக்கிராமத்தில் ஆர்வமுள்ள பல இளைஞர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர், சப்தஸ்தான விழாவின்போது திருப்பழனக் காவேரிக் கரையில் என்னைச் சந்தித்து, 'எங்களூருக்கு வாருங்கள். எங்கள் பெருமாளைச் சேவியுங்கள்' என்று அன்போடு அழைத்தார்கள். அவர்களது கிராமப் பற்றும் தெய்வ பக்தியும் என்னைக் கல்யாணபுரத்திற்கு அழைத்துச் சென்றன.

இங்கு ஸ்ரீநிவாசப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். திருக்கண்டியூர் அரசாப விமோசனப் பெருமாளின் அபிமானம் பெற்ற பெருமாள் இவர். அந்தணர் வீதியின் மேற்குக் கோடியில் ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில் கொண்டிருக்கிறார்.

முன் கோபுரம் இல்லாத அழகிய, சிறிய கோயில். முகப்பில் திருமண், சங்கு, சக்கர அடையாளங்கள் இல்லாதது சற்று குறையாகத்தான் தோன்றுகிறது.

உள்ளே சென்றதும் பித்தளைத் தகடுகளால் வேயப்பட்ட துவஜஸ்தம்பம் நம்மை வரவேற்கிறது. வலப்புறம் மடப்பள்ளி. பிராகாரத்தை வலம் வருகிறோம். ஒரு சிறு சந்நிதியில் நம்மாழ்வார், பாஷ்யகாரர், திருமங்கை மன்னன், நிகமாந்த மகாதேசிகன் முதலியவர்களின் சிலா வடிவங்களைத் தரிசிக்கிறோம். அடுத்து ஒரு நாகர் பிம்பம்.

இருக்கிறது. வலம் வருபவர்கள் இதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கின்றனர். விஷப் பூச்சிகளின் கடியிலிருந்து இது பாதுகாப்பு அளிப்பதாகக் கூறுகிறார்கள்.

கிழக்கு நோக்கி ஒரு கல்யாண மண்டபம் இருக்கிறது. தை மாதம் சிரவண நட்சத்திரத்தன்று எம்பெருமானுக்கு இங்கு திருக்கல்யாண மகோற்சவம் நடைபெறுகிறது. கல்யாண மண்டபத்தையடுத்து ஒரு பலாமரம். அதையடுத்து வசந்த மண்டபம்-பழுதடைந்து, பார்க்கப் பரிதாபமாய்க் காட்சியளிக்கிறது. அதையடுத்து மேற்கு நோக்கி யாகசாலை. அதையடுத்து வாகன மண்டபம். அதிகக் கவனிப்போ, பராமரிப்போ இன்றி, தூசியும் தும்புமே மேலாடைகளாக வாகனங்கள் காட்சியளிக்கின்றன!

ஸ்ரீ கருடாழ்வார் சந்நிதியைத் தரிசித்துக் கொள்கிறோம். பெரிய திருவடிக்கு வலப்புறத்தில் கிழக்கு நோக்கிச் சிறிய திருவடி நின்ற கோலத்தில் தரிசனம் தருகிறார். சக்தி வாய்ந்த ஆஞ்சநேய மூர்த்தி. மனக் கவலை நீங்கவும் உடற் பிணிகள் தீரவும் இவரிடம் நேர்ந்து கொண்டால் கைமேல் பலன் உண்டு என்று ஊர்ப் பெரியவர்கள் கூறுகிறார்கள்.

மகா மண்டபத்தில், தென்புறம் கிழக்கு நோக்கி அலர் மேல்மங்கைத் தாயார் எழுந்தருளியிருக்கிறாள். சிறிய உருவம்தான். ஆனால், தாயாரின் அருள் வழங்கும் கீர்த்தி மிகப் பெரியது. அருகில் இருக்கும் வெள்ளி கருட வாகனம் நம்மைக் கவர்கிறது. இங்கு பிரார்த்தனையாகக் கருட சேவை நடைபெறுவது ஒரு தனிச் சிறப்பு. எம்பெருமான் எம்பிராட்டியுடன் திருச்சுற்று உலா வரும் காட்சி காணப் பேரானந்தமாக இருக்கும்.

கருவறையை நோக்கிக் கை கூப்புகிறோம். உபய நாச்சியாருடன் ஸ்ரீநிவாசப் பெருமாள் காட்சி தருகிறார். சிறிய உருவமானாலும் அழகுத் திருமேனி. கற்பூர ஒளியில்

மின்வி, கண்கண்ட தெய்வமாக சேவை சாதிக்கிறார் கலியுகக் கருணாமூர்த்தி.

பெருமாளின் உற்சவ மூர்த்திக்குக் கவசம் உள்ளது. வருஷத்துக்கு ஒருமுறை, ஜேஷ்டாபிஷேக நாளன்று அது அகற்றப்பட்டு, திருமஞ்சனம் நடைபெறுகிறது. மெலிந்த உருவமானாலும் கனிந்த உள்ளம்; பக்தர்களுக்கு இரங்கும் நெஞ்சம். உள்ளே நம்மாழ்வார், உடையவர், சக்கரத் தாழ்வார், தேசிகன், திருமங்கை மன்னன் முதலியோரது பஞ்சலோக விக்ரகங்களும் இருக்கின்றன.

பங்குனி மாத சிரவணத்தில் பிரும்மோற்சவம் தொடங்கி, பன்னிரண்டு நாட்கள் மிக விமரிசையாக நடைபெறும். பிரபல நாகச்வர வித்வான்கள் அனைவரும் இதில் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர்.

தை மாதம் சிரவணத்தில் திருக்கல்யாண உற்சவம். இத்திருநாளில் உயர்ந்த கர்நாடக இசை விருந்தும், கதா காலட்சேபங்களும் இடம் பெறுவது வழக்கம்.

ஐப்பசி சிரவணத்தில் பவித்ரோத்சவம் ஆகம முறைப்படி ஐந்து தினங்கள் நடைபெறுகிறது. கார்த்திகை மாதம் திருக்கார்த்திகையன்று லட்சதீபம், புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமை அகண்டதீபம் இரண்டும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். தேசிகர் திருநட்சத்திரமும், மார்கழி மாதம் அத்யயன உற்சவமும் நடைபெறுகின்றன.

மாசிமகப் பெருவிழாவும் இங்கு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அப்புனித நாளில் பெருமாள் காவேரிக்குச் சென்று பக்தர்கள் புடைசூழ தீர்த்தவாரி நடைபெற்றுத் திரும்பும் வழியில், இதற்காக ஒரு பக்தரால் நிர்மாணிக்கப்பட்ட மாசி மக மண்டபத்தில் பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்கப்படுகிறார். பின்னர், அந்த அலங்காரப் பந்தலில் திருமஞ்சனம், வேத, பிரபந்தப் பாராயணங்கள் தொடர்கின்றன. மாலையில்,

விசேஷ புஷ்ப அலங்காரங்களுடனும், வாண வேடிக்கைகளுடனும் பெருமாள் கருட வாகனத்தில் புறப்பாடாகிறார். இறுதியில் சாத்துமுறையுடன் வைபவம் முடிவடைகிறது. கிராமவாசிகளின் குதூகல ஒத்துழைப்புடன் உபயகாரர் இந்தக் கைங்கரியத்தைச் சிரத்தையுடன் செய்து வருகிறார்.

இந்தக் கிராமம், முந்நூறு வருடங்களுக்கு முன் தெலுங்கு பிராமணர்களுக்கு மான்யமாக அளிக்கப்பட்டதாகவும், பின்னரே இங்கு வைணவர்கள் வந்து குடியேறியதாகவும் ஓர் ஆராய்ச்சியாளர் கருதுகிறார்.

சரபோஜி மன்னருக்குக் கல்யாணிபாய் என்ற ஓர் அரசியும் இருந்தாள். ஒரு சமயம் அவளுடன் காசி யாத்திரை சென்ற மன்னன், கங்கைக் கரையில் இருந்த கட்டடம் போன்றே காவேரிக் கரையிலும் ஒன்று கட்ட வேண்டும் என்று விரும்பினானாம். அதன்படியே தஞ்சை திரும்பியதும், திருவையாற்றில் கல்யாணி மகாலைக் கட்டி, இக் கரையில் கல்யாணிபுரத்தை ஏற்படுத்தினானாம். நாளடைவில் அவை முறையே, கல்யாண மகாலாகவும், கல்யாணபுரமாகவும் ஆயிற்றாம்!

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இந்தக் கிராமத்திற்கு உஞ்சவிருத்திக்காக வருவது வழக்கமாம்.

ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாளும் அலர்மேல்மங்கைத் தாயாரும் இக் கிராமத்தாருக்குப் பிரத்யட்ச தெய்வங்கள்.

சென்னையில் பிரபல கண் வைத்தியராக இருந்த லெப்ட். கர்னல் ரங்காச்சாரி கல்யாணபுரத்தைச் சேர்ந்தவர். தங்களூர் பெருமாளின் மகிமையை விளக்க அவர் ஒரு நிகழ்ச்சியைக் கூறினார்.

இரண்டாவது உலகப் போரின்போது அவர் சிரியாவில் பணி புரிந்து கொண்டிருந்தார். அப்போது அவர் காயமுற்றதாகவும், ஆனால் இருக்குமிடம் தெரியவில்லை

என்றும் குடும்பத்தினருக்குச் செய்தி வந்தது. 'Wounded and missing' என்று செய்தி வந்தால் நபர் உயிரோடிருப்பது சந்தேகம் என்று பொருளாம். இந்நிலையில் டாக்டரின் துணைவியார் கல்யாணபுரம் அலர்மேல்மங்கையிடம் மாங்கல்யப் பிச்சை கேட்டுப் பிரார்த்தித்துக் கொண்டு தனது வைர அட்டிகையைக் கழற்றி, தாயாருக்கு அணிவித்து விட்டு ஒரு மண்டலம் வலம் வந்தார்.

ஒரு நாள் ராஜு வாத்தியார் என்ற பக்தரிடம் பெருமாள் ஆவேசபூர்வமாகத் தோன்றி, 'உன் புருஷன் உயிரோடு திரும்பி வருவான், கவலைப்படாதே' என்று கூறினார். சில நாட்களுக்கெல்லாம், 'கணவர் பிரான்ஸ் சிறையில் போர்க் கைதியாக இருக்கிறார்' என்ற செய்தி வந்தபோது திருமதி ரங்காச்சாரி, தாயாரின் திருவடிகளை ஆனந்தக் கண்ணீரால் அபிஷேகம் செய்தார்.

தற்போது தஞ்சாவூர் பெட்டகத்தில் பாதுகாப்பாக இருந்துவரும் அந்த வைர அட்டிகை விசேஷ நாட்களில் பெருமாளுக்கு அணிவிக்கப்படுகிறது.

இந்தக் கிராமத்தின் ஈசான்ய மூலையில் காசி விச்வநாதர் ஆலயம் இருக்கிறது. ஆனால், இங்கு பக்தர்கள் அதிகமாக வரும் சுவடு தெரியவில்லை. அக்கோயிலில் ஒரு சனீச்வர பிரதிஷ்டையாவது செய்தால் கிராம மக்கள் செல்ல வாய்ப்பு ஏற்படும் என்று ஓர் அன்பர் கூறினார். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இங்கிருந்த அம்மன் சிலை காணாமல் போய் விட்டதாம். புதிய சிலை பிரதிஷ்டை செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார். கிராமத்தின் வடக்கு எல்லைத் தெய்வமாக ஓட வாய்க்கால் கரையில் வாழைத் தோப்பில் அமைந்திருக்கும் பிடாரி கோயிலையும் புதுப்பித்து, மக்கள் தரிசனம் செய்ய வகை செய்து தரப்பட வேண்டும் என்பதும் அந்த அன்பரின் அவா.

உக்கிரக்காளியம்மன் கோயில்

நம் நாட்டில் தொன்றுதொட்டுத் தேவி வழிபாடு சிறந்து காணப்படுகிறது. உலகத் தாயான பெண் தெய் வத்தைப் பல வடிவங்களில் வழிபடும் மரபு இருந்து வருகிறது. சக்தியை சாந்த உருவத்திலும் உக்கிர உருவத் திலும் வணங்கி வருகிறோம்.

சக்தியைத் துர்க்கையாகவும் காளியாகவும் வழிபட்டு வருகிறோம். மகிஷாசுரனை வதம் செய்த தெய்வீக சக்தி, துர்க்கை—அவளே கொற்றவை. சும்பன், நிசும்பன் என்ற அசுரர்களை அழித்தவள் காளி. பொதுவாக, இவளைக் கிராம தேவதையாகக் குறிப்பிடுவது வழக்கம். சாதாரண மக்களோடு மகான்களும் மாமன்னர்களும் இவளை வழி பட்டு வந்திருக்கின்றனர். இவளை மாகாளி என்று அழைக்கிறோம்.

பல்லவர் காலத்தில் துர்க்கை வழிபாடு சிறந்து காணப் பட்டது. ஊர்ப்புறங்களில் வடக்கே துர்க்கைக்குத் தனி கோயில்கள் கட்டி மக்கள் வழிபட்டனர். அவளை 'வடவாயில் செல்வி' என்று அழைத்தனர். மாமல்லபுரத்தி லுள்ள 'திரௌபதி ரதம்' துர்க்கைக்காக எடுக்கப்பட்ட தனி கோயில் என்றும், அது எல்லாவற்றுக்கும் வடக்கே அமைந்திருப்பது 'வடவாயில் செல்வி' என்ற பெயரை உறுதிப்படுத்துகிறது என்றும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி தமது 'கல்லும் சொல்லும்' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். மாமல்லபுரத்திலுள்ள சிற்பங்களிலேயே பெருமையும் சிறப்பும் பெற்றது 'மகிஷாசுரமர்த்தனி'யின் அற்புதப் படைப்பே என்றும் அவர் கூறுகிறார்.

பல்லவர் காலத்திலே காளி வழிபாடும் இருந்து வந்திருக் கிறது. மாமல்லபுரத்தில் ஊர் நூலகக் கட்டடத்திற்கு

அருகில் இருக்கும் காளி உருவத்தை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறுகிறார் டாக்டர் நாகசாமி.

ஆனால், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்துதான் தமிழகத்தில் காளி வழிபாடு உன்னத நிலையை அடைந்திருக்கிறது. திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் நேமம் என்ற பகுதியில் சுவரன்மாறன் என்னும் பெரும்பிடுகு முத்தரையன் மாகாளிக்கு ஒரு மாபெரும் கோயில் எடுத்தான். அக்கோயில் அழிந்து விட்டது. அக்காளியின் சிலையும் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

தஞ்சை நகரில் மட்டும் தற்போது சுமார் ஒன்பது காளி கோயில்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. நந்தி மாகாளி அம்மன், செல்லி அம்மன், வடபத்திர காளி அம்மன், உக்கிர காளி அம்மன், வாஞ்சி அம்மன், கோடி அம்மன், குந்தாளம்மன், சம்வர்த்தினி அம்மன், புன்னை நல்லூர் மாரி அம்மன்.

மெலிந்திருந்த சோழப் பேரரசை, ஒன்பதாம் நூற்றாண்டில் மீண்டும் உன்னத நிலைக்குக் கொண்டு வந்தவன் விஜயாலய சோழன். தன் உடல் முழுவதும் விழுப்புண் ஏந்திப் பல போர்களில் வாகை சூடிய பெரும் வீரனான அவன் நிலைநாட்டிய பேரரசு சுமார் நானூறு ஆண்டுகளுக்குப் பெரும் புகழோடும் பெருமையோடும் கொடி கட்டிப் பறந்தது.

தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து மீட்க விஜயாலயனுக்குத் துணை புரிந்தவள் தேவி மாகாளி. அவளுக்காகத் தஞ்சையில் விஜயாலயன் ஒரு கோயில் எடுப்பித்தான் என்றும், அக்காளிக்கு நிசும்பசூதனி என்று பெயரிட்டான் என்றும் திருவாலங்காடு செப்பேடு ஒன்று கூறுகிறது.

அந்த நிசும்பசூதனியின் திருக்கோயில் எதுவென்பது பல காலமாகவே ஆராய்ச்சிக்குரியதாக இருந்து வருகிறது. ஆனால், தஞ்சை அரண்மனையின் கீழ்வாசல் பூமாலை

ராவுத்தன் தெருவிலிருக்கும் வடபத்திரகாளிதான், விஜயாலய சோழ மன்னன் நிறுவி வழிபட்ட நிசும்பசூதனி என்று டாக்டர் நாகசாமி கருத்துத் தெரிவித்துள்ளார்.

'நிசும்பசூதனி' என்ற புதுமையான பெயருக்கேற்ப இந்தச் சிலையும் புதுமையாக அமைந்திருக்கிறது. சுமார் ஆறடி உயரமுள்ள மாகாளி எட்டுக் கரங்களுடன், இடக் காலை மடித்து. வலக் காலைத் தொங்கவிட்டுக் கொண்ட திருமேனியுடன் அமர்ந்திருக்கிறாள். அவள் காலடியில் நான்கு அசுரர்கள் அழிக்கப்பட்டுக் கிடக்கிறார்கள்.

தேவியின் திருமேனி மெலிந்திருக்கிறது. சதைப்பற்றில் லாத மார்பிலும் கைகால்களிலும் எலும்புகள் தெரிந் தாலும், திருமுகத்தில் உறுதியும் சீற்றமும் கொப்பளிக் கின்றன.

கல்வெட்டு ஆராய்ச்சியாளரான வித்துவான் சி. கோவிந்தராசனார் தமது 'தமிழக வரலாற்றுச் செய்திகள்' என்ற நூலில், தஞ்சை குலாலர் தெருக் கோடியில் வடவாற்றின் தென் கரையில் அமைந்துள்ள உக்கிரகாளி அம்மன் கோயிலையே, விஜயாலயன் கட்டிய நிசும்பசூதனி கோயில் என்று கூறுகிறார்.

அந்த அம்மன் சுமார் நாலரையடி உயரமுள்ளது. அமர்ந்த திருக்கோலம்தான். நான்கு கரங்கள். வலக் காலை மடித்துக் குத்திட்டு அமர்ந்து, இடக் காலைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறாள். வலக் காலுக்குக் கீழே ஓர் உருவமும், இடக் காலுக்குக் கீழே ஓர் உருவமும் காணப் படுகின்றன. இடக் காலுக்குக் கீழ் உள்ள உருவம் தலையில் மகுடத்துடனும், கையில் கேடயத்துடனும் காணப்படு வதால் அது விஜயாலயன் வெற்றி கண்ட முத்தரையன் என்றும், மற்றொரு உருவம் அவனுக்குத் துணையாய் நின்ற வீரனுடையது என்றும் அவர் கருத்துத் தெரிவித் துள்ளார்.

வடபத்திர காளியம்மனின் சிலை பழமையானதாக இருப்பினும், அக் கோயில் கற்றளியாயில்லாமல், மகாராஷ்டிர மன்னர் காலத்தில் எழும்பிய பல சிறு கற்கட்டடக் கோயில்களைப் போல் இருப்பதால் அது விஜயாலயன் கட்டிய கோயிலாக இருக்க முடியாது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. உக்கிரகாளி கோயில் இருக்கு மிடத்தில், ஒரு காலத்தில் கற்கோயில்கள் இருந்திருக் கின்றன என்றும், வடவாற்றில் பெருகிய வெள்ளம் அக்கோயில்களை அழித்திருக்க வேண்டும் என்றும், அப்படுகையில் கிடைத்த படிமங்கள் அக்கோயில்களைச் சேர்ந்தவைதான் என்றும் கூறப்படுகிறது.

உக்கிரகாளி கோயிலில் இரண்டு காளி சிலைகள் உள்ளன. முன்பிருந்த சிலை பழுதடைந்த நிலையில் கருவறை மண்டபத்துக்கு முன்புறம் வைக்கப்பட்டுள்ளது. மூலஸ்தானத்திலுள்ள உருவத்திற்கும் இதற்கும் இடையே சில முக்கிய வேற்றுமைகளையும் காண முடிகிறது. இக் கோயிலில் சித்தி விநாயகர், வனதுர்க்கை, மாயா சக்தி, ராகு காளி, சனி பகவான் முதலியோரும் உள்ளனர், இவற்றைத் தவிர, சாம்பான், மதுரைவீரன், முனீச்வரன். கருப்புச்சாமி, லாடமுனி சந்நிதிகளும் உள்ளன ஆலமரம், நாகப்புற்று, திருக்குளம் முதலியவற்றையும் காண்கிறோம்.

கருவக்காடு என்னும் இப் பகுதியில் அமைதியான சூழ்நிலையில் தேவி எழுந்தருளியிருக்கிறாள்.

பூமாலை வைத்தியநாதர்

தஞ்சாவூர் புராதனக்கோட்டையின் கிழக்கு வாசல் பூமாலை ராவுத்தர் தெருவிலுள்ள ஸ்ரீ வரபத்திரகாளி யம்மன் கோயிலையொட்டி, கிழக்கே ஒரு சிவன் கோயில்

இருக்கிறது. அங்கு உறையும் சுவாமியைப் பூமால் வைத்திய நாதர் என்று அழைக்கிறார்கள். பூமால் வைத்தியநாதர் என்று சிலரும், பூமாலை வைத்தியநாதர் என்று சிலரும் கூறுகிறார்கள். அதற்கான காரணத்தையோ, சரியான பொருளையோ அறிந்து கொள்ள முடியவில்லை. எல்லாப் பெயர்களுக்கும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பல பெயர்கள் எப்படியெல்லாமோ மருவி, புரியாத புதிராகி விடுகின்றன!

நான் விசாரித்துக் கொண்டிருந்த போது, சிவன் கோயில் அர்ச்சகர், மண்டபத்திலுள்ள ஒரு சிலையைக் காண்பித்து இவர்தான் 'பூமால் ராவுத்தன்' என்றார்.

அருகில் சென்று பார்த்தேன். யோகாசனத்தில் அமர்ந் திருக்கும் திருமேனி. மேல் வலக் கையில் புஷ்பமும், இடக் கையில் அக்ஷமாலையும் விளங்க, கீழிரு கரங்களையும் தொடையின்மீது வைத்துக் கொண்டிருக்கும் வடிவம். குதிரை ராவுத்தனாகத் திருவிளையாடல் புரிந்த சிவபெரு மானின் திருவடிவம் இது என்றும், மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிய பரமன் இவர்தான் என்றும் அர்ச் சகர் ஒரு கதையைக் கூறினார். இந்தக் கதைக்கு ஆதார மாக அருகில் 'நரியன்னூர்' என்று ஓரிடம் இருப்பதையும் அவர் குறிப்பிட்டார்.

அந்தச் சிலை மிகப் பழமையானது, அபூர்வமானது. விஜயாலய சோழன் காலத்தைச் சேர்ந்தது என்று உடன் வந்திருந்த தொல்பொருள் ஆராய்ச்சிப் பேரறிஞர் கருத்துத் தெரிவித்தார். திருமுகம் கரைந்து, சிற்பயெழில் மங்கி மறைந்திருக்கிறது.

கோயில் சிலைகளை ஆராய்பவர்கள் நம்மைக் கலை யழகை ரசிக்கும்படி செய்வதும், அவற்றின் காலத்தை நிர்ணயிப்பதும் அரும்பெரும் சேவைதான். அதோடு, வடிக்கப்பட்ட சிலைகளின் தத்துவ, புராணப் பின்னணி

களிலும் கவனம் செலுத்தினால் ஆலய வரலாற்று இலக்கியத்தோடு, வழிபாட்டு முறைகளுக்கும் பேருதவி செய்தவர்கள் ஆவார்கள். ஆலயங்களில் கல் வெட்டுக்களையும் கலைச் செல்வங்களையும் கலாசாரச் செய்திகளையும் தேடிக்கொண்டு போகிறவர்கள் வரலாற்றுக் கண்டுபிடிப்பு களையே முடிவான சாதனைகளாகக் கருதாமல் எல்லா வற்றுக்கும் அடிப்படையாக அமையும் தெய்வ பக்தியையும் இறை வழிபாட்டையும் வலியுறுத்துவதைக் குறிக்கோளாகக் கொள்வது நலம். 'பூமால் ராவுத்தன்' போன்ற தெய்வச் சிலைகளை ஆராய்வோர் சமயத் தொண்டும் புரியலாமே. அறிவைத் தீட்டிக்கொண்டே மனவளத்தையும் பெருக்கிக் கொள்ளலாமே!

ஸ்ரீ வல்லப கணபதி

பூமாலை வைத்தியநாதரைத் தரிசித்துவிட்டுக் கீழ் வாசல் வெள்ளை விநாயகர் என்றழைக்கப்படும் ஸ்ரீவல்லப விநாயகர் கோயில் மண்டபத்திலுள்ள உண்டியல் நம்மை 'வா வா, போடு, போடு' என்றழைக்கிறது. அத்தனை வசீகரமாயிருக்கிறது அது. அழகான யானையின் மீது ஸ்ரீவல்லப கணபதி அமர்ந்திருக்கிறார். யானை முகத் தோனுக்கு யானை வாகனம். அதிசயம்தானே! யானையின் முதுகிலேயே உண்டியலுக்கான துவாரமும் இருக்கிறது. அதில் சில்லறையைப் போட்டால் அதன் வயிற்றில் இறங்கி, இரும்புப் பெட்டியை நிரப்புகிறது.

ஆலய உண்டியலில் நிரம்பும் காணிக்கைப் பணம், பக்தர்கள் ஆண்டவனுக்குக் காட்டும் நன்றி மட்டுமல்ல; ஆண்டவனுக்காகத் தாங்கள் செய்யும் தியாகத்தின் அடையாளமுமாகும். முன் காலத்தில் மகாராஜாக்களும்

பெரும் செல்வந்தர்களும் கோயிலுக்காக எழுதி வைத்த சொத்துக்களும் அவர்களது நன்றியின் காணிக்கைகளே. அதைத் தங்கள் கடமையாகக் கருதி அவர்கள் தர்மம் செய்தார்கள். ஆனால், அந்த உன்னத உள்ளத்தை மதிக் காமல், அதன் புனிதத் தன்மையைப் புரிந்துகொள்ளாமல், அந்தச் சொத்துக்களை நிர்வகிக்கும் பொறுப்பேற்ற தர்ம கர்த்தாக்கள் அதர்மமாக அவற்றை அழிக்கத் தொடங்கி னார்கள். ஆனால், கோயிலுக்கும் ஒரு பங்கு கொடுத்து விட்டு மீதியைச் சுயநலத்துக்காகப் பயன்படுத்தும் ஓரளவு 'தர்ம'மாவது முன் காலத்தில் இருந்தது. நாளடைவில், சுவாமியைப் பட்டினி போட்டு, அவரை இருட்டறையில் அடைத்துவிட்டு, அவரது சொத்துக்கள் அனைத்தையும் களவாடும் பழக்கம் ஏற்பட்டது. அப்படிப்பட்டவர்கள் ஆண்டவனுக்கு மட்டும் துரோகம் செய்யவில்லை; ஆண்ட வனுக்காக அள்ளி அள்ளிக் கொடுத்தவர்களின் தியாக உள்ளத்திற்கும் துரோகம் செய்தார்கள்.

முன் காலத்தில் கோயில்களுக்கு நிலங்களாகவும் பணமாகவும் நன்கொடை அளித்தவர்கள், அவை நல்ல முறையில் கண்காணிக்கப்பட வேண்டும் என்று விரும் பினார்கள். அவை தவறாகப் பயன்படுத்தப்பட்டால், ஊர்மக்கள் நிர்வாகிகளிடம் புகார் செய்யலாம் என்றும் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். இம் மாதிரியான கல்வெட்டு ஒன்று தஞ்சை கொண்டி ராஜபாளையம் ஸ்ரீ கீழச் சிங்கப்பெருமாள் என்று அழைக்கப்படும் ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலுக்கு எதிரிலுள்ள ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயிலில் இருக் கிறது. அறங்காவலர்கள் நியாயமாக நடந்து கொள்வார்கள் என்ற திட நம்பிக்கையில் எழுதப்பட்ட சாசனமானாலும், அந்தக் காலத்திலேயே, கோயில் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் இருந்திருப்பதும் புரிகிறது!

ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி

ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயில் மிகச் சிறியது. தற்போது மூல மூர்த்திகள் மட்டுமே அங்கு உள்ளன. எதிரேயுள்ள ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலில் மூல சந்நிதியிலுள்ளவர் யோக நரசிம்ம சுவாமி. கலையழகு மிளிரும் பழமையான சிலை. தெய்விகக் களையுடன் திகழ்கிறார் பெருமாள். உற்சவ மூர்த்தி, ஸ்ரீ லட்சுமி நரசிம்மப் பெருமாள்.

இக்கோயிலில் ஸ்ரீ சரபோஜி மகாராஜா 1820-ம் ஆண்டு திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்திருக்கிறார். அதைப் பற்றிய செய்தி மண்டபச் சுவரில் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் வாசகம் தூய தமிழில் இல்லாமல் அக்காலப் பேச்சுத் தமிழில் இருப்பது படிப்பதற்குச் சுவை மிகுந்தாக உள்ளது:

ஸ்ரீ லெட்சுமி நரசிம்ம சுவாமி புறாதனம் கோவில் பழுதாயிருந்தது அதை சத்தறபதி சறபோசி மகாறாசா அவர்கள் கோயில் புதுசாயிக் கட்டி ஸ்தலம் சீறணேத்தாரம் பண்ணினார்கள். சாலிய வாகனம் சகம் 1/42 விக்கிரம வருஷம் தையி மாதம் 27 தேதி புதவாரம் பிரதிஷ்டை ஆச்சுது.

இச் செய்தியை மராத்தி மொழியில் கூறும் ஒரு கல்வெட்டும் அங்குள்ளது.

இந்தக் கோயிலை 16-11-1917-ல் கா. கோ. குருவப்ப நாயுடு என்பவர் மராமத்து செய்துள்ளார் என்ற விபரமும் காணப்படுகிறது. அக்கொடையாளியின் சிறிய உருவம் ஒன்றும் கோபுர வாசல் சுவரில் பதிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னர் அந்தக் கோயில் சரிவரக் கவனிக்கப் பட்டு வருவதாகத் தெரியவில்லை. அப் பகுதியிலுள்ள

பக்தர்களுக்கு அதைப்பற்றிய குறை இருப்பதையும் அறிய முடிந்தது. என்னிடம் ஐந்தாறு பேர் வந்து, ''சார், கோயில் மடைப்பள்ளியை ஏதோ ஒரு கடைக்கு வாடகைக்கு விட ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. இந்த அநியாயத்தை எங்களால் பொறுக்க முடியவில்லை. நாங்கள் இதைப்பற்றி கோர்ட்டில் மனு கொடுத்து 'ஸ்டே' வாங்கியிருக்கிறோம்'' என்று மிகக் கொதிப்புடன் கூறினார்கள்.

தஞ்சைப் பயணத்தின்போது, பல ஊர்களில் பொது மக்களிடையே மலர்ந்துள்ள இத்தகைய புத்துணர்ச்சியைக் காண முடிகிறது. ஆலயங்கள் யார் நிர்வாகத்தின் கீழ் இருந்தாலும், அவை பொதுச் சொத்துக்கள், அவை காப்பாற்றப்பட வேண்டும், பக்தர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பும் மரியாதையும் தந்து அறங்காவலர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உருவாகி வருவது வரவேற்கத்தக்க நல்லதோர் அறிகுறியாகும். ஆலயச் சொத்துக்களைக் கண்காணிப்பதோடு மட்டுமின்றி, ஆலய வழிபாடுகளிலும், திருவிழாக்களிலும் ஊரிலுள்ளவர்கள் அக்கறை காட்டத் தொடங்கி விட்டால், அவற்றைப் போற்றிப் பாதுகாப்பதில் நேரடியாக ஈடுபாடு கொள்ள முனைந்து விட்டால், தற்போது பல ஆலயங்களைப் பிடித்துள்ள கிரகணம் விரைவிலேயே விலகிவிடும் என்பதில் ஐயமில்லை. பக்தி என்ற மிக மிக வலுவான அடிப்படையில் எழுப்பப்பட்டவை நம் ஆலயங்கள். அந்த அடித்தளம் சற்று அசைந்து கொடுத்ததால்தான், கோயில்களைப் பற்றிய பக்தர்களின் அக்கறையும் ஆர்வமும் குறைவதற்கான சூழ்நிலை உருவாகியதால்தான், காலப் போக்கில் பல குறைபாடுகள் தோன்றத் தொடங்கின.

மனித இதயத்தின் ஒத்துழைப்பின்றி அரசு இயந்திரம் ஆலயங்களைச் சீர்திருத்தி விட முடியாது. கோளாறு களைத் தேடிக் களைந்து கொண்டிருப்பதாக இயந்திரம் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும்போது, அந்த இயந்திரத்

திலேயே பல கோளாறுகள் இருப்பதாக உண்மையான பக்தர்கள் கவலைப்படுகிறார்கள். உள்ளம் குமுறுகிறார்கள். தனிப்பட்டவர்களானாலும், அரசு இலாகாவானாலும், ஆலயங்களுக்கு உண்மைத் தொண்டு புரிய விரும்புகிறவர்கள் பக்தர்களின் உணர்வுகளை மதித்தே ஆக வேண்டும். தெய்வ நம்பிக்கைதான் அனைத்திற்கும் ஆணி வேர். மூல சந்நிதியில் உறையும் மூர்த்திகள் கற்கள் அல்ல; உலோகங்கள் அல்ல; சக்தி மிக்க தெய்வங்கள் என்ற நம்பிக்கையை மக்களிடையே வளரச் செய்வது ஒன்றுதான் பல இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் பரிகாரமாக அமையும்.

மக்களின் இந்த ஆழ்ந்த, தீவிர பக்திதான் கோயிலின் உண்மையான சொத்தாகும்.

சில கோயில்களில் தெய்வ சந்நிதிகளைக் கவனிக்காமல், அங்கு ஊழியம் புரிபவர்களை அலட்சியப்படுத்தி விட்டு உண்டியலிலும், கணக்கு வழக்குகளிலும், ஆபரணங்களை எடை போடுவதிலுமே கவனம் செலுத்துவதைக் காணும் போது, ஆண்டவனின் இல்லத்தில் அருளைத் தேடுவதை விட்டு விட்டு, பொருளைத் தேடிக் கொண்டிருக்கிறார்களே என்று பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. ஆலயத்தில் விளக்கெரிய வேண்டும்; நைவேத்திய ஆராதனைகள் முறைப்படி நடைபெற வேண்டும். அர்ச்சகர்கள் அக்கறையுடனும் சிரத்தையுடனும் அர்ச்சனைகள் செய்து, தெய்வ அருளை நாடி வரும் பக்தர்களைத் திருப்திப் படுத்த வேண்டும். வழிபாட்டு முறைகளின் பயனாய் அங்கு தெய்வ சாந்நித்யம் நிலவ வேண்டும். அதனால் அடியார்களின் பிரார்த்தனைகள் பலிக்க வேண்டும். அதன் பலனாக வருமானம் பெருக வேண்டும். அந்தப் பணம் ஆலயப் பராமரிப்புக்கும் ஊழியர்களின் வாழ்வுக்கும் பயன்பட வேண்டும்.

சுவர் இருந்தாலன்றோ சித்திரம் தீட்ட முடியும்? அருள் சுரந்தால்தானே பொருள் சுரக்க முடியும்? பொன் முட்டை இடும் வாத்தின் கதையாக முடிந்துவிடக் கூடாதே!

ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி ஆலயத்தின் நிர்வாகம் குறித்துப் பொது மக்கள் உள்ளம் குமுறுவது எத்தனை நியாயமானது என்பதை அறிய அன்று அரியதோர் வாய்ப்புக் கிட்டியது. அக்கோயில் பிராகாரத்தில் ஒரு சிறைக்கூடம் இருக்கிறது! அதில் நவநீத கிருஷ்ணன் அடைக்கப்பட்டிருக்கிறான். சிறையில் பிறந்தவன் இன்னும் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்!

இருண்ட அச்சந்நிதிக்குள் நுழைந்து, நீராட வசதி யின்றி, உண்ண உணவின்றி, உடுக்க ஆடையின்றி, அநாதை யாக நின்று கொண்டிருக்கும் அகிலபுவனங்களின் ஆதார சக்தியின் அருள் வடிவத்தைக் கண்டு, கண்ணீர் மாலை யிட்டு வழிபட்டு விட்டு வந்தோம்.

பக்தர்கள், பக்தவத்சலனுக்கு விமோசனம் பிறக்க வழி செய்வார்களா?

'தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி' என்ற நூலை படிக்க நேர்ந்தது. சரஸ்வதி மகால் நூல் நிலையத்தி லிருக்கும் ஏட்டுச் சுவடியிலிருந்து, வித்துவான் வி. சொக்க லிங்கம் அவர்களால் பதிப்பிக்கப் பெற்று 1962-ல் வெளி யிடப்பட்ட சிறு நூல் இது. சுவடியின் முகப்பு ஏடு இல்லாததால் ஆசிரியர் யாரென்பது தெரியவில்லையென்று பதிப்பாசிரியர் கூறியுள்ளார்.

விசையரா கவசுவாமி மேன் மேலும் வாழி
மெச்சுதள வாய்வேங்கடேந்திரனும் வாழி

என்று இக் குறவஞ்சி ஆசிரியர் முடிப்பதால், அவர் காலம் விஜயராகவ நாயக்க மன்னர் காலம் (1633-1673) என்று

கூறலாம் என்பதாகவும் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ரகுநாத நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் தஞ்சைக் கோட்டையின் மூல கிழக்கு வாயிலின் அழிவுச் சின்னத்தை முன்பு பார்த்தோம். இக் கோட்டையைக் கட்டத் தொடங்கிய கொத்தனார், வெல்லத்தில் பிள்ளையார் செய்து வைத்துப் பூஜை செய்து தன் பணியைத் தொடங்கியிருக்கிறார். அந்த வெல்லப் பிள்ளையார் பின்னர் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டாராம். 'வெல்லப் பிள்ளையார்' என்பதுதான் 'வெள்ளைப் பிள்ளையார்' என்று மருவியிருக்கிறது.

நகரின் எல்லையில் அழைக்கப்பட்டதால் இவருக்கு 'எல்லைப் பிள்ளையார்' என்ற பெயரிடப்பட்டு, பின்னர் 'வெள்ளைப் பிள்ளையார்' என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

இவர் வல்லபை கணபதி. கருவறையில் தனித்திருந்தாலும் உற்சவமூர்த்தி வல்லபையுடன் திகழ்கிறார். வல்லபை பிள்ளையாரும் 'வெள்ளைப் பிள்ளையார்' ஆகியிருக்கலாம். திருவலஞ்சுழியில் இருக்கும் கணபதிக்கு 'வெள்ளை விநாயகர்' என்ற திருநாமம் உண்டு.

தஞ்சை மன்னர் சரபோஜி காலத்தில் இயற்றப்பட்ட வைத்திய நூல்கள் இந்த வெள்ளைப் பிள்ளையார் வணக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளன.

இந்நூலில், ஸ்ரீ லட்சுமி நரசிம்மப் பெருமாளின் பக்தர் ஒருவரைப் பற்றிய செவிவழி வந்த ஒரு கதையும் காணப்படுகிறது.

நரசிங்கப் பெருமாள் கோயில் திண்ணையில் 'பெத்த தாசர்' என்பவர் ஒரு கடை வைத்திருந்தார். வைணவப் பற்று மிக்கவர் அவர். திருமண் அணிந்திருப்பவர்களைக்

கண்டால் எழுந்து நின்று வணங்கி விட்டுத்தான் தன் காரியத்தைக் கவனிப்பார்.

இந்தச் செய்தியை அறிந்த மன்னன் இவரைப் பரிகாசம் செய்ய எண்ணினான். இரண்டு கழுதைகளை வரவழைத்து ஒன்றிற்குத் திருமண் இடச் செய்து விட்டுப் பெத்த தாசரை அரண்மனைக்கு அழைத்தான். அங்கு வந்தவர் திருமண் தரித்திருந்த கழுதையைக் கண்டு அதை வலம் வந்து வணங்கினார்.

'மற்றொரு கழுதையை ஏன் வணங்கவில்லை?' என்று அரசன் அவரிடம் கேட்ட போது அவர், 'இது (திருமண் தரிக்காதது) உன்னைப் போன்ற கழுதை. இது (திருமண் தரித்தது) என்னைப் போன்ற கழுதை' என்றார். இதைக் கேட்ட அரசன் கடுங்கோபம் கொண்டு இவரைக் கழுவிலேற்றும்படி உத்தரவிட்டான். இவர் வழிநெடுகிலும் 'நரசிம்மா' 'நரசிம்மா' என்று பெருமாளின் பெயரைக் கூறிக் கொண்டே சென்றார். அதனால் இவர் கழுமரத்தை அணுகியதும், அது தீப்பற்றியெரிந்தது. ''என்னைக் கோபிக்காமல் கழுமரத்தை எரித்தது என் மீதுள்ள இரக்கத் தினால் அன்றோ! என்று கூறியழுத மன்னன் இப்பக்தரின் காலடியில் விழுந்து வணங்கினானாம்.

தஞ்சைக்கு மேற்கே சுமார் மூன்று மைல் தொலைவி லுள்ள 'களிமேடு' என்ற பகுதி பெத்த தாசருக்கு இனாமாக அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 'கழுதை மேடு' தான் களிமேடாயிற்று என்றும் கூறுகின்றனர்.

பூமாலை வைத்தியநாதர் கோயிலிலுள்ள பூமாலை ராவுத்தர் சிலையைப் பற்றிக் கூறும்போது, 'மாணிக்க வாசகருக்காக இறைவன் பூமாலை தரித்துக் கொண்டு ராவுத்தர் போல் வேடம் புனைந்து, நரிகளைப் பரியாக்கிக் கொண்டு இங்கிருந்துதான் மதுரைக்குச் சென்றார்' என்ற செவிவழி வந்த கதையை இந்நூலாசிரியரும் கூறியுள்ளார்.

'பூமரத்தான் கோயில் தெரு'தான் தற்போது பூமாலை ராவுத்தன் தெருவாகியிருக்கிறது என்ற செய்தியும் இந்நூலின் இறுதியில் காணப்படுகிறது. 'பூமரத்தான் கோயில்'தான் 'பூமாலை ராவுத்தன் கோயில்' ஆக மாறியுள்ளதாம்.

தஞ்சை தெற்கு ராஜ வீதியுள்ள வரகப்பய்யர் வீதியில் ஒரு சிறு இல்லத்தில் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி பட்டாபிராமனாக எழுந்தருளியுள்ளார். ஒரே பீடத்தில் சக்கரவர்த்தித் திருமகனின் இடது தொடையில் அன்னை ஜானகி அமர்ந்திருக்க, அவளை லாகவமாக அணைத்திருக்கிறார் ராகவன். திருவாசியில் பரத, சத்ருக்கனர்கள் இருக்க, பீடத்தின் கீழ்ப் பகுதியில் இளையபெருமாளும் சிறிய திருவடியும் நின்று கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீ ராம பக்தி சாம்ராஜ்யத்தின் ஏக சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த ஸ்ரீ தியாகப்ரும்மம் பூஜித்து வந்த விக்ரகம் அது. அவரது பரம்பரையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் இன்றும் அந்த ராமரைப் பக்தியுடன் பூஜை செய்து வருகின்றனர். ஸ்ரீ தியாகராஜ சுவாமி ஆராதித்து வந்த மூர்த்தி உறையும் இல்லமும் ஓர் ஆலயம்தானே! அங்கு சென்று தரிசனம் செய்து கொண்டோம்.

புது அக்கிரகாரம் ஸ்ரீ பட்டாபிராமர்

திருவையாறு திருத்தலம் புராணச் சிறப்புப் பெற்றிருப்பதோடு, ஸ்ரீ தியாகப் பிரும்மம் வாழ்ந்ததால் மேலும் புனிதம் பெற்றுள்ளது. அங்கு ஸ்ரீ ராமபிரான் அவரை முழுமையாக ஆட்கொண்டார். தாரக மந்திரத்தின் மகாசக்திதான் தியாகய்யரைத் திருவாரூரிலிருந்து திருவையாறுக்கு அழைத்து வந்திருக்க வேண்டும், அச்சக்தியின்

வடிவாக அத்தலத்தில் ஒரு மூர்த்தி எழுந்தருளியிருக்க வேண்டும் என்று என் உள்மனம் கூறியது. நான் விசாரித்துப் பார்த்த வரையில் அப்படியொரு சந்நிதி திருவையாற்றில் இருந்ததாகத் தெரியவில்லை.

திருவையாறுக்கும் கல்யாணபுரத்திற்கும் இடையே புது அக்ரகாரம் என்ற சிறு கிராமம் இருப்பதாகவும், அங்கு ஸ்ரீ ராமர் கோயில் ஒன்று இருப்பதாகவும் நண்பர் மூலம் கேள்வியுற்றுத்' தரிசனத்திற்குச் சென்றேன். என்ன ஆச்சரியம்! அங்கு உறைபவரும் பட்டாபிராமரே. அவர், முன்பு திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பர் ஆலயத்தில் தர்மசம் வர்த்தினி அம்பாள் மண்டபத்தில் இருந்ததாகக் கூறப் படுகிறது.

தற்போதுள்ள தர்மசம்வர்த்தினி அம்பாள் கோயிலில் உள்ள கொலு மண்டபத்தில் இம்மூர்த்திகள் இருந்தன என்பதற்கு ஆதாரமாக இன்றும் ஸ்ரீராமநவமி உற்சவம் அங்கு நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். முன் காலத் தில் அங்கு ராமாயண நாடகங்கள், நிழல் ஆட்டங்கள் நடைபெற்று வந்தனவாம். அப்படியானால் ஸ்ரீ தியா கய்யா, ஸ்ரீ தர்மசம்வர்த்தினியின் திருச்சந்நிதியில் அமர்ந்து அம்பாளின் மீதும், ஸ்ரீ ராமனின் மீதும் கீர்த்தனைகள் இயற்றியிருந்தால் அதிசயமில்லையே.

புது அக்ரகாரத்திற்குப் பஞ்சநத மோகனாம்பாள்புரம் என்பதுதான் புராணப் பெயராம். கோயிலிலுள்ள மூல மூர்த்தி அபூர்வமாயிருக்கிறது. ஸ்ரீ ராமனும் சீதையும் அமர்ந்திருக்க, ஸ்ரீ லட்சுமணப் பெருமாள் தனது வில்லோடு மூத்தவனின் வில்லையும் தாங்கி நிற்கிறார். பரதன் குடை பிடிக்க, சத்ருக்னன் சாமரம் வீசுகிறான்.

ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் திருவடியில் ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தி மண்டியிட்டு, இடக் கரத்தால் பெருமானின் திருவடியைத் தொட்டுக் கொண்டு, வலக் கரத்தால் வாய்

பொத்தித் தாச பாவத்தில் திருக்காட்சி தருவது மெய் சிலிர்க்க வைக்கிறது. ஒரு கணம், அனுமனின் திருவுருவம் மறைந்து, ஸ்ரீ தியாகப்பிரும்மமே நம் கண் முன் தோன்றி மறைகிறார்.

வடக்குப்புறம் தனியே ஓர் ஆஞ்சநேய மூர்த்தி வலக் கையில் வீணையுடனும், இடக் கையில் புத்தகத்துடனும் காட்சி தருகிறார். உற்சவமூர்த்தி பத்ம பீடத்தில், வீரா சனத்தில் அமர்ந்திருக்கிறார். ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக் கரத்தில் புத்தகம் மட்டும் உள்ளது. மண்டபத்தில் ஒரு சின்ன பிள்ளையார் இருக்கிறார். நான்கு ஆழ்வார்களின் மூலமூர்த்திகளும் உற்சவமூர்த்திகளும் இருக்கின்றன.

ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி ஆலயம்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதித்த ஸ்ரீ பட்டாபி ராமர் விக்ரகத்தையும், முன்பு திருவையாற்றில் எழுந்தருளி யிருந்ததாகக் கூறப்படும் புது அக்ரகாரம் ஸ்ரீ பட்டாபி ராமரையும் தரிசித்ததற்குக் கைமேல் பலனாக, தஞ்சை சீனுவாசபுரத்தில் உள்ள சாந்தாச்ரமத்தில் ஸ்ரீ ராம பக்த ரான பெரியவர் ஒருவரைக் காணும் பாக்கியம் பெற்றேன். சற்றும் எதிர்பாராத நல்வாய்ப்பு அது. அதற்கு டாக்டர் நாகசாமி புண்ணியம் கட்டிக் கொண்டார்.

அப்பெரியவர் ஒரு சந்நியாசி. பழுத்த பழம். தொண் ணூறைக் கடந்த வயது. பற்கள் அனைத்தையும் இழந்த வாய். வதனத்தில் வசீகரப் புன்னகை மலர, எங்களைப் பேரன்புடன் வரவேற்று அமரச் செய்தார்.

அவரிடம் ஸ்ரீ தியாகய்யாவைப் பற்றிப் பேச்சைத் தொடங்கினேன். துறவியின் உள்ளத்தில் உவகை பொங்

கிற்று. சட்டென்று எழுந்து உள்ளே சென்று ஒரு சமஸ்கிருத புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்தார்.

ஸ்ரீ தியாகராஜ சரிதம்
சுந்தரேச சர்மணா விரசிதம்

''இது நான் படைத்த முதல் காவியம். 1937-ல் வெளியானது. ஸ்ரீ ராமபிரானே வால்மீகி முனிவரைப் பூலோகத்துக்கு அனுப்பி வைத்து, ஸ்ரீ தியாகய்யாவின் திருவுருவில் தெய்வ பக்தியைப் பரவச் செய்ததாகக் கற்பனை செய்து எழுதப்பட்டது. படித்துப் பாருங்கள். உங்களுக்குத் தேவையானது எல்லாம் கிடைக்கும். ஸ்ரீ காமகோடி பரமாசார்யாள் முன், ஒன்பது நாட்கள் இதைப் படித்திருக்கிறேன். சுவாமிகள் கேட்டு மகிழ்ந்து அனுக்ரகித்திருக்கிறார்கள்.''

புத்தகத்தை எடுத்துக் கையில் கொடுக்கிறார். என்ன ஆச்சரியம்! ஸ்ரீ தியாகய்யாவைப் பற்றி ஏதாவது தெரியுமா என்று கேட்டவனிடம் ஸ்ரீ தியாகராஜரைப் பற்றித் தாம் எழுதிய அரும்பெரும் காவியத்தை எடுத்துத் தருகிறார். அதிலும் தலைசிறந்த ராம பக்தர் ஒருவர். நான் திட்டமிட்டு இங்கு வரவில்லை. உண்மை. இது திருவருளின் திட்டம். குருவீருளின் மகிமை, சத்தியம்.

தற்போது இவரது திருநாமம் ஸ்ரீ ராமானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள். பூர்வாச்ரமத்தில் டி. எஸ். சுந்தரேச சர்மா. ஸ்ரீ ராம பக்தியில் லயித்து, தன் சொத்தையெல்லாம் துறந்து, காலமெல்லாம் தசரத குமாரனின் ஆராதனையில் ஆழ்ந்தவர். அவரது ஸ்ரீராம சேவையைப் பாராட்டி நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் 'ராமப்ராணன்' என்ற அரிய விருதை இவருக்கு வழங்கியிருக்கிறார்.

சமஸ்கிருதத்தில் பல காவியங்களும் நாடகங்களும் படைத்து, 'மகாகவி' என்றும், 'கவிச்சக்ரவர்த்தி' என்றும் பட்டங்கள் பெற்றுள்ளவர்.

ஸ்ரீராம பரப்பிரும்மத்தைத் தியானமாகக் கொண்டிருந்தவர், பிரணவ மந்திர சொருபமான கணபதி தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டார். அலைந்து அலைந்து அரிய ஆராய்ச்சிகள் செய்து, உணர்ந்து உணர்ந்து உச்சிஷ்ட கணபதியின் உத்தம தாசனாகி, உயர்ந்து உயர்ந்து, அத்தெய்வத்திற்கு ஓர் ஆலயம் எழுப்பி, அதன் அழகிய விமானத்தின் நிழலிலேயே அமர்ந்து விட்டார். இந்தியாவிலேயே உச்சிஷ்ட கணபதிக்கு ஒரு தனி ஆலயம் இருப்பது, தஞ்சை சீனுவாசபுரம் கிரி ரோடிலுள்ள சாந்தாச்ரமத்தில்தான். அங்கு பாலக பதியையும் சப்தமாதாக்களையும் கூடப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்.

அடேயப்பா! இந்த வயதிலும் என்ன சுறுசுறுப்பு, நடையில் எத்தனை பரபரப்பு! மூக்குக் கண்ணாடிகூட இல்லாமல் ஓயாத படிப்பு. இன்றும் புதுப்புது சுலோகங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார். தேடி வருபவர்களுக்குப் பிரசாதத்தோடு அன்பு மொழியும் ஆறுதல் மொழியும் அருளி வருகிறார்.

கோயிலுக்குப் பின்புறம் ஒரு மேடை கட்டப்பட்டு, நடுவில் நாலடிக்கு நாலடி பள்ளம் தோண்டி வைக்கப்பட்டிருக்கிறது. 'இதுதான் என் படுக்கையறை' என்று புதிதாக வீடு கட்டுபவர்கள் சர்வ சாதாரணமாகக் கூறுவது போல், "இதுதான் இந்தக் கட்டைக்கான இடம். இதில் போட வேண்டிய திரவியங்களையும், இதன் மேல் மூட வேண்டிய கற்பலகையையும் கூடத் தயாராக வைத்திருக்கிறேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

அழியப் போகும் சரீரத்தைப் பார்த்து அழிவேயில்லாத ஆன்மா சிரிக்கும் அலட்சியச் சிரிப்பு அது!

(சுவாமிகள் சமாதியடைந்து விட்டார்)

தஞ்சை கீழ வாசலில் இருக்கும் ஸ்ரீ வீரபத்ரசுவாமி கோயில் ஒரு கலைக் கோயிலும் கூட. தஞ்சைப் புராதனக் கலைகளில் ஒன்று அங்கு பெரும் ஆதரவோடு வளர்க்கப் பட்டு வருவதைத்தான் குறிப்பிடுகிறேன்.

'தஞ்சாவூர் படங்கள்' என்று உலகப் புகழ்பெற்ற தெய்வப் படங்கள் உருவாக்கும் கலையை மாணவ, மாணவி களுக்குக் கற்றுத் தருகிறார் திரு. கிருஷ்ணன்.

அங்கு சுமார் இருபது பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். படத்தை 'ஸ்கெட்ச்' செய்வது முதல் அதில் தங்க ரேக்குகள் ஒட்ட வைத்து, கலர் கண்ணாடித் துண்டுகளை அழகாகப் பதிக்கும் வரை எல்லா பாடங்களும் அங்கு கற்றுத் தரப்படுகின்றன. அம் முறையில் படங்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றன; கண்ணாடிச் செம்புகள், தேங்காய்கள் கூடத்தான்.

அங்கு இரு பெண்கள் இட்லிக்குச் சட்னி அரைத்துக் கொண்டிருந்தார்கள்! பார்த்தால் அப்படித் தோன்றும். உண்மையில் அவர்கள் பசைதான் அரைத்துக் கொண்டிருந் தார்கள்!

''என்னென்ன போட்டு அரைக்கிறீர்கள்?''

புன்னகைதான் பதில்!

வேறொரு மாணவி வண்ணம் குழைத்துக் கொண்டி ருந்தார்.

''என்னென்ன பொருட்கள் கலந்து குழைக்கிறீர்கள்?''

புன்னகைதான் பதில்!

ஏன் இவர்கள் பேசமாட்டேன் என்கிறார்கள்? வெட்கமோ?

அதுவும் உண்டு! ஆனால், பதில் பேசாததற்கு முக்கிய காரணம், இவையெல்லாம் ரகசியம்—வியாபார ரகசியம். 'ட்ரேட் ஸீக்ரெட்...!'

அக் கலைப் பள்ளியில் ஆர். ஈச்வர்லால் என்ற இளைஞரைச் சந்தித்தேன். அவர் அங்கு பயின்ற கலைஞர். கண்ணாடி ஓவியத்தில் 'ஸ்பெஷலைஸ்' செய்திருக்கிறார்.

''சார், நான் 'ஃபெஸ்டிவல் ஆஃப் இண்டியா'வுக்காக இந்த வருஷம் இங்கிலாந்துக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு ஸ்டால் போட்டு, அங்கு உட்கார்ந்தே ஓவியம் தீட்டிக் காட்டினேன். அங்கு வெளிநாட்டினர் நிறையப் பேர் கூடி அதிசயமாகப் பார்த்தனர். நிறையப் படங்களும் விற்பனை யாயின'' என்று பெருமையுடன் கூறினார் அந்த இளைஞர்.

ஏன், நமக்குக்கூடத்தான் பெருமை.

தஞ்சைப் பெருவுடையார் கோயில்

சங்க காலத்தில் சோழர்கள் வெற்றிக் கொடி நாட்டி, வெற்றி முரசம் கொட்டி நல்லாட்சி புரிந்து வந்தார்கள். கரிகால் பெருவளத்தான் போன்ற மாமன்னர்கள் சோழப் பேரரசின் புகழ் பரப்பினார்கள். ஆனால், 3-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இந்த அரசு சிறப்பிழக்கத் தொடங்கி, சுமார் 600 ஆண்டுகள் இருக்குமிடம் தெரியாமல் ஒளியிழந்து போயிற்று. பல்லவரும், பாண்டியரும் சோழ நாட்டை அடிமைப்படுத்தினர். சோழர் தம் குடியே அழிந்து போகும் அளவிற்கு இவர்களது ஆதிக்கம் மேலோங் கியிருந்தது.

இந் நிலையில், கி.பி. 850-ல், பாண்டியரையும் பல்ல வரையும் வெற்றி கண்டு தஞ்சையைக் கைப்பற்றினான்

விஜயாலயன். தன் வெற்றியின் சின்னமாக நிசும்ப சூதனிக்கு ஓர் ஆலயம் எழுப்பித்தான். அன்று முதல் சோழர் ஆட்சி மீண்டும் துளிர்க்கத் தொடங்கியது. கலைகள் செழிக்கத் தொடங்கின.

பெயருக்கேற்ப விஜயாலயன் வெற்றி வாகை சூடினான். வடக்கே கங்கை வரையிலும், தெற்கே ஈழம் முழுவதும், கிழக்கே கடல் கடந்து கடாரம் கம்போஜம் வரையிலும் விஜயாலயனின் புலிக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

விஜயாலயனின் திருமகனான ஆதித்த சோழன் தந்தையைப் போலவே வெற்றி வீரனாகவும் பேரரசனாவும் திகழ்ந்ததோடு, காவிரியின் இரு கரைகளிலும் சிவபெருமானுக்குக் கற்கோயில்கள் எடுத்துப் பெரும் புண்ணியம் ஈட்டினான். அவையனைத்தும் சிற்பக் களஞ்சியங்கள். அழகை ஆராதித்த அந்த மாமன்னன். சிற்பக்கலையில் சிந்தையைப் பறி கொடுத்தான். சிற்பிகளை ஊக்குவித்தான். சோழர்களது சிற்பத் திறன் ஆதித்தனின் ஆட்சிக் காலத்தில் சூரிய ஒளியெனப் பிரகாசித்தது.

ஆதித்தன் எழுப்பித்த அனைத்துக் கோயில்களிலும் தலை சிறந்தது கும்பகோணத்திலுள்ள ஸ்ரீ நாகேச்வர சுவாமி கோயில். பரப்பளவில் பெரிய கோயில் இல்லையென்றாலும், சிற்பயெழிலின் சிறப்பால் இது மிகப் பெரிய கோயிலாகும். சோழர். காலத்தின் சிற்பக் கலையைப் பார்த்து ஆனந்திக்க வேண்டுமானால், ஆதித்தன் ஆண்டு தோறும் மூன்று நாட்கள் சிவலிங்கத் திருமேனியைத் தீண்டித் தொழும் ஆதித்தச் சோழன் எழுப்பித்த ஸ்ரீ நாகேச்வர சுவாமி ஆலயத்திற்குச் செல்லுங்கள். அங்குள்ள சிற்பங்கள் ஈடிணையற்ற கலைச் செல்வங்கள். அங்குள்ளவை பத்து பதினைந்தே சிலைகள் என்றாலும், ஒவ்வொன்றும் பார்த்துப் பார்த்து. ரசிக்கத் தக்கவை. கருவறை மண்டபத்தின் வெளிப்புறத்தில் இருக்கும் இரு மங்கையரின் அழகுத் திருமேனியும், வதனத்தில் அரும்பும்

புன்னகையும், ஒயிலான உடலின் சௌந்தரியமும் நம்மைக் காந்தமென ஈர்க்கின்றன. அள்ளிச் செருகிய கொண்டையும், அதில் அமர்ந்திருக்கும் மலரின் வாசமும், துடி இடையும், துடிப்பான கண்களும், 'அவள் கல் அழகியல்ல, கட்டழகி' என்பதற்குக் கட்டியம் கூறுகின்றன. அன்ன நடை பயின்று நம்மிடம் வந்து விடுவார்களோ என்ற பிரமையைத் தோற்றுவிக்கின்றது.

சிற்பயெழிலில் 'ஆதித்தச் சோழனது திருக்கோயில்கள் சிறந்து விளங்கின வென்றால், கட்டடக் கலையில் சிறந் தோங்கி விளங்குவது சோழப் பேரரசின் தன்னிகரில்லா மாமன்னன் இராஜ ராஜன் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலாகும். தமிழகத்தில் 'கோயில்' என்றால் சைவர் களுக்குச் சிதம்பரமும், வைணவர்களுக்கு ஸ்ரீரங்கமும் ஆகும். ஆனால், 'பெரிய கோயில்' என்றால் அது தஞ்சைப் பெருவுடையார் கோயிலைத்தான் குறிக்கும். தமிழகத்திற்கு மட்டுமல்ல, பாரதத்திற்கும் இதனால் பெருமை உண்டு. உலகப் புகழும் பெற்றதாகும் இத் திருக்கோயில்.

சுந்தரச் சோழன் என்னும் இரண்டாம் பராந்தக மன்னனுக்கும் வானவன்மா தேவியார்க்கும் மைந்தனாகத் தோன்றிய இவ்வரசனின் இயற்பெயர், அருண் மொழித் தேவன். இவனுக்குக் கேரளாந்தகன், சிங்களாந்தகன், பாண்டிய குலாசனி, தெலிங்க குலகாலன், மும்முடிச் சோழன், செயங்கொண்டச் சோழன், பண்டிதச் சோழன், திருமுறை கண்ட சோழன் என்ற பல சிறப்புப் பெயர்களும் உண்டு. இவனுக்குச் செந்தமிழ்ப் புலமையும், திருமுறைப் பற்றும் இருந்தது போலவே சிவ பக்தியும் இருந்தது. இதனாலேயே 'சிவபாதசேகரன்' என்ற திருநாமத்தையும் பெற்றிருந்தான் இவ்வரசன். அப்பெயர் என்றென்றும் நிலைத்திருக்குமாறு அவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டியிருக்கிறான்.

தமிழ்நாட்டுக் கோயில்களைப் பற்றிய சிறப்புக்களை முதன் முறையாக எளிய நடையில் எழுதி, ஆலய தரிசனத்தில் நம்மை ஈடுபடச் செய்த பாஸ்கரத் தொண்டைமான், தஞ்சைப் பெரியகோயிலைப் பற்றிய முன்னுரையில் கூறுவதை நினைவுபடுத்திக் கொள்வோம்:

சக்கரவர்த்தி ராஜராஜன் ஒரு நாள் மாலை தஞ்சை நகரின் வெளிப்புறத்திலே உலாவப் புறப்படுகிறான். அவனை ஆதரவுடன் வளர்த்து ஆளாக்கியதோடு, ராஜ்ய பாரத்திலும் அவனுக்கு உறுதுணையாயிருக்கும் மூத்த சகோதரி குந்தவையும் உடனிருக்கிறாள்.

பல மன்னர்களை வென்று, பல நாடுகளை வெற்றி கண்டு, கடல் கடந்து சென்று ஈழ நாட்டையும் மும்முடிச் சோழ மண்டலமாக்கிய மாமன்னன், வெற்றிப் பெருமிதத்தோடு நடக்கிறான். தன் போர் அனுபவங்களையெல்லாம் உடன் பிறந்தவளிடம் கூறி மகிழ்கிறான். அவளும் உளம் பூரித்துப் போகிறாள்.

உரையாடிக் கொண்டே ஒரு சோலைக்கு வந்து சேருகிறார்கள் அக்காவும் தம்பியும்.

அங்குள்ள குளத்தையும், அக் குளத்தின் நடுவிலே லிங்க வடிவிலே சிவபெருமான் கோயில் கொண்டிருப்பதையும் காண்கிறார்கள். 'விண்ணிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கும் ஒளியாய் எண்ணிறந்து எல்லை இல்லா தானாகப் பரந்து நிற்கும் இறைவனுக்கா இப்பெரிய சாம்ராஜ்யத்தில் இத்தனை சிறிய கோயில்? என்று எண்ணுகிறான் ராஜராஜன். தம்பியின் மனத்தில் எழும் அதே எண்ணம், சகோதரியின் உள்ளத்திலும் எழுகிறது.

''தம்பி, இப்பரந்த சோழ ராஜ்யத்தின் தலைநகரான தஞ்சையிலே, நாம் போற்றி வணங்கும் இறைவனுக்கு இத்தனை சிறிய கோயில் இருப்பது உன் புகழுக்கு இழுக்கன்றோ?''

சகோதரியின் கேள்வி ராஜராஜனின் சிந்தையைக் கிளறுகிறது. இதயத்தைத் தொடுகிறது. உள்ளத்தில் ஓர் உறுதி பிறக்கிறது.

''அக்கா, என் எண்ணத்தையே தாங்கள் ஒரு கேள்வியாகக் கேட்டு விட்டீர்கள். நம் பேரரசின் பெரும் சின்னமாய், நம் கலைகளின் இருப்பிடமாய், சிவ பக்தியின் பிறப்பிடமாய் இங்கு ஒரு பெருங்கோயில் எழுப்ப வேண்டும் என்று உறுதி கொண்டு விட்டேன். இதற்கும் தாங்கள் உறுதுணையாய், ஆலோசகராய் இருந்து உதவ வேண்டும். எப்பாடு பட்டாவது இந்த என் லட்சியத்தை நிறைவேற்றாமல் நான் ஓயமாட்டேன்'' என்று சூளுரைத்தான் ராஜராஜ சோழன்.

ஆறேழு ஆண்டுகள் நடைபெற்ற திருப்பணிகளின் பலனாக எழும்புகிறது, 'ராஜ ராஜேச்வரம்' என்ற தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில். அந்த ஏழு ஆண்டுகளும் மன்னனது கவனமெல்லாம் அக்கோயில் திருப்பணியிலேயே செலவழிக்கப்படுகிறது. தன் உடைமைகளையெல்லாம் அதற்காகக் கொடுக்கிறான். அவன் மனைவியரெல்லாம் தங்களது பெருஞ்செல்வங்களை வாரி வாரிக் கொடுக்கின்றனர். தமக்கை குந்தவையும் பொன்னும் பொருளும் கொடுக்கிறாள். இதைக் கோயிலில் கல்வெட்டாகப் பொறித்து வைத்திருக்கிறான் நன்றி மறவா அந்த மக்கள் நாயகன்! 'நாம் கொடுத்தனவும், நம் அக்காள் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும் சேர்த்து இப் பெருங்கோயில் உருவாயிற்று' என்று பெருமையுடன் கூறுகின்றான்.

இக் கற்கோயில் கி.பி. 1003-ல் தொடங்கி 1009-ல் நிறைவு பெற்றது. வெளியிலிருந்து பார்க்கும்போது, ஒரு கோட்டையின் அமைப்பைப் பெற்றுள்ளது இந்த அபூர்வக் கோயில். மலையரண், காட்டரண், மதிலரன், நீரரண் என்ற நான்கு வகை அரண்களும் அமைந்த இப்பெரிய

கோயிலைக் கண்டு மனத்தைப் பறிகொடுக்காதவர்களே இல்லை.

கோட்டை போன்ற தோற்றம் கொண்ட பெரிய கோயிலின் மதிற்சுவர்களைச் சுற்றி அக்காலத்தில் அகழியும் இருந்திருக்கிறது. அது தற்போது தூர்ந்து போயிருக்கிறது. கிழக்குப்புறம் பண்டைய கட்டடப் பெருமைக்குச் சிறிதும் பொருத்தமின்றி ஓர் 'அலங்கார' வளைவு காணப்படு கிறது. அதைக் கடந்து சென்றால், கதவின்றி இருக்கும் கேரளாந்தகன் கோபுர வாயில். அதையும் கடந்து உள்ளே சென்றால் மற்றொரு கோபுர வாசல். ராஜராஜன் திருவாசல் அது. இந்த வாயிலின் இருபுறங்களிலும் உள்ள சுவர்களில் சிறிய சிற்ப வடிவங்கள் நிறைய காணப்படு கின்றன. பல புராணக் கதைகள் அங்கே வடிக்கப்பட் டிருக்கின்றன. அவற்றில் ஒன்று, சிவபெருமான் கிராத வேடத்தில் வந்து அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்திரம் வழங்கிய நிகழ்ச்சியாகும்.

அந்தக் கோபுர வாசலில் நின்று, கருவறை விமா னத்தை அண்ணாந்து பார்க்கிறோம். அடேயப்பா! எத்தனை உயரம், எத்தனை கம்பீரம், எத்தனை அழகு! ராஜராஜனின் உயர்ந்த சிந்தனையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் அந்த விமானத்தைப் பார்க்கும் போது, நம் நெஞ்சு பூரித்துப் பேரய் நிமிர்ந்து நிற்கிறது.

இக் கோயிலின் பல அதிசயங்களில் நம் கவனத்தை முதலில் கவருவது நந்தியம் பெருமானே. இந்தியாவிலேயே இதுதான் பெரிய நந்தி என்கிறார்கள். மைசூர் சாமுண்டி மலையிலுள்ள நந்தியும், பங்களூர் பசவங்குடியிலுள்ள நந்தியும் இதைவிடச் சிறியவையா?

நந்தி மண்டபம் உள்ள இடம் பிராகாரத்திலிருந்து சற்று உயர்வான இடத்தில் உள்ளது. அம் மண்டபத்திற்கு ஏறிச் செல்ல படிக்கட்டுகள் உள்ளன. பெருவுடையார்

கோயில் நந்தி ஒற்றைக் கல்லால் ஆனது. இக்கல், திருச்சி பெரம்பலூரை அடுத்துள்ள பச்சைமலையிலிருந்து கொண்டு வரப் பெற்றதாம். இருபத்லைந்து டன் எடை யுள்ளது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பன்னிரண்டு அடி உயரம், இருபது அடி நீளம், எட்டடி அகலம் கொண்டது. கழுத்தில் பல மாலைகள் உள்ளன. அவற்றில் சிவலிங்க மாலை ஒன்றும் உள்ளது. நந்தி மட்டுமல்ல; இந்த மண்டபமும் சிற்ப எழிலுடன் அமைந்திருக்கிறது.

வெளிப் பிராகாரம் பிரும்மாண்டமாகக் காட்சியளிக் கிறது. கருங்கல்லாலும் செங்கற்களாலும் அமைக்கப் பெற்று ஐந்நூறு அடி நீளமும் இருநூற்றைம்பது அடி அகலமும் கொண்டது. தென் பிராகாரத்தில் நவீன பாணி யில் கட்டப்பட்டுள்ள வாராஹிக் கோயில் நம் கண்ணை உறுத்துகிறது. இதை அனுமதித்தவர்கள், ராஜராஜன் சிலையை உள்ளே வைக்கக்கூடாது என்று எதற்காகப் பிடிவாதம் பிடித்தார்கள் என்பதே புரியவில்லை!

தென்கிழக்கில் ஒரு மேடை இருக்கிறது. அது 'சரபோஜி பூபால குறவஞ்சி மேடை' என்று அழைக்கப்படு கிறது. 'ராட்டின மேடை' என்றும் கூறப்படுகிறது. அந்த மேடையிலிருந்து, கோயிலை ஒரு முறை தரிசிக்கவேண்டும். நந்தி மண்டபத்திலிருந்து விமானக் கலசம் வரை, சீராக வரையப்பட்ட ஓர் வண்ண ஓவியமாக அக்காட்சியைக் கண்டு நாம் ரசிக்கலாம்.

திருச்சுற்று மாளிகையின் கீழ்த் தென்புறத்தில் யாக சாலை, பாக சாலை, பண்டக சாலை, போஜன சாலை முதலியவை இருக்கின்றன. வடமேற்குப் பகுதியில் சிவலிங்கப் பிரதிஷ்டையும், சுவர்களில் சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் வண்ண ஓவியங் களாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

தஞ்சைப் பெரிய கோயில் விமானக் கலசத்தின் நிழல் தரையில் விழாது என்று கூறப்படுவது வழக்கம்.

அதெல்லாம் கட்டுக்கதை. அடிப்பாகம் மிகவும் அகல மானது. கலசத்தின் நிழல் அதிலேயே படிந்து விடுகிறது என்று கூறுவதும் சரியல்ல. இதர கோபுரங்களின் நிழல் போல, இதன் நிழலும் தரையில் படிவதைப் பார்க்கலாம்.

இல்லாததைக் கூறி, தஞ்சை விமானத்திற்குப் பெருமை சேர்க்கத் தேவையில்லை. அதற்கு வேறு பெருமைகள் உள்ளன. 'தட்சிணமேரு' என்ற சிறப்புப் பெற்றுள்ள இதன் உயரம் 216 அடி. மிக உயர்ந்த விமானம் இதுதான். அடித்தளம் 96 அடி சதுரமாய் அமைந்துள்ளது. விமானம் முதல் ஸ்தூபி வரை கருங்கல்லாலேயே கட்டப்பட்டிருக் கிறது. அது மட்டுமா? இதன் உச்சியில் மூடப்பட்டிருக்கும் பிரமாந்திரக் கல் இருபத்தைந்து அடி சதுரமுள்ளது. 80 டன் எடை. ராஜராஜன் கட்டிய கோயிலானாலும், ஒரு கிழவி தந்த நிழலில் ஒதுங்கியுள்ளார் பெருவுடையார்.

ஆம். இந்த பிரமாந்திரக் கல், அழகி என்ற ஒரு கிழவியின் வீட்டிற்கருகில் இருந்ததாம். அதைப் பயன் படுத்த வேண்டும் என்று விரும்பிய சிற்பிகள், அங்கிருந்து சாரம் கட்டி அக்கல்லைக் கோபுரத்தில் ஏற்றினார்களாம். அந்த ஊர் நான்கு மைல் தொலைவில் உள்ளது. அங்கிருந்து சாரம் போட்டதால், அந்த ஊருக்குச் சாரப்பள்ளம் என்ற பெயரே நிலைத்து விட்டது. 'அழகிக்குளம், அழகித் தோட்டம்' முதலிய பெயர்கள் அக்கிழவியின் பெருமையைப் பறை சாற்றுகின்றன.

அந்த விமானத்தின் மீதுள்ள கலசம் இரண்டு ஆள் உயரம். பன்னிரண்டு அடி! 3,083 பலம் நிறையுள்ள செம்பினால் ஆனது. 2,926 கழஞ்சுப் பொன் பூசிய தகடு இதன் மீது உள்ளது. வீரபத்திர ஆச்சாரி கொடுத்த பஞ்ச லோகக் கம்பத்தில் சோழ மன்னன் கொடுத்த இந்தக் குடம் இருத்தப்பட்டது என்று அதன் மீது பொறிக்கப்பட்டிருப் பதாகப் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்!

விமானத்தை மூடியுள்ள பிரமாந்திர தளக் கல்லின் ஒவ்வொரு மூலையிலும் இரண்டு நந்திகள் இருப்பதைக் காணலாம். கீழேயிருந்து பார்க்கும் போது அவை சிறியவை யாகத் தோன்றும். அருகில் சென்று பார்த்தால், ஒவ்வொரு சிலையும் தென்பிராகாரத்தில் இருக்கும் நந்தியைப் போல் கிட்டத்தட்ட அத்தனை பெரிதாக இருக்கும்.

இந்த விமானம் நாற்கோண வடிவம் தாங்கி, பதினான்கு கோபுர மாடிகளுடன் அமைந்துள்ளது. கோட்டங்களிலெல்லாம் கண்ணைப் பறிக்கும் தெய்வச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மேல்கோட்டங்கள் அனைத் திலும் முப்புரம் எரித்த சிவனின் வடிவங்கள் நிறைய இருக்கின்றன. ராஜராஜனின் உள்ளத்தைக் கவர்ந்த சிவ வடிவம் அது.

விமானத்தின் தென்புறம் மகாவிஷ்ணு, விநாயகர், பிட்சாடனர், சூலதேவர், தட்சிணாமூர்த்தி, மார்க்கண் டேயர், நடராஜர் சிலைகளும் மேற்கில், லிங்கோற்பவர், அர்த்தநாரீச்வரர் சிலைகளும், வடக்கே கங்காதரர், கல்யாண சுந்தரர், மகிஷாசுரமர்த்தினி சிலைகளும் இருப் பதைக் காணலாம்.

இந்த விமானத்தின் வடமேற்குப் பகுதியில் தொப்பி யணிந்த ஓர் ஐரோப்பியரின் உருவம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அது டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ரோலண்டு கிரேப் என்பவரது சிலை என்று ஒரு சாராரும், மார்க்கோ போலோவுடையது என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். ஆனால், சோழர் காலத்தில் மேல்நாட்டுடன் வாணிபத் தொடர்பு இருந்ததால், அதன் அடையாளமாக ஓர் ஐரோப்பியரின் சிலை வடிக்கப்பட்டிருக்கலாம் என்று தஞ்சாவூர் வெற்றிவேல் பிரஸ் கே.வி. பக்கிரிசாமி கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த விமானக் கட்டடத்தின் எழில்மிக்க தோற்றத்தில் சிற்பங்களெல்லாம் ஓர் அங்கமாக அடங்கி ஒடுங்கி மறைந்து

விடுகின்றன. உல்லாசப் பயணமாகப் பேருந்தில் வந்து இறங்குபவர்கள், அவசர அவசரமாகச் சுற்றிவிட்டு, பெரிய நந்தியையும் உயரமான விமானத்தையும் வியந்துவிட்டு, சோழர் காலச் சிற்பிகளின் கை வண்ணத்தை நுணுக்கமாக ரசிக்காமலே சென்று விடுகிறார்கள். விமானத்தின் நிழலில் சற்று நேரம் தங்கி அதை ஆராய்ந்தால், ராஜராஜனின் கலைப் பற்றையும் அதற்கு அடிப்படைக் காரணமான அவனது இறை பக்தியையும் நன்கு உணரலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் மேற்குப் பிரா காரத்தின் மத்தியில், கருவறைக்குப் பின்புறம், கிழக்கே நோக்கிக் கருவூர் சித்தரின் திருச்சந்நிதி இருக்கிறது. தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பக்தர் இதைக் கட்டி அங்கு சித்தரின் திருவுருவத்தையும் பிரதிஷ்டை செய்தார். பின்னர், 1926-ல் செப்பு விக்ரகம் ஒன்று செய் விக்கப்பட்டு, கோயிலும் சற்று விரிவுபடுத்தப்பட்டு குட முழுக்கும் செய்விக்கப்பட்டது.

இந்தக் கருவூர் சித்தர் யார்? அவருக்கு ஏன் இங்கு ஒரு கோயில்?

பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கருவூரில் தோன் றியவர் இந்த சித்தர். பதினெண் சித்தர்களில் ஒருவர். மறை ஓதி, பல கலைகளும் கற்றுத் தேர்ந்து போகநாதர் என்ற யோகியாரிடம் உபதேசம் பெற்று, ஞான நூல்கள் பயின்று, சிவயோகம் கைவரப் பெற்றவர் இவர். ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து பொதிகை மலைக்குச் சென்று அகத்திய முனிவரைத் தரிசித்து அவரை வழிபட்டு, சில ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்தார்.

தஞ்சையில் ராஜராஜன் பெருவுடையார் திருக் கோயிலைக் கட்டி முடித்து விட்டு, சிவலிங்கத்தை எழுந் தருளச் செய்து, ஆதி சைவர்களைக் கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்யச் சொன்னான். ஆனால், மருந்து

இளகிப் போய் பந்தனம் ஆகவில்லை. மாமன்னன் மனம் நொந்து போனான்.

அப்போது ஓர் அசரீரி கேட்டது. ''கருவூர்த் தேவர் இங்கே வந்தால் நீ நினைத்த காரியம் கைகூடும். மனம் அமைதி பெறும்.''

மனம் மகிழ்ந்தான் மன்னன். ஆனால், கருவூர்த்தேவர் எங்கிருக்கிறார், அவரை எப்படி வரவழைப்பது என்ற விவரங்கள் அவனுக்குப் புரியவில்லை. அப்போது வேறோர் உருவத்தில் அங்கு எழுந்தருளியிருந்த போகநாதர், 'கவலையுறாதே, அவரை நான் இங்கு வரவழைக்கிறேன்' என்று தைரியம் கூறி, சீட்டொன்று எழுதி அதைக் காக்கையின் காலில் கட்டி, பொதிகை மலைக்கு அனுப்பி வைத்தார்.

செய்தியைப் படித்தறிந்த கருவூர் சித்தர், உடனே தஞ்சைக்கு வந்து ஆலயத்தினுள் புகுந்து, தமது தவ வலிமையாலும் யோக சித்தியாலும் சிவலிங்கத்தை ஆவுடையாருடன் கெட்டியாக ஸ்தம்பனம் செய்வித்தார். அதற்கு அவர் தமது வாயிலிருந்த தாம்பூலத்தை மருந்தாக உபயோகித்தாராம். பொன்மணித் தட்டார் என்ற சிவயோகியார் கருவூர்த் தேவரை அழைத்து வந்ததாகவும் கூறுவார்கள்.

பின்னர், மன்னனுக்கு உறுதுணையாக இருந்து சைவம் பரப்பிய கருவூர்த் தேவர் சில காலம் மேற்குப்புறம் ஒரு மேடையில் அமர்ந்து தவம் இயற்றியிருக்கிறார். அந்த இடத்தில்தான் பின்வர் அவருக்குத் திருச்சந்நிதி ஒன்று எழுப்பப்பட்டது. வியாழன்தோறும் இங்கு சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

கருவூர்த் தேவர், பெருவுடையார்மீது திருவிசைப்பா பதிகம் ஒன்று பாடியருளியிருக்கிறார். அதில் தஞ்சை நகரத்தைப் பற்றிய கற்பனை வளம் செறிந்த வர்ணனைகளையும், பெருவுடையார் பற்றிய பெருமைகளையும் நாம் படித்து இன்புறுவதோடு நற்பயனும் பெறலாம்.

தஞ்சையில் வானளாவிய ஒன்பது நிலை மாடங்கள் இருந்தன. மாளிகைகளில் இரவில் அகில் மணம் கமழ்ந்தன. அவற்றில் வாழ்ந்த நற்குலப் பெண்டிர் யாழ் இசைத்து இன்னிசை பரப்பினர். நாடகசாலைகளில் மயில் போல் ஒயிலான மங்கையர் நடனமாடினர். மன்னனுக்குக் கப்பம் செலுத்த வந்த குறுநில மன்னர்களின் மகுடங்கள் ஒன்றோடொன்று முட்டி மோதி, அவற்றிலிருந்து சிதறிய ரத்தினங்கள் அரண்மனையில் அங்கங்கே மலைகளாகக் குவிந்திருந்தன. புறமதிலின் புறத்தே அமைந்த அகழியில் பாய்ந்த வடவாற்று நீரில் முதலைகள் நீந்தி விளையாடின...

பெருவுடையார் எப்படிப்பட்டவர்?

பிரமனும், திருமாலும், தேவர்களும், வேதங்களும் தம்மை உள்ளவாறு உணராத தழற்பிழம்பு ஆகியவர், ஒருவராய்ப் பல வடிவங்களும் கொள்ளும் ஆற்றலராய், அடியார் வசத்தினராய், கனியும் கரும்பும் அமுதும் போன்ற சுவையினராய், வெண்புரி நூலினராய், தூயராய், கழலைக் கட்டியவராய், முறுக்கிய சடை முடியினராய், புண்ணிய வடிவினராய் காலைக் கதிரவன் போன்று பொய்யருக்குத் தோன்றாதவராய், இளவேனிற் காலைக் கதிரவன் போன்று அடியவர்க்குக் காட்சி வழங்கும் இனியவராய்த் தோற்றமளிக்கிறார். இவர் திருமேனியில் அணியப் பெற்ற திருநீறு, சடையிலுள்ள கங்கையின் நீர்க் கசிவினால் ம்றைந்து போகிறது...

இப்பெருமான் தம்மை ஆட்கொண்டதைக் குறித்து பக்திப் பரவசத்தில் கரைகிறார் கருவூரார்.

பல காலமாக சிவ தொண்டில் ஈடுபட்ட அடியவர் பலர் இருக்க, தம் மனத்தைப் பெரிய கோயிலாகக் கொண்டு வீற்றிருக்க அண்ணல் திருவுளம் கொண்டதை ஒரு நாளும் மறக்க முடியாது என்று நன்றிப்பெருக்கோடு கூறுகிறார். தஞ்சை ராசராசேச்சரம் உடையாரின் அருளாகிய அருமருந்தினைப் பருகி, பிறவிப் பிணி நீங்கப்

பெற்று, பிறரும் ஓதி சிவபதம் அடைய வேண்டும் என்ற அருளுள்ளத்தால் இத்திருவிசைப்பாவை இயற்றியதாகவும் கூறுகிறார் சித்தர்.

பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கருவூர்த் திருவானிலே மகாதேவரோடு இரண்டறக் கலந்து விட்ட கருவூர் சித்தர், இங்கு அர்ச்சனை மூர்த்தியாய் அமர்ந் திருக்கிறார.

கருவூரார்க் கோயிலுக்கு வடக்கே ஆறுமுகப் பெருமான் கோயில் இருக்கிறது. இது நாயக்கர் காலத் திருப்பணி. யானை, குதிரைகள் பூட்டிய ரதம் போன்று இது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆறுமுகர், மயில், திருவாசி அனைத்தும் ஒரே சிலையாக அமைந்துள்ளன. சிற்ப நுட்பங்கள் நிறைந்தது. இக்கோயிலில் எண்ணற்ற சிற்பங்கள் உள்ளன. களத்தில் விழுந்துவிட்ட படைத் தலைவனைப் பாசறைக்குச் சுமந்து செல்லும் யானையின் வடிவம் பார்த்துப் பார்த்துப் பரவசப் படவேண்டிய அற்புதப் படைப்பு. பின்புறம் உள்ள ஊசி நுழையும் துவாரங்கள் சிற்பியின் கைத்திறனுக்குச் சான்றாகும். அருணகிரியார் இப்பெருமான் மீது மூன்று திருப்புகழ் பாடி யிருக்கிறார்,

சுற்றிக் கொண்டே வரும் போது, வடக்குப் பிராகாத்த்தில், மேலைப் பிராகாரத்தின் தொடர்ச்சியாய் 228 சிவலிங்கங்கள் இருப்பதைக் காண்கிறோம். குபேர, ஈசான திக்பாலகர்களையும் வழிபடுகிறோம். திக்பால கர்கள் எண்மருக்கும் அவரவர்க்குரிய திசைகளில் சிறிய சந்நிதிகள் உள்ளன.

பின்னர், சண்டேசர் சந்நிதியைத் தரிசிக்கிறோம். இக்கோயிலைச் சார்ந்தவையாவும் சண்டேசர் பெயரிலேயே நடைபெறச் செய்திருக்கிறான் ராஜராஜன்,

அடுத்து பெரிய நாயகி அம்மனின் கோயிலைத் தரிசிக் கிறோம். பத்தடி உயரத்தில் அம்மன் காட்சி தருகிறாள்.

முன்பு அம்மன் கோயில், வடப்புறம் உள்ள சிவகங்கைத் தோட்டத்தில் இருந்ததென்றும், பின்னர் நாயக்க மன்னர் ஒருவரால் இங்கு கட்டப்பட்டதென்றும் அறிகிறோம். மகா மண்டபத்தை மல்லப்ப நாய்க்கர் கட்டியதாக அறிகிறோம்.

ஈசானிய மூலையில் ஸ்ரீ நடராஜர் சந்நிதியைத் தரிசிக்கலாம். இந்த நடராஜர் மீது ராஜராஜன் எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்தான். இவரை அன்புடன் 'ஆடவல்லான்' என்று அழைத்ததோடு, நிறுவைக்கோல் முதல் கஞ்சி ஊற்றும் கலயம்வரை ஆடவல்லான் என்றே பெயரிட்டு அழைத்திருக்கிறான். ஆலயத்திலுள்ள கல்வெட்டுக்களில் 'ஆடவல்லான்' பெயர் நிறைய இடங்களில் இடம் பெற்றுள்ளது.

ஸ்ரீ பெரியநாயகி அம்மன் கோயிலைத் தரிசித்து விட்டு, மீண்டும் நந்தி மண்டபம் வந்து, படிகளேறி மகா மண்டபத்தை அடைகிறோம். நுழைவாயிலில் 18 அடி உயரமுள்ள இரு துவாரபாலகர்களைத் தரிசிக்கிறோம். இக் கோயிலின் ஏழு வாயில்களிலும் பெரிய அளவில் துவார பாலகர்களின் உருவச் சிலைகள் இருப்பதைக் காணலாம். இம் மண்டபத்தில் இடப்புறம் பிள்ளையாரையும், வலப்புறம் துர்க்கையையும், அதற்கெதிரே உள்ள சனீச்வரரையும் வணங்கி விட்டு உள்ளே நுழைகிறோம்.

நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் ஆகியவற்றைக் கடந்து வந்தால், இடப்புறம் ஸ்ரீ தியாகராஜனைத் தரிசிக்கிறோம். ராஜராஜன், சிதம்பரம் நடராஜரைப் போன்றே திருவாரூர் ஸ்ரீ தியாகராஜனிடமும் பெரிதும் ஈடுபாடு கொண்டவன். பெரிய கோயிலிலுள்ள நடராஜா, தியாகராஜா இவ்விரு சந்நிதிகளும் அவன் காலத்தில் தோன்றியவையே. ஸ்ரீ தியாகேசனைப் பக்தியுடன் வணங்கிக் கொண்டு நிற்கும் ராஜராஜனின் வெண்கல உருவச் சிலையை அங்கே காண்கிறோம். ஸ்ரீ தியா

கேசனுக்கு வலப்புறம் நாயன்மார்களின் உருவச்சிலை களைக் காண்கிறோம்.

அர்த்த மண்டபத்தில் மகா கணபதி எழுந்தருள, இருபுறமும் துவாரபாலகர்கள் கம்பீரமாக நிற்க, நடுவில் சிறிய நந்தியம்பெருமான் அமர்ந்திருக்கிறார்.

கருவறையை நோக்குகிறோம் மிகப்பெரிய சிவலிங்கத் திருமேனியைக் கண்டு வியக்கிறோம் சிவபெருமான் விச்வ ரூப வடிவம் தாங்கியது போல் நம்மை ஆட்கொள்கிறார்.

திருப்பதியில் ஸ்ரீவெங்கடாசலபதியை அருகில் தரிசிக்கும் போது நமக்கு ஏற்படும் பரவச மெய்சிலிர்ப்புப் போன்ற தோர் தெய்வீக உணர்வுக்கு அடிமையாகிறோம். அக் காட்சி நம் உள்ளத்தை விசாலமாக்குகிறது. சிந்தையையும் தூய்மையாக்கி உயர்த்துகுறது.

செப்புத் திருவுருவில் போக சக்தி அம்மன் சிவலிங்கத் திற்கு அருகில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதையும் காண்கிறோம்.

ஸ்ரீ பிரஹதீச்வரர் லிங்கம், நர்மதையாற்றின் கரையி லிருந்து கொண்டு வரப்பெற்ற ஒரே கல்லால் ஆனது. லிங்கத் திருவுருவம் பதின்மூன்று அடி உயரம். ஆவுடையார், ஐம்பத்துநான்கு அடி சுற்றளவு கொண்டது. சிவாசாரியார், இரு பக்கங்களிலுமுள்ள ஏணியில் ஏறித்தான் அபிஷேக அலங்காரங்கள் செய்தாக வேண்டும். அத்தனை உயரம்!

மாமன்னன் ராஜராஜன் பிறந்த ஐப்பசி சதயத் திருநாளில் பெருவுடையாருக்கு அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. அச்சமயம் ராஜராஜனின் வெண்கலத் திருமேனி வீதி உலா புறப்படும் வழக்கமும் இருந்து வருகிறது.

இறைவன் சந்நிதிக்குத் தெற்கிலும் வடக்கிலும் வாயில்கள் உள்ளன. அவற்றுக்குப் படிகளும் இருக்கின்றன. துவாரபாலகர்களும் உண்டு.

தெற்கு வாயிலுக்கு 'விக்கிரமன் திருவாயில்' என்ற பெயர் பின்னர் ஏற்பட்டது. இவ்வாயிலின் கீழ்ப் பாகத்தில் மகாலட்சுமியின் உருவமும், வடக்கு வாயிலின் கீழ்ப் பாகத்தில் சரஸ்வதியின் உருவமும் எழிற் சிற்பங்களாகத் திகழ்கின்றன.

கட்டட அமைப்பிலும், சிற்பவெழிலிலும், கல்வெட்டுச் சிறப்பிலும் சிறந்தோங்கி விளங்கும் தஞ்சைப் பெரிய கோயில், சோழர், நாயக்கர் கால ஓவிய நயத்திலும் மேன்மையுடன் திகழ்கிறது.

ராஜராஜன் காலத்தில் கட்டடக் கலைத் திறனுடன் பொறியியல் விந்தையும் சிறப்புற்று விளங்கியது என்பதற்குப் பெரிய கோயில் ஓர் ஒப்புயர்வற்ற சான்றாகும்.

கருவறை 13½ அடி அகலம் கொண்ட வெளிச் சுவரும் 11½ அடி அகலம் கொண்ட மற்றொரு உட்சுவரும் இணைந்து அமைந்திருக்கிறது. உயர்ந்த கோபுரத்தின் சாத்திரத்தை இவ்விரு சுவர்களும் தாங்கிக் கொண்டிருக்கின்றன. இதன் மகிமையைக் காண வேண்டுமென்றால், நாம் முதல் மாடத்தில் ஏறி, கோபுரத்தின் உட்புறத்தைப் பார்க்க வேண்டும். விளக்குகளையெல்லாம் அணைத்து விட்டு, 'மேலே பாருங்கள்' என்று கூறி விளக்கைப் போடுகிறார்கள். ஒரு கணம் நாம் அப்படியே திகைத்து நின்று விடுகிறோம். அரியதோர் காட்சி அது! உட்புறம் வெற்றிடமாக, ஒரே கூடாக இருக்கிறது. பருப்புத் தேங்காய் டின் உட்புறத்தைக் கீழ் பாகத்திலிருந்து பார்த்தால் எப்படியிருக்குமோ, அப்படித் தோற்றமளிக்கிறது. உச்சியில் பிரம்ம யந்திரக் கல்லின் அடிப்பகுதி வட்ட வடிவமாகத் தெரிகிறது.

கீழே கருவறையைச் சுற்றி, இவ்விரு சுவர்களுக்கும் இடையில் ஒரு பிராகாரம் இருக்கிறது. உட்புறச் சுவரில் தான் ஓவியங்கள் காணப்படுகின்றன.

இங்கு 17-ம் நூற்றாண்டில் நாய்க்கர் காலத்தில் திருப்பணிகள் நடந்துள்ளன. அத் திருப்பணியின் போது, சோழர் கால ஓவியங்கள் மீது சுண்ணாம்புக் காரையைப் பூசி புதிய ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். இதனடியில் சோழர் கால ஓவியங்கள் இருப்பதை 1931-ம் ஆண்டில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி என்பவர் கண்டுபிடித்தார். பின்னர், மத்திய அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையின் விஞ்ஞானத்தின் உதவியோடு, ரசாயன முறையில், நாய்க்கர் ஓவியங்களை ஆங்காங்கே சுரண்டியெடுத்து, சோழர் கால ஓவியங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

தென்புறத்தில் உட்சுவர் முழுவதும் ஓர் ஆலமரமும் அதன் கிளைகளில் பறவையினங்களும் துள்ளி விளையாடும் பல்வேறு குரங்கினங்களும் காணப்படுகின்றன. பக்கத்தில் வெள்ளைக் கரடியும், பாய்ந்து வரும் பயங்கரப் புலியும் இருக்கின்றன. அந்த ஆலமரத்தின் அடியில் தட்சிணா மூர்த்தி அமர்ந்திருக்கிறார். சுற்றிலும், உடல் மெலிந்து, ஞானப் பிச்சை கேட்டு அமர்ந்திருக்கும் தவ முனிவர்கள். மேலே கின்னரப் பறவைகள் யாழ் இசைத்து வருகின்றன.

சிவபெருமானுக்கு இடப்புறம், ஆலிற்கு மேல் பைரவக் கடவுள் ஆடையின்றிக் காட்சி தர, சோழர் காலத்திற்குரிய கோம்பை நாய் ஒன்று வாலைச் சுருட்டி, நாக்கை நீட்டிக் கொண்டு நிற்கிறது. இந்த அழகிய ஓவியத்தின் கீழ்ப் பகுதி மறைந்து விட்டிருக்கிறது.

மேற்குப்புறச் சுவரில், சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு சித்திரிக்கப் பெற்றிருக்கிறது. வன்தொண்டரை வெண்ணெய்நல்லூர் பெருமான் தடுத்தாட் கொண்ட கதையை சேக்கிழார் எத்துணை உணர்ச்சியுடன் பாடியிருக்கிறாரோ, அத்துணை உணர்ச்சியும் பாவமும் இந்த ஓவியத்தில் பளிச்சிடுகின்றன.

இந்த ஓவியம் கீழிருந்து மூன்று பகுதிகளாக அமைந் திருக்கிறது.

கீழ்ப்புறம், இடப்பக்கம் பல்வேறு உடையணிந்த பெண்கள் திருமணத்திற்கு அமுது தயாரிக்கும் காட்சி. நடு நாயகமாக, இளங் காளையாக, அரச கோலத்தில் சுந்தரர் நிற்கிறார். எதிரில் வெண்தாடியும், தோளில் உத்திரீயமும், கோவணமும், கையில் ஓலையும், கண்ணில் குறும்புமாக முதியவர் வேடத்தில் வெண்ணெய்நல்லூர் பெருமான் நிற்கிறார். இருமருங்கிலும் மறையோர் அமர்ந்துள்ளனர். கற்றறிந்தோர் முகங்களில், வெவ்வேறான பாவங்கள். சிலர் திகைக்க, சிலர் வெகுள, சிலர் புன்சிரிப்பில் ஆழ்ந் துள்ளனர். அடுத்த காட்சி, கிழவர் ஓடுகிறார். பின்னா லேயே சுந்தரர் ஓடுகிறார். எதிரில் கோயில் தெரிகிறது.

இதற்கு மேல் இரண்டாவது பகுதியில் சுந்தரர், தில்லையில் ஸ்ரீ நடராஜரைத் தரிசிக்கும் காட்சி.

அடுத்து, ஓர் ஆடலழகியின் ஓவியம் காணப்படுகிறது. திருவாரூரில், ஆடல் மகள் பரவைநாச்சியாரைப் பார்த்து சுந்தரர் பிரமித்து நின்றாரே, அந்தப் பிரமிப்பு இந்த ஓவியத்தைப் பார்த்து நமக்கும் ஏற்பட, நாமும் ஒரு கணம் நின்று அக் கலையழகில் மனத்தைப் பறி கொடுத்து நிற்கிறோம்.

அடுத்து, சுந்தரர் கயிலை செல்லும் வெள்ளானைச் சருக்கக் காட்சி. சுந்தரர் வெள்ளை யானையின்மீது அமர்ந் துள்ளார். அது விரைந்து செல்கிறது. முன்னே, ஓர் அழகிய குதிரையின் மீது சேரமான் பெருமாள் அமர்ந்தபடி பின்னால் திரும்பி சுந்தரைப் பார்க்கிறார். இவர்களிரு வரும் விண்ணிலே செல்லும் காட்சியைக் கந்தர்வர்களும் வித்யாதரர்களும் ஆடியும் பாடியும் ரசிக்கின்றனர். இதற்கு மேலே கயிலையங்கிரி தோற்றம். முக்கண் பெருமான், மலைமடந்தையுடன் அமர்ந்திருக்க, சுந்தரமூர்த்தி நாய

னாரும் சேரமான் பெருமாளும் அருகில் அமர்ந்திருக் கின்றனர்.

வடப்புறம், பொன்னம்பலம் சித்திரிக்கப்பட்டுள்ளது. அன்னை சிவகாமி ஆட, அம்பலக்கூத்தனும் ஆடுகிறார். ஓர் அரசன் கரம் கூப்பி நிற்கிறான். பின்னால் மூன்று தேவியர் நிற்கின்றனர். இவர்கள் ராஜராஜனும் அவனது தேவியரும் என்றும், சேரமான் பெருமாளும் அவனது தேவியரும் என்றும் மாறான கருத்துக்கள் உண்டு. ஓவியத்தில் காணப்படும் கோயில் அமைப்பைப் பார்த்தால் கேரளத்திலுள்ள ஓர் அம்பலம் போல இருக்கிறது. திருவஞ்சைக் களத்தில் சேரமான் பெருமாள் தன் தேவியருடன் நடராஜர்—சிவகாமி நடனக் காட்சியை தரிசிப்பதை அந்த ஓவியம் சித்திரிப்பது போல் தோன்றுகிறது.

அடுத்து, வாயிற்காவலர் நால்வரின் உருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவர்கள் இந்தக் கால 'புஷ்கோட்'டை அந்தக் காலத்திலேயே அணிந்திருக்கக் கண்டு வியக்கிறோம்!

திரும்பினால், சடைமுடி தரித்த வெண்தாடியோடு ஒரு முனிவரின் உருவம். எதிரில் அரசன் போன்ற மற்றோர் உருவம். இவர்கள் சித்தருக்குச் சித்தரான கருவூர்த் தேவரும், அரசனுக்கு அரசரான ராஜராஜனும்தான் என்பது பொதுவான கருத்து.

தஞ்சைப் பெரிய கோயில் கருவறை மண்டபத்தில் ராஜராஜன் காலத்து எஞ்சியிருக்கும் ஓவியங்களில் முப்புரம் எரித்த முக்கண்ணப் பெருமானது ஓவியம் பார்த்துப் பிரமிக்கத்தக்கதாகும். தன் வெற்றிகளுக்கு அடையாளமாக விமானத்தில் ஸ்ரீதிரிபுராந்தகரின் பல வடிவங்களை அமைத்து மகிழ்ந்த மன்னன். முப்புரம் எரித்த காட்சியைச் சுவரிலும் தீட்டிப் பெருமைப்பட்டிருக்கிறான். அதற்கு எதிரே மறைந்தும் மறையாததுமாக, கைலாய மலைக்கடியில் சிக்கிய ராவணேச்வரன் அலறும் காட்சியின்

எஞ்சிய பகுதியைக் காணலாம். தற்போது 'ஓ'வென்று அலறும் இலங்கேச்வரனின் வாய்ப் பகுதி மட்டும்தான் இருக்கிறது!

சோழர் கால ஓவியங்களின் மீது 16-ம் நூற்றாண்டின் இறுதி, 17-ம் நூற்றாண்டில் தொடக்கத்தில் வரையப்பட்ட இரகுநாத நாயக்கர் கால ஓவியங்களைக் காண்கிறோம். இவற்றில் கண்ணப்பர், சக்ரதானமூர்த்தி, திசைக் காவலர் ஆகியோரின் ஓவியங்கள் இருக்கின்றன.

பழமையான இந்த ஓவியச் செல்வங்களை, தொல் பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் எல்லோர் கண்ணிலும் காட்டாமல் கண்ணாகக் காத்து வருகின்றனர்! ஆனால், இவற்றைப் பொதுமக்கள் பார்ப்பதற்கு அனுமதிப்பதில் ஆபத்து இருக்கிறது என்பதை, அந்த ஓவியங்களின் மீது ஆணியால் கிறுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் எவரும் ஒப்புக் கொள்வார்கள். எத்தனைதான் கண்காணிப்பும் கட்டுப்பாடும் இருந்தாலும் உற்சாகம் மிக்க இளைஞர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டுவது இயற்கையே. எனவே, அவர்களைக் கூட்டமாக உள்ளே விடாமல், பத்துப் பத்துப் பேராக, காவலருடன் அனுப்பி, நம் பழங்காலச் செல்வங்களை இக்காலத் தலைமுறையினரும் கண்டு களிப்பதோடு, நம் பண்டைய கலைகளின் மீது இவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்பட வழி செய்யப்பட வேண்டும்.

இந்த ஓவியங்கள் மட்டுமல்ல, உட்சுவரையொட்டி யுள்ள மூன்று பெரிய தெய்வச் சிலைகளும் பிரமிக்கத் தக்கவையாயிருக்கின்றன. தெற்கில் ருத்திரரும், மேற்கில் ஸ்ரீசந்தியா தாண்டவமூர்த்தியும், தெற்கே ராஜராஜேச்வரியும் பிருமாண்டமான அழகு வடிவங்கள். கருங்கல்லால் ஆனவை. மேலே சுண்ணாம்புப் பூச்சிருக்கிறது. இவற்றில், மேற்கே நோக்கி எழுந்தருளியுள்ள வடிவத்தில் வண்ணப் பூச்சு அழிந்தும் அழியாமலும் இருக்கிறது.

ராஜராஜன் இந்தப் பெருங்கோயிலை எழுப்பியபோது, இங்கு ஆடற்பணி புரிவதற்கென்று பிற கோயில்களிலிருந்து ஆடல்மகளிரை வரவழைத்தான். அவர்கள் அத்தனை பேரும் ஆடற்கலையில் பெரும் புகழ் பெற்றவர்கள். பெரிய கோயிலில் ஆடுவதைத் தங்கள் பெரும் பாக்கியமாகக் கருதி ஆவலோடு வந்தவர்கள். அவர்கள் மொத்தம் நானூறு பேருக்கு மேல் இருக்கும்.

அவர்கள் அத்தனை பேரும் இக்கோயிலில் தங்கள் அரிய கலையை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து, தெய்விகப் பணி புரிய அரியதொரு வாய்ப்புப் பெற்றார்கள் என்றால், ராஜராஜனுக்குப் பரதக் கலையில் இருந்த ஈடுபாட்டை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். அக் காலத்தில் நாட்டியக் கலை மகோன்னத நிலையில் இருந்ததன் அறிகுறியாகத் தான், வண்ண ஓவியங்களில் நாட்டிய மணிகளின் எழிற் சித்திரங்கள் பல காணப்படுகின்றன.

அது மட்டுமல்ல; பெரிய கோயிலில் ராஜராஜன் பரத நாட்டியக் கலையைக் கல்லிலும் வடித்து வைத்திருக் கிறான். விமானத்தின் முதல் மாடத்தில் கிழக்குப் புறம் தொடங்கிப் பிரதட்சிணமாக வந்தால், பரதக் கலையின் பல்வேறு நுணுக்கங்களை அறிந்து கொள்ளலாம். நடன முத்திரைகளைக் கற்பலகைகளில் வடித்து வைத்திருக் கிறார்கள் சிற்பிகள். பரதக் கலைக்கும் தெய்வ வழிபாட்டுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதாலோ என்னவோ, கருவறை விமானத்திலேயே அதற்கு உயர்ந்த இடத்தைத் தந்திருக்கிறான் ராஜராஜன். நம் கலைகளைப் போற்றி, தெய்வ நெறியை வளர்த்ததாலேயே அவனது புகழும் கோபுரம் போல் உயர்ந்திருக்கிறது.

பரத சாத்திரத்தில் 108 நிருத்திய கரணங்கள் கூறப் பட்டுள்ளனவாம். அதில் முதலாவதான புஷ்பாஞ்சலியுடன் சிற்ப வரிசைத் தொடங்குகிறது, பார்த்துக் கொண்டே வரும் போது நாட்டிய அரங்கில், நாட்டிய நிகழ்ச்சி ஒன்றைக்

காணும் பிரமை தட்டுகிறது. சதங்கையின் ஒலி கேட்கிறது. மத்தள ஓசை காதில் விழுகிறது, காற்றினில் இசையும் மிதந்து வருகிறது.

எண்பத்தொன்றாவது கற்பலகையுடன் சிற்ப வரிசை முடிந்து விடுகிறது. மீதியுள்ள இருபத்தேழுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், சிற்பங்கள் முடிவு பெறாமலே விடப் பெற்றிருக்கின்றன.

ராஜராஜனின் மைந்தன் இராஜேந்திரன், தனது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் தான் எழுப் பித்த கோயிலில் பணி புரிய, இங்கிருந்த சிற்பிகளை வலுக் கட்டாயமாக அழைத்துச் சென்று விட்டானாம். அதனால் தான் பெரிய கோயிலில் நாட்டிய சிற்பப் பணி முக்கால் பகுதியோடு நின்று விட்டதாம்!

ராஜராஜன் நாட்டியக் கலையிலும் நாட்டிய சாத்திரத் திலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்ததால் தனது மகள் குந்தவிக்குப் பரதக் கலையைப் பயிற்றுவித்து, பெரிய கோயிலிலேயே அரங்கேற்றமும் செய்வித்தான் என்று சரித்திரம் கூறுகிறது.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் கணக்கு வழக் கற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. எல்லாம் ராஜ ராஜனின் பல்வேறு வகையான பெருமைகளைப் பேசு கின்றன. முக்கியமாக இந்தக் கோயிலைப் பற்றிய விவரங் கள் அனைத்தும் அவற்றில் அடங்கியிருக்கின்றன. அவற்றில் சிலவற்றைத் அப்போது தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநராக இருந்த டாக்டர் நாகசுவாமி அவர்கள் எனக்குப் படித்துக் காட்டியபோது புளகிதம் அடைந்தேன். 'யான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும்' என்று விழைகிறேன். அதற்கு முன், தமிழர்கள் 'கல்வெட்டுத் தமிழை'ப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன். தாய்த் தமிழில்—

ஆனால் அந்தக் கால எழுத்துக்களில்—எழுதி வைத்ததை தமிழர்கள் படிக்க முடியாமல் இருப்பது வேதனைக்குரிய தன்றோ! கல்வெட்டுக்களைப் படிப்பதற்குப் பள்ளிகளிலே வசதிகள் செய்து தரப்பட வேண்டும். ஆன்மீக வாழ்வு, கோயில் வழிபாடு, கலை, சரித்திரம், கலாசாரம், போன்றவற்றை அனைவரும் அறிந்து கொள்ள வேண் டாமா?

இந்தப் பணியைத் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர் கள் தஞ்சைப் பெரிய கோயிலில் தொடங்கி வைக்கலாம் என்று கருதுகிறேன். இதற்காகவே ஒரு சிலர் நியமிக்கப் படலாம். கோயிலைக் காண வருபவர்களுக்கு ராஜ ராஜனின் பெருமைகளைப் படித்துச் சொல்லலாம். கல் வெட்டுகளைப் படிக்கும் முறையையும் அவர்களுக்குக் கற்றுத் தரலாம். பழக்கமாகி விட்டால், பிற கோயில் களுக்குப் போகும்போது யார் உதவியுமின்றி அவர்கள் படித்துத் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

கங்கை கொண்ட சோழபுரம்

சென்னையிலிருந்து திண்டிவனம், விக்கிரவாண்டி, பண்ருட்டி, சேத்தியாத்தோப்பு வழியாகத் தஞ்சாவூர் செல்பவர்கள், அணைக்கரைக்கு முன்னே, வலப்பக்கம் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில், தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தைப் போன்ற ஓர் உயரமான விமானத்தைப் பார்த்திருக்கலாம். அது கங்கை கொண்ட சோழீச்சுரம் என்ற சிவன் கோயில். ராஜராஜனின் மகன் ராஜேந்திர சோழன் எடுப்பித்தது. தஞ்சை விமானத்திற்கு அடுத்தபடி உயரமுள்ளது இந்த விமானம்தான்.

ராஜராஜனுக்கும், திரிபுவன மாதேவி என்று புகழ் பெற்ற சேர குல மங்கை வானவன் மாதேவியாருக்கும்

பிறந்தவன் முதலாம் ராஜேந்திர சோழன். தந்தையின் நட்சத்திரம் சதயம்; தநயனின் நட்சத்திரம் திருவாதிரை.

ராஜராஜன், ராஜேந்திரனுக்கு கி.பி. 1012-ல் முடி சூட்டியதாகவும், தந்தையுடன் சுமார் நான்கு ஆண்டு களாவது மகன் சேர்ந்து ஆண்டிருக்க வேண்டும் என்றும் சில சரித்திராசிரியர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

தந்தை விட்டுச் சென்ற சோழ சாம்ராஜ்யத்தை மகன் மேலும் விரிவுபடுத்தி, ஆசிய நாட்டிலேயே மிகச் செல் வாக்கும் சிறப்பும் பெற்ற இந்து சாம்ராஜ்யமாக விளங்கச் செய்தான். இவனது வெற்றிகள் பலப்பல. அவை அனைத்தும் பிரமிக்கத்தக்கவை. வடதிசை கங்கையும், தென்திசை ஈழமும், குடதிசை மகோதையும், குணதிசை கடாரமும் அவன் ஆண்ட ராஜ்யத்தின் எல்லைகளாகும். இவனுக்கு கங்கை கொண்ட சோழன், மும்முடிச் சோழன், வீரசோழன், பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன் பரகேசி என்ற பட்டப் பெயர்கள் உண்டு. கி. பி. 1044-இல், காஞ்சீபுரத்திற்கருகிலுள்ள பிரும்மதேசம் என்ற இடத்தில் ராஜேந்திரன் உயிர் துறந் தான். அப்போது அவன் தேவியருள் ஒருத்தியான வீரமா தேவி உடன்கட்டை ஏறி உயிர் நீத்தாள்.

தஞ்சைக்கு அடுத்தபடி, கங்கை கொண்ட சோழபுரம் சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகராக விளங்கியது. கி.பி. 1025 முதல் சுமார் 250 வருடங்கள் தென்னாட்டிலேயே தலைசிறந்த தலைநகராகத் திகழ்ந்தது இது. இந்திய நாட்டு வரலாற்றிலேயே கடல் கடந்து சென்று, வெளிநாட்டு மன்னர்களை வாகை சூடி, செல்வமும் பொருளும் கொண்டு வந்து குவித்த பெருமை இத் தலைநகருக்குத் தான் உண்டு. இதைப் போல், அழிந்து மண்ணோடு மண்ணாகிப் போன தலைநகரமும் வேறில்லை. கோயில் ஒன்றுதான் பழைய சாதனைகளுக்குக் கட்டியம் கூறிக் கொண்டு இன்றும் நின்று கொண்டிருக்கிறது.

கங்கை கொண்ட சோழனான முதலாம் ராஜேந்திரன், யானை மேல் துஞ்சிய தேவனான இராஜாதிராஜன், ஜயங் கொண்டாரின் கலிங்கத்துப் பரணி கொண்ட மாமன்னன் குலோத்துங்கச் சோழன், விக்ரமச் சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் போன்ற மன்னர்கள் செங்கோல் செலுத்திய இடம் இன்று வெறும் மண் தரையாகக் கிடக்கிறது. ஜெயங்கொண்டார், சேக்கிழார், ஒட்டக்கூத்தர் போன்ற புலவர் பெருமக்கள் வாழ்ந்து, மாபெரும் இலக்கியங்கள் படைத்த பூமி, அரண்மனைக் கட்டடங்களும், மாட மாளிகைகளும், கோட்டைக் கொத்தளங்களும் இருந்ததற்கு அடையாளம் ஏதுமின்றிப் பெரியதொரு பொட்டலாகத் தற்போது காட்சி தருகின்றது. அண்மைக் காலத்தில்தான் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினர், இங்குள்ள மாளிகை மேட்டை அகழ்வு செய்து, மண்ணில் புதைந்து போயிருந்த அரண்மனைச் சுவர்களின் சில பகுதிகளை வெளிப்படுத்தி, அவற்றைப் பாதுகாத்து வருகின்றனர்.

கங்கை கொண்ட சோழீச்வரர் கோயிலை சாலையிலிருந்து வடக்கேயுள்ள வாயில் வழியாகச் சென்றடையலாம். முன்பு கிழக்கே ஒரு கோபுரம் இருந்திருக்கிறது. ஆனல், தற்போது அது இடிந்து, சரிந்து சிலமாகிப் போயிருக்கிறது. கிழக்கு மேற்காக நீண்ட சதுர வடிவிலுள்ள திருச்சுற்று இரண்டு தளங்களையுடைய மாளிகையாகத் திகழ்ந்திருக்கிறது. இப்போது அதன் ஒரு பகுதியே மிகுந்துள்ளது. பிரதான கோயிலின் வடக்கிலும் தெற்கிலும் இரு சிறு கோயில்கள் உள்ளன. அவற்றை, திருவையாறில் உள்ளது போன்று வடகைலாயம் என்றும், தென் கைலாயம் என்றும் அழைக்கின்றனர். இவையிரண்டும் சோழர் காலத் திருப்பணிகளே.

வெளிப்புறத்தே நின்று சுற்றுப்புறத்தைப் பார்க்கும் போது, உயர்ந்த விமானம் அங்குலம் அங்குலமாக நமக்கு

தஞ்சையை நினைவுபடுத்திக் கொண்டு, கம்பீரமாக நிற்கிறது. மதிற் சுவர்களும் முன் கோபுரமும் இடிபாடு களுடன் காணப்பட்டாலும், ஆலயத்தைப் பொறுத்த வரையில் ஜீவகளை ததும்புகிறது. உள்ளே உறையும் பெரு மானின் தெய்வீகச் சக்தி நம் உள்ளத்தில் குடிகொள்ள, அங்கு ஒரு புனிதச் சூழல் நிலவுகிறது. இத்தகைய ஓர் உணர்வு தஞ்சைப் பெரிய கோயிலில் நம்மை ஆட்கொள்வ தில்லை.

கோயிலைச் சுற்றியுள்ள கோட்டை மதில்கள் சிதறுண்டு போயிருப்பதைக் காண்கிறோம். இதற்குப் பகை வரின் கைவரிசையோ, இயற்கையின் சீற்றமோ காரண மல்ல. மனிதனின் சிந்தையற்றச் செயலே அது.

1817-ம் ஆண்டில் கங்கை கொண்ட சோழபுரம் ஆங்கி லேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. கோயிலிலிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள கொள்ளிட நதியின் கிழக்கே 1836-ம் ஆண்டு ஓர் அணைக் கட்டினார்கள் (அணைக்கரை). அதற்காக இக் கோயிலின் மண்டபத் திருச்சுற்றின் கருங்கல் கற்களையெல்லாம் பொதுப்பணித் துறையினர் எடுத்துச் சென்று விட்டனர். கோயில் சொத்தைப் பொதுப்பணிக்குப் பயன்படுத்துவதில் தவறு ஏதுமில்லை, அது ஆண்டவனுக்கு உகந்ததுதான் என்பதற்கு ஆங்கிலேயர் ஆட்சியே நம் ஆட்சியாளருக்கு முன்னுதாரணமாக விளங்குகிறதோ?

கங்கை கொண்ட சோழீச்வரர் கோயிலின் விமானம் கீழே சதுரமாகவும், அதற்கு மேலே எண்பட்டை வடிவிலும், உச்சியில் வட்டமாகவும் அமைக்கப்பட்டிருக் கிறது. கருவறையிலுள்ள சிவலிங்க திருமேனியின் அமைப்பும் இவ்வாறே அடியில் சதுரமாகவும், இடையில் எண்பட்டை வடிவிலும், மேலே வட்ட வடிவமாகவும் இருப்பது காணத்தக்கது. வெளிச் சுவரின் கீழ்ப் பகுதியில் சிவபெருமானுடைய பல்வேறு வடிவங்கள் இடம் பெற்றி ருக்கின்றன.

தென் பகுதியிலிருந்து தொடங்கினால் நர்த்தன கணபதி, அர்த்தனாரீச்வரர், தட்சிணாமூர்த்தி, சங்கர நாராயணர் முதலியவர்களைக் கண்டு களிக்கலாம். தென்புறம் மேலைக் கோடியில் ஆடவல்லானின் அபூர்வ சிற்பம் உள்ளது. அண்ணல் ஆடும் ஆனந்தத் தாண்டவத்தை அன்னை, நந்தியின் அருகில் நின்றபடி ஆனந்தமாக ரசித்துக் கொண்டிருக்கிறாள். பக்கலில் காளியும் ஆடுகிறாள். நந்தி குடமுழா வாசிக்கிறார். காலடியில் கணங்களும் ஆடுகின்றன.

தஞ்சை விமானத்திலும் இதே இடத்தில் ஆடவல்லானின் திருமேனி இருக்கிறது. ஆனால், இந்தச் சிற்பத்தில் ஒரு வேற்றுமை. கூத்தபிரானின் தூக்கிய திருவடியின் கீழே எலும்பும் தோலுமாக, பக்தியின் வடிவாக காரைக்கால் அம்மையார் அமர்ந்திருக்கிறார். ஐயனைக் காண்பதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டு இறுதியில் சிவபெருமானின் தரிசனம் பெற்ற மாதரசியன்றோ இவர்!

சோழர் சபையில் அமைச்சராகப் பணியாற்றிய சேக்கிழார் பெருமான் தினம் ஆலய தரிசனத்திற்கு வந்த போது இந்தச் சிற்பதைக் கண்டு மெய்ம்மறந்திருக்க வேண்டும் என்றும், அதனால்தான் அவர் காரைக்கால் அம்மையாரின் சரிதம் பாடும்போது, 'இறைவா, நீ ஆடும்போது உன்னடியின் கீழிருக்க வேண்டும்' என்று கயிலையங்கிரியில் சிவபெருமானிடம் அம்மையார் வேண்டிக் கொண்டதாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும் தொல் பொருள் ஆய்வாளர் டாக்டர் நாகசாமி கருத்துத் தெரிவித் திருக்கிறார்.

விமானத்தின் தென்புறச் சுவரிலுள்ள சிற்பங்களைப் பார்த்துவிட்டு மேற்குப்புரம் திரும்புகிறோம். கங்காதரர், லிங்கோற்பவர், மகாவிஷ்ணு, சுப்ரமணியர், விஷ்ணு அனுக் கிரகமூர்த்தி ஆகிய சிற்ப வடிவங்களைக் காண்கிறோம்.

சிவன் கோயில் விமானங்களில் கருவறைக்குப் பின்புறச் சுவரில் சாதாரணமாக லிங்கோற்பவரோ, மகாவிஷ்ணுவோ இருப்பது வழக்கம். கங்கை கொண்ட சோழபுரத்தில் இருவருமே காணப்படுகின்றனர். கோஷ்டத்தின் மேலே லிங்கோற்பவரும் கீழே விஷ்ணுவும் இருக்கின்றனர்.

வலம் வந்து வடக்குப்புறம் திரும்பினால், காலாந்தகரைத் தரிசிக்கிறோம். வலக்கால் காலன் மீது அழுந்தியிருக்க, வலக்கையிலுள்ள கோடலியால் அவனைப் பிளக்கத் தயாராயிருக்கிறார் பெருமான். காலாந்தகரின் காலடியில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறான் காலன்.

சுவரின் மேற்புறம் சூரியனும் சந்திரனும் திகழ்கிறார்கள். ஒருபுறம் அடியார்கள் திருக்கூட்டம்; மறுபுறம் சிவபெருமானை வழிபடும் மார்க்கண்டேயனை யமதர்மராஜன் பாசக் கயிற்றைக் கட்டி இழுக்கிறான்.

அடுத்து, எட்டுக் கரங்களுடன் கூடிய துர்க்கை. அவள் காலடியில் எருமையின் தலை. பக்கத்தில் ஒரு சிங்கம். பிரும்மா, பைரவர், காமதகனர் ஆகிய வடிவங்களையும் காண்கிறோம். பிரும்மாவின் மூன்று தலைகள் மட்டும் தெரிகின்றன, கிழக்குக் கோடியிலுள்ள காமாந்தகமூர்த்தி அபூர்வமான அமைப்புடையதாகும்.

இவற்றைத் தவிர, இந்த விமானத்தில் அஷ்டதிக் பாலர்கள், அஷ்டவசுக்கள், ஏகாதசருத்ரர்கள் அனைவரும் இருக்கின்றனர்.

அடுத்து, வடக்கேயிருந்து அர்த்த மண்டபத்திற்குச் செல்லும் படிகள். இப் படிக்கட்டின் இருபுறமும் மிகமிக அருமையான சிற்பங்களைக் காணலாம். அளவில் ஆகட்டும், அற்புதமாக வடிக்கப் பட்டிருக்கும் நுணுக்கத்திலாகட்டும், கலையழகு மிளிரும் நளினத்திலாகட்டும் இவை ஒப்புயர்வற்ற வடிவங்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வலப்பக்கம் உள்ளது 'சண்டேச அனுக்கிரகமூர்த்தி'யின் வடிவம். மகேச்வரன், உமாமகேச்வரியுடன் வீற்றிருக்கும் திருக்கோலம். அவரது திருவடியின் கீழ், சண்டிகேச்வரர் கூப்பிய கரங்களுடன் பக்தியே உருவாகப் பணிவுடன் அமர்ந்திருக்கிறார். அவரது திருமுடியில் பூச்சரத்தை அன்போடும், ஆதரவோடும் சிவபெருமான் சூட்டுகிறார். ஆகா! ஆண்டவன்—அடியார் உறவு முறையை அப்படியே கல்லிலே வடித்துக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறான் தெய்வமாக் கலைஞன். எத்தகையதொரு கடவுள் பக்தியிருந்தால், அவன் இப்படியொரு சிற்பத்தைத் தீட்டியிருக்க முடியும்! இந்தச் சிற்பத்தை மட்டும் காண் பதற்கு ஒரு முறை கங்கை கொண்ட சோழபுரத்திற்குச் சென்று வரலாம்.

முதலாம் இராஜேந்திர சோழன் தன்னை சண்டேச மூர்த்தியாக உருவகப் படுத்திக் கொண்டு, சிவபெருமானின் அரும்பெரும் பக்தனாக, அடியார்க்கும் அடியவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளவே இப்படியொரு சிற்பத்தை வடிக்கச் செய்தான் என்று கூறுவோரும் உண்டு.

கலையெழிலில் இச்சிற்பத்திற்குச் சற்றும் சளைத்த தல்ல எதிர்ச் சுவரில் வடிக்கப்பட்டுள்ள ஞானசரஸ்வதியின் திருவுருவம். கலைவாணியின் கரங்களில் அட்சமாலை, அமிருத கலசம்-ஞான நூல் முதலியவை உள்ளன. ஞான முத்திரையுடன், வெள்ளைத் தாமரையின் மீது பத்மா சனத்தில் அமர்ந்திருக்கிறாள் தேவி. ஆழ்ந்த அமைதி, அசாத்திய சாந்தம், சிறு புன்னகையால் சகல கலைகளையும் புரிய வைக்கும் புனிதத் தோற்றம். நின்று நின்று, பார்த்துப் பார்த்து, நினைத்து நினைத்து, மகிழ்ந்து மகிழ்ந்து, மனமில்லாமல் நகர்ந்து நகர்ந்து, திரும்பித் திரும்பிப் பார்த்துப் பார்த்து... ஒரு முறை போய்த்தான் பார்த்துவிட்டு வாருங்களேன்... கண் படைத்த பயனைப் பெறுங்களேன்...!

விமானத்தின் முன்னுள்ள மண்டபம், முன்பு இரண்டு அடுக்குகள் கொண்ட பெரியதொரு மண்டபமாகத் திகழ்ந் திருக்க வேண்டும். தற்போது அதன் அடிப்பகுதி மட்டும் தான் எஞ்சியுள்ளது. மேற்பகுதி பிற்காலத்தில் கட்டப் பெற்றதாகத் தோன்றுகிறது. இந்த மண்டபத்தைப் பிரித்து, அக்கற்களை அணைக்கரை கட்டுவதற்காக எடுத்துச் சென்றிருக்கிறார்கள் நம்மை ஆண்ட ஆங்கி லேயர்கள். அம்மண்டபத்தில் பழைய சிற்பங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இங்கு காணப்படும் துவாரபாலர்கள் பெரியவையாகவும் நேர்த்தியாகவும் அமைந்திருக்கின்றன.

தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளது போன்று இங்கும் கருவறையைச் சுற்றி ஓர் உட்பிராகாரம் உள்ளது. ஆனால், அங்கு இருப்பது போன்று இதன் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்படவில்லை. தஞ்சையில் உள்ளது போன்று இங்கு நாட்டியச் சிற்பங்களும் காணப்படவில்லை. கருவறையில் உறையும் சிவலிங்கம் மிகப் பெரியதாக இருக்கிறது. தென்னிந்தியாவில் உள்ள சிவலிங்கங்களில் இதுதான் பெரியதோ? வாயிற் காவலர்களும் பிரும்மாண்ட உருவில் நிற்கிறார்கள்.

கருவறைக்கு முன்னுள்ள முகமண்டபத்தையும் பல்வேறு சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இலங்கேச்வரன் கயிலையங் கிரியை அசைக்க முயன்று, தோற்று, இறுதியில் சிவ பெரு மானிடம் வரம் பெற்ற காட்சிகளும், மகாவிஷ்ணு தன் கண் தாமரையால் சிவனை அர்ச்சித்த வரலாறும், பார்வதி திருக்கல்யாண வைபவமும், கிரீடார்ஜுனீயமும், மார்க் கண்டேய சரிதமும், சண்டிகேச்வரரின் வாழ்க்கை வரலாறும் இங்கு அழகுற அமைக்கப் பெற்றுள்ளன.

வடகயிலாயம் என்றழைக்கப்படும் வடபுறத்திலுள்ள சிறு கோயிலில் தற்போது பெரியநாயகி அம்மன் உறைகிறாள். வனப்பு மிகுந்த பெரிய உருவம். அக்கோயி லிலும் கோஷ்ட தேவதைகள் இருக்கின்றன.

நந்திகேச்வரருக்கு வடக்கே அலங்கார மண்டபம். இராஜேந்திரன் காலத்தது அல்ல; பின்னர் அமைக்கப் பட்டது. அதை அடுத்து சிம்மகேணி என்ற கிணறு. நுழைவாயில் பெரிய சிம்மத்தின் (யாளியின்) தலையோடு அமைந்திருக்கிறது. ராஜேந்திர சோழன் வடநாட்டி லிருந்து தன் வெற்றியின் சின்னமாகக் கொண்டு வந்த கங்கை நீரை இந்தக் கிணற்றில் ஊற்றியதாகக் கூறப்படு கிறது.

சிம்மகேணிக்கு அருகில் மகிஷாசுரமர்த்தனி திருக் கோயில் கொண்டிருக்கிறாள். இது பதினான்காம் நூற்றாண்டிலோ, பதினைந்தாவது நூற்றாண்டிலோ கட்டப்பட்டதாகும். அச் சிலை சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட உருவச் சிலையாகும். பல கரங்கள் கொண்ட துர்க்கை, எருமை ஒன்றின் தலையைத் துண்டிக்க, அதன் கழுத்திலிருந்து அசுரன் ஒருவன் வெளிப் படுவதும் தேவியின் வாகனமான சிம்மம், மகிஷத்தின் மீது பாய்ந்து கடிப்பதும் தமிழகத்திற்குப் புதுமையானதொரு சிற்ப வடிவம்.

இதே போன்று கோயில் மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் இன்று நவக்கிரகம் என்று வணங்கப்பெறும் சூரிய பீடமும் சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டு வரப் பட்டதாகக் கருதப்படுகிறது. இரண்டு அடுக்கு பீடம். நடுவில் சூரியனுக்கு அடையாளமாக மலர்ந்த தாமரை. சுற்றிலும் எட்டுக் கோள்களைக் குறிக்கும் எட்டு உருவங் கள். பீடத்தின் அடிப்பாகம் இரு சக்கரங்கள் கொண்ட தேர்... அதை ஏழு குதிரைகள் இழுக்க, தேர்த்தட்டில் அருணன் அமர்ந்திருக்கிறான். புதுமையாக இருக்கின்றது.

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மேற்கில், ஜயங் கொண்டானுக்குச் செல்லும் பாதை ஒரு பெரிய ஏரியை இரண்டாகப் பிரித்துச் செல்கிறது. அது இராஜேந்திர சோழனால் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது, பொன்

வேரி என்று அழைக்கப்படும் அந்த ஏரிக்குப் பண்டையப் பெயர் சோழகங்கை என்பதாகும். முன்பு நீர்ப்பாசனத்துக் காகக் கொள்ளிடம் நீர் இதில் வந்து நிரம்பும்படி அமைப் புக்கள் செய்யப்பட்டிருந்தன. தற்போது அவை மூடப்பட்டு விட்டன.

மாமன்னன் வடபுலத்தில் பெரும் வெற்றிகள் பெற்று, பகைவர்களின் தலையில் கங்கையைச் சுமக்கச் செய்து, ஆந்திர எல்லையில் அவர்களை எதிர்கொண்டழைத்து வந்து அத் தண்ணீரை இந்த ஏரியில் சேர்த்ததாகத் திருவாலங்காடு செப்பேடு ஒன்று கூறுகிறது.

ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தமிழன் கங்கையைத் தென்னாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறான்! அது ஓர் அடையாளமான இணைப்புத்தான்... தற்போது உண்மை யாகவே கங்கையும் காவிரியும் இணைக்கப்பட்டு விட்டால்...

தஞ்சைப் பெருவுடையாருக்குத் திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவர், கங்கைகொண்ட சோழீச்சுரத்துப் பெரு மானுக்கும் திருவிசைப்பா பாடியுள்ளார். 'முக்கண்ணா, நாற்பெருந் தடந்தோள் கன்னலே, தேனே, அமுதமே, கங்கைகொண்ட சோழீச்சுரத்தானே' என்று அருமையான பாக்களால் பெருமானை வழிபட்டிருக்கிறார்.

சாளுக்கிய மன்னன் விக்ரமாதித்தன் மீது பாடப்பெற்ற 'விக்ரமாங்க தேவ சரிதம்' என்னும் சம்ஸ்கிருத நூலில் கங்கை கொண்ட சோழபுரம், 'கங்கா குண்டம், என்று குறிக்கப்படுகிறது. ஜயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி யிலும், ஒட்டக்கூத்தரின் மூவர் உலாக்களிலும் கங்கை கொண்ட சோழபுரம் இடம் பெற்றுள்ளது.

தற்போது தொல்பொருள் ஆய்வுத் துறையினர் மேற் கொண்டுள்ள அகழ்வாராய்ச்சியின் விளைவாக, கங்கை கொண்ட சோழபுரத்தின் பண்டைய பெருமைகளும்,

ஆலயத்தைப் பற்றிய புதிய செய்திகளும் வெளி வந்து. பிற்கால சோழர்களின் மகோன்னத ஆட்சியைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள இயலும் என்று நினைக்கிறேன்.

தாராசுரம்

சோழர் காலத்தில் தோன்றிய மற்றொரு கற்கோயில், குடந்தைக்கருகிலுள்ள தாராசுரம் ஆலயமாகும்.

முதலில் புராணத்தைப் புரட்டுவோம்.

தாரன் என்று ஓர் அரக்கன். அவனுக்கு தேவர்களை வெற்றி காண வேண்டும் என்று அவா. முக்கண்ணப் பெருமானைக் குறித்துக் கடுந்தவம் இருக்கிறான். அவனுடன் அவனது நூறு மனைவியரும் சிவபெருமானை வழிபடுகின்றனர். அதன் பலனாக வரம் பெற்று, தேவையான பலம் பெறுகிறான் தாரன். அவன் பூசித்த தலம் முதலில் தாரேச்சுரம் ஆகி, பின்னர் தாராசுரமாக மாறிற்று.

இங்குள்ள கோயிலில் உறைபவர் ஐராவதேச்வரர். துர்வாச முனிவர் இட்ட சாபத்தின் காரணமாக இந்திரனது யானையான ஐராவதம் மனம் நொந்து தாராசுரத்திற்கு வந்து சிவபெருமானை வழிபட்டு, தன் வெண்மை நிறத்தை மீண்டும் பெறுகிறது அதனால், இங்கு உறையும் ஈச்வரன், ஐராவதேச்வரர் ஆனார்.

இங்கு யமதர்மராஜனும் வழிபட்டிருக்கிறான் முனிவர்களிட்ட சாபத்தால் ஏற்பட்ட வெம்மை நோய் தீருவதற்காக அவன் பல தலங்களுக்குச் சென்று, இறுதியாக தாராசுரம் வருகிறான். சிவபெருமானின் திரிசூலம் ஊன்றிய இடத்தில் தோன்றிய தீர்த்தத்தில் மூழ்கி வெம்மை நோயிலிருந்து விடுபடுகிறான்.

சரித்திரத்தைப் புரட்டுவோம்.

இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் திருக்குமாரனான இரண்டாம் ராஜராஜன் தாராசுரத்தில் தங்கி ஆட்சி புரிந்திருக்கிறான். அவனது ஆட்சி காலம் கி.பி. 1146-லிருந்து 1173 வரை.

இந்த நகரம் இரண்டாம் ராஜராஜனால் எடுப்பிக்கப் பட்டதால், ராஜராஜபுரம் ஆயிற்று. பின்னர், ராராபுரம் ஆகி, ராராசுரமாகி, தாராசுரமாகி விட்டது! இங்கு 'திருமாளி௵க ராஜராஜன்' என்று ஓர் அரண்மனை இருந்து மறைந்து விட்டிருக்கிறது.

இரண்டாம் ராஜராஜன், இங்கு ராஜராஜேச்சுரம் என்ற கோயில் எடுப்பித்தான். இக்கோயில் கி.பி 1167-இல் கட்டப்பட்டிருக்கலாம் என்று கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

கும்பகோணத்தை அடுத்துத் தெற்கேயுள்ள ரயில் நிலையம் தாராசுரம். தஞ்சை செல்லும் பேருந்தும் நம்மை அங்கு இறக்கி விடும்.

பார்த்ததுமே பழைய கோயில் என்று தெரிகிறது. அது பெரிய பிராகாரங்கள் கொண்ட மிகப்பெரிய கோயிலாகவும் இருந்திருக்க வேண்டும். கிழக்குப்புறம் பழுதடைந்த மதிற் சுவரைக் காணலாம். மொட்டைக் கோபுரத்திற்கு வெளியே சற்றுப் பள்ளமான பகுதியில் பலிபீடமும் நந்தி மண்டபமும் இருக்கின்றன.

உள்ளே நுழைந்ததும் கருங்கல்லில் கலைக்கோயில் ஒன்று உருவாகியுள்ள அற்புதத்தைக் கண்டு பிரமித்துப் போய் பேச்சற்று நின்று விடுகிறோம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் கம்பீர எழிலைக் கண்டோம்; கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு சிற்பக் களஞ்சியத்தையே கண்டோம்; தாராசுரத்தில் கலையெழிலோடு, சிற்ப நுணுக்கங்கள் நிறைந்த சித்திரசாலையையே தரிசிக்கிறோம்.

முன் மண்டபம் ஒரு தேர் போல் காட்சியளிக்க, படிகளேறிச் செல்லும் ஒரு மாடக் கோயிலாகவே முதல் தரிசனம் பெறுகிறோம். பிராகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் திருச்சுற்று மாளிகைத் திண்ணையில் நின்று அக் கலைக்கோயிலை ஒட்டுமொத்தமாகப் பார்வையால் பருகி, கண் படைத்த புண்ணியத்தைப் பெறுகிறோம். ஆகா! தங்கள் கலையுள்ளத்தை சோழர்கள் கருங்கல்லில் எத்தனை உறுதியாகப் பதித்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்! இறையுணர்வை எத்தனை தெளிவான, அழகுப் பிம்பங்களாக அள்ளித் தெளித்து விட்டுப் போயிருக்கிறார்கள்! அவற்றைக் காப்பாற்றுவது இருக்கட்டும்; கண்டுகளிக்கக்கூட நமக்கு நேரமில்லையே! அழகுதானே தெய்வம்! அழகு உணர்ச்சியில் கட்டுண்டு, அதில் மனத்தைப் பறி கொடுத்து, சிந்தையை உயர்த்தி, நம்மைப் படைத்தவனின் திருவடிகளை நினைத்து நினைத்து உருக வேண்டும் என்ற உயரிய கருத்துடன் அல்லவா மாமன்னர்கள் சிற்பக் கோயில்களை எடுப்பித்தார்கள். அந்நோக்கத்தைத் தங்கள் கலைத் திறனாலும் இறை பக்தியாலும் அழியாப் புகழ்பெற்ற சிற்ப வல்லுநர்கள் கல்லில் வடித்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவசர அவசரமாகப் பார்த்துவிட்டு வந்து விட்டால் அந்தச் சாதனையாளர்களுக்கு மரியாதை செய்தது ஆகுமா? ஆற அமர இருந்து கண்டுகளிப்பதைத் தவிர அவர்களுக்கு நாம் வேறு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்?

தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலுக்குள் நுழைந்ததும், 'இன்றையப் பொழுதை இங்குதான் கழித்தாக வேண்டும். வெறுமே பார்த்துவிட்டுச் சென்று விடுவதால் பெருஞ்செல்வத்தை இழந்தவர்களாவோம்' என்ற எண்ணம் தலை தூக்கி நிற்கிறது. அருகில் சென்று பார்க்கப் பார்க்க, ஒவ்வொரு சிற்பத்தின் நிழலிலும் ஒரு மணி நேரம் தங்கி விடவேண்டும் போல் தோன்றுகிறது.

இக்கோயிலின் முன் மண்டபத்திற்கு ராஜகம்பீர மண்டபம் என்று பெயர். இம் மண்டபத்தின் வெளிக் கோட்டத்திலுள்ள புதியதோர் உருவம் நம்மை 'வா' என்றழைக்கிறது. மூன்று தலைகளுடன் அர்த்தநாரீச்வரர் போல் தோற்றமளிக்கிறது அந்தச் சிற்பம்.

மூன்று தலைகளிலும் கரண்ட மகுடம் என்னும் முடி அலங்கரிக்கிறது. பின்புறம் சூரிய மண்டல ஜோதி. எட்டு கரங்கள் உள்ளன. வலக் கரங்களிலே உருத்திராட்சமாலை, கத்தி, கட்வாங்கம், தாமரை ஆகியவற்றைக் காணலாம். இடக் கரங்களில் பாசம், அபயம், தண்டம், கபாலம் இருக் கின்றன. வலப் பாகம் ஆண் உருவம்; இடப் பாகம் பெண் உருவம்.

அர்த்தநாரீச்வரர் உருவத்தின் முடியில் வலப்புறம் சடை முடியும், இடப் புறம் கரண்ட மகுடமும் காணப் படும். ஆனால், இந்த உருவத்தில் முழுவதுமே கரண்ட மகுடமாக இருப்பதாலும் வலக் கையில் தாமரை இருப்ப தாலும் இது தேவியின் வடிவையே அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட சிற்பம் என்று டாக்டர் நாகசாமி கருத்துத் தெரிவித்துள்ளார். இது மகா மாயா சக்தி என்றும், சக்தியின் அங்கமாக வலப்புறம் ஆண் உருவம் (சிவபெருமான்) இடம் பெற்றுள்ளதாகவும், பிரும்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரும் இணைந்த பராசக்தி யாக இங்கு தேவி திகழ்கிறாள் என்றும் அவர் கூறுகிறார்.

பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தென்னகத்தில் சக்தி வழிபாடு சிறக்கத் தொடங்கியது. முதலாம் குலோத்துங்கச் சோழன் காலம் முதல், சிவாலயங் களில் தேவிக்குத் தனியாக ஒரு சந்நிதி தோன்ற ஆரம் பித்தது.

அப்போது 'யோகயாமளம்' என்ற சாக்த தந்திரத்தின் அடிப்படையில் சக்தி வழிபாடு பெரும் சிறப்புப் பெறத்

தொடங்கியது. ராஜராஜேச்சுரம் உடையாரைப் பற்றி ஒட்டக்கூத்தர் பாடியுள்ள தக்கயாகப்பரணியில் தேவி, 'யோகயாமளத்தினாள்' என்றே புகழ்ந்து பாடப் பெற்றுள்ளாள். சாக்த வழிபாட்டைப் பற்றி அறிந்து கொள்ள தக்கயாகப்பரணி நமக்குப் பெரிதும் உதவுகிறது.

பிரும்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மூவரும் இணைந்த மாபெரும் சக்தியாகத் திகழும் பராசக்தியே பைரவி என்று அழைக்கப்படுகிறாள். இவளையே மார்க்கண்டேய புராணம் மகாலட்சுமி, மகா சரஸ்வதி, மகேச்வரி மூவரும் இணைந்த வடிவமாகப் போற்றுகிறது. இந்த உருவம்தான், தாராசுரம் ஆலயத்தின் ராஜ கம்பீர மண்டபத்தில் கிழக்குப் புறக் கோட்டம் ஒன்றில் மகாமாயா சக்தியாக எழுந்தருளி யிருக்கிறது. இம்மாதிரி ஒரு சிற்பம் வேறெங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை. இதைப் பற்றி அறிந்து கொள்ள தக்கயாகப் பரணியை நாட வேண்டும். இந்த தேவியைப் பார்த்து விட்டுத்தான் ஒட்டக்கூத்தர் தம் தக்கயாகப் பரணியில் 'தேவி! நீ உன் தலைவனை ஓர் பாதிக் கொண்டு மனம் மகிழ்கின்றாய்' என்று பாடியிருக்கக் கூடும் என்று டாக்டர் நாகசாமி கருத்துத் தெரிவித்திருக்கிறார். அப்பாடலைப் பார்ப்போம்:

'வழியுறு நீறு வேறாற மகிழும் ஒரோர் கூறும்
அறம் அறாத வானாள மட அறாத மானாள
ஒமியும் ஒரோர் கூறும் ஒருவராகி நேராகி
உடைம கேள்வர் ஓர் பாதி உருகு காதல் கூர்வாளே'

இக்கோயிலில் உள்ள மற்றொரு பெண் உருவமும் நம் மனத்தை விட்டு அகலுவது கடினம். அது ராஜ கம்பீர மண்டபத்தின் உள்ளே மேற்குப்புறம் உள்ளது. அதை 'அன்னபூரணி' என்று சிலர் கூறுவர். பாஸ்கரதொண்டை மானும் இவ்வாறே குறிப்பிட்டுள்ளார். இடக் கரத்தில் ஒரு பாத்திரமும் வலக் கரத்தில் கரண்டியும் வைத்துக் கொண்டு

அன்னம் அளிக்கும் தேவியே அன்னபூரணியாவாள். இந்த அழகிய தேவி வலக் கரத்தில் தாமரை மலரும், இடக் கரத்தில் அமிர்த கலசமும் வைத்திருக்கிறாள். இவள் விஷ்ணு மாயா. தேவர்களுக்கு அமிர்தம் அளித்த மோகினி.

பராசக்தியைப் பரமேச்வரியாக வழிபடுவது போலவே, விஷ்ணு சக்தியை வைஷ்ணவியாகவும் வழிபடுகிறோம். மாயோன் சக்தி 'மாயோள்' என்று குறிப்பிடப்படுகிறாள். மாயவன் புரிந்த லீலைகளெல்லாம் தேவியின் சக்தியால் நிகழ்ந்தனவென்பது சாக்தர்களின் வாதம். மோகினி அவதாரம் மாயோனின் லீலைகளில் ஒன்று. விஷ்ணு மாயை என்ற தேவிதான் மோகினியாக வந்தாள். இதை ஒட்டக் கூத்தர் தமது தக்கயாகப்பரணியில் கூறுகிறார்:

தமர நுபுராதார சரணியாரனாகாரி
தருண வணிலா வீசு சடில மோலி மாகாளி
அமரர் வாழ்வு வாழ்வா அவுணர் வாழ்வு பாழாக
அருளும் மோகினியாகி அமுதபாலும் அருளாளோ'

ராஜகம்பீர மண்டபத்தின் வடக்குப்புறம் தேவியின் திருச் சந்நிதியுள்ளது. அதன் நுழைவாயிலில் கங்கை, யமுனை என்ற இரு தேவியர் துவாரபாலிகைகளாக நின்று கொண்டிருக்கின்றனர். அவர்களது எழிலுருவங்களும் அழகு முகங்களும் நம்மை அப்படியே சொக்க வைக்கின்றன.

இம் மண்டபத்திலுள்ள தூண்கள் சிற்ப நுணுக்கங்கள் நிறைந்த கலைச் செல்வங்கள். அணு அணுவாக ரசிக்க வேண்டியவை. பார்த்துப் பார்த்துப் பிரமிக்கத் தக்கவை. விநாயகர் சிற்பங்கள்—சிறப்பாக நடம் புரியும் கணபதி—நிறைய இருக்கின்றன. பல அளவுகளில் இருக்கின்றன. தென்புறம் உள்ள தூண் ஒன்றில் கிழக்கே பார்த்து ஒரு 'மினி' நடன விநாயகர் காட்சி தருகிறார். அச்சிற்பம் ஒரு நெருப்புக் குச்சி அளவுடையது. நாங்கள் சென்றிருந்த நேரம், சூரிய ஒளி அவர் மீது படர்ந்து, பட்டொளியில் ஜொலித்துக் கொண்டிருந்தார்.

தூண்கள் மட்டுமா? அந்த மண்டபத்தில் திரும்பும் இடங்களிலெல்லாம் சிற்பங்கள்தான். சுற்றிச் சுற்றிப் பார்க்கும்போது கர்நாடகத்திலுள்ள பேலூர், ஹளபேடு கோயில்கள் நம் நினைவுக்கு வராமலிருக்காது. 'ஹோய்சாளா' என்ற போசலரின் சிற்பத் திறன் இரண்டாம் ராஜராஜன் காலத்துச் சிற்பிகளை வெகுவாகப் பாதித்திருப்பது புரியும். ராஜ கம்பீர மண்டபத்தின் பெயரை மாற்றி 'சிற்ப கம்பீர மண்டபம்' என்று பெயர் சூட்டிவிட நம் மனம் துடிக்கிறது.

இம் மண்டபத்திலேயே அதிகார நந்தியும், கண்ணப்பரின் தனிச் சிலைகளும், கருவறை நுழைவாயிலுக்கருகிலுள்ள கார்த்திகேயன் உருவச் சிலையும் கண்டு களிக்கத் தக்கவையாகும். யோக சக்தி அம்மனின் செப்புப் படிமமும் அழகு மிக்கது.

'சிற்ப கம்பீர' மண்டபத்தின் வெளிப்புறம் ஒரு தேர் போல் அமைந்திருப்பதை, முன்பு குறிப்பிட்டிருந்தேன். தேர்ச் சக்கரங்கள் உருண்டோடுவதையும் குதிரைகள் பாய்ந்து ஓடுவதையும் பார்க்கலாம். யானையும் சிங்கமும் போர் புரிவதைக் காணலாம். யாளி வரிசைகளைக் காணலாம். கண்ணிலிருந்து கல் மறைந்து, அவையனைத்தும் உயிர் பெற்று உறுமுவதைக் கேட்கலாம். மண்டபத்தின் வெளிப்புறச் சுவர் முழுவதும், ஒவ்வொரு வரிசையிலும் சிற்பக் களஞ்சியம். அதில் அழகும் அலங்காரமும் கொலுவீற்றிருக்கின்றன. காலத்தால் கரைந்தது போக, மீதம் உள்ளவை பண்டையப் பெருமைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

மாடங்களிலும் கண்கவர் சிற்பங்கள். அக்னிதேவன் அமர்க்களமாய் உட்கார்ந்திருக்கிறார். மற்றொரு மாடத்தில் வீரபத்திரர் கண்களில் கோபக் கனல் வீச ஆடிக் கொண்டிருக்கிறார்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலும் வீரபத்திரர் உருவம் இத்தனை சிறப்பிடம் பெறவில்லை. இக் கோயிலில் மட்டும் வீரபத்திரருக்கு இத்தனை சிறப்பு ஏன்?

தக்கனின் யாகத்தை அழித்து, அவனது அகங்காரத்தை நிர்மூலமாக்குவதற்காக சிவபெருமானால் ஏவப்பட்ட கடவுள் வீரபத்திரர். அந்தப் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியைப் பாடியுள்ளார். இந்தப் புராணத்தைப் பரணியாகப் பாடிய தன் மூலம், இரண்டாம் ராஜராஜனின் பெருமைகளையும், அவன் எழுப்பிய கோயிலில் உறையும் பெருமானின் சிறப்புக்களையும் பாடியுள்ளார் புலவர்.

தமது பரணியில் வீரபத்திரக் கடவுளின் வீரச் செயல்களைப் புகழ்ந்து பாடிய ஒட்டக்கூத்தருக்கு, வீரபத்திரரின் இந்த உருவம்தான் உற்சாகமும் உணர்வும் தந்து உந்தியதோ அல்லது தக்கயாகப் பரணியைப் படித்துவிட்டு அரசன் இப்படியொரு சிலையை வடிக்கப் பணித்தானோ? தங்களது யாகத்தை அழிக்கப் புறப்பட்ட வீரபத்திரரின் சீற்றம் முழுவதும் அந்தச் சிற்பத்தில் சீறிப் பொங்குகிறது.

இக் கோயிலின் திருச்சுற்றில் பெரிய புராணத்தின் கதாநாயகர்களான நாயன்மார்களின் வரலாறுகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றின் மீதும் விளக்கங்கள் காணப்படுகின்றன. ஐம்பதுக்கும் மேற்பட்ட திருத்தொண்டர்களைக் காணலாம். அவர்களது திருநாமங்களும் இடம் பெற்றிருக்கின்றன. நாயனார் என்பதற்குப் பதில் 'ஆண்டார்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

இவற்றில் கண்ணப்ப நாயனாரின் சிற்பம் நம் உள்ளத்தைச் சுண்டியிழுக்கிறது. அந்தக் கல் சிற்பம் பக்தி காவியமாக, உணர்ச்சி ஓவியமாக நம் கண்முன்னே விரிகிறது.

தேவாரம் பாடியவர்களின் வரிசையைக் காணும் போது இக் கோயிலில் தேவாரப் பதிகங்கள் ஒலித்திருக்க வேண்டும் என்று நம்மால் அறிய முடிகிறது. அந்தத் தெய்வப் பண்கள் நம் காதுகளில் தேனாகப் பாய்வதை உணர முடிகிறது. ஒட்டக்கூத்தரும் இந்தச் சிற்பங்களைக் கண்டு ஆனந்தித்திருக்க வேண்டும். முக்கியமாக, திருஞான சம்பந்தமூர்த்தியின் வரலாறு அவரை வெகுவாகப் பாதித் திருக்க வேண்டும். சம்பந்தர் ஞானப்பால் உண்டதும், சமணருடன் வாதிட்டதும், பாண்டிய மன்னனின் பிணி தீர்த்ததும் அவரைக் கவர்ந்ததன் காரணமாகத்தான் ஞான சம்பந்தப் பெருமானின் புகழையும், அவரது சரிதத்தையும் தமது தக்கயாகப் பரணியில் இணைத்திருக்க வேண்டும்.

தாராசுரம் கோயிலிலுள்ள சிறந்த சிற்பங்களில் சரப மூர்த்தியினுடையதும் ஒன்றாகும். இரணியனைக் கொன்ற ஸ்ரீ நரசிம்மரின் கோப வெறி அடங்கவில்லை. அது அவரை ஆட்டிப் படைக்கிறது. உலக நலனுக்காக சிவபெருமான் அவரை அமைதிப்படுத்துகிறார். சரபமூர்த்தி, நரசிம்மர் முகங்களில் ஆயிரம் உணர்ச்சிகள் பிரதிபலிக்கின்றன. ஜட மான கல்லுக்கு, சிற்பியின் சிற்றுளி உயிரூட்டியுள்ள அற் புதத்தைக் கண்டு சிறிது நேரம் அங்கேயே நின்று விடுகிறோம்.

இந்தக் கோயிலில் தாருகாவனத்துப் பெண்களை மயக்கிய கங்காளதேவரும் திரிபுராந்தகரும் கஜசம்ஹார மூர்த்தியும் சிலையுருவில் இருந்திருக்கிறார்கள். மண்டபம் சரிந்து விழுந்து அவை பழுதாகிவிடப் போகின்றனவே என்று, அவற்றை எடுத்துக் கொண்டுபோய் தஞ்சைக் கலைக்கூடத்தில் வைத்திருக்கிறார்கள். அங்கே செல்லும் வாய்ப்புக் கிடைப்பவர்கள் அவற்றைக் கண்டு ரசிக்கலாம். இந்தக் கோயிலிலேயே வடகிழக்குக் கோடியில் ஒரு சிறு கண்காட்சி உள்ளது. அதிலும் பல சிற்பங்களும் சித்திரங் களும் வைக்கப்பட்டுள்ளன.

அம்பிகை தெய்வநாயகியின் கோயில் நூறு கஜம் தொலைவில் தனியாக இருக்கிறது. பெரிய கோயிலோ, சிற்பங்கள் நிறைந்த கோயிலோ அல்ல. ஆனால், கருவறை மண்டபத்தைச் சுற்றிலும் யாளித் தூண்கள் நிறைந்து காணப்படுகின்றன. பாம்பு ஜன்னல் அருமையான வேலைப்பாடு! மண்டபத்தில் நந்தியும், கருவறை நுழைவாயிலில் கணபதியும் சுப்ரமணியரும் இருக்கின்றனர்.

தாராசுரம் என்றால், இரண்டாம் ராஜராஜன் நினைவு வருவதோடு, ஒட்டக்கூத்தரும், அவர் படைத்த தக்கயாகப் பரணியும் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது. இலக்கியப் பின்னணியைப் புரிந்துகொள்ளச் சற்று சரித்திரப் பின்னணியையும் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குத் துணை புரிந்த குடந்தை என். சேதுராமனுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜ சோழனின் குமாரன் கங்கைகொண்ட சோழனான இராஜேந்திரன், அவனது மகள் அம்மங்காவுக்கும் கீழைச் சாளுக்கிய வேங்கி நாட்டுச் சிற்றரசனான ராஜராஜ நரேந்திரனுக்கும் பிறந்தவன் முதலாம் குலோத்துங்கன்.

முதலாம் குலோத்துங்கன் தந்தை வழியில் சாளுக்கியன். தாய் வழியில் சோழன். எனவே, குலோத்துங்கனில் தொடங்கி அனைத்துச் சோழ மன்னர்களும் 'சாளுக்கியச் சோழர்' என்று அழைக்கப்படுகின்றனர். சாளுக்கிய மரபுப்படி, இவர்களுக்கு ஆந்திரத்தில் கோதாவரிக் கரையில் உள்ள திராட்சாராமம் ஆலயத்துள் உறையும் ஸ்ரீ பீமேச்வரர் குலதெய்வம். அக்கோயில் கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில் ராமசந்திரபுரம் தாலுகாவில் உள்ளது. இங்கிருந்து நான்காவது மைலில் கோதாவரி கடலில் கலக்கும் 'கோடிப்பள்ளி' என்ற இடம் உள்ளது.

முதலாம் குலோத்துங்கனுக்குப் பராந்தக சோழன், விக்கிரம சோழன் என்று இரு குமாரர்கள். விக்கிரம சோழனின் மகன், இரண்டாம் குலோத்துங்கன். அவனது மகன், தாராசுரம் கோயிலை எழுப்பிய இரண்டாம் ராஜ ராஜன். அதாவது, முதலாம் குலோத்துங்கனின் கொள்ளுப் பேரனாவான். இவனும் சாளுக்கியச் சோழனாதலால், திராட்சாராமம் பீமேச்வரரைக் குலதெய்வமாகக் கொண் டவன்.

தென்காசி என்று அழைக்கப்படும் திராட்சாராம பீமேச்வரரை ஸ்ரீராமர் வழிபட்டிருக்கிறார். அக்கோயிலின் தல புராணம் தட்ச யக்ஞத்தை அடிப்படையாகக் கொண்டது. தட்ச யாகம் இங்கு நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. 'அராமம்' என்றால் நந்தவனம். தட்சனு டைய நந்தவனம், 'தாட்சாராமம்' ஆகி, திராட்சாராம மாக மருவியிருக்கலாம்.

தக்கன் தேவர்களை அடக்கி, 'யானே கடவுள்' என்று அகங்காரம் கொண்டான். மருமகனான சிவபெருமானையே அவமதித்தான். ஸ்ரீ வீரபத்திரரை அனுப்பி, பொய்யனும் புரட்டனுமான தக்கனை அழித்தார் சிவபெருமான். அந்த சிவபெருமான்தான் திராட்சா ராமத்தில் அமர்ந்து அருள் பாலிப்பதாகக் கீழைச்சாளுக்கியர்கள் நம்பினார்கள்.

ஒட்டக்கூத்தர் தமது தக்கயாகப் பரணிக்கு இந்தப் புராண கதையைத்தான் அடிப்படையாக எடுத்துக் கொண்டார். தக்கனை அழித்து வெற்றி வாகை சூடிய சிவ பெருமான் ராஜராஜேச்வரத்தில் எழுந்தருளினார் என்று கூத்தர் கூறுகிறார். பீமேச்வரருக்குப் பொருந்தும் தக்க யாகப் புராணம் ராஜராஜேச்வரப் பெருமானுக்கும் பொருந்துகிறது. ஒட்டக்கூத்தர் திராட்சாராம, தாராசுரக் கோயில்களை இணைப்பதன் மூலம் சாளுக்கிய, சோழ பரம்பரையின் குலதெய்வங்களையும் இணைக்கிறார். சோழர்களின் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் திராட்

சாராமம் கோயிலில் காணப்படுவதாக சேதுராமன் கூறுகிறார்.

இவ்விரு ஆலயங்களை இணைத்ததோடு, ஒட்டக் கூத்தர் மற்றுமொரு சரித்திரப் பின்னணியையும் தக்கயாகப் பரணியில் குறிப்பிடுகிறார்.

கல்யாணி என்ற கல்யாணபுரம், மேலைச்சாளுக்கிய நாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்தது. 1149-இல் கலசூரி மன்னனான பிஜ்ஜலன் என்பவன், மேலைச்சாளுக்கிய மன்னனான தைலனை விரட்டி விட்டு, கல்யாணியைப் பிடித்துக் கொண்டான். இருபது ஆண்டுகளுக்கு மேலாகக் கல்யாணி அவன் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

நாட்டை விட்டு விரட்டப்பட்ட தைலனின் மகன் நான்காம் சோமேச்வரன், இழந்த ராஜ்யத்தை மீண்டும் கைப்பற்றத் திட்டமிட்டான். அதற்காக இரண்டாம் ராஜ ராஜ சோழனின் உதவியை நாடினான்.

ராஜராஜன் தனக்கு அடங்கிய கிழைச்சாளுக்கிய வேங்கி நாட்டுச் சிற்றரசனான ராஜேந்திர சோழ கொங்க ராஜனை, தைலனுக்கு உதவி செய்யும்படி பணித்தான். 'கோச்சர்ல கோட்டா' என்னுமிடத்தில் நடந்த சண்டையில் கலசூரி மன்னனைத் தோற்கடித்து விட்டு நான்காம் சோமேச்வரனை மேலைச்சாளுக்கிய சாம்ராஜ்யத்தின் மாமன்னனாகத் தலைநகர் கல்யாணியில் மணிமுடி சூட்டினான். இச்சரித்திர நிகழ்ச்சிகளை ராஜராஜனின் கல் வெட்டுகளிலும், தெலுங்கு இலக்கியமான கேயூரபாகு சரித்திரத்திலும் காணலாம்.

இந்த சரித்திரப் பின்னணியைத்தான் ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் எடுத்துக் கையாளுகிறார்.

பொய்யனும் புரட்டனுமான கலசூரி மன்னனை விரட்டி விட்டு, உண்மையான வாரிசுகளான மேலைச்

சாளுக்கியர்களுக்குப் பட்டம் கட்டிவிட்ட ராஜ கம்பீரனை வாழ்த்துகிறார் கூத்தர்.

'பிரட்டனையே பட்டங்கட்டழித்துப்
பேர் ஏழரை இலக்கம் புரக்க
இரட்டனையே பட்டங் கட்டிவிட்ட
இராச கம்பீரனை வாழ்த்தினவே.'

சிவபெருமான் வீரபத்திரரை அனுப்பி வைத்துத் தக்கனின் யாகத்தை அழித்து அவனை வெற்றி கொள்கிறார். அவ்வாறே ராஜராஜன், கீழைச் சாளுக்கிய வேங்கி நாட்டுச் சிற்றரசனை அனுப்பி மேலைச் சாளுக்கிய நாட்டைக் கைப்பற்றிக் கலசூரி அரசனை வீழ்த்தினான். தக்கனை அழித்துவிட்டு சிவபெருமான் ராஜராஜேச வரத்தில் வந்து எழுந்தருளியது போல், ராஜராஜனும் ராஜராஜேச்வரத்தில் வந்து தங்கினான் என்கிறார்.

'ஒருமருங்குடைய மூலநாயகியொடு
ஒற்றை வெள்ளைவிடை ஊர்திமேல்
இருமருங்குமறை தொழவெழுந்தருளி
இராசராசபுரி ஈசரே.'

வங்காளத்தில், தந்திர சாஸ்திரம் பயில்வோரிடையே தட்சயாகத்தின் கதாநாயகியான தாட்சாயணி வழிபாடு சிறந்து காணப்படுகிறது. அவர்களில் சிலர் பதினொரு, பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழ நாட்டில் குடியேறினார்கள். அவர்களது வழிபாட்டு முறைகளை ஒட்டக் கூத்தர் அறிந்திருக்கக் கூடும். தற்போது தாராசுரத்தில் 'சக்கராயி அம்மன்' கோயில் ஒன்றுள்ளது. அந்த அம்மன். மகா குண்டலினி சக்தியாகும். ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தில் குறிக்கப்படும் ஸ்ரீசக்கரராஜிதான் 'சக்கராயி' ஆகியிருக் கிறது. 'காமகலா,' 'முகபங்கஜா' என்ற பெயர்களும் உண்டு. முகமே தாமரையாக இருக்கும் இந்த வடிவம் தென்னகத்திற்கு முற்றிலும் புதுமையானது. அது வடக்கே

இருந்து வந்திருக்க வேண்டும். ஸ்ரீவித்யா உபாசகர்கள் இந்த வடிவத்தை ஆராய்ந்து, அதை ஆராதிக்க வேண்டிய முறைகளையும் நிர்ணயம் செய்வது நலம் பயக்கும் என்று கருதுகிறேன்.

தாராசுரத்தில் ஒட்டக்கூத்தரின் சமாதி இருப்பதாகக் கூறப்படுகிறது. வீரபத்திர சுவாமி கோயிலின் கருவறைக்குப் பின்புறம் உள்ள சிறு மேடையும் அதன்மீது ஒரு லிங்கமும் காணப்படுகின்றன. அதுதான் கூத்தரின் சமாதி என்று வெகு காலமாகச் சொல்லப்பட்டு வருவதாகவும், ஆனால் அதற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் சேதுராமன் கூறினார். அக்கோயில் முகப்புக் கோபுரம் பாழடைந்து காணப்படுகிறது. மண்டபமும் பழுதடைந் திருக்கிறது. மூலஸ்தானத்திலுள்ள வீரபத்திரர் சிலை நேர்த்தியாக இருக்கிறது.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் விக்கிரமச் சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன் ஆகிய மூன்று சோழ மன்னர்களின் அரசவைகளையும் அலங்கரித்திருக்கிறார். அதாவது அவரது காலத்தை கி.பி. 1118 முதல் 1172-ம் ஆண்டு வரை நிர்ணயிக்கலாம். ஆனால், அவர் பிறந்த வருடமோ, மறைந்த வருடமோ நிச்சயமாகத் தெரியவில்லை. அவர் இம் மூன்று மன்னர் களின் மீதும் உலா பாடியிருக்கிறார். குலோத்துங்கன் மீது பிள்ளைத் தமிழ் பாடியிருக்கிறார். இரண்டாம் ராஜராஜன் காலத்தில், தமது முதுமைப் பருவத்தில் தக்கயாகப் பரணி பாடியிருக்கிறார். இவை தவிர வேறு சில இலக்கியங்களும் படைத்திருக்கிறார்.

வடமொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தாலும், தமிழ் மொழி அவரது மூச்சாகவும் அதன் வளர்ச்சி அவரது இலட் சியமாகவும் இருந்திருக்கிறது.

ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணியை, பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துப் பல வகைக் குறிப்பு

களுடன் மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமி நாதையர் அவர்கள் ஒரு நூலாகப் பதிப்பித்துள்ளார். அதில் முகவுரை, நூலாசிரியர் வரலாறு, நூலாராய்ச்சி, உரையாசிரியர் வரலாறு, இரண்டாம் ராஜராஜ சோழன் வரலாறு, நூற்பெயர்கள் முதலியவற்றின் அகராதி, ஆகியவை மிக்க ஆராய்ச்சித் திறனுடன் எழுதப்பட்டுள்ள பகுதிகளாகும்.

ஒட்டக்கூத்தரைப் பற்றியுள்ள பகுதியில், அவருக்குத் தமிழ்ப் பரமாசாரியாராகிய அகத்தியரிடம் உள்ள பக்தி குறிப்பிடப்படுகிறது. தமிழ்த் தாத்தா கூறுவதைக் கேட்போம்:

'இரு மொழிகளிலும் நல்ல பயிற்சியுடையவராயிருப் பினும் வீரபத்திர தேவர் போர்க்கோலங் கொண்டெழுந்த காலத்தில் தும்பை மாலையை அணிந்து கொண்டதாகக் கூறியிருந்த இவர், 'பொதியில்வாழ் முனிபுங்கவன்றிருவாய் மலர்ந்த புராண நூல், விதியினால்வரு தும்பை மாலை விசும்புதூர மிலைச்சியே' என்று கூறியதாலும், அகத்திய முனிவரை, 'ஒரு தமிழ் முனிவரன்' என்றும் பொதியின் மலையைத் 'தமிழ்க் குன்று' 'தமிழ்ப் பொதியில்' என்றும் சொல்லியதாலும் 'கோக்குந் தமிழ்க் கொத்தனைத்தும் வாழியே' 'வாழி, தமிழ் சொற்றெரிந்த நூற்றுறை, வாழி தமிழ்க் கொத்தனைத்தும் மார்க்கமும், வாழி திசைச்சப் புறத்து நாற்கவி' என்று வாழ்த்தியதாலும் தமிழ் மொழியிலும் அதன் வளர்ச்சியிலும் இவர் அதிக அபிமானம் உடையவரென்பது விளங்கும்.'

'பரணி' என்றால் என்ன என்பதும் முகவுரையில் விளக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் இதுவும் ஒன்று. போர் முனையில் ஆயிரம் யானைகளை வென்ற வீரன் மீது கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு முதலிய உறுப்புக்களை அமைத்து, அவனுடைய பலவகைச் சிறப்புக்களையும் பல முகமாகப்

புறப்பொருளமைதி தோன்ற ஆங்காங்கு விளக்கிக் கலித் தாழிசையால் பாடப்படுவது என்பர். பெரும் போர் புரிந்து வெற்றி பெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும் பரணி என்று கூறுவர்.

பரணி, அரசர் முதலியோர் மீது செய்யப்படுவதன்றித் தெய்வங்கள் மீதும் தமது ஆசிரியர் மேலும் அறிஞர்களால் இயற்றப்படுவதும் உண்டு.

சிவபெருமானது வீரச் செயல்களைப் புலப்படுத்தும் சில தாழிசைகளின் தொகுதி பரணியென்னும் பெயருடன் பல தலங்களில் திருவந்திக்காப்புக் காலத்தில் உரியவர்களால் தொன்று தொட்டு ஓதப்படுவதுண்டு.

பரணி என்னும் பெயர் வரக் காரணம் பலவாறாகக் கூறப்படினும் காளியையும், எமனையும் தன் தெய்வமாகப் பெற்ற பரணி என்னும் நட்சத்திரத்தால் வந்த பெயரென்பதே பொருத்தமுடையதாகத் தோன்றுவதாகக் கூறும் உ. வே. சா., பரணிகளில் காளியின் சிறப்பும் பகைவருடைய உயிர் நீக்கமும் கூறப்படுவதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதர பிரபந்தங்களைப் போலப் பாட்டுடைத் தலைவர் பெயருடன் வழங்காமல் தோல்வியுற்றோருடைய பெயருடன் இணைந்தே பரணி என்னும் பிரபந்தம் வழங்கப் படும்.

ஒட்டக்கூத்தருடைய இயற்பெயர் கூத்தர் என்பது. தன் மீது இவர் செய்த உலாவிலுள்ள ஒரு கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் இயற்றும்படி விக்கிரமச் சோழன் சொல்ல, அவ்வாறே விரைந்து பாடியதால் இவர் ஒட்டக் கூத்தர் என்று பெயர் பெற்றார் என்று கூறுவர். இப்பெயர் ஏற்பட்டதற்கு வேறு காரணங்களும் கூறப்படுகின்றன.

விக்ரிரமச் சோழன் இவருக்கு யானை, காளம் முதலிய வரிசைகளை அளிக்க, இவர், 'இவ்விருதுகளைப் பெறுவதற்கு யான் உரியேனல்லேன்' என்று பணிவுடன் கூறினாராம். காளம் என்னும் விருது பெற்றதனால் ஒட்டக்கூத்தர், காளக் கவி என்றும் வழங்கப் பெற்றார்.

இராசராசன் உலாவைப் பாடி அரங்கேற்றியபோது, அவ்வரசன் ஒவ்வொரு கண்ணிக்கும் புலவருக்கு ஆயிரம் பொன் பரிசளித்தான்.

இம்மூவரில் ஓரரசன் இவர் மீது பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு, அரிசிலாற்றங்கரையில் ஓர் அழகிய கிராமத்தை அளித்தான். அதுவே தற்போது தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் பூந்தோட்டம் ரயில் நிலையத்தினருகில் உள்ள கூந்தனூர் ஆகும்.

'மலரிவருங்கூத்தன்' என்பதால், இவர் பிறந்த ஊர் மலரி என்று அறியப்படுகிறது. அது, திருச்சி மாவட்டத்திலுள்ள திருவெறும்பூரிலிருந்து கல்லணைக்குச் செல்லும் வழியில் இருப்பதாகவும், அதன் அருகிலேயே கூத்தனூர் என்ற ஒரு கிராமம் இருப்பதாகவும் அறிகிறேன். மலரியில் அப்பெரும் புலவரது நினைவுச் சின்னமாக ஏதாவது அமைந்துள்ளதா என்பதைப் பற்றி விவரம் தெரிந்தவர்கள் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

கும்பகோணத்தில், மகாமகக் குளத்திற்குச் சற்று வடக்கே அமைந்துள்ள ஸ்ரீ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் வீர ஸைவ(பெரிய) மடத்துக்கு எதிரில் ஒரு கோயில் இருக்கிறது. அதன் முகப்பில் 'வீரபத்திரபரணி' என்ற ஒரு போர்டு போடப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலில் ஒட்டக்கூத்தரின் அழகிய சிலை ஒன்றும் இருக்கிறது. மூலவர் வீரபத்திர சுவாமி.

கன்னட தேசத்தில் சைவமும் வீரமும் தீவிரமும் கொண்டதாக இருந்ததால் அது வீர சைவ மதமாகப்

பரவியது. அம் மதத்தைத் தழுவியவர்கள், வீர சைவர்கள். அவர்களுடைய முழுமுதற் கடவுள் வீரபத்திரர். எனவே தான் கும்பகோணத்திலுள்ள வீர சைவ மடமான ஸ்ரீசாரங்கதேசிகேந்திர தேவர் மடத்திற்கு எதிரில், வீரபத்திர் சுவாமி கோயில் கட்டப்பட்டுள்ளது.

ஒட்டக்கூத்தர் வீரசைவ மதத்தில் ஈடுபாடு கொண்டவராக இருந்திருக்க வேண்டும். அவர் தக்கயாகப்பரணியில் வீரபத்திரரின் வீரத்தை வெகுவாகப் புகழ்ந்து பாடியதோடு, ஞானசம்பந்தர் கதையைக் கூறும்போது, அவர் முருகனது அவதாரம் என்று கூறியுள்ளார். இது கன்னடத்திலுள்ள பெரிய புராணத்தில்தான் காணப்படுகிறது. சேக்கிழார் பெரிய புராணத்தில் இப்படிக் கூறப்படவில்லை. அது மட்டுமல்ல; தக்கயாகப் பரணியில், ஒட்டக்கூத்தர் 'குடந்தையம் பதியிற் கோதிலாப் பெரியமடந்தனில் வாழ் வீரமாயேச்சுரர் வாழியே' என்கிறார். வீரமாயேச்சுரர் என்பது வீரசைவர். எனவே, புலவர் காலத்திலேயே குடந்தை பெரிய மடம் இருந்திருக்கிறது. வீரபத்திரக் கோயிலும் இருந்திருக்கலாம். அங்கு ஸ்ரீ வீரபத்திர சுவாமியை வழிபடுவது போல் ஒட்டக்கூத்தரின் சிலை வைக்கப்பட்டுள்ளது பொருத்தம்தானே.

சரித்திர ஆராய்ச்சியாளர்களும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களும் இலக்கிய ஆராய்ச்சியாளர்களும் இணைந்து, ஒட்டக்கூத்தரின் வாழ்க்கை வரலாறு பற்றி ஆதாரபூர்வமான ஒரு நூல் வெளியிடுவது தமிழுக்கும் தமிழகத்துக்கும் செய்யும் அரும்பெரும் தொண்டாக அமையும்.

ஸ்ரீ நாகேச்வர சுவாமி கோயில்

ஸ்ரீ பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் பெயரைக் கேட்டதும் அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கும்பகோணம் ஸ்ரீ நாகேச்வர சுவாமி கோயில்தான்.

இடிந்து, பாழடைந்து போயிருந்த அதன் கோபரத்தைக் கண்டு மனம் வெதும்பி, உண்டியல் ஏந்தி, தெருத்தெருவாக அலைந்து பணம் சேர்த்துத் திருப்பணிகள் செய்து 1929-ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடத்தி வைத்த பெருமையும் புண்ணியமும் சுவாமிகளையே சாரும். அந்த பாக்கியம் தமக்குக் கிட்டியதால் தம்மை 'ஸ்ரீ நாகநாத சுவாமியின் ஊழியன்' என்று அழைத்துக் கொண்டார் அவர்.

கும்பகோணம் நகருக்கு நடுவில், ஸ்ரீ கும்பேச்வர சுவாமி கோயிலுக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ள ஸ்ரீ நாகேச்வர சுவாமி கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. ராஜகோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டது. கோயிலின் உட்புறம் சற்றுத் தாழ்வான பகுதியில் அமைந்திருக்கிறது இரண்டு பிராகாரங்கள் உடையது.

கோபுர வாயிலைக் கடந்ததும், இடப்புறம் சிங்க தீர்த்தமும் பூந்தோட்டமும், வலப்புறம் தெற்கு நோக்கிய அம்மன் சந்நிதியும் தேவஸ்தான அலுவலகமும் உள்ளன. பெரியநாயகி அம்பிகையின் சந்நிதியில் சப்த மாதாக்கள் இருக்கின்றனர். 7 தேங்காய், 7 பழங்கள் வைத்து 7 வாரங்கள் பூஜித்தால் பெண்களுக்குத் திருமணம் ஆகிறதாம். உள் வாயிலின் இருபுறமும் விநாயகரும் சுப்பிரமணியரும் உள்ளனர். அந்த வாயிலைக் கடந்து சென்றால், இரண்டாம் பிராகாரத்தில் பஞ்சநதீச்வரரும் காளிதேவியும் திருச்சந்நிதி கொண்டுள்ளனர். காளிதேவிக்கு நேரே நடராஜ மண்டபம். அதனுள் காளியை நோக்கியவாறு, பெரிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தியின் வடிவம் இருக்கிறது. அம் மண்டபம், ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகளின் நன்முயற்சியால் தோன்றிய விவரமும் வெளிச் சுவரில் குறிக்கப் பெற்றுள்ளது...

கலியுகாதி, அட்சய வருஷம், புரட்டாசி மாதம் தஞ்சாவூர் ஜில்லா பாடகச்சேரி ஸ்ரீலஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் வேண்டுகோளின்படி இராமநாதபுரம் ஜில்லா ஷண்முக

நாதபுரம் சிவ மதம் நாட்டுக்கோட்டை செட்டி ஜாதி மெ. மெ. மெய்யப்ப செட்டியார் முத்து கருப்பி ஆச்சி கனிஷ்ட குமாரர் ராமசாமி செட்டியார் செய்து வைத்த உபயம் 18—9—1926.

இந்த மண்டபத்திற்கு நேர் வடக்கே, ஸ்ரீ நடராஜர் பேரம்பலம் இருக்கிறது. வேறு எந்தக் கோயிலிலும் காண முடியாத புதுமையான நடராஜர் சந்நிதி இது. உயர்ந்த மேடையில் அமைக்கப்பட்டுள்ளது. பெரிய தேர் போல் உருவம் கொண்ட மண்டபத்தின் இரு புறங்களிலும் பெரிய கல் சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. முன்புறம் இரண்டு குதிரைகளும், பாகர்களுடன் கூடிய யானைகளும் பெரிய சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. ஆனந்தத் தாண்டவ மூர்த்தியின் திருநடனத்தைக் காண இந்திராதி தேவர்கள் இங்கு வந்ததாக ஐதீகம்.

கருவறையில் பெரிய உருவில் ஸ்ரீ நடராஜர் ஆனந்தத் தாண்டவம் புரிகிறார். அம்பாள் தாளம் போடுகிறாள்; வேணுகோபாலர் புல்லாங்குழல் வாசிக்கிறார். அங்கு ஒரு ஸ்படிக லிங்கம் உள்ளது. ஐந்து பித்தளைப் படிகள் ஏறிக் கருவறைக்குள் செல்லவேண்டும். இந்த மண்டபத்தினுள் உச்சிஷ்ட கணபதி எழுந்தருளியிருக்கிறார்.

நாகராஜனாகிய ஆதிசேஷன் வழிபட்டதால் நாகேச்வரம் என்றும், சூரியன் வழிபட்டதால் பாஸ்கர க்ஷேத்திரம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. சிங்க தீர்த்தத்திற்கு, நாக தீர்த்தம், அச்வத் தீர்த்தம் என்ற பெயர்களும் உண்டு. திருவாதிரையன்று இத் தீர்த்தத்தில் நீராடினால் வேண்டிய சித்திகளைப் பெறலாம்.

அம்மன் சந்நிதிக்கு நேரே தெற்குக் கோபுர வாசல் உள்ளது. சூரியன் வழிபட்டு தன் பெயரால் அமைந்த சூரிய புட்கரணி தெற்குக் கோபுர வாயிலுக்கு எதிரில் உள்ளது.

இரண்டாம் பிராகாரத்தின் தென்புறம் ஜோதிலிங்க சந்நிதி உள்ளது. உள் பிராகாரமாகிய முதற் சுற்றில் முன்புறம் மாரியம்மன் சந்நிதியும், தென்புறம் பிரளயகால ருத்திரர் சந்நிதியும் தட்சிணாமூர்த்தி சந்நிதியும் உள்ளன. தென்மேற்கில் சித்தி விநாயகர் இருக்கிறார். மேற்கே ஐயனார், முருகன், கஜலட்சுமி சந்நிதிகள் இருக்கின்றன. கஜலட்சுமிக்குச் சுதை வடிவம், கல்வடிவம் இரண்டு இருக்கின்றன.

ஓர் அதிசயம். கிழக்கு ராஜகோபுரம் பழுதடைந்து காட்சியளிக்க, மேற்குக் கோபுரம் நன்றாக இருக்கிறது. ஆனால், இந்தக் கோபுரவாசல் உபயோகத்தில் இல்லை. பூட்டியே வைத்திருக்கிறார்கள். சுற்றிலும் புதர் மண்டிக் கிடக்கிறது. (பின்னர், திருப்பணி நடந்துள்ளது)

ஸ்ரீநாகேச்வர சுவாமி கோயில் ஸ்ரீ கும்பேச்வர சுவாமி கோயிலுக்குக் கீழ்ப்புறம் உள்ளதால் இது 'கீழ்க் கோட்டம்' என்று அழைக்கப்படுகிறது. பிரளய காலத்தில் அமுத கும்பம் தங்கிய இடம் கும்பேச்வரம் அந்தக் கும்பத்திலிருந்து வில்வம் விழுந்த இடத்தில் பெருமான் தோன்றியதால் ஸ்ரீ நாகேச்வரத்திற்கு வில்வ வனம் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

கும்பத்தின் உறி தங்கிய இடம் ஸ்ரீ சோமேச்வரர் கோயில் என்றும், தேங்காய் தங்கிய இடம் அபிமுகேச்வரர் கோயில் என்றும், பூணூல் தங்கிய இடம் கௌதமேச்வரர் கோயில் என்றும், பெருமான் பாணம் எய்த இடம் பாணபுரி என்றும் கும்பகோணத்தில் தனித் தனிக் கோயில்கள் உள்ளன. தேவாரப் பாடல்பெற்ற திருக்குடந்தைக் காரோணம் என்ற காசி விசுவநாதர் கோயில் மகாமகக் குளத்திற்கருகில் உள்ளது.

ஆயிரம் தலைகளுடைய ஆதிசேடன், பல ஆண்டு காலம் பூமியைத் தனது தலைகளால் தாங்கித் தாங்கிச்

சோர்வுற்றான். புது வலிமை பெறுவதற்காக, கைலாயம் சென்று சிவபெருமானைப் பிரார்த்தித்த போது பெருமான் நாகராஜனைப் பார்த்துப், எத்தனை காலமானாலும் நீ இவ்வுலகத்தை சோர்வின்றித் தாங்கும் ஆற்றல் பெறுமாறு அருள்கிறோம். பரதகண்டத்தில், சோழ நாட்டில், காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள வில்வ வனத்திற்கு வந்து, அங்குள்ள தீர்த்தத்தில் நீராடி எம்மை வழிபட்டால் உடல் வலிமை பெறுவாய் என்று ஆசி கூறினார்.

அவ்வாறே நாகராஜன் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு வந்து, இறுதியில் வில்வ வனம் சேர்ந்து சிவராத்திரியன்று அச்வத்த தீர்த்தத்தில் நீராடி, சிவபெருமானையும் பெரியநாயகியையும் வழிபட்டான். பெருமான், மூல லிங்கத்திலிருந்து பல பாம்புகளை ஆபரணமாக அணிந்து, பிறைச் சந்திரனுடனும் தேவியுடனும் வெளிப்பட்டு நாகராஜனுக்கு பூமியைத் தாங்கும் வலிமை தந்தருளினார்! அவன் வேண்டியபடியே, இத்தலமும் இங்குள்ள தீர்த்தமும் நாகராஜன் பெயரால் விளங்குபடி அருளினார்.

சூரிய பகவான் இங்கு வந்து வழிபட்ட புராணக் கதையும் சுவையானது...

விச்வகர்மாவின் புத்திரியான சஞ்சாதேவி சூரியனை மணந்து யமன் என்ற புத்திரனையும், காளத்தி என்ற பெண்ணையும் பெற்றாள். பின்னர் கணவனின் வெப்பத்தைத் தாங்க முடியாமல், தன் சாயையை ஒரு பெண்ணுருவாக்கி சூரியனின் பக்கத்தில் இருக்கச் செய்து, தனது குழந்தைகளையும் காப்பாற்றும்படி கூறிவிட்டு, தன் தந்தையாகிய விச்வகர்மாவிடம் சென்று விட்டாள் சஞ்சாதேவி.

தந்தைக்கும் மகளுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. எனவே சஞ்சாதேவி ஒரு பெண் குதிரை வடிவம் எடுத்துக்

கொண்டு, மந்திரமலைக்குச் சென்று தவம் செய்யத் தொடங்கினாள்.

சூரியனுக்கும் சாயாதேவிக்கும் சனி பிறந்தான். சஞ்சாதேவியின் மகனான யமனும் சாயாவின் மகனான சனியும் சண்டையிட்டுக் கொண்டனர். அவர்களிடையே சமரசம் செய்து வைத்துவிட்டு, சஞ்சாதேவியுடன் சாமாதானம் ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஆண் குதிரை வடிவம் கொண்டு மந்திர மலைக்குச் சென்றான் சூரியன். அதைக் கண்ட சஞ்சாதேவி அவ்விடத்தை விட்ட கன்று மீண்டும் தந்தையிடம் சென்றாள். அங்கும் பின் தொடர்ந்து சென்றான் சூரியன். விச்வகர்மாவுக்குக் கோபம் வந்து, சூரியனின் கதிர்களை இழக்கும்படி செய்தான். ஒளியை இழந்து வருந்தும் சூரியனின் செவிகளில் அசரீரி ஒன்று கேட்டது:

'ஆதித்தனே, ஆதிகும்பேச்வரர் உறையும் கும்பகோணத்திற்குச் சென்று ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி, அதில் நீராடி, நாகேச்வரரையும் பெரியநாயகியையும் வழிபட்டால் உனது துயர் நீங்கி அமைதியாக வாழ்வாய்.'

அவ்வாறே சூரியன் இத்தலம் வந்து தீர்த்தம் ஒன்று உண்டாக்கி, அதில் நீராடி, பெருமானையும், பெரியநாயகியையும் வழிபட்டு, இழந்த தன் கிரணங்களையும் ஒளியையும் திரும்பப் பெற்றான். நாகேச்வரம், பாஸ்கர க்ஷேத்திரம் என்றும், சூரியநாராயணன் கோயில் என்றும் பெயர்கள் பெற்றன. ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் 11, 12, 13-தேதிகளில், சூரியன் முன்பு வழிபட்டதற்கு அடையாளமாக, சூரிய ஒளி மூல லிங்கத்தின்மீது படுகிறது. இக்கோயிலில், மூல சந்நிதிக்கு வடகிழக்கில் சூரியனுக்குத் தனி சந்நிதி ஒன்று இருக்கிறது.

முதல் பிராகாரத்தின் வடமேற்கில், தல விருட்சமான வில்வ மரத்திற்கு அருகில், பகவர் சந்நிதியிருக்கிறது. அதற்கான புராணக் கதையொன்றும் கூறப்படுகிறது.

வேதாரண்யத்தில் சிவ பக்தரான அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். வேள்விகள் பல புரிந்தவர் அவர். நல்லொழுக்கமும், நற்பண்பும் நிறைந்தவர்.

அவரது அன்னை இயற்கை எய்தினாள். அவளுக்கு சாஸ்திர முறைப்படி சடங்குகளைச் செய்து கங்கையில் கரைப்பதற்காக எலும்புகளை ஒரு குடத்தில் நிரப்பி, ஒரு சிறுவனையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, பல தலங் களைத் தரிசித்துக் கொண்டு கும்பகோணம் வந்து சேர்ந்தார்.

அங்கு காவிரியில் நீராட இறங்கிய பகவர், குடத்தைப் பார்த்துக் கொள்ளும்படி சிறுவனிடம் கூறவே, அவன் குடத்துடன் கரையில் அமர்ந்திருந்தான். அவனுக்குப் பசியெடுக்கவே, தின்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க குடத்தின் மூடியைத் திறந்தான். உள்ளே எலும்புகள் இல்லை. தாமரை மலர்களே இருந்தன. உடனே மூடி விட்டான்.

பல கோயில்களைத் தரிசித்த பின்னர், பகவர் காசிக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு போய் குடத்தைத் திறந்தார். பழையபடி எலும்புகளே இருந்தன. சிறுவனுக்கு ஒரே ஆச்சரியம்! கும்பகோணத்தில் பார்த்தபோது குடத்தில் தாமரை மலர்களைக் கண்ட அதிசயத்தை பகவரிடம் கூறினான். அதைக் கேட்ட பகவர் காவிரியின் மகிமையை நினைத்து வியந்தார். எலும்புகளைக் கங்கையில் கரைக் காமல், மீண்டும் தென்னகம் நோக்கிப் புறப்பட்டார்.

கும்பகோணம் வந்து காவிரி கரையில் குடத்தை வைத்துத் திறந்து பார்த்தார். அதில் எலும்புகள் இல்லை. மாறாக, தாமரை மலர்கவே இருந்தன. பெருமகிழ்ச்சி கொண்ட பகவர், அத்தாமரைகளைக் காவிரியில் கரைத்தார்.

பின்னர், பல காலம் கும்பகோணத்திலேயே வாழ்ந்து, பெருமாளை வழிபட்டு நற்கதி பெற்றார். அவர் நிலைவாக அந்த இடத்தில் காவிரித்துறை, 'பகவத் படித்துறை' என்று அழைக்கப்படுகிறது.

ஸ்ரீ நாகேச்வர சுவாமி ஆலயத்தில் உள்ள பகவர் சந்நிதியில் இருக்கும் சிலை, ஜைன சிற்பம் போல் தோன்றுகிற்று. அவரை பகவர் முனிவர் என்கிறார்கள்.

இக்கோயிலில் மூல சந்நிதிக்கு வெளியே 'கங்கை விநாயகர்' இருக்கிறார். வடக்கே இருந்து பல்லவன் கொண்டு வந்த சிலை என கூறப்படுகிறது.

சூரியன் சந்நிதி மண்டபத்தின் தென்புறம் ஓர் அபூர்வ விநாயகர் இருக்கிறார். குடையுடன் நின்று கொண்டிருக்கும் அவர் திருநாமம் ஜுரஹர விநாயகர் என்பதாகும். நின்ற திருக்கோலத்தில் இருக்கிறார். கையில் கதை இருக்கிறது. தும்பிக்கையில் அமிர்தகலசம் இருக்கிறது. தீராத காய்ச்சல் உள்ளவர்கள் அவரிடம் வேண்டிக் கொண்டு நலம் பெறுகிறார்கள்.

ஸ்ரீ நாகேச்வர சுவாமி கருவறை விமானத்திலும், மண்டபத்தின் வெளிப்புறங்களிலும் மிக நேர்த்தியான சிற்பங்கள் இருக்கின்றன. விமானச் சுவர்களில் பல முனிவர்களின் வடிவங்கள் காணப்படுகின்றன. விமானத்தின் கிழக்குப்புறம் பெரிய அளவில், பார்வதியும் பரமசிவனும் வீற்றிருக்கின்றனர். இக்கோயிலில் உள்ள பிட்சாடனரும், அர்த்தநாரீச்வரரும் அருமையான சிற்பங்களாகும்.

பங்குனி மாதத்தில் பிரும்மோற்சவம் நடைபெறுகிறது. கேட்டை நட்சத்திரத்தில் தொடங்கி, உத்திரத்தன்று தீர்த்தவாரி. முதல் நாள் தேரோட்டம்.

தஞ்சை மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலிருந்து கிழக்குப் பகுதிக்குச் செல்வோம்.

ருத்ரகங்கை

பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து இரண்டு பர்லாங்கு தொலைவில், அரிசலாற்றுக்குத் தென்கரையில் 'ருத்ரகங்கை' என்ற திருத்தலம் உள்ளது. அம்பர் மாகாளம் போகும் வழியில் வீரவாடி என்ற இடத்தில் வலப்புறம் திரும்பினால் அரை கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது இத் திருத்தலம். பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான பிரமாண்ட புராணத்தில் இத்தலத்தின் மகிமைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு வில்வவனம் என்று பெயர். இமவானின் மகளான கௌரி, பரமேச்வரனைக் கணவனாக அடைய இந்த வனத்துக்கு வந்து தவமியற்றினாள். அதனால், இதற்குக் கௌரிவனம் என்ற பெயரும் உண்டு. தலவிருட்சம் வில்வம்.

பதஞ்சலி முனிவருக்குத் தில்லையம்பதியிலும் வியாக்கிர பாதருக்குத் திருவாரூரிலும் சிவபெருமானது அருள் கிட்டியது போல், ருத்ரகங்கையில் பாஸ்கர முனிவருக்குப் பெருமானின் பேரருள் கிட்டியதாகப் புராண வரலாறு.

தாரகாசுரனால் தேவர்கள் அல்லலுற்றபோது, பிரம்ம தேவனை அணுகிப் பரிகாரம் தேடினர். பரமசிவனுக்கும் பார்வதிக்கும் பிறக்கப் போகும் குமரக் கடவுளால் தாரகாசுரனுக்கு அழிவு ஏற்படும் என்று அவர் கூறவே, தேவர்கள் பரமசிவனைத் தஞ்சமடைந்தனர்.

தேவர்களின் துயர் துடைக்க குமரக் கடவுள் அவதரிக்கும் பொருட்டும், பார்வதிக்கு அளித்த வாக்கை நிறைவேற்றவும், அவளைத் திருமணம் புரியத் திருவுளம் கொண்டார் பரமேச்வரன். இமவானிடம் பெண் கேட்டுச்

செல்லும் போது, அவன் தம்மீது சந்தேகப்படாமல் இருக்கும் பொருட்டு, தன் சடைமுடி மீது அமர்ந்திருக்கும் கங்கையை மறைத்து வைப்பது நல்லது என்றும் தீர்மானித்தார். அதன்படி அவளை ஓர் அந்தண வடிவம் தாங்கி, பாஸ்கர முனிவர் தவமியற்றிக் கொண்டிருக்கும் வில்வ வனம் சென்று, தான் தலயாத்திரை சென்றுவரப் போவதாகவும், அதுவரை தன் இல்லாளைப் பாதுகாத்து வரும்படியும் கோரி, அவரிடம் கங்கையை விட்டுச் சென்றார். பாஸ்கரரும் அந்த அந்தணச் சுமங்கலியைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தார்.

ஒரு நாள் இவர் அரிசலாற்றுக்கு நீராடச் சென்ற போது, மறதியால் கடத்தைக் கொண்டு வராததை உணர்ந்து, அதை எடுத்து வரும்படி அப்பெண்மணியை ஆச்ரமத்துக்கு அனுப்பினார். அவ்வாறே அவள் ஆச்ரமத்துக்குச் சென்று கடத்தை எடுத்து வந்து முனிவரிடம் தந்துவிட்டு, அவர் பார்க்காத சமயத்தில் ஆற்றில் இறங்கி, மாயமாக மறைந்து விட்டாள். அந்தண மாது மறைந்ததைக் கண்டு திடுக்கிட்டு, தானும் நீரில் மூழ்கித் தேடினார். ஆனால் அப்பெண்மணியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பெரும் துயருற்றர்; செய்வதறியாது திகைத்தார்; செயலிழந்து போனார்; ''அந்தணர் வந்து என் மனைவி எங்கே?'' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? பரமேச்வரா, இப்படியொரு சோதனையா?''

இதற்கிடையில் பார்வதி-பரமேச்வரன் திருக்கல்யாணம் இமவானின் அரண்மனையில் கோலாகலமாக நடந்தேறியது. அதன் தொடர்பாகக் குமரக் கடவுள் தோன்றி, தாரகாசுரனை அழித்த பின்னர், பரமசிவன் பாஸ்கர முனிவருக்கு அருள் வழங்கவும், மாற்று வடிவிலிருக்கும் கங்கையை அழைத்துச் செல்லவும் மீண்டும் அந்தணர் வடிவமேற்று வில்வாரண்யம் வந்தார்.

அந்தணரைக் கண்டதும் பாஸ்கர முனிவர் அச்சத்தால் நடுநடுங்கிப் போனார், அவரது பாதுகாப்பில் விட்டுச் சென்ற மனைவியை அழைத்துச் செல்ல வந்திருப்பதாக அந்தணர் கூறியபோது, என்ன கூறுவது என்று புரியாமல், உடலெல்லாம் வியர்க்க, வாயடைத்து நின்றார். அந்தணர் சீற்றம் கொண்டார். மனைவியை உடனே தம்மிடம் ஒப்படைக்காவிடில், அரசனிடம் கூறப் போவதாகவும், மரண தண்டனை பெற்றுத் தரப் போவதாகவும், தானும் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும் பலவாறாக அச்சுறுத்தினார். பாவம் பாஸ்கரர்! அப்பெண்மணி செய்து கொண்ட தற்கொலைக்குத் தான் பழியேற்க வேண்டி யிருக்கும் நிலைமை ஏற்பட்டதைக் குறித்து மிக மிக வருந்தி, ஈச்வரனிடம் சரணடைந்து. இந்த ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினார்.

இனிமேலும் அவரைச் சோதனைக்குள்ளாக்க விரும்பாத ஈச்வரன், சுய உருப்பெற்று, பார்வதி தேவியுடனும் கந்தப் பெருமானுடனும் பாஸ்கர முனிவருக்குக் காட்சி தந்தருளி ஆட்கொண்டார். ஆற்றில் மறைந்த பெண்மணி சடைமுடியில் வீற்றிருக்கும் கங்கா தேவியே என்று உண்மையைக் கூறி முனிவரைச் சமாதானப் படுத்தினார். பின்னர் பாஸ்கரரின் வேண்டுகோளின்படி வில்வாரண்யத்தில் நிலையாய்த் தங்கி விடத் திருவுளம் கொண்டார். அன்று முதல் இத்திருத்தலம் 'ருத்ரகங்கை' என்ற பெயர் பெற்றது. இங்கு உறையும் சிவபெருமான் ஆபத்சகாயேச்வரர் என்றும், பரிமளேச்வரர் என்றும் திருநாமங்கள் பெற்றார். இறைவியின் பெயர் பரிமள நாயகி. நறுமண மலர்களையும் வாசம் மிகு திரவியங் களையும் கொண்டு சிவலிங்கத்தைப் பார்வதி தேவி பூஜை செய்ததால், இறைவனுக்குப் பரிமளேச்வரர் என்றும் இறைவிக்குப் பரிமளநாயகி என்றும் காரணப் பெயர்கள் ஏற்பட்டன.

இத்தலத்தில், காவிரியான அரிசலாறு மிகப் புனிதம் பெற்றுள்ளது. பிறரைப் புனிதப்படுத்தும் கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் இதில் கலந்து ஓடுகின்றன.

ருத்ரகங்கையில், மூன்று இரவுகள் தங்கி, அரிசலாற்றில் நீராடி, அம்மையப்பனை வழிபடுபவர்கள் சகல பாவங்களும் தொலைந்து உன்னத நிலையடைவார்கள் என்று தல புராணம் கூறுகிறது.

இக்கோயிலில் ஸ்ரீசோமாஸ்கந்தர் கல் திருமேனியுடன் மூல மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். சிரசில் கங்கை இருக்கிறாள்.

உள் மண்டபத்தில் பாஸ்கர முனிவரின் சிலை இருக்கிறது. விநாயகர் 'ஜுர கணபதி' என்று அழைக்கப்படுகிறார். கும்பகோணம் ஸ்ரீநாசேச்வர சுவாமி கோயிலிலும் ஒரு 'ஜுரஹர விநாயகர்' இருப்பதை முன்னரே கண்டோம். காய்ச்சல் நோய் தீர, அவருக்குச் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் செய்கிறார்கள்.

சண்டிகேச்வரர் சந்நிதிக்கு எதிரில், துர்க்கை கோஷ்டத்தில், அமர்ந்த நிலையில் சிறிய காளியுருவம் ஒன்றுள்ளது. கபாலம், சூலம், பாசாங்குசம் முதலியன இருக்கின்றன. மகிஷம் இல்லை.

பரிமளநாயகி அம்மன் சிலை, பெரியதாக, அழகாக இருக்கிறது. வேறு சில சிவலிங்கங்களும், பரிவார தேவதைகளும் இருக்கின்றன.

உள்ளடங்கி, அமைதியான சூழ்நிலையில் அருளொளி வழங்கிக் கொண்டிருக்கும் ருத்ரகங்கை கோயிலில் குடமுழுக்கு நடைபெற்று முப்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. ஸ்ரீ ஆபத்சகாயர் யாருடைய உள்ளத்தில் புகுந்து திருப்பணிகளையும் குடமுழுக்கையும் நிறைவேற்றிக் கொள்ளப் போகிறாரோ?

கொத்தவாசல்

ருத்ரகங்கைக்குத் தெற்கே ஒரு கிலோ மீட்டரில் கொத்தவாசல் சிவன் கோயில் பரிதாப நிலையில் உள்ளது. விமானங்களில் செடிகள் முளைத்து, கட்டடங்கள் பிளந்து போயிருக்கின்றன. கோஷ்டங்களில் சிலைகள் இல்லை. அவை, உள் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன. பெருமாள் கோயிலிலிருந்த ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் சிலை இங்குள்ளது. ஸ்ரீ பார்வதியுடன் ஸ்ரீ தான்தோன்றீச்வரர் எழுந்தருளியுள்ள அந்த ஆலயத்தில் ஓர் அழகான விநாயகர் இருக்கிறார். அவரது திருவுருவம் மனத்தை விட்டு அகலவேயில்லை.

ஸ்ரீ பரத்வாஜ மகரிஷி தவம் செய்வதற்காக ஓர் அமைதியான இடத்தைத் தேடி அலைந்து விட்டு, அதனால் அசதியும் களைப்பும் ஏற்பட்டு ருத்ரகங்கை திருத்தலத்தில் தங்குகிறார். அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீ ஆபத்சகாயேச்வரரைத் தரிசித்து விட்டு, சந்நிதிக்கு முன்பு படுத்து இளைப்பாறினார். உடல் அசதியின் காரணமாக ஆழ்ந்த உறக்கம். கனவில் பகவான் தோன்றி னார்: ''பரத்வாஜ முனிவரே, தங்கள் மனத்திலிருப்பதை நான் அறிவேன். தவமியற்றத் தகுந்ததோர் இடம் கிடைக்கவில்லையே என்று தாங்கள் வருந்த வேண்டாம். இங்கிருந்து சற்றுத் தெற்கே (இரண்டு கிலோ மீட்டர் தொலைவில்) ஒரு திருத்தலம் இருக்கிறது. அங்கு சென்று உங்கள் தவத்தைத் தொடங்குங்கள். சில காலம் கழித்து, மகாவிஷ்ணு ராவண வதத்துக்காகப் பூலோகத்தில் ஸ்ரீ ராமனாக அவதரிக்கப் போகிறார். ராவண வதம் முடிந்ததும் ஸ்ரீ ராமன் இலங்கையிலிருந்து திரும்பும் போது அங்கு வருவார். அப்போது நீங்கள் அவரைத் தரிசித்து,

வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு மறைந்தார். கண் விழித்த பரத்வாஜர் புளகிதத்தால் பூரித்துப் போனார்.

பகவான் கூறிய இடத்துக்கு வந்த ஸ்ரீ பரத்வாஜர், அங்கு ஓர் அழகிய புஷ்கரணி இருக்கக் கண்டு, அதன் கரையில் ஓர் ஆச்ரமம் அமைத்துக் கொண்டு தவமியற்றத் தொடங்கினார். அந்த இடத்துக்கு 'பரத்வாஜ ஆச்ரமம்' என்ற பெயர் ஏற்பட்டது.

ராவணன் முதலிய ராட்சதர்களை அழித்து, இலங்கைக்கு அதிபதியாக விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து, அக்னி தேவனால் பரிசுத்தமானவள் என்று நன்சான்றிதழ் அளிக்கப்பட்ட சீதையுடன் புஷ்பக விமானத்தில் அமர்ந்து, இலக்குவனோடும் வானர சைன்யங்களோடும் பரத்வாஜ ஆச்ரமத்தை அடைந்தார் ஸ்ரீ ராமன். ருத்ரகங்கையில் ஸ்ரீ கங்காதரன் கனவில் கூறியவாறே, தர்மாத்மாவான ஸ்ரீ ராமனைத் தரிசித்ததும் ஆனந்தக் கண்ணீரில் மிதந்தார் பரத்வாஜர். அவரையும் பரிவாரங்களையும் அமுதுண்ண அழைத்தார். அதற்குத் தசரத குமாரன், ''முனிவரே, நான் ஸ்ரீ ரங்கநாதரைப் பூஜிக்காமல் உணவருந்த மாட்டேன். இப்பதினான்கு ஆண்டுகளும் காடுகளில் பல வேர்களையும் காய்கனிகளையுமே சாப்பிட்டு வந்தேன். அந்த ஸ்ரீ ரங்கநாதர் அயோத்தியில் இருக்கிறார். அந்த விக்ரகம் பிரும்மதேவர் இட்சுவாகுவுக்குத் தந்ததாகும். இறுதியாக அது என் தந்தை தசரதரிடம் வந்து சேர்ந்தது'' என்று அதன் வரலாற்றையும் கூறினார்.

ஸ்ரீ ராமர் உணவருந்த வேண்டுமென்றால், ஸ்ரீ ரங்கநாதர் விக்ரகம் அயோத்தியிலிருந்து வந்தாக வேண்டும். ஸ்ரீ பரத்வாஜ முனிவர் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராய்த் தமது தவ வலிமையைப் பயன்படுத்தி ஸ்ரீ ரங்கநாதரைத் தமது ஆச்ரமத்துக்கு வரவழைத்தார். பின்னர், முறைப்படி விருந்தோம்பல் பணிகளைச் செய்து முடித்து, ஸ்ரீ ராம

னுக்குத் தாம் விரும்பியவாறு விருந்து படைத்து உளம் மகிழ்ந்தார். பின்னர், ஸ்ரீ ரங்கநாதருடன் அங்கேயே வெகு காலம் வசித்தருள வேண்டும் என்று ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியிடம் பரத்வாஜர் பிரார்த்திக்க, சக்கரவர்த்தித் திருமகனார், தமது பதினாறு கலைகளில் ஓர் அம்சத்தோடு சீதா, லட்சுமணர், அனுமார் முதலியோருடன் அங்கே எழுந்தருளினார்.

இந்த பரத்வாஜ ஆச்ரமம்தான் பின்னர் 'முடிகொண்டான்' என்று பெயர் பெற்றது. அருகிலுள்ள திருவம்பர் மாகாளத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மகாகாளேச்வரராலேயே மகுடாதாரணம் செய்யப்பட்ட சோழ வம்சத்து அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மகுடதரன் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. அதாவது, 'முடிகொண்டான்' அந்த அரசன் தன் பெயரால் வழங்கும்படி நிர்மாணித்த ஊர்தான் முடிகொண்டான் என்றழைக்கப்பட்டது. மகுடதாரணபுரம் என்று வடமொழியில் அழைக்கப்படுகிறது.

பதினெட்டுப் புராணங்களில் மிகவும் புகழ் வாய்ந்த பிருமாண்ட புராணத்தில் இத்தலத்தைப் பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. பிருமாண்ட புராணத்தில் ருத்ரகங்கை க்ஷேத்திர மகிமையில் 13-வது அத்தியாயத்திலுள்ளது பரத்வாஜ க்ஷேத்திர மகிமை.

முடிகொண்டான்

தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் மயிலாடுதுறை திருவாரூர் பஸ் பாதையில், மயிலாடுதுறையிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது முடிகொண்டான். மயிலாடுதுறை-காரைக்குடி ரயில் பாதையில் உள்ளது.

நெடுஞ்சாலையிலுள்ள முடிகொண்டான் பஸ் நிலையத்தில் இறங்கி, சற்றுக் கிழக்கு நோக்கிச் சென்றால், நான்கு புறங்களிலும் சீரான படிக்கட்டுகளுடனும் அமைந்துள்ள மிக அழகான குளம் ஒன்றிருக்கிறது. அதன் கரையில் ஸ்ரீ பரத்வாஜரின் ஆச்ரமம் இருந்த இடத்தில் தற்போது ஓர் ஆஞ்சநேயமூர்த்தி ஜெயமாருதியாக எழுந்தருளியிருக்கிறார். தீக்குளிக்கத் தயாராயிருந்த பரதனிடம், ஸ்ரீ ராமர் அயோத்தி திரும்பும் நற்செய்தியை 'ஐயன் வந்தனன், ஆரியன் வந்தனன்' என்று கூறிவிட்டு வெற்றியுடன் திரும்பிய அவரைத் தரிசித்து, அவர் அனுமதி பெற்று எதிரிலுள்ள ஸ்ரீ கோதண்டராமர் கோயிலுக்குள் செல்கிறோம்.

கோபுரத்துடன் கூடிய அழகிய திருக்கோயில். பிராகாரங்களெல்லாம், சிமெண்ட் தரையுடன் சுத்தமாக இருக்கின்றன. மலர்த் தோட்டம் தனியாக உள்ளது. 1968-இல் திருப்பணிகள் தொடங்கி, இரண்டாண்டுகளில் அவை முடிவு பெற்று 6—9—1970-இல் குடமுழுக்கு நடந்தேறியிருக்கிறது.

ஸ்ரீ கோதண்டராமர் சந்நிதி கிழக்கு நோக்கி, நேர்த்தியான மூன்று தள விமானத்துடனும், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சோபன மண்டபம் முதலியவற்றுடன் அமைந்திருக்கிறது. கருவறையினுள் 'ஆடவரும் பெண்மைய அவாவும்' திருமேனியழகுடன், இடக் கையில் கோதண்டம் ஊன்றி, வலக் கையில் கணையேந்தி, எழிலோவியமாய், இல்லாளுடனும் இளவலுடனும் ஒய்யாரக் கோலத்துடன் சேவை சாதிக்கிறான் தசரத ராமன். தஞ்சைத் தரணியில் வடுவூர், தில்லைவிளாகம், அதம்பார் போன்ற தலங்களில் திருக்கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ கோதண்டராம வடிவங்களின் வரிசையில் சேர்ந்து முடிகொண்டான் ஸ்ரீ ராமனும் கம்பீரமாக நிற்கிறான். சிலை வடிப்போரெல்லாம் வியப்புடன் கண்டு வியந்து பாராட்டும் வடிவழகு அது.

மூல மூர்த்திகளான ஸ்ரீராமன், சீதை, இலக்குவனோடு, ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி இல்லை. அக்குறையை ஈடு செய்வது போன்று, உற்சவ மூர்த்திகளில் நாம் சொல்லின் செல்வனைக் கண்டு சிந்தை குளிர்கிறோம்.

சந்நிதிக்கு வெளியே இருபுறங்களிலும் கணபதியும் நாகராஜனும் வீற்றிருக்கின்றனர். மகா மண்டபத்தில் திருமங்கையாழ்வார், உடையவர், நம்மாழ்வார், விஷ்வக் சேனர் முதலியவர்களைத் தரிசித்துக் கொள்கிறோம். பிராகாரத்தை வலம் வந்து தெற்கு நோக்கியுள்ள ஸ்ரீரங்க நாதர் சந்நிதிக்கு வருகிறோம் 'குட திசை முடியை வைத்து, குண திசை பாதம் நீட்டி, வட திசை பின்பு காட்டி, தென் திசை இலங்கை நோக்கியபடி' ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்டு, ஸ்ரீதேவியும் பூதேவியும் பாத சேவை செய்ய, நாபிக்கமலத்தினின்றும் தோன்றிய பிரும்மாவுடன் காட்சியளிக்கிறார் ஸ்ரீரங்க நாதர். அவரை அங்கு எழுந்தருளச் செய்த பரத்வாஜ முனிவர், எம்பிரானின் திருவடிகளில் கைகூப்பி நின்றபடி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறார். திருச்சந்நிதியிலுள்ள உற்சவமூர்த்தியான ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீரங்கநாதரையும் தரிசித்துக் கொண்டு அங்கிருந்து புறப்படுகிறோம்.

அந்தக் காலத்தில் ஸ்ரீ வேங்கடாசலபதியைத் தரிசிக்க வேண்டுமானால் அடர்ந்த காடுகளின் வழியே நடந்து, ஏழு மலைகளைக் கடந்து செல்லவேண்டும். அப்போதெல் லாம் இந்த யாத்திரை அத்தனை எளிதானதாக இருக்க வில்லை. எனவே, ஏழுமலையான், பக்தர்களின் மீது பெருங்கருணை கொண்டு, அவர்கள் இருக்கும் இடம் தேடி வந்து சேவை சாதிக்கத் தொடங்கினான். அவ்வகையில் பல ஊர்களிலும் கிராமங்களிலும் ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் ஸ்ரீ வேங்கடாசலபதி திருக்கோயில் கொண்டு அருள் பாலிக்கிறார்.

முடிகொண்டான் கிராமத்தில் உள்ள ஸ்ரீ வேங்கடாசலபதி, மிகவும் வரப்ரசாதியாக விளங்குகிறார். கிராமத்தினர் தங்கள் இல்லங்களில் நற்காரியங்கள் நடைபெறுவதற்கு முன், ஸ்ரீவேங்கடாசலபதிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, உண்டியல் காணிக்கைகள் செலுத்திவிட்டு அவர் அனுக்ரகத்தைப் பெற்றுக் கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவரிடம் பிரார்த்தனை செய்து கொண்டால் எடுத்த காரியம் தடங்கலின்றி நிறைவேறும் என்ற நம்பிக்கை பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. மேற்குப் பார்த்த இக்கோயிலில், மூலவர் ஸ்ரீ லட்சுமி நாராயணர், ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வேங்கடாசலபதி, உற்சவமூர்த்தியாய் எழுந்தருளியுள்ளார்

காவடி எடுத்து அபிஷேகம் செய்வது இப்பெருமாள் கோயிலின் தனிச் சிறப்பு. வைகானஸ ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதிக்கப்பட்டு வரும் இக்கோயிலில் ஏகாதசி, சிராவணம், மாதப் பிறப்பு முதலிய பஞ்சபர்வ உற்சவங்களும், ஸ்ரீஜயந்தி, நவராத்திரி, ஸ்ரீ ராதா கல்யாண மகோற்சவங்களும் சிறந்த முறையில் நடைபெறுகின்றன.

கிராமத்தின் தென்புறத்தில் சக்தி வாய்ந்த செல்வ விநாயகர் கோயிலும், மூலாலயம் என்று அழைக்கப்படும் ஸ்ரீ அபிராமி அம்மன் சமேத ஸ்ரீ சுந்தரேச்வர சுவாமி ஆலயமும் உள்ளன. இதுவும் மேற்குப் பார்த்த சந்நிதி தான். நித்தியப்படி பூஜைகளும் இதர உற்சவங்களும் நடக்கின்றன. கிராம மக்கள் நவராத்திரி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு சாப்பாட்டுக்கும் நீராடுவதற்கும் அனுட்டானங்கள் செய்வதற்கும் தீர்த்தத்துக்கு இந்த ஊரில் எப்போதுமே குறைவில்லை. அதனால்தான் 'முடிகொண்டான் சாதமும், மூலக்குளத்துத் தீர்த்தமும்' என்ற பழமொழி சிறப்படைந்துள்ளது.

ஸ்ரீ செல்வவிநாயகர் கோயிலுக்கும் ஸ்ரீ சுந்தரேச்வர சுவாமி கோயிலுக்கும் இடையே 'மூலக் குளம்' என்ற பெரிய குளம் இருக்கிறது. அதன் கரையில் அரசும் வேம்பும் விளங்க, கீழே நாகப்பிரதிஷ்டைகள் காணப்படுகின்றன.

கிராமத்தின் வடமேற்குப் பகுதியில் மற்றொரு சிவன் கோயில் இருக்கிறது. அங்கு ஸ்ரீ காசி விச்வநாத சுவாமி மேற்கு முகமாகவும், ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் தெற்கு முகமாகவும் திருச்சந்நிதி கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ சோமாஸ்கந்தர், விநாயகர், நவக்கிரகங்கள், கஜலட்சுமி, ஆறுமுகர், துர்க்கையம்மன், சூரியன், பைரவர், சனீச்வரர், சண்டிகேச்வரர் முதலிய தேவதைகள் தங்கள் தங்கள் ஸ்தானங்களில் முறைப்படி எழுந்தருளியுள்ளனர்.

ஆறுமுகருக்கு, ஒரே ஒரு முகத்தோடு கூடிய உற்சவ மூர்த்தி இருக்கிறார்.

பிரதோஷம், கிருத்திகை, சோமவாரம், நடராஜாவுக்கு ஆறு அபிஷேகங்கள், நவராத்திரி உற்சவம் முதலியன கிராம மக்களின் ஒத்துழைப்போடு நல்ல முறையில் நடந்து வருகின்றன.

முடிகொண்டானில் மொத்தம் எட்டு சிவன் கோயில்கள் இருந்தனவாம். தற்போது இரண்டுதான் இருக்கின்றன. ஆனால், ஆறு இடங்களில் சிவலிங்கங்கள் மட்டும் இருப்பதாக கிருஷ்ணமூர்த்தி குருக்கள் கூறினார்.

கிழக்கே ஸ்ரீ மாரியம்மன் கோயில் இருக்கிறது. அம்மனுக்குப் பங்குனி மாதம் வெள்ளிக்கிழமை தொடங்கிப் பத்து நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது. எட்டாவது நாளான வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் தீமிதி உற்சவம் சுற்று வட்டாரங்களில் புகழ்பெற்றதாகும். ஏராளமான பேர் பிரார்த்தனை செய்து கொண்டு நியம நிட்டைகளோடு விரதம் இருந்து தீ மிதிப்பார்கள்,

முடிகொண்டான் காளித் திருவிழா தஞ்சை மாவட்டத்தில் புகழ்பெற்ற ஒன்றாகும். இருபத்திரண்டு நாட்களுக்கு முன்னதாகப் பிடாரிக்குக் காப்புக் கட்டி அதை விஸர்ஜனம் செய்து, ஏழு பிடாரிகளுக்குள் முதன்மையான பெரிய பிடாரிக்குக் காப்புக் கட்டி, அதை மூன்றே முக்கால் நாழிகைக்குள் விஸர்ஜனம் செய்து, மூலக்குளத்தங்கரையில் பிடாரிக்கு அபிஷேகம், அலங் காரங்கள் செய்வித்து, வீதி வலம் வந்து அந்த அந்தக் கோயிலை அடைந்து காப்புக் கட்டுவார்கள். இதற்குப் 'பிடாரி மஞ்சள் குளிப்பது' என்று பெயர். அச்சமயம் பெரிய பிடாரிக்குப் பிரார்த்தனைகள் செலுத்துவார்கள்.

மறுநாள் காலை, ஆறு பிடாரிகளும் ஒரு வீரன் சிலையும் வைத்து அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஏழு தேர்கள் வீதிவலம் வந்து கோயிலுக்கு வந்து சேரும். அப்போது வீடுகளில், தேங்காய்கள் உடைத்து, பானகம், தேங்காய் பழங்களுடன் தீபாராதனை செய்வார்கள். அன்று இரவும் மறுநாள் இரவும் நாடகங்கள் நடைபெறும்.

கவசம் போல் இருக்கும் மரத்தினாலான காளி உருவை வெள்ளிக்கிழமை காலை ஆறு மணிக்கு, கீழ்த் தெருவிலுள்ள காளியம்மன் மடம் என்னும் இடத்தில் அலங்காரம் செய்து வைத்திருப்பார்கள். ஏழு மணி சுமாருக்கு அவ்விடமிருந்து வாத்திய முழக்கங்களுடன் மாரியம்மன் கோயிலுக்கு வடபுறம் அமைந்திருக்கும் படுகளக்குழி என்னும் இடத் துக்கு வந்து பலியைப் பெற்றுக் கொண்டு, 'இரண்டாயிரம் பிள்ளையார்' கோயிலில் வணக்கம் செலுத்தி விட்டு ஒவ்வொரு வீட்டு வாசலினும் போய் நின்று தீபாராதனை மரியாதைகளைப் பெற்றுக் கொள்ளும். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கோலமிட்டு, பந்துமித்திரர்கள் கூடிக் குதூகல மாகக் கொண்டாடுவார்கள். தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தி மகிழ்வார்கள்.

முடிகொண்டானில் 'ஸ்ரீராமா அருள்நெறி மன்றம்' நற்பணியாற்றிக் கொண்டிருப்பதைக் குறிப்பிட்டேயாக

வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதம் பத்துப் பதினைந்து தினங்கள், ஸ்ரீ வேங்கடாசலபதி சந்நிதியில் சமயச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்கின்றனர். வைகுண்ட ஏகாதசி அன்று ஸ்ரீ கோதண்டராமர் சந்நிதியில் அகண்ட விஷ்ணு சகஸ்ர நாம பாராயணத்தை நடத்தி வருகிறார்கள். இவை மட்டுமின்றி, இம்மன்றம் பொதுவாக ஆத்திகப் பிரசாரமும், திருவிழாக்களின் போது அன்னதான கைங்கரியமும் செய்து வருகிறது.

கிராமப்புறங்களில் ஏற்பட்டு வரும் பொருளாதார வளர்ச்சியின் பலன் மக்களை அடைந்து அவர்கள் வளமுடனும் மன அமைதியுடனும் வாழ வேண்டுமானல், அங்குள்ள கோயில்கள் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும்; மக்களின் ஆன்மீக, சமநெறிகளைக் கட்டிக் காக்கும். இம்மாதிரி மன்றங்களும் அமைப்புக்களும் பல்கிப் பெருக வேண்டும்.

தென்குடி மாரியம்மன்

தஞ்சை மாவட்டத்தில் பல சிவ, வைணவ திருத் தலங்கள் புகழடைந்துள்ளது போன்றே, ஆங்காங்கே மாரியம்மன் கோயில்களும் புகழ்பெற்று விளங்குகின்றன. சிறு கிராமங்களில் கோயில் கொண்டிருக்கும் மாரியம்மனின் திருவிழாக்கள் சுற்றுவட்டாரத்தில் பிரபலமடைந்திருக் கின்றன. உற்சவங்களின் போது பக்தர்கள் பெருங்கூட்ட மாகக் கூடுகிறார்கள். அம்மனைக் குல தெய்வமாகக் கொண்டிருப்பவர்கள், வெளியூர்களிலிருந்து வந்து கலந்து கொள்கிறார்கள். இன்றும் கூட, சடங்குகளும் சம்பிரதாயங் களும் முறை பிசகாமல் பல இடங்களில் தீமிதி உற்சவங்கள் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். இத்தகைய சக்தி வாய்ந்த மாரியம்மன்களில், முடிகொண்டானிலிருந்து

மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தென்குடி மாரி யம்மனும் ஒன்றாகும்.

திருவாரூர் ஸ்ரீ தியாகேசப்பெருமான், கமலாலயத் திருக்குளத்தின் கரையில் ருத்ரபாதத்தில் காட்சி தரும் பொருட்டுத் தமது தேவ கணங்களோடு புறப்பட்டு வந்தார். அம்பாள், தனது துணைவிகளான மாகாளி, மாமாரி, சாமுண்டி. பிடாரி, பைரவி, ஆங்காளி முதலிய படைகளுடனும் காத்தான், கருப்பன், தூண்டிக்காத்தான் முதலிய சேனைத் தலைவர்களுடனும் வந்து, பெருமா னுடன் காட்சியருளினாள். பின்னர், இருவரும் கைலாயம் திரும்புகையில் மாரியம்மன், புற்றிடங்கொண்ட பெரு மானை நோக்கிப் புன்னகைத்தாள். குறிப்பறிந்து கொண்ட பரமேச்வரன், "அம்மையே, தாங்கள் திருக்கண்டீச்வரம் என்னும் திருத்தலத்துக்கு ஈசானிய பாகத்தில் ஓடும் திருமலைராஜன் நதிக்குத் தென்பால் தங்கி எம்மைக் குறித்துத் தவம் இயற்றுங்கள்; தங்களை அருள்பாலிக் கிறோம்" எனக் கூறியருளினார். அதன்படி மகாமாரி காத்தான், கருப்பன், தூண்டிக்காத்தான், சின்னான், லாட சந்நியாசி முதலியவர்களுடன் திருமலைராஜன் ஆற்றின் தென்புறம், கற்பகத்தரு நிகர்த்த தெங்கில் சோலை சூழ்ந்த ஆலமர நிழலில் புற்று வடிவாய்த் தோன்றி, பின்னர் திருவுருக்காட்டி எழுந்தருளினாள்.

அம்மன் தங்கிய குடி, தங்கு குடியாகி, தென்குடி என்று மருவியிருக்கிறது. வழக்கமாகக் காணும் கோயில் போன்ற தோற்றமில்லை. கோபுரங்களோ, மண்டபங் களோ இல்லை. சத்திரம் போன்றதொரு கட்டடம்.

பேராவூர் மாரியம்மனைப் போன்றே, தென்குடி மாரி யம்மனுக்கும் காமாட்சியம்மன் என்றே பெயர் வழங்கு கிறது. மேற்கே பார்த்த திருச்சந்நிதி. நான்கு திருக்கரங் களுடன் அமர்ந்த திருக்கோலத்தில் அம்மன் காட்சி

தருகிறாள். கரங்களில் பாசாங்குசமும் கபாலமும் கத்தியும் இருக்கின்றன.

வெள்ளி, செவ்வாய் நாட்களில் அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது. பங்குனி உத்தரம் கழிந்த வெள்ளியன்று உற்சவம் தொடங்குகிறது. அதற்கு அடுத்த வெள்ளியன்று தீமிதி நடைபெறும். ஒன்பதாம் நாள், பரிவாரத் தேவதைகளுக்குப் பூஜை வைபவங்கள் நடைபெறுகின்றன. ஞாயிறன்று மஞ்சள்நீர் விளையாட்டு. அதற்கு அடுத்த வெள்ளிக்கிழமை விடையாற்றி உற்சவம். ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ காத்தவராய சுவாமி வீதி வலம் வந்து கும்ப பூஜை நடத்தி யதாஸ்தானம் அடைகிறார்கள்.

முதல் நாள் கொடியேறுகிறது. இரண்டாம் நாள் அம்மன் புறப்பாடு. மூன்றாம் நாள் முத்து விமானக் காட்சி. நான்காம் நாள் ரிஷப வாகனக் காட்சி. ஐந்தாம் நாள் சப்பரக் காட்சி. ஆறாம் நாள் அன்ன வாகனக் காட்சி. ஏழாம் நாள் சிம்ம வாகனக் காட்சி. ஒவ்வொரு திருநாளுக்கும் தனிப்பட்டவர்களாகவோ அல்லது சேர்ந்தோ உபயம் செய்கிறார்கள்.

தென்குடி மாரியம்மனுக்கு, வெளியூர் பக்தர்கள் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் அவ்வப்போது வந்து தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்துவதோடு, மகோற்சவத்தின்போது பெருமளவில் கலந்து கொள்கிறார்கள்.

கருப்பண்ணன், காத்தவராயன், விநாயகர் முதலியவர்கள் மூலஸ்தானத்தின் அருகிலேயே இருக்கிறார்கள். இங்கு காத்தவராயனுக்குச் சில தனிச் சிறப்புகள் இருக்கின்றன.

திருமலைராஜன் ஆற்றுக்கு வடகரையில், செருவளூர் வட்டம் மேலத் தெருவில் மேற்குப் பார்த்தவாறு காத்தவராயசுவாமி எழுந்தருளியுள்ளார். உற்சவத்தின் போது

எட்டாம் நாள் தென்குடி காத்தவராயன் விமானத்தில் அங்கு சென்று, அந்தக் காத்தவராயனை அழைத்து வருகிறார். அவர் முன்னால் வர, இவர் பின்னால் வருவார்.

அப்போது சப்பரக் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும். நாற்பது ஐம்பது பேர் அதைச் சுமந்து வருவார்கள். கோயிலுக்கு எதிரிலேயே தீமிதிக் களம் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு அம்மன் வீற்றிருப்பாள். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் முதலில் தீ மிதித்த பிறகு, காத்தவராயன் சப்பரத்தைச் சுமப்பவர்கள் அத்தனை பேரும் சப்பரத்துடனேயே தீமிதிப்பார்கள். அன்று காலை மகா அபிஷேகமும், பகலில் காவடிப் பிரார்த்தனைகளும் நடைபெறும்.

திருக்கொண்டீச்வரம்

அடுத்து, நாங்கள் முடிகொண்டானிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருக்கண்டீச்வரம் என்ற தலத்துக்குச் சென்றோம். முடிகொண்டானிலிருந்து சன்னாநல்லூர் கூட்டு ரோடு இரண்டு கிலோ மீட்டர். அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் திருக்கண்டீச்வரம். அங்கிருந்து நன்னிலம் ஒரு கிலோ மீட்டரில் இருக்கிறது. எதிரில் தூத்துக்குடி அக்ரஹாரம்.

முடிகொண்டான் நதியை ஒரு மூங்கில் பாலத்தின் மூலம் கடந்து திருக்கண்டீச்வரம் சென்றோம். அங்கு ஸ்ரீ பசுபதீச்வரர், ஸ்ரீ சாந்தநாயகி திருக்கோயில் கொண்டுள்ளனர். பழமையான கோயில். கருங்கல் திருப்பணி. ஆனால், தற்போது திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ளது. கும்பாபிஷேகம் நடைபெற்று இருபத்திரண்டு ஆண்டுகள் ஆகின்றன!

திருக்கண்டீச்வரம் என்ற திருக்கொண்டீச்வரம் புராண காலத்தில் வில்வாரண்ய க்ஷேத்திரத்தைச் சேர்ந்த பகுதியாகும்.

அம்பாள் பசுவாகப் பிறக்கும்படி சிவபெருமானால் சபிக்கப்பட்டு, பின்னர் முறைப்படி கணவரை வழிபட்டு மீண்டும் அவரை அடைந்த கதை ஏற்கெனவே நமக்குத் தெரிந்ததுதான். ஆனால், தேரழுந்தூரிலும் கோமலிலும் திருக்கொளம்பியத்திலும் திருவாவடுதுறையிலும் கூறப் படும் அப்புராணக் கதையிலிருந்து, திருக்கொண்டீச் வரத்தில் வழங்கி வரும் தலபுராணம் சற்று மாறுபட்டிருக் கிறது. அங்கு சிவபெருமான் மகாவிஷ்ணுவுடன் சொக்கட்டான் விளையாடித் தோற்றபோது பார்வதி கேலியாகச் சிரித்ததற்காகக் கோபம் கொண்ட கணவர், மனைவியைப் புவியில் பசுவாகப் பிறந்து, அல்லற்பட்டு இறுதியில் தம்மை வந்து சேரும்படி பணித்தார். ஆனால், திருக்கொண்டீச்வரத்தில் அம்பாள் அந்த சாபம் பெற்ற கதையே வேறு.

ஒரு சமயம் கயிலாயத்தில் சிவபெருமானுக்கும் பார்வதிக்குமிடையே, ஆணுக்கு இச்சை அதிகமா, பெண்ணுக்கு இச்சை அதிகமாக என்பதைப் பற்றி ஒரு சர்ச்சை ஏற்பட்டது. அப்போது, பார்வதியைச் சோதிப் பதற்காக சிவபெருமான், ஓர் அழகிய ரத்தின வியாபாரி யாகப் தேவியின் முன் தோன்றி, ரத்தினக் கம்பளத்தை விரித்து ரத்தினக் கற்களை அதில் கொட்டினார். ஆனால், பார்வதியின் கவனம் ஒளி வீசும் கற்களின் மீது செல்லாமல், வசிகரமான ரத்தின வியாபாரியின் மீது சென்றது. வைத்த கண் வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'உடல் பூராவும் சாம்பலைப் பூசிக்கொண்டு, நல்ல பாம்புகளை மாலையாக அணிந்து சுடலையில் திரியும் தன் கணவனைக் காட்டிலும் இவன் எத்தனை அழாகாக இருக்கிறான்' என்று ஒரு கணம் எண்ணிக் கொண்டாள்.

அந்தக் கணமே அவள் தலையில் இரண்டு கொம்புகள் முளைத்தன. அந்த மாற்றம் ஏன் ஏற்பட்டது என்று பார்வதி ஒரு கணம் நினைத்துப் பார்த்துக் கொண்ட உடனேயே, தான் செய்த பாவம் அம்பாளுக்குப் புரிந்து விட்டது. ரத்தின வியாபாரியாக வந்திருப்பது தன் கணவனான சாட்சாத் சிவபெருமானே என்பது விளங்கி விட்டது. உடனே வருத்தமுற்று மன்னிப்புக் கேட்டாள். அதற்கு சிவபெருமான், 'நீ பசுவாக மாறியது மாறியது தான். நீ பூலோகத்துக்குப் போய் அலைந்து திரிந்து, நான் இருக்கும் இடம் தேடி வந்து, உன் பாலால் எனக்கு அபிஷேகம் செய்த பிறகு என் சாபத்திலிருந்து விமோசனம் பெற்று என்னை வந்தடைவாய்' என்று அருளினார்.

பூலோகத்தில் வந்து அலைந்து திரிந்த பசுவான அம்பாளுக்கு, சிவபெருமான் இருக்குமிடம் கண்ணுக்குத் தெரியவில்லை. உயிரை மாய்த்துக் கொள்வதற்காகக் கடலுக்குச் சென்றாள். ஆனால், கடல் வற்றி விட்டிருந்தது!

சகோதரியின் நிலைகண்டு கலங்கிய மகாவிஷ்ணு, மேலும் பத்து பசுக்களைப் படைத்து அப்பகுதிகளில் மேய்த்து வந்தார். அக்கூட்டத்தில், பசு வடிவிலிருந்த அம்பாளும் சேர்ந்து கொண்டாள். வில்வாரண்யத்திலிருந்த ஒரு குட்டையில் இறங்கித் தன் இரு கொம்புகளால் தரையில் குத்தினாள். அப்போது குட்டையின் அடியில் லிங்க வடிவிலிருந்த சிவபெருமான் மேலே வந்தார். அப்போது தன் பாலை அவர் மீது சுரந்து அபிஷேகம் செய்து, சாப விமோசனம் பெற்றாள். அம்பாள் விமோசனம் பெற்றது கார்த்திகை மாதத்தில். அம்மாதம் குருவாரம் எமகண்டத்தில் சுவாமி புறப்பாடாகும்.

'கொண்டி' என்றால் துஷ்ட மாடு. அதனால் இந்தத் தலத்துக்குக் கொண்டீச்சரம் என்று பெயர் ஏற்பட்டது. 'கொண்டி'யின் கூரான கொம்புகளால் குத்தப்பட்டதால்

சிவலிங்கம் பிளவுபட்டிருக்கிறது. திருக்குறுந்தொகையிலும் திருநேரிசையிலும் 'திருக்கொண்டீச்சுவரன்' என்றும் 'திருக் கொண்டீச்சுரத் துளானே' என்றும் கூறப்பட்டுள்ளது.

தல விருட்சம் வில்வ மரம்தான். ஆனால், தற்போது அங்கு வில்வ மரம் இல்லை. அங்குள்ள வன்னிமரம் நவக் கிரக பூஜைக்குப் பயன்படுகிறது.

மூலவரான பசுபதீச்வரர், சுயம்புலிங்கம். சிறிய லிங்கம். தலைப் பகுதியில் பசுவின் கொம்பால் ஏற்படுத்தப் பட்ட பிளவு காணப்படுகிறது.

ஆலயத்துக்குத் தெற்கே ரத்த புஷ்கரணியும், வடக்கே க்ஷீர புஷ்கரணியும் உள்ளன.

பசுவின் கொம்பால் குத்தியபோது பெருகிய ரத்தம் ஆறாக ஓடியதால், இவ்விடத்துக்கு ரத்த புஷ்கரணி என்ற பெயரும், பசு பாலபிஷேகம் செய்ததால் க்ஷீர புஷ்கரணி என்ற பெயரும் ஏற்பட்டன.

கோயில் முன் மண்டபத்திலுள்ள தூண்களில், அழகிய சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு தூணில் மேல் பகுதியில் ஜுரஹரேச்வரரும், கீழே சாஸ்தாவும் இடம் பெற்றுள்ளனர். மற்றொரு தூணில் கண்ணப்ப நாயனாரின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. வேறொரு தூணில் பசு வடிவிலிருக்கும் அம்பாள், சிவலிங்கத்துக்குப் பாலபிஷேகம் செய்து ஆராதிக்கும் சிற்ப வடிவம் காணப் படுகிறது.

முன் மண்டபத்தின் தென்புறம் கிழக்கு நோக்கி ஆபத் சகாயர் ரிஷியின் சிறிய சிலை இருக்கிறது. எந்த ஆபத்து வந்தாலும் அவரிடம் பிரார்த்தித்துக்கொண்டால் உடனே நிவர்த்தியாகி விடும்.

கோஷ்டத்தில் விஷ்ணு துர்க்கை எழுந்தருளியிருக் கிறாள். இதர கோஷ்ட தேவதைகளோடு பைரவர்,

சூரியன், நவக்கிரகங்கள், தனியாக சனிபகவான் முதலியோரும் இருக்கின்றனர். ஸ்ரீ நடராஜ சந்நிதி விமானத்தில் ஒரு கலசத்தைக் காணவில்லை.

எதிரிலுள்ள தூக்துகுடி அக்ரகாரத்தில் குழலூதி மாடுகள் மேய்த்த ஸ்ரீ வேணுகோபாலகிருஷ்ணனின் கோயிலும், ஸ்ரீ பிரும்மபுரீச்வரர் - அகிலாண்டேச்வரி கோயிலும் இருக்கின்றன. ஸ்ரீ சித்தி விநாயகரும் அங்கு எழுந்தருளியுள்ளார்.

திருவிற்குடி

திருக்கயிலாய மலையில் சிவபெருமான் பார்வதி தேவியோடு வீற்றிருந்த நேரம். தேவேந்திரன், தானே பெரியவன் என்ற இறுமாப்புடன் சிவபெருமானைத் தரிசிக்கக் கயிலை நோக்கி வந்து கொண்டிருக்கிறான். இந்திரனது கர்வத்தை அடக்கும் எண்ணத்தோடு சிவபெருமான் துவாரபாலகன் வேடம் தாங்கி வெளியே நிற்கிறார். வேகமாக வந்த இந்திரன், ''ஈசனை இப்போது தரிசிக்க முடியுமா?'' என்று இறுமாப்புடன் கேட்கிறான்.

சிவபெருமான் அதற்குப் பதில் கூறாமல் மௌனமாக நின்றார். தனக்கு ஒரு சாதாரண காவற்காரன் பதில் சொல்லாமல் நிற்பதா என்று இந்திரனுக்குக் கோபம் வந்து விட்டது. வஜ்ராயுதத்தால் துவாரபாலகனைத் தாக்கினான். பலன், வஜ்ராயுதம் தூள் தூளாயிற்று. உடனே சிவபெருமான் சுய உருக்கொண்டு கோபமே வடிவாக இந்திரனின் எதிரில் நின்றார். உண்மையை அறிந்த தேவேந்திரன், தன் பிழையைப் பொறுத்தருளும்படி பரமனிடம் வேண்டினான். பெருமானும் கருணை

கொண்டு, அவனுக்குப் படையும் விடையும் கொடுத்தனுப்பினார். தனது கோபக் கனலை எடுத்துக் கடலில் எறிந்து விட்டுத் தம் இருப்பிடம் ஏகினார்.

கடலில் விழுந்த கனல், வலிமை பெற்ற ஒரு குழந்தையாகத் தோன்றியது. வருணன் அக்குழந்தையை எடுத்து வளர்த்து வந்தான். ஒரு சமயம் தன்னிடம் பிரமன் வந்த போது, வருணன் அக்குழந்தையை எடுத்துப் பிரமனிடம் கொடுத்தான். பிரமன் குழந்தையை மடிமீது வைத்துக் கொண்டபோது, அக்குழந்தை பிரமனின் தாடியைப் பிடித்து இழுத்தது. வலி பொறுக்காத பிரமன் கண் கலங்கிக் கண்ணீர் சிந்த, அத் துளி குழந்தையின் மீது பட்டது. அக்குழந்தைக்கு ஜலந்தரன் என்று பிரமன் பெயரிட்டுச் சென்றார். கடல்நீரால் தாங்கப் பெற்றதாலும் பிரமனின் கண்ணீரைத் தன் மீது தரித்ததாலும் ஜலந்தரன் என்ற பெயர் மிக்க பொருத்தமாக அமைந்தது.

பிரமனிடமிருந்து நிறைய வரங்கள் பெற்றிருந்த ஜலந்தரன், பூமியில் வந்து அரக்கர்களோடு சேர்ந்து திக்விஜயம் செய்து பெரும் வெற்றிகள் பெற்றான். அவுணகம்மியனை அழைத்துத் தனக்கு ஏற்றதொரு பெருநகரை அமைத்துக் கொண்டான். அதற்கு ஜலந்திரபுரம் என்று பெயரிட்டான். காலநேமி என்ற அவுணனின் மகள் பிருந்தையை மணந்து இன்புற்று வாழ்ந்து வந்தான். வலிமையும் செல்வாக்கும் சேர்ந்து கொண்டால் செருக்கு வந்துதானே ஆகவேண்டும்! தேவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான் ஜலந்தரன். பெரும்பாலானவர்கள் கயிலை மலையில் தஞ்சம் புகுந்திருப்பதை ஒற்றர் படை மூலம் அறிந்த ஜலந்தரன், போர் முரசு கொட்டிக் கொண்டு கயிலை மலையை நோக்கிப் படையெடுத்தான்.

இந்திரன் முதலான தேவர்கள் ஜலந்தரனின் வருகையைக் குறித்து சிவபெருமானை எச்சரித்தார்கள். 'அஞ்சேல்' என்று அபயம் அளித்தார் பெருமான். மறுபடியும் ஒரு

திருவிளையாடல். அந்தண முதியவர் போல வேடம் தாங்கி ஜலந்தரனிடம் பேச்சுக் கொடுத்தார் பரமேச்வரன். கயிலையை நோக்கித் தான் சொல்லும் பணியைக் கூறி ''என்னைத் தடுக்காதே'' என்றான் ஜலந்தரன். ''நீ கயிலை செல்லும் முன் நான் சொல்லும் ஒரு சிறு காரியத்தை நீ செய்வாயா?'' என்று அந்தணர் உருவி லிருந்த சிவபெருமான் கேட்டார். அவரை அலட்சியமாகப் பார்த்துவிட்டு, ''எதையும் செய்து முடிக்கும் பேராற்றல் பெற்றவன் நான்'' என்று மமதையோடு பதிலளித்தான் ஜலந்தரன்.

உடனே அந்த முதியவர், தன் வலக்கால் கட்டை விரலால் மண்ணில் ஒரு வட்டமிட்டு, ''நீ இவ்விடத்தைப் பெயர்த்து உன் தலை மேல் தாங்கு'' என்று கூறினார். ஜலந்தரன் அலட்சியமாகச் சிரித்துவிட்டு அச்சிறு வட்டத்தை எடுக்க முயன்றான். ஆனால், அவனால் அது முடியவில்லை. பின்னர், மிகவும் பிரயாசைப்பட்டு அதைப் பெயர்த்துத் தன் தலை மீது வைத்துக் கொண்டான். உடனே அந்தச் சக்கரம், அவனை இரு கூறாய்ப் பிளந்து விட்டு ஜோதி வடிவமாக இறைவனின் திருக்கரத்தில் போய்த் தங்கியது.

ஜலந்தரனை சிவபெருமான் சக்கரத்தால் பிளந்த இடம் திருவிற்குடி. பகவான் வீரச்செயல் புரிந்த எட்டு வீரட்டானத் தலங்களில் இதுவும் ஒன்று.

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் பேருந்துப் பாதையில், சன்னாநல்லூர் கூட்டுரோடு சுமார் முப்பது கிலோ மீட்டர். அங்கிருந்து வலப்பக்கம் உள்ள திருவாரூர் செல்லும் பாதையில் திரும்பினால் கங்களாஞ் சேரி எட்டு கிலோ மீட்டர். அங்கிருந்து கிழக்கே செல்லும் நாகூர் பாதையில் திரும்பி இரண்டு கிலோ மீட்டர் வடக்கே சென்று விளப்பாறு பாலத்தைக் கடந்தால் விற்குடி திருத்தலத்தை அடையலாம்.

திருவாரூர் புகைவண்டி நிலையத்துக்கு வடக்கே ஐந்து மைலில் விற்குடி ரயில் நிலையம் இருக்கிறது. அங்கிருந்து கிழக்கு நோக்கி நாகூர் செல்லும் பாதையில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவு சென்றால் விற்குடி வீரட்டா னேச்வரர் ஆலயத்தை அடையலாம்.

இந்த ஆறுகளுக்கிடையே அமைந்துள்ள நிலப் பகுதிக்குத் திட்டை என்று பெயர். தெற்கே விளப்பாறுக் கும் வடக்கே பில்லாலி ஆறுக்கும் இடையே அமைந்துள்ள விற்குடிக்குத் திட்டை என்ற பெயரும் உண்டு. 'கோ' என்பது சேர்ந்து கோத்திட்டை ஆயிற்று. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர்' என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் 'கோத் திட்டைக்குடி வீரட்டானம்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

இயற்கையெழில் கொழிக்கும் சூழலில் அமைந்திருக்கும் இந்த அமைதியான கிராமத்தின் நடுவே மேற்கு நோக்கி ஸ்ரீ வீரட்டானேச்வரர் திருக்கோயில் கொண்டுள்ளார். எட்டு வீரட்டானத் தலங்களில் திருவழுவூர், திருவதிகை தவிர, இதர ஆறு திருத்தலங்களில் கோயில்கள் மேற்கு நோக்கியே அமைந்துள்ளன.

ஆலயத்துக்கு எதிரே சங்கு தீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. சுற்றிலும் கருங்கல் சுவர்களுடனும் அழகான படித்துறைகளுடனும் விளங்கும் இக்குளத்தின் தென் கிழக்குக் கரையில், ஸ்ரீ சுந்தர விநாயகர் எழுந்தருளி யிருக்கிறார். அவரைச் செல்வ விநாயகர் என்றும் அழைக் கிறார்கள்.

இக்கோயிலுக்கு மேற்குப்புறம் மட்டும் கோபுரம் இருக் கிறது. ஐந்து நிலைகளுடன் கூடிய அழகிய கோபுரம். பள்ளத்தூர் சொ. மு. அ. மெய்யப்ப செட்டியார் குடும்பத்

தினர் 1917-ல் திருப்பணிகள் தொடங்கி, 1931-ல் குட முழுக்கு செய்ததற்குப் பின்னர், திருப்பணிகள் நடைபெற்ற தாகத் தெரியவில்லை. அருமையான கருங்கல் மண்டபங் களும், சிற்ப வேலைப்பாடுகளும் அமைந்திருக்கும் கோயில், பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது. கோபுரத் தில் பல சுதை வடிவங்கள் சிதிலமடைந்துள்ளன. அதே போல சுவாமி, அம்பாள் விமானங்களிலுள்ள சுதை பிம்பங் களில் பல, கால வெள்ளத்தில் கரைந்து போயிருக்கின்றன.

கோபுர வாயிலைக் கடந்து சென்றதும் இடப்புறம் ஸ்ரீ மகாலட்சுமி, ஸ்ரீ சுப்ரமணியர் சந்நிதிகள் இருக்கின்றன. அருணகிரியாரின் திருப்புகழ் பெற்ற கந்தப் பெருமான் அவர்.

'வெட்கிடப் பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லைத்துசிறை வைத்து முத்தர்புகழ்
விற்குடிப் பதியி லிச்சை யுற்றுமகிழ்
தம்பிரானே!'

என்று அந்தத் திருப்புகழ் முடிகிறது...

கோபுர வாயிலுக்கு வடப்புறம் ஸ்ரீ சோமாஸ்கந்த ருக்கும் கிழக்கு நோக்கிய தனித் தனிச் சந்நிதிகள் இருக் கின்றன.

முன் மண்பத்தின் வடக்கே தென்புறம் நோக்கியவாறு ஏலவார்குழல் அம்மையின் திருச்சந்நிதியும், எதிரில் அதற் கான நந்தியும் பலிபீடமும் இருக்கின்றன. சற்றுக் கிழக்கே ஸ்ரீ வீரட்டானேச்வரரின் சந்நிதியை நோக்கியவாறு கொடி மரம், நந்தி, பலிபீடங்கள் இருக்கின்றன. அவற்றையடுத்து மூன்றடி உயரத்தில் மகா மண்டபம் இருக்கிறது.

ஏலம் என்பது பெண்கள் கூந்தலுக்கு அணியும் மயிர்ச் சாந்து எனப் பொருள்படும். ஏலவார்குழலி என்றால், மயிர்ச்சாந்து அணிந்த நீண்ட கூந்தலை உடையவள் என்று பொருள். பரிமளநாயகி என்றும் அழைப்பதுண்டு.

அம்மன் கோயிலை அடுத்து வடக்கே பள்ளியறையும், வாகன மேடையும் இருக்கின்றன. பள்ளியறை அழகாக உள்ளது. உற்சவ புறப்பாடுகள் இல்லாததால், அழகான வாகனங்கள் ஒட்டடையால் கட்டிப் போடப்பட்டிருக்கின்றன!

வடக்குக் கோடியில் தெற்கு நோக்கி பைரவருக்குத் தனிச் சந்நிதியிருக்கிறது. தவிர, சனீச்வரரும் பைரவரும் நவக்கிரகங்களும் சந்திரனும் உள்ளனர். தென்கிழக்கு மூலையில் ஞானதீர்த்தம் என்ற கிணறு இருக்கிறது. இதற்கு மேற்புறத்தில் வடக்கு நோக்கிய பிடாரியின் திருவுருவமும், கிழக்கு நோக்கிய மாரியம்மனின் திருவுருவமும் அமைந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். சற்று மேற்கே வந்தால், மண்டபத் தூண் ஒன்றில் தென்புறம் ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியின் திருவுருவம் காணப்படுகிறது. சனிக்கிழமைகளில் அவருக்கு வடைமாலைகள் அணிவிக்கப் படுகின்றன. பிரார்த்தனாமூர்த்தியாக வழிபடுபவர்கள் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்துகிறார்கள். தெற்குப் பிராகாரத்தின் மேற்குக் கோடியில் வடக்கு நோக்கி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார் முதலியவர்களின் சிலைகள் இருக்கின்றன. ஸ்ரீ தட்சிணாமூர்த்தியின் சிலை தனிச் சிற்ப மண்டபத்தில் அழகுற அமைந்திருக்கிறது. பின்புறமுள்ள மகாவிஷ்ணு சாம்பல் பூத்து வெளிறிப் போயிருக்கிறார், பாவம்!

அர்த்த மண்டபத்தையொட்டி மகாமண்டபத்தின் இரு பக்கங்களிலும் துவாரபாலகர்கள் நின்று கொண்டிருக்க, வாயிலின் வலப்புறத்தில் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்ரமணியரும், இடப்புறத்தில் கணபதியும் காட்சிதருகின்றனர். இவருக்கு அனுக்ஞை விநாயகர் என்று பெயர். கோயிலில் விழாக்கள் நடைபெறும் போது இப்பெருமானிடம் முதலில் அனுமதி பெற்று நிகழ்ச்சிகளைத் தொடங்குவது வழக்கமாக இருந்து வருகிறது.

மூலவரின் திருநாமம் ஸ்ரீ வீரட்டானேசுவரர். வீரச் செயல்புரிந்த இடம் வீரத்தானம். அதுவே, வீரட்டானம் ஆகியிருக்கலாம். வீரட்டானம், வீரட்டம் என்று சுருக்கமாக மருவியிருக்கலாம். சலந்தராரி, வீரட்டேச்வரர் என்ற பெயர்களும் வழங்கப் பெறுகின்றன.

சிவபெருமான் திருக்கண்டியூரில் பிரமனின் தலையொன்றைக் கொய்தார். திருக்கோவலூரில் அந்தகாசுரனை அழித்தார். திருவதிகையில் திரிபுர அசுரர்களின் கோட்டைகளைத் தகர்த்தார். திருப்பறியலூரில் தக்கனுக்குத் தண்டனை அளித்தார். திருவழுவூரில் யானை உருக்கொண்ட அசுரனை வென்றார். திருக்குறுக்கையில் காமனையெரித்தார். திருக்கடவூரில் காலனையே வெற்றி கண்டார். திருவிற்குடியில் ஜலந்தராசுரனை வதைத்தார்.

அட்ட வீரட்ட தலங்களைப் பற்றிய இப்பாடல் புகழ் பெற்றது.

பூமன் சிரம்கண்டி, அந்தகன் கோவல்,
புரம்அதிகை மாமன்பறியல்,
சலந்தரன் விற்குடி, மாமழுவூர்
காமன் குறுக்கை, யமன்கடவூர், இந்தக்
காசினியில் தேமன்னு கொன்றையும்
திங்களும் சூடிதன் சேவகமே'

அப்பர் அடிகளின் கீழ்க்கண்ட பாசுரமும் நினைவிற் கொள்ளத்தக்கது:

'காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர்வீரட்டானம் காமருசீர் அதிகை
மேவிய வீரட்டானம், வழுவை வீரட்டம்
வியல்பறியல் வீரட்டம், விடையூர் திக்கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுக்கை வீரட்டம்
கோத்திட்டைக்குடி வீரட்டானம் இவை கூறி
நாவில் நவின் றுரைப்பவர்க்கு நணுகச் சென்றால்
நமன்தமரும் சிவன்தமர் என்று அகல்வர் நன்கே!'

திருவீழிமிழலையில், திருக்கரத்தில் சக்கராயுதம் இல்லாத திருமாலின் அபூர்வ விக்ரகத்தைக் கண்டோம். திருவிற்குடிகுடியில், சிவபெருமான் திருக்கரத்தில் சக்கரம் ஏந்திக் காட்சியளிக்கும் உற்சவமூர்த்தியைக் கண்டோம். வலது மேல் கரத்தில் மழுவும், இடது மேல் கரத்தில் மானும் வைத்திருக்கும் சுவாமி, வலது கீழ்க் கரத்தில் ஜலந்தராசுரனை அழித்த சக்கரத்தை வைத்திருக்கிறார். இடது கீழ்க் கரம் முத்திரையுடன் அமைந்துள்ளது. வலது காதிலிருந்து இடது காது சற்று மாறுபட்டு, தாடங்கம் அணிவிக்கப்பட்டது போல் தோற்றமளிக்கிறது. சோமாஸ்கந்தருக்கான அறையில் எழுந்தருளியிருக்கிறார் இந்த சம்ஹாரமூர்த்தி.

ஆலயத்துக்கு எதிர்ப்புறத்தில் சங்க தீர்த்தக் குளமும், பின்புறம் சக்கரத் தீர்த்தக் குளமும் உள்ளன. சங்கதீர்த்தத்துக்குப் பிரும்ம தீர்த்தம், பிரஷ்ட நிவாரண தீர்த்தம் என்ற பெயர்களும் உண்டு. அட்டக்குளம் என்று வழக்கில் வந்துள்ளது. பிரும்மா தனது சாபம் நீங்க, இந்தக் குளத்தை உண்டாக்கி சிவனை வழிபட்டார்.

க்ஷுபன் என்ற அரசனுக்கு உதவி புரிவதற்காக மகாவிஷ்ணு தமது சக்கரத்தை ததீசி முனிவரின் மீது ஏவ, அது அவர்மீது பட்டு வலுவிழந்து கீழே விழுந்து விட்டதாம். பின்னர் சக்கராயுதம் திருவிற்குடிக்கு வந்தது. சிவபெருமான் ஜலந்தராசுரனைக் கொல்வதற்காகத் தரையில் சக்கரம் போல வட்டமாகக் கோடு போட்டு, அந்தச் சக்கரத்தை அசுரன் பெயர்த்தெடுத்துத் தலைமீது வைத்து மடிந்தான் அல்லவா! அந்த இடத்தில் குளம் ஒன்று ஏற்படுத்தி சிவனை வழிபட்டு, இழந்த வலுவை மீண்டும் பெற்று மகாவிஷ்ணுவின் கரத்தை அலங்கரித்தது. ஆலயத்தின் உட்புறம் தெற்குப் பிராகாரத்தில் ஞானமூர்த்தியான ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு எதிரில் ஞான தீர்த்தக் கிணறு இருக்கிறது. இதில் நீராடுபவர்கள், அறிவு மயக்கம் நீங்கி

உண்மை ஞானம் பெறுவார்கள். ஊரின் தென்புறம் ஓடும் வளப்பாறும், வடபுறம் ஓடும் பில்லாலி ஆறும்கூட தீர்த்தங்களே. வளைந்து ஓடும் ஆறு வளைப்பாறு. அதுவே விளைப்பாறு என்று மருவியிருக்கிறது. இரண்டு ஆறுகளும் வீரட்டானேச்வரருக்கு மாலை அணிவிக்கப்பட்டது போல் ஊரைச் சுற்றி வருகின்றன.

கிழக்குப் புறமுள்ள சக்கரத் தீர்த்தக் குளத்துக்கு எதிரே கிழக்கு நோக்கி திருமயானேச்வரர் ஆலயம் உள்ளது. திருமெய்ஞ்ஞானேச்வர் என்று அழைக்கப்படுகிறார் அவர். இப்பெயருள்ள பெருமான் ஆங்காங்கே திருக்கோயில் கொண்டுள்ளார். காழி மயானம், வீழி மயானம், கடவூர் மயானம் போன்ற தொடர்கள் வழக்கில் உள்ளன.

விற்குடி மயானேச்வரர் ஆலயத்தில் சிவலிங்கம் மட்டும் உள்ளது. அம்பாள் சந்நிதி இல்லை. அக்கோயிலுக்கு வடபுறம் ஒரு மேடையுள்ளது. அதைப் பிருந்தாவனம் என்றழைக்கிறார்கள். அதன் மீது இருந்த துளசிச் செடி தற்போது இல்லை. மேடை மட்டும் உள்ளது. ஜலந்தராசுரனின் மனைவி பிருந்தைதான் இத்தலத்தில் துளசியாக மாறியதாகப் புராணம் கூறுகிறது.

ஜலந்தரன் இறந்த பின்னர். அவன் மனைவி பிருந்தா தேவி அக்னியெழுப்பி அதில் வீழ்ந்து மாண்டாள். இது அறிந்த அம்பிகை ஒரு விதையைத் தந்து, அந்தச் சாம்பலின் மீது அதைப் போட்டு அமிருதத்தைக் தெளிக்கும்படி பிரும்ம தேவனிடம் கூற, அவரும் அப்படியே செய்ய, அங்கு துளசிச் செடி உண்டானதாம். அதுவே பிருந்தாவன துளசியாகக் கொண்டாடப்பட்டு வருகிறதாம்.

துளசிச் செடிதான் இத்தலத்தின் 'தலவிருட்'மாகக் கருதப்படுகிறது. தற்போது ஸ்ரீ வீரட்டானேச்வரர்

ஆலயத்தின் முன்புறம் துளசிச் செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இத்தலத்தில் சிவபெருமானுக்குத் துளசியை அர்ச்சனை செய்வதற்குத் தடையேதுமில்லை என்று மூத்த குருக்கள் கூறினார்.

இத்தலத்துக்குப் பிருந்தமயானமென ஒரு பெயரும் உள்ளது. பிருந்தை அக்னியில் குளித்து சாம்பலாய்ப் போன இடத்தில் பிரும்மதேவரின் அமிர்தத் தாரையால் இங்கு ஒரு லிங்கம் தோன்றியது. பிருந்தமயானேச்வரர் என்று இந்த லிங்கம் அழைக்கப்பட்டு வருகிறது.

வீரட்டானேச்வரர் ஆலயத்துக்கு மேற்கே, சங்க தீர்த்தத்தின் தென்மேற்கு மூலையில், ஐயனார் கோயில் இருக்கிறது. அவரைச் சொக்கநாதர் என்று அழைக் கிறார்கள். அவர் மதுரையிலிருந்து வந்ததாகச் செவிவழி வந்த கதை கூறுகிறது.

விற்குடிக்குக் கோகர்ணம் என்ற ஒரு பெயரும் உண்டு. இரு ஆறுகளுக்கிடையே உள்ள திட்டுப் பகுதி பசுவின் காது (கோகர்ணம்) போல் அமைந்துள்ளது. இத்தலத்துக்கு தனுஷாபுரம் என்ற வடமொழிப் பெயர் ஏற்படுவதற்கு மகாவிஷ்ணுவின் வில் இங்கு உடைந்து போனதுதான் காரணமாம்.

முன்னொரு காலத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு ஓர் கொடிய அரக்கனைக் கொன்றுவிட்டு, அரக்காகளை வெல்வதில் தனக்கு வேறு யாரும் நிகரில்லை என்ற நினைப்பில் சார்ங்கத்தின் ஒரு நுனியைத் தரையில் ஊன்றியபடி நின்றார். இதைக் கண்ட வானவர் மகாதேவனிடம் சென்று முறையிட, மகேசன் ''நீங்கள் கரையான் உருக் கொண்டு வில்லின் நாணை அறுத்து விடுங்கள்'' என்று கூறி மறைந்தார். வானவரும் அவ்விதமே செய்ய, வில்லின் நாண் அறுந்து, வில் ஆகாயத்தில் பறந்து கீழே வந்து விழுந்தது. விஷ்ணுவின் வில் விழுந்த இடம் விற்குடியென

வழங்கலாயிற்று. இப்படியும் ஒரு விளக்கம் அளிக்கப் படுகிறது.

திருவிற்குடி தலத்தைக் குறித்துத் திருஞான சம்பந்த சுவாமிகள் 'வடிகொள் மேனியர்' என்று தொடங்கும் ஒரு பதிகமும், திருநாவுக்கரசர் அடைவுத் திருத்தாண்டகத்தில் இரண்டு பாடல்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் திருப்பரங்குன்றத் திருப்பதிகத்தில் வைப்பாக வரும் ஒரு பாடலும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத் திருச்சாழலில் ஒன்றும், அருணகிரிநாதர் சுவாமிகளின் திருப்புகழ் ஒன்றும், பெரிய புராணத்தில் ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் விற்குடிக்கு வருகை தந்ததைப் பற்றிய பாடல் ஒன்றும், இத்தலத்தின் பெயரையும் பெருமையையும். குறிப்பிடுகின்றன. இவற்றைத் தவிர, வரகவி எஸ்.வி. சேதுராமன் (சாதுராம்) அட்டவீரத்தை விளக்கும் முருகன் திருப்புகழிலும், விற்குடி வேலவன் திருப்புகழிலும் விற்குடி வேலவன் வாழ்த்திலும் இத்தலத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

'ஏமன்றனை யுதைத்தது நன் கடவூரினில்
வீரம் பெற எதிர்த்த சலந்தரன் மாய்வுற
ஏமஞ்செறி யவிற்குடி யென்
நலூரினில்-விடலாகும்.'

—சாதுராம்

விற்குடிக்கு வடமேற்கே நன்னிலம் ஸ்ரீ மதுவனேச்வரர் கோயிலும், வடக்கே திருப்பனையூர், திருப்புகலூர், அம்பர் மாகாளம் என்ற தலங்களும், கிழக்கே திருப்பயற்றங்குடி, திருச்செங்காட்டங்குடி, திருமருகல் என்ற தலங்களும், தென் திசையில் திருப்பள்ளி முக்கூடலும், தென்மேற்குத் திசையில் திருவாரூரும், மேற்கில் திருவாஞ்சியமும் பாடல் பெற்ற தலங்களாக விளங்குகின்றன.

வாழ்குடி

திருவிற்குடி தலத்துக்குத் தென்கிழக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வாழ்குடி என்ற சிறு கிராமம் உள்ளது. இங்குள்ள பெருமாள் கோயிலில் ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் மூலவர். ஸ்ரீ ருக்மணி, சத்தியபாமா சமேத ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் உற்சவர். கோயில் இவர் பெயரில்தான் வழங்கி வருகிறது. மார்கழி மாதம் ராதா கல்யாணம் சிறப்பாக நடக்கும்.

இங்கு ஸ்ரீ வரதராஜர் விக்ரகம் ஒன்றுள்ளது. மழை தேவையென்றால், இவருக்குப் பிரார்த்தித்துக் கொண்டு அபிஷேகம் செய்வார்களாம்.

பெருமாள் கோயிலுக்கு அருகில், ஓர் அரச மரத்தின் சுகமான நிழலில் ஒரு தகர ஷெட்டில் சிறியதாக ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. ஒரு பெரிய அல்லிக் குளத்தின் கரையில் பிள்ளையார் அமர்ந்திருக்கிறார். சுற்றுப் புறத்தைச் சுத்தம் செய்து வைத்துக் கொள்வது கடினமான காரியம் அல்ல.

சிவன் கோயிலில் ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ விசாலாட்சி உறைகிறார்கள். எத்தனை முயற்சி செய்தும் அவர்களைத் தரிசனம் செய்ய முடியவில்லை. குருக்கள் ஒரு வீட்டில் சாவியைக் கொடுத்து விட்டுப் போவது வழக்கமாம். அங்கு சென்று விசாரித்தபோது முதல் நாள் சாவி கொடுக்காமலே போய்விட்டார் என்று கூறினார்கள். தஞ்சைக் கிராமக் கோயில்களில் சுவாமி தரிசனம் செய்வதற்காகக் குருக்களுக்காகவும் சாவிக்காகவும் அலைய வேண்டியிருக்கும் பரிதாபமான நிலையைக் குறித்து ஏற்கெனவே ஓரிருமுறை மனத்தாங்கலுடன் குறிப்பிட்டிருக்கிறேன்.

சாதாரணமாக ஐயனார் கோயில் ஊருக்குச் சற்றே தள்ளியிருக்கும். மாறாக, வாழ்குடியில் ஊருக்கு அருகிலேயே உள்ளது. அவர் பாலசாஸ்தா. செண்பக மூர்த்தி ஐயனார் என்று திருநாமம். குழந்தைகள் விளையாடும் ஒலி இவருக்குக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதால்தான் பாலசாஸ்தா ஊருக்குள்ளேயே இருப்பதாக முன்னாள் பட்டாமணியார் விசுவநாதன் கூறினார். அவர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணப் பெருமாள் கோயில் அறங்காவலர். ஐயனார் கோயில் விமானத்தின் மேல் பெரிய பெரிய செடிகள் தாராளமாக முளைத்திருக்கின்றன.

திருப்பயத்தங்குடி

வாழ்குடியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவு சென்றால் திருப்பயத்தங்குடி. திருப்பயற்றூர் என்ற இத்திருத்தலம், விற்குடி ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே நாலரை மைல் தொலைவில் இருக்கிறது. இவ்வூரின் தென் எல்லையாக விளப்பாறு ஓடுகிறது. இயற்கையெழில் கொஞ்சும் சோலைகள் சூழ்ந்த அழகிய சிற்றூர்.

பல இடங்களில் செவிவழி வந்த கதையாகச் சொல்லப் படும் நிகழ்ச்சி இங்கேயும் கூறப்படுகிறது.

சிவ பக்தரான வணிகர் ஒருவர் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்துக்கு மிளகுப் பொதிகளைச் சுமந்து சென்றார். வழியில் சுங்கச்சாவடியைக் கடக்க வேண்டும். மிளகுக்கு அதிகச் சுங்கம் கட்டியாக வேண்டும். அதனால் லாபம் குறையும். இரவு, சிவபெருமானை நினைத்துக் கொண்டே படுத்தார் வணிகர். காலையில் பயணத்தைத் தொடர்ந்த போது ஒரு பொதி அவிழ்ந்து கொட்டியது. என்ன

ஆச்சரியம்! மிளகுக்குப் பதில் அதிலிருந்து பயறு கொட்டியது. வணிகருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சோதித்துப் பார்த்ததில் அத்தனை பொதிகளும் பயறு மூட்டைகளாக மாறியிருந்தன. சுங்கச்சாவடியைக் கடந்து சற்றுத் தூரம் சென்றதும், அத்தனை பொதிகளும் மீண்டும் மிளகு மூட்டைகளாக மாறி விட்டிருந்தன! பெருமானின் பெருங்கருணையை நினைத்து மெய்யுருகிப் போனார் வணிகர்.

வாணிபத்தில் பெருந்தனம் ஈட்டியவருக்கு, வரவர செல்வத்தைச் சேர்ப்பதில் நாட்டம் குறைந்தது. உலகத்தை விட்டு இறுதியாகச் செல்லும்போது ஒரு துரும்பையும் உடன் எடுத்துச் செல்ல முடியாதென்று உணர்ந்து, செல்வம் அனைத்தையும் சிவபெருமானுக்கே எழுதி வைத்துவிட்டு உலக இச்சைகளிலிருந்து மனத்தைத் திருப்பி, துறவு நிலையெய்தி உய்ந்தார்.

இத்தலத்தில்தான் முன்பு சுங்கச்சாவடி இருந்தது. மிளகு, பயறானதால் இத்தலத்துக்குப் பயற்றூர் என்றும், அங்கு உறையும் பெருமானுக்குப் பயற்றுநாதர் என்றும் பெயர்கள் தோன்றின. திருநாவுக்கரசர் தமது பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றிலும் 'திருப்பயற்றூரனாரே' என்று விளிக்கிறார். இத்தலத்தில் பைரவ மகரிஷி, பெருமானை வழிபட்டிருக்கிறார்.

சுவாமிக்கு வடமொழியில், முக்தபுரீச்வரர் என்று பெயர். மிகப் பழைய சிவலிங்கம். விற்குடி பெருமானை விடப் பெரிய திருமேனி. ஆவுடையார் நாற்கோண வடிவில் அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கிய திருச்சந்நிதி. தென்புறத்திலும் கூத்தபிரானை நோக்கி ஒரு வாயில் அமைந்திருக்கிறது. ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு எதிரில் 'சிலந்திமரம் என்ற தல விருட்சம் இருக்கக் காணலாம். இதன் மலர் மஞ்சள் வண்ணத்தில் சிலந்திப் பூச்சி வடிவில் அமைந்துள்ளது.

சித்திரை, வைகாசி மாதங்களில் இது பூக்கிறது. எட்டு இதழ்கள் கொண்ட இம் மலருக்கு மணம் உண்டு.

முன்மண்டபத்தில் தெற்கு நோக்கிய அம்பிகையின் திருச்சந்நிதி இருக்கிறது. அம்பிகையின் பெயர் காவியங் கண்ணி அம்பாள் என்பதாகும். காவி என்பது நீர்ப்பூவில் ஒரு வகை. கழுநீர்மலர், குவளை என்றும் கூறுவர். வட மொழியில் உத்பலம். அம்பிகையின் கண்கள் காவி மலர் களை ஒத்திருப்பதால் காவியங்கண்ணி எனப் பெயர் பெற்றாள்.

'காவியங்கண்ணாளாகிக் கடல்
வண்ணமாகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார்
திருப்பயற்றூ ரனாரே'

என்று அப்பர் சுவாமிகள் திருவாக்கருளியுள்ளார்:

வடமொழியில் நேத்ராம்பிகை என்று அழைக்கப் படுகிறாள்.

வடக்குப் பிராகாரத்தில் சண்டிகேச்வரருக்குக் கிழக்குப் புறம் கிணறு ஒன்றிருக்கிறது. அக்கிணற்றுக்குக் கீழ்ப்புற மாக, வடக்கு நோக்கிய வீரமாகாளியின் சந்நிதி அமைந் துள்ளது. கோயிலில் தனி துர்க்கை சந்நிதியில்லை.

வடக்குச் சுற்றின் கீழ்ப்புறமாகத் தெற்கு நோக்கி ஸ்ரீ தண்டபாணி சுவாமியின் சந்நிதியிருக்கிறது. அழகான சிலை. அபூர்வ வேலைப்பாடாகும். அம்மண்டபத்தில் வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலில் வைகாசி விசாகம் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. அப்போது பஞ்சமூர்த்திகள் புறப் பாடு உண்டு,

திருக்குளத்தின் தென்புறச் சுவர் இடிந்து விட்டது. தண்ணீரை இறைத்து விட்டுச் சுவரை எழுப்பிக் கொண்டி

ருந்தார்கள். கோயில் குளங்களைக் கவனிக்காமல் விட்டு விடும் இந்நாளில், இப்படியொரு காட்சியைக் காண்பது ஆனந்தமாக இருந்தது. தேர் ஓடி எழுபது வருடங்களுக்கு மேல் ஆகிறதாம். குளக்கரையில் சப்பரம் இருக்கிறது. அதை எப்படியாவது மீண்டும் ஓட்ட வேண்டும் என்ற விருப்பத்துடன் முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில், பஞ்சநாத லாணன் என்பவருக்குக் கண்நோய் நீங்குவதற்காக சிவபெருமானுக்கு நிலம் எழுதி வைக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது. எனவே கண்நோய் உடையவர்கள், இங்குள்ள கருணாதீர்த்தம் என்ற திருக்குளத்தில் நீராடி, திருப்பயற்று நாதனையும் காவியங்கண்ணியாகிய நேத்ராம்பிகையையும் வழிபட்டால், விரைவிலேயே குணமடையலாம் என்று, எங்களுக்கு ஆலயத்தைச் சுற்றிக் காட்டிய முத்துக்குமாரஸ்வாமி கூறினார்.

திருமாலயன் பொய்கை

திருப்பயத்தங்குடி என்று அழைக்கப்படும் திருப் பயற்றூரிலிருந்து திருமருகல் செல்லும் பாதையில் மூன்றாவது கிலோ மீட்டரில் உள்ளது வீரப்பெருமாள் நல்லூர் என்ற சிறு கிராமம். அங்கு கே. ஆர். நாராயண சுவாமி என்பவரைச் சந்தித்தோம். விவசாயத் துறையில் மிகுந்த அனுபவம் மிக்க அவர், ஓய்வு காலத்தைத் தமது பண்ணையின் மேம்பாட்டுக்காகச் செலவிடுவதோடு, அப்பகுதியில் நற்பணிகளும் தெய்வத் தொண்டும் ஆற்றி வருவதை அறிந்தேன், மிக உற்சாகத்தோடு, ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருமாலயன் பொய்கை என்ற இடத்துக்கு எங்களை அழைத்துச் சென்று, சமூக

கணபதியைத் தரிசனம் செய்து வைத்தார். கோரும் வரமளிக்கும் வசீகரத் தோற்றம். பழைய கோயில். 1979-ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது.

இவ்விடத்தைப் பெரியதொரு பொய்கை சூழ்ந்திருந்த தாலும், திருமாலும் அயனும் இங்கு சிவபெருமானை வழிபட்டதாலும் திருமால் அயன் பொய்கை என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். திருமாலம்பு எய்கை, திருமாலன் பொய்கையாகி, திருமாலயன் பொய்கையாக மருவியதாகவும் கூறப்படுகிறது. சையாதி மன்னனுக்காக, சிவபக்தரான ததீசி முனிவரின் மீது திருமால் தமது சக்ராயுதத்தை ஏவியபோது, அது வலுவிழந்து, உடைந்து சிதறிய நிகழ்ச்சி இப்பகுதியில் நிகழ்ந்ததாக ஒரு தல புராணத்தில் காணப்படுகிறது.

திருமாலயன் பொய்கை, சோழ நாட்டிலுள்ள சிறந்த சிவத் தலங்களில் ஒன்றாகும். முன்பு அங்கு பெரியதோர் சிவன் கோயில் இருந்திருக்கிறது. அக்கோயிலின் கன்னிமூலை ஸ்தானத்தில் சுமுக கணபதி எழுந்தருளி யிருக்கிறார்.

பழைய சிவன் கோயிலின் அழிவுச் சின்னங்களை இன்றும் காணலாம். ஆனால், நெருங்க முடியாது. ஆலமர விழுதுகளும் வேர்களும் இடிந்த சுவர்களைப் பின்னிப் பிணைத்திருக்கின்றன. அங்கு பாம்புகளின் நடமாட்டம் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கைலாயத்தில் பரமேச்வரனும் திருமாலும் சொக்கட் டான் ஆட, பார்வதி நடுவராக இருந்த கதையை முன்பு தேரழுந்தூரில் கண்டோம். இத்தலத்தில் அது வேறு வடிவம் பெற்றிருக்கிறது. பரமேச்வரனும் பார்வதியும் ஆடுகிறார் கள். திருமால் நடுவராக இருக்கிறார்!

கைலாசபதியும் பார்வதி தேவியும் சொக்கட்டான் ஆடியபோது ஆட்டத்தில் பரமேச்வரன் தோற்க, பார்வதி தோற்று விட்டதாக நடுவரான திருமால் தீர்ப்பு கூறி விட்டாராம். அதனால் சினமுற்ற தேவி, சகோதரனைப் பாம்பாக மாறும்படி சபித்தாள். சாபவிமோசனத்துக்கு என்ன வழி என்று கேட்டபோது, திருமாலயன் பொய்கைக் குச் சென்று, ஸ்ரீ வரந்தரும்நாயகி சமேத ஸ்ரீ காளகண்டேச் வரரை வழிபட்டால் மீண்டும் சுயரூபத்தைப் பெறலாம் என்று கூறினாள் பார்வதி. அதன்படி திருமால் இங்கு வந்து ஆலமரத்தின் பொந்தில் வாசம் செய்து பல வருடங்கள் சிவபெருமானை வழிபட்டு, இறுதியில் சுய உருப்பெற்று வைகுந்தத்தை அடைந்தாராம்.

ஸ்ரீ காளகண்டேச்வரரும் ஸ்ரீ வரந்தரும்நாயகியும் தற்போது ஓர் ஓட்டுக் குடிலில் வசித்து வருகிறார்கள்! 1979-ஆம் ஆண்டில், இக்கோயிலுக்கும் குடமுழுக்கு நடந் திருக்கிறது. அற்புதமான சிலைகள் சிலவற்றை இங்கு கண்டோம். பெரிய பைரவமூர்த்தி 'ஒரு கணம் நின்று என்னை பாருங்கள்' என்று அழைக்கிறார்.

ஒற்றைக் காலை ஊன்றிக் கடும் தவம் புரியும் அம்பிகை யின் பெரிய வடிவம், பழைய கோயில் ஓர் கலைக் கோட்ட மாக இருந்திருக்க வேண்டுமென்று நம்மை உணரச் செய் கிறது. 'தபஸ் காமாட்சி'யின் அருந்தவத்தால் ஓட்டுக் கூரை, கல் கட்டடமாக மாற வேண்டும். அத்தலத்தின் பழைய உன்னதங்கள் மீண்டும் ஒளிர வேண்டும்.

கீழத் தஞ்சாவூர்

தஞ்சை மாவட்டத்தில் ஒரு தஞ்சாவூர் இருப்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், கீழத் தஞ்சாவூர் என்று ஓர் ஊர் இருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்? நன்னிலம் வட்டத்தில் திருமாலயன் பொய்கையிலிருந்து இரண்டு

கிலோ மீட்டர் தொலைவில் கீழத் தஞ்சாவூர் இருக்கிறது. திருமருகல் செல்லும் சாலையில், தெற்கே திரும்பிச் செல்ல வேண்டும்.

இந்தத் தஞ்சை நகரத்துக்கு 'மருகல் நாட்டுத் தஞ்சை' என்று பெயர். இத் திருத்தலத்தில் பஞ்ச பாண்டவர்கள் தங்கி சிவலிங்க பூஜை செய்து திருவருள் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இத்தலத்துக்கு மற்றொரு பெருமையும் உண்டு. நாயன் மார்களில் ஒருவரான செருத்துணை நாயனார் பிறந்த புண்ணிய பூமி இது. இவர், திருவாரூர் புற்றிடங் கொண்ட பெருமானையும் காலந்தவறாது வழிபட்டு வந்தார். மலர்களைக் கொய்து, தமது கரங்களாலேயே மாலை களாகத் தொடுத்து இறைவன் அலங்காரத்துக்காக அளித்து வருவதை அன்றாடப் பணியாகக் கொண்டிருந்தார் அவர்.

ஒரு நாள், பல்லவ அரசன் கழற்சிங்கன் தன் பட்டத்து ராணியுடன் திருவாரூர்க் கோயிலுக்குத் தரிசனத்துக்காக வந்தான். அச்சமயம், பூமண்டபத்தருகில் ஒரு மலர் இருந் ததைக் கண்டாள் அரசி. ஆண்டவனின் திருமேனியை அலங்கரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த அத்தூய வாச மலரை எடுத்து முகர்ந்து பார்த்தாள். இதைக் கண்டதும் செருத்துணை நாயனார் வெகுண்டெழுந்தார். அம்மலர் தெய்வாராதனைக்குப் பயனற்றதாகச் செய்துவிட்டதற்குக் காரணமாக இருந்த அரசியின் நாசியை ஒரே நொடியில் அரிந்து விட்டார்.

செருத்துணை நாயனாரின் செயல் அனைவரையும் திடுக்கிட வைத்தது. 'அரசிக்கு இத்தகைய கொடுமையான தண்டனையளிக்க இவருக்கு என்ன இத்தனை செருக்கு!' என்று அரசியின் தோழிகள் கோபமுற்றனர். அரண்மனைச் சேவகர்கள் பதறிப் போயினர். செருத்துணையாருக்குத்

தக்க தண்டனை பெற்றுத் தரவேண்டும் என்ற எண்ணத்துடன் அரசியையும் அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்றனர். நடந்ததைக் கூறினர்.

அரசிக்கு ஏற்பட்ட அவமானத்தை விட, தூயமலரை அவள் மாசுபடுத்திய செய்தியைக் கேட்டுத்தான் அரசன் வேதனையுற்றான். 'மலரை முகர்ந்து பார்த்த நாசியைத் தானே செருத்துணையார் அரிந்தார். அது போதாது. அந்த மலரை எடுத்த கைதான் பெருங்குற்றம் இழைத்திருக்கிறது. அதனால் அக் கையையும் வெட்ட வேண்டும்' என்று கூறியவாறே அரசியின் கையை வாளால் வெட்டினான் வேந்தன்.

கீழத் தஞ்சாவூர் கிராமத்தில் இருக்கும் ஸ்ரீ அகிலாண்டேச்வரி உடனுறை ஸ்ரீ மூலநாதசுவாமி கோயிலில், சுவாமி சந்நிதிக்கு வெளியே, கை கூப்பியவாறு நின்று கொண்டிருக்கும் செருத்துணை நாயனாரின் சிலையைக் காணும் போது, பெரியபுராணத்தில் காணப்படும் மேற்படி நிகழ்ச்சி நம் நினைவுக்கு வருகிறது.

திருவாரூரிலிருந்து கங்களாஞ்சேரி வழியாக நாகூர் செல்லும் பேருந்தில், சோழங்கநல்லூரில் இறங்கி வடக்கே ஒரு மைல் சென்றால், கீழத் தஞ்சாவூர் கிராமத்தை அடையலாம். அங்குள்ள ஸ்ரீ அகிலாண்டேச்வரி உடனுறை ஸ்ரீ பூமிநாதசுவாமி ஆலயம் சிறியதுதான். சிலமாகிப் போயிருக்கிறது. குடமுழுக்கு நடந்து நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டதாம். தற்போது திருப்பணிகள் செய்து குடமுழுக்குச் செய்வதற்கான நன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்புறமுள்ள நுழைவாயிலில் நுழைந்ததும், எதிரே அம்பாள் சந்நிதி. மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது.

அம்மன் விக்ரகமும் பின்னமாகியிருப்பதால், பாலாலயம் செய்யப்பட்டு, சிறு படத்துக்கு நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. புது சிலை தயாராகிக் கொண்டிருப்பதாகவும், கும்பாபிஷேகத்தின்போது அந்த நூதனப் பிரதிஷ்டையும் நடைபெறப் போவதாகவும் பரம்பரை அறங்காவலரும் திருப்பணி கமிட்டித் தலைவருமான கே. என். ஜெயராமய்யர் கூறினார்.

மூலவர் மேற்குப் பார்த்த சந்நிதி. சந்நிதிக்கு வெளியே வடக்கே பார்த்து ஒரு சிறு மாடத்தில் செருத்துணை நாயனாரின் சிறிய வடிவம் காட்சி தருகிறது. ஆலயத்தில் விநாயகர், சுப்ரமணியர், கஜலட்சுமி, சனீச்வரர், பைரவர் முதலியோரின் உருவச்சிலைகள் உள்ளன. பைரவரின் சிலை சற்று பின்னப்பட்டுப் போயிருக்கிறது. சண்டிகேச்வரரின் சந்நிதிக்கு நேர் எதிரே கோஷ்டத்தில் சிறிய துர்க்கை எழுந்தருளியிருக்கிறாள். ஈசானியத்தில் நவக்கிரகப் பிரதிஷ்டை செய்வதற்கு வசதியும் வாய்ப்பும் உள்ளது. லிங்கோற்பவரின் உருவம் உருக்குலைந்து போயிருக்கிறது.

கருவறைக்கு வடக்குப்புறம், பிராகாரத்தில் ஆவுடையாருடன் ஒரு லிங்கமும் தனியே பெரிய பாணம் ஒன்றும் இருந்தன. விசாரித்த போது, அவை அருகிலுள்ள லிங்கத் திடலிலிருந்து கொண்டு வரப் பட்டதாகக் கூறினார்கள். அந்தத் திடலைக் காணச் சென்றோம்.

அங்குமிங்குமாக அத்திடலில் ஐந்தாறு லிங்கங்கள், பாதி புதைந்தும் புதையாமலும் இருக்கின்றன. அவை பஞ்ச பாண்டவர்கள் வழிபட்ட லிங்கங்கள் என்ற செவிவழி வந்த செய்தியைச் சிலர் வற்புறுத்திக் கூறிக் கொண்டிருந்தனர். அங்கு மூன்று முழுமையான சிவலிங்கங்கள் இருக்கின்றன. ஓரிரு பாணங்கள் மட்டும் இருக்கின்றன. ஆவுடையார் ஒன்று தனியாக இருக்கிறது. இவற்றைத் தவிர ஒரு பட்டை லிங்கம் இருக்கிறது. வழுவழுப்பான கறுப்புக் கல்லில், முப்பத்திரண்டு பட்டைகள் கொண்ட மிக அபூர்வ

மான லிங்கம் அது. காலவெள்ளத்தில் இதர லிங்கங்கள் பழுதுபட்டுப் போயிருப்பதைப் போல, இந்தப் பட்டை லிங்கமும் உருக்குலைந்து போகாமல் பாதுகாக்கக் கிராம மக்கள் முன்வர வேண்டும்.

இத்திடலுக்கு அருகில் செல்லியம்மன் கோயில் இருக்கிறது. 'ஏரிக்கரைப் பிள்ளையார்' என்ற பிள்ளையார் கோயிலும், ஐயனார் கோயிலும், மாரியம்மன் கோயிலும் உள்ளன. பழைய மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்திலேயே புதிய கோயில் ஒன்று கட்டியிருக்கிறார்கள். ஆனால், அம்மன் இன்னும் அங்கு எழுந்தருளவில்லை.

பெருமாள் கோயிலும் இடிந்து போயிருக்கிறது. அங்கிருந்த ஸ்ரீ பூமி நீளா சமேத ஸ்ரீ நித்தியநாராயணப் பெருமாள் அருகிலேயே சிறு குடிசையில் குடியேறிச் சுமார் அறுபது ஆண்டுகள் ஆகின்றனவாம். பழைய இடத்திலேயே புதுக்கோயிலை எழுப்பி, அவர்களை அங்கு எழுந்தருளப் பண்ணி, முறைப்படி ஆராதனைகள் நடைபெறச் செய்ய வேண்டும் என்பதிலும் அக்கிராம மக்கள் மிகவும் சிரத்தையாக இருக்கிறார்கள்.

கிராமங்கள் தோறும் பழுதுபட்ட ஆலயங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்ற தணியாத ஆர்வம் கிராமவாசிகளிடையே பெருகிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. பொருளாதார நிலை பெரும் தடையாக இருந்தாலும், உள்ளத்தில் பொங்கும் தெய்வ பக்தி அவர்களுக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது. பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறிய அளவிலேனும் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு செய்துவிடுவது என்ற அவர்களது முயற்சிக்குத் தெய்வம் கைகொடுத்து உதவுகிறது. செல்லும் இடங்களிலெல்லாம் கும்பாபிஷேகம் நடைபெற்ற செய்தியோ, நடைபெறப் போகும் செய்தியோ காதில் தேனாகப் பாய்கிறது.

திருப்புகலூர்

நன்னிலத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பாதையில், சன்னாநல்லூரிலிருந்து ஏழெட்டு கிலோ மீட்டருக்குள் திருப்புகலூர் திருத்தலம் இருக்கிறது. நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து நான்கு மைல். திருவாரூரிலிருந்து திருமருகல் செல்லும் பேருந்திலும் வரலாம்.

இக்கிராமம், முடிகொண்டான் ஆற்றின் வடகரைக்கும் திருமலைராயன் ஆற்றின் தென்கரைக்கும் இடையே யுள்ளது. ஆரவாரமற்ற அமைதியான ஊர். நிலவளமும் நீர்வளமும் நிறைந்தது.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரால் பாடப்பெற்ற ஸ்ரீ அக்னீச்வரர் எழுந்தருளியுள்ள பழம்பெரும் திருக் கோயில், ஊருக்கு நடுநாயகமாக, மூன்று புறங்களிலும் நீரால் சூழப் பெற்று அமைந்துள்ளது. அக்காலத்தில், கோயிலைச் சுற்றியும் அகழி இருந்திருக்கிறது. தரிசனத் துக்குச் செல்பவர்கள் தோணியைத்தான் பயன்படுத்தி வந்தனர்.

நாம் ஆலய தரிசனத்துக்குச் செல்லும் முன், தலபுராணத்தைச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

முன்னொரு காலத்தில், அக்னிதேவனுக்கும் வாயுதேவனுக்கும் ஒரு சண்டை மூண்டதாம். ''என்னால் சுட்டு எரிக்க முடியாத பொருளே கிடையாது. எரிப்பது மட்டுமல்ல, நான் எரித்துத் தூய்மையாகும் பொருள்களும் உண்டு. என்னால் தூய்மையாக்கப்பட்ட திருநீற்றையே சிவபெருமான் விபூதியாக அணிகிறார். அடியார்களும் அதையே அணிகிறார்கள்'' என்று அக்னிதேவன்

தற்பெருமை பேசினான். இதைக் கேட்ட வாயுதேவன், ''உன்னிடம் ஒரு தீய குணம் உள்ளது. நல்லது, கெட்டது என்று பாகுபாடு செய்யாமல் எல்லாவற்றையும் நீ உணவாக விழுங்கி விடுகிறாய். அதனால் என்றென்றும் தீராப் பசியுடன் அலைந்து நீ வருத்தமுற்றுத் திரிவாயாக'' என்று சபித்தார். அதன் பின்னர், 'புனிதமானவன்' என்ற நற்பெயர் இருப்பினும், 'கண்டதையெல்லாம் தின்பவன்' என்ற அவப்பெயரும் அக்னியை வந்தடைந்தது. இதனால் வேதனையுற்று, குருவாகிய வியாழ பகவானிடம் சென்று சாபம் நீங்க வழியென்ன என்று கேட்டான். அதற்குக் குருபகவான், ''நீ சோழ நாட்டிலே புன்னாகவனம் என்ற திருத்தலத்துக்குச் சென்று, நாற்புறமும் அகழியைத் தோண்டி பெருமானுக்கு வழிபாடு செய். அவரைக் குறித்துத் தியான, ஜபங்களில் ஈடுபடு. உன்னைப் பற்றிய இகழ்ச்சிகள் நீங்கும்'' என்று கூறினார்.

குருபகவான் பணித்தவாறே அக்னிதேவன், புன்னை மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதிக்கு வந்து, சுயம்புலிங்கம் இருந்த இடத்தை ஒரு தீவாக்கிக் கொண்டு, அமைதியான சூழலில், ஆசார முறைப்படி சிவபூஜையும் சிவஜபமும் செய்து வந்தான். சிவபெருமான் லிங்கத்தினின்றும் வெளிப் பட்டு சந்திரசேகரமூர்த்தியாக அக்னிபகவானுக்குக் காட்சி தந்தார். அக்னிதேவன் மகிழ்ச்சி பொங்க, ''பெருமானே, தாங்கள் எனக்குத் தரிசனம் அளித்ததே நான் புனிதன் என்பதை உறுதிப்படுத்துகிறது. இருப்பினும், நான் எதைத் தீண்டினாலும் என் புனிதத்தன்மைக்கு ஊறுவிளையா வண்ணம் தாங்கள் அருள வேண்டும். இவ்வூர் என் பெயரால், 'அக்னிபுரி' என்றும், தாங்கள் அக்னிபுரீச்வரர் என்றும் வழங்கப்பட வேண்டும்'' என்றும் வேண்டினான். ''அப்படியே ஆகட்டும்'' என்று கூறிப் பெருமான், லிங்கத் தினுள் மறைந்தார்.

புன்னை மரக் காட்டுப் பகுதியாதலால் புன்னாகவனம் என்றும், அக்னிதேவன் சாபம் நீங்கப் பெற்றதால்

'அக்னிபுரி' என்றும் அழைக்கப்பட்ட இத்தலத்துக்கு 'சரண்யபுரம்', அதாவது 'புகலூர்' என்ற பெயரும் உண்டு.

சூரபத்மனின் தங்கையாகிய அஜமுகியின் புத்திரர்களான வில்வலனும் வாதாபியும், அந்தணச் சிறுவர்கள் போல உருவம் தாங்கி, தண்டகாரண்யத்தில் ஓர் ஆச்ரமம் அமைத்து வசித்து வந்தனர். அவ்வழியே போகும் முனிவர்களுக்கு உணவளித்து உபசரிப்பது போல் பாசாங்கு செய்து, அவர்களைக் கொலை செய்து, அந்த உடல்களைப் புசித்து வந்தனர். இந்த ராட்சதர்களுக்குப் பயந்து தேவர்கள், அகழி சூழ்ந்த இத்தலத்திலே அடைக்கலம் புகுந்திருந்தனர். அதனாலேயே இதற்குப் புகலூர் என்ற பெயர் ஏற்பட்டது என்று கொள்ளலாம். இறுதியில் அகஸ்திய முனிவர், தமது வயிற்றுக்குள் உணவுப் பண்டமாகச் சென்ற வாதாபியை 'வாதாபி ஜீரணோபவ' என்று கூறி அழித்து, பின்னர் வில்வலனையும் கொன்றார். அதற்குப் பின்னரே தேவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இத்தலத்துக்கு இரக்தாரண்யம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இரக்தன் என்பவன் தன் இளைய சகோதரனுக்காகப் பயந்து இங்கே அடைக்கலம் புகுந்து சிவபெருமானைப் பூஜித்து வந்ததால் இப்பெயர் ஏற்பட்டது.

பாணாசுரன் என்பவன் தன் தாயின் பூஜைக்காகத் தினம் ஒரு சிவலிங்கத்தைக் கொண்டு வந்து கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஒரு நாள் புன்னாகவனம் வந்து, சுயம்பு மூர்த்தியைப் பெயர்க்க முயன்றபோது, பெருமான் திருமுடியைச் சற்று வளைத்துக் கொடுத்தார், சிவலிங்கத்தைப் பெயர்க்க முடியாமல் பாணாசுரன் போய் விட்டான். அது முதல் சுவாமி கோணப்பிரான் என்றும், கோணற்பிரான் என்றும் வழங்கப் பெற்றார். பாணாசுரன் சிவலிங்கத்தைச் சுற்றியும் தோண்டிய இடம்தான் அகழியா

யிற்று என்றும் கூறப்படுகிறது. அதனால் இதற்குப் பாணதீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டது. அதற்கு 'அக்னி தீர்த்தம்' என்ற பெயரும் உண்டு.

காச்யப மகரிஷிக்கு இரண்டு மனைவிகள். திதி என்பவள் மூலம் அசுரர் குல மக்களையும், அதிதி மூலம் தேவர் குல மக்களையும் பெற்றார். இதனால் இவர் மனவமைதியிழந்து துன்புற்றார். பின்னர், நாரத முனிவரின் யோசனையின்படி புன்னாகவனம் வந்து, அக்னீச்வரரை வழிபட்டு, அவருக்கு வடபால் தமது பெயரால் காச்யப லிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு, சிவ புண்ணியம் பெற்று, மனவேதனை நீங்கி, நற்கதி யடைந்தார்.

பிரவரன் என்ற மகத தேச மன்னன் சிவபக்தன். சிவ பெருமானைத் தவிர ஏனைய கடவுளரை ஏற்க மறுத் தவன். திருமால் கோயில்களை இடித்துத் தள்ளியவன். அதன் பொருட்டு, இறந்த பின்னர் அவன் பன்னிரண்டு ஆண்டுகள் நரகத்தில் இருந்து துன்புற்றான்.

பல ஆண்டுகள் கழித்து, பிரவரன் மரபில் பிறந்த வீரசேனன் என்ற மன்னன், முன்னோர்களைக் கரை யேற்றும் நோக்கத்துடன், மூர்த்தி, தலம், தீர்த்தங்களை முறையாக வழிபடும் பொருட்டுப் புன்னாகவனம் அடைந்து சிவதரிசனம், சிவபூஜை செய்து, அதன் பலனாக முன்னோர்களைச் சிவபதம் சேர்ப்பித்தான். பின்னர், சரண்யபுரத்திலும் தன் தலைநகரிலுமாக மாறி மாறி வசித்து, நாட்டை ஆண்டு வந்தான். புகலூர் பெருமா னுக்கு நித்திய நைவேத்திய பூஜைகளைச் சிறப்பாகச் செய்து, தேர் திருவிழாக்களையும் நடத்தினான். திருநீற்றின் பெருமையையும், திருவைந்தெழுத்தின் மகிமை யையும் பாரெங்கும் பரப்பிச் சிவபதம் அடைந்தான்,

திருப்புகலூர் புராண வரலாறு ஆக்னேய புராணத்தில், சரண்யபுர மகாத்மியம் என்ற பகுதியாக 180 முதல் 188

அத்தியாயம் முடிய ஒன்பது அத்தியாயங்களில் அடங்கி யுள்ளன.

இக்கோயில் மிகப் பழமையானது. கிழக்குப் பார்த்த சந்நிதி. கிழக்குப்புறம் அகழியைத் தூர்த்து வழி செய்திருக்கிறார்கள். ஐந்து நிலையுள்ள உயர்ந்த கோபுரம். நாற்புறங்களிலும் மதில்கள் சூழ்ந்துள்ளன. இரண்டு பிராகாரங்கள் இருக்கின்றன.

ஸ்ரீ அக்னீச்வரர், சுயம்புமூர்த்தி அதாவது தான் தோன்றிநாதர். இம்மூலத்தான நாதருக்கு முன்பு கண்டவாறு வேறு பெயர்களும் உண்டு.

மூலத்தான அம்பிகையின் திருநாமம். கருந்தாழ்குழலி ராஜகோபுரத்தைக் கடந்ததும் உட்புறத்தில் தெற்குப் பார்த்த சந்நிதியாக, பலிபீடத்துக்கு எதிரில் அம்பாள் சந்நிதியிருக்கிறது. கண்கண்ட தெய்வம். இவ்வூர் மக்கள் 'ஏதோ கருந்தாள் அனுக்கிரகம்' என்று எப்போதும் கூறுவதைக் கேட்கலாம். அத்தனை நம்பிக்கை. 'கருத்தாழ் குழலி' என்றே அப்பர் சுவாமிகள் கூறுகிறார். ஆனால், வழக்கில் 'கருந்தார்குழலி'யாக மருவியிருக்கிறது. வடமொழியில் சூளிகாம்பாள் என்று அழைக்கப்படுகிறாள்.

திருமீயச்சூர் ஆலயத்தில் மூலவருக்கு இடப்புறம் 'இளங்கோயில்' என்று ஒரு சந்நிதி இருப்பது போல், திருப்புகலூரில் ஸ்ரீ அக்னீச்வரர் சந்நிதிக்கு இடப்புறம் ஸ்ரீ வர்த்தமானீச்சுரம் என்ற திருச்சந்நிதி இருக்கிறது. இவரைத் தூய தமிழில் 'நிகழ்காலநாதர்' என்றும் அழைக்கலாம். இவர் இத்தலத்தில் அவதரித்த முருகநாயனார் என்பவரின் வழிபடுதெய்வமாக இருந்திருக்கிறார். ஸ்ரீ வர்த்தமானீச்வரருக்குத் திருஞான சம்பந்தப் பெருமானின் பதிகம் ஒன்றிருக்கிறது. அதில் 'முருகன் முப்போதும் செய்முடிமேல் வாசமலருடையான் வர்த்தமானீச்சுரத்தாரே' என முருகநாயனாரைச் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

திருப்புகலூரில் அவதரித்த அந்தணர் பெருமானாரான முருக நாயனார், தினமும் விடியற்காலை எழுந்திருந்து, தூய மலர்கள் கொய்து, மாலைகள் சூடி, இறைவனுக்குச் சார்த்தி மகிழ்வார். சிவனடியார்கள் இத்தலத்துக்கு வந்தால், அவர்களைத் தம் திருமடத்துக்கு அழைத்து வந்து நன்கு உபசரித்து, அறுசுவை விருந்து படைத்து சிவத் தொண்டு புரிந்து வந்தார். இங்ஙனம் அப்பர்பெருமான், திருஞானசம்பந்த சுவாமிகள், சிறுத்தொண்டர், திருநீல நக்கர், திருநீலகண்டயாழ்ப்பாணர் முதலிய நாயன்மார்கள் முருகநாயனாரின் மடத்தில் வந்து தங்கியிருக்கின்றனர். ஸ்ரீ அக்னீச்வரர் கோயிலுக்கு வெளிப்புறம் ஸ்ரீ முருக நாயனாரின் பெயரில் நந்தவனம் ஒன்று இருக்கிறது.

ஸ்ரீ வர்த்தமானீச்வரர் சந்நிதியிலேயே ஸ்ரீமனோன்மணி அம்பிகை, சிறு பிறையொன்றில் எழுந்தருளியிருக்கிறாள். எதிரில் முருகநாயனாரின் திருவுருவம் உள்ளது. ஸ்ரீ வர்த்த மானீச்வரருக்கு அப்பர், சுந்தரர் இருவரின் பாடல்கள் இல்லை. ஒருவேளை, இருந்து மறைந்தும் போயிருக்கலாம். ஸ்ரீ வர்த்தமானீச்வரர் பற்றிப் புராண வரலாறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஸ்ரீ வர்த்தமானீச்வரர் சந்நிதிக்கு வடக்கே ஸ்ரீ பவிஷ் யேச்வரர் லிங்கமும், அகோர லிங்கத்துக்குப் பக்கத்தில் பூதேச்வரர் லிங்கமும் இருக்கின்றன. இவற்றைத் தவிர ஆலயத்தில் நீலகண்டர், சிந்தாமணீச்வரர் லிங்கங்களும், பல்வேறு முனிவர்கள் பிரதிஷ்டை செய்து வழிபட்ட சிவலிங்கங்களும் இருக்கின்றன. அறுபத்துமூன்று நாயன் மார்களின் திருவுருவங்களும் உள்ளன.

கோயிலின் உட்பிராகாரத்தில் வடபகுதியில், ஸ்ரீ பவிஷ்யேச்வரர் சந்நிதிக்கு எதிரில் தலவிருட்சமான புன்னை மரத்தைக் காணலாம். திருமுறைகளில் 'புன்னை பொழிய புகலூர்' 'புன்னை மலர்த்தலைவண்டுறங்கும்

புகலூர்' 'புன்னாக மணங்கமழும் பூம்புகலூர்' எனக் கூறப்பட்டுள்ளது.

இத் தலத்தில் திருமாலே புன்னை மரமாக விளங்குவதாக ஒரு புராண வரலாறு உண்டு.

திருமால் முரன் என்ற அசுரனைக் கொன்ற பாவம் தீர இங்கு சிவபெருமானை வழிபட்டதாகவும், சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்ட பெருமான் அருளைப் பொழிந்தார் என்றும் கூறப்படுகிறது. அப்போது திருமால், ''அடியேன் இங்கு புன்னை மரமாக இருக்கப் போகிறேன். தாங்கள் என் நிழலில் எழுந்தருளி அடியார்களுக்கு ஆசி வழங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாராம் அதன்படி, திருமால் தன் அம்சமாக இத் தலத்துப் புன்னை மரமானார்.

இப் புன்னையின் இலை, தளிர், பூ, அரும்பு முதலியவற்றைக் கிள்ளினாலும், மரத்துக்கு ஊறு விளைவித்தாலும் அவர்களை விட்டுத் திருமகள் நீங்கி விடுவாள் என்றும், இம் மரத்தை வழிபட்டு, பாதுகாப்பவர்களை விட்டு ஸ்ரீ லட்சுமி தேவி என்றுமே நீங்கமாட்டாள் என்றும் மக்களிடையே திட நம்பிக்கையொன்று இருந்து வருகிறது. தியான, ஜபங்கள் செய்து நற்கதி பெற உகந்த இடம் இது.

புராண காலத்தில் இத் தலத்துக்குப் பல மகான்கள் வருகை தந்துள்ளார்கள். அதைப் போன்றே சரித்திர காலத்திலும் பல சிவனடியார்கள் வந்து ஸ்ரீ அக்னீச்வரவரை வழிபட்டுள்ளார்கள். திருஞான சம்பந்தப்பெருமான் ஒரு முறைக்கு இரு முறையாக வந்து ஸ்ரீ அக்னீச்வரர் மீது இரண்டு பதிகங்களும், ஸ்ரீ வர்த்தமானீச்வரர் மீது ஒரு பதிகமும் பாடியிருக்கிறார்.

அப்பர் சுவாமிகள், திருவாரூர் திருவாதிரை விழாக் கண்டு இன்புற்ற பின்னர், திருப்புகலூர் வந்தார். முன்பே முருகநாயனார் மடத்தில் வந்து தங்கியிருந்த ஸ்ரீ ஞான

சம்பந்தப் பெருமான், அடியார் திருக்கூட்டம் சூழ, நாவுக்கரசரை எதிர்கொண்டழைத்து, முருகனார் திருமடத்துக்கு எழுந்தருளும்படி வேண்டிக் கொண்டார். அப்போது சம்பந்தர், திருவாரூர் திருவாதிரைக் காட்சியின் சிறப்பைப் பற்றிக் கூறும்படி கேட்க, அப்பர் சுவாமிகள், 'முத்து விதானம் மணி பொற்கவரி முறையாலே' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார். அதைக் கேட்டுப் புளகிதம் அடைந்த சம்பந்தர், தாமும் திருவாரூர் சென்று புற்றிடங்கொண்ட பெருமானைத் தரிசித்துவிட்டு, மீண்டும் திருப்புகலூரை அடைந்தார். அப்போது திருநீலநக்க நாயனாரும் சிறுத்தொண்டரும் உடன் வர, அனைவரும் முருகநாயனார் திருமடத்தில் தங்கினார்கள். பரமனின் பெருங் கருணை பற்றியும் அடியார்களின் புகழ் பற்றியும் அவர்கள் பேசிப் பேசி மகிழ்ந்தனர். பின்னர், அப்பர் சுவாமிகள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று பல தலங்களைத் தரிசித்து விட்டு மீண்டும் திருப்புகலூர் வந்தடைந்தார். அதுவே தமது ஆன்மாவுக்குப் புகலிடமான திருத்தலம் என்று உணர்ந்து அங்கேயே தங்கி, நின்ற திருத்தாண்டகம், நீடுதிருத்தாண்டகம், திருப்பதித் திருத்தாண்டகம், திருநேரிசை, ஆருயிர்விருத்தம், தலபுராணம், பாபனாசத் திருப்பதிகம் முதலியவற்றை அருளியதோடு, உடல் உழைப்பின் சின்னமாக ஆலயத்தில் உழவாரப் பணியும் செய்து வந்தார்.

இவரது தூய தொண்டினையும் துறவுள்ளத்தையும் உலகத்தார் உணரும் பொருட்டுப் பரமசிவன், அடிகளாரின் உழவாரம்பட்ட இடமெல்லாம் பொன்னும் நவரத்தினங்களும் பொலிவுறும்படி செய்தார். ஓட்டாஞ் சல்லியையும் மாணிக்கக்கற்களையும் ஒரே மாதிரி எண்ணும் மனப் பக்குவம் பெற்ற அப்பரடிகள், அவற்றையும் வாரி வெளியே எறிந்தார்.

சில நாட்கள் கழித்து மற்றொரு சோதனை. உழவாரப் பணி செய்து கொண்டிருக்கும் போது, நடன மாதர்

ஆடியும் பாடியும் அப்பர் பெருமானுக்கு மையலூட்ட முனைந்தனர். எந்நேரமும் சிவபெருமானது திருவடிகளி லேயே சிந்தையைப் பதித்திருக்கும் அவர் நிலைகுலையாமல் இருந்தார். அரம்பையரோ அங்கிருந்து அகலாது ஆடிப் பாட, சுவாமிகள் 'பொய்மாயப் பெருங் கடலில்' என்ற திருத்தாண்டகத்தில் 'இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்கு இல்லையே இடம்' என்றும் 'இவ்வவனியெல் லாம் உம்பரமே உம் வசமேயாக்க வல்லீர்க்கு இல்லையே நுகர்போகம் யானேல்...... அரனைக் காண்பேன் தடைபடு வேனாகக் கருதித் தருக்கேன்மின்' என்றும் கூறினார். இதனைக் கேட்டதும் நடன மாதர் வெட்கித் திரும்பினர். சில நாட்கள் கழித்துத் திருப்பதிகங்கள், தாண்டகங்கள் பல இயற்றி இறுதியாக 'எண்ணுகேன்' என்னும் தாண்ட கத்தில் 'உன்னடிக்கே போதுகின்றேன்' என விண்ணப் பித்துச் சித்திரை மாதத்துச் சதய நாளில், திருப்புகலூர்ப் பெருமானது திருவடி நிழலில் நிரந்தரமாக அடைக்கலம் புகுந்தார் அப்பர் பெருமான்.

அப்பர் திருவிழா, திருப்புகலூரில் பத்து நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. ஒவ்வொரு நாளும் அவரது வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சியும், அதை யொட்டிய பாசுரங்களும் ஓதப்படும். பத்தாம் நாளன்று, காலை திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியில் இறைவன் அந்தணக்கோலத்துடன் வந்து அமுதளிக்க, அப்பர் அதை உண்ட வரலாற்று நிகழ்ச்சி விழா. இரவு முன்னேரத்தில் உழவாரப்பணி செய்த இடங்களில் பொன்னும் நவரத்தி னங்களும் தோன்ற, அவற்றை அள்ளிப் பொய்கைக் கரையில் வீசிய நிகழ்ச்சியும், அரம்பையர் வந்து நடனமாட 'பொய்மாயப் பெருங்கடலில்' என்னும் பதிகம் பாடி அவர்களைத் தலைகுனியச் செய்த நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இரவு, மூன்றாம் ஜாமத்தில், 'எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனா' என்ற பதிகம் பாடிக்கொண்டே

பெருமானுடைய திருவடிகளின்கீழ் அண்ணல் அமர்ந் திருந்த பேரானந்த நிகழ்ச்சியும், பேரொளியில் கலந்த காட்சியும் நடைபெறும்.

திருப்புகலூர்ப் பெருமான், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமி களையும் ஆட்கொண்டுள்ளார்.

திருவாரூரில், பங்குனி உத்திரத் திருவிழாவில் மகேச்வர பூஜை செய்யவும் அடியார்களுக்கு உடையும் உணவும் அளிக்கவும் பரவையார் மாளிகையில் நிறையப் பொன் தேவைப்பட்டது. அதனால், சுந்தரர் திருப்புக லூருக்கு எழுந்தருளி ஸ்ரீ அக்னீச்வரரை வழிபட்டார். ஓரிரவு சுந்தரர் திருப்பணிக்காக வைக்கப்பட்டிருந்த சில செங்கற்களைத் தலையணையாக வைத்துப் படுத்திருந் தார். மறுநாட் காலை அவை தங்கக்கட்டிகளாக மாறி யிருந்தன. திருவருளின் பெருங் கருணை குறித்து வியந்து 'தம்மையே புகழ்ந்திச்சை பேசினினும்' என்னும் பதிகம் பாடி நெஞ்சம் உருகினார்.

திருப்புகலூர்க் கோயிலில் நூற்றுக்கால் மண்டபம், ராஜகோபுரத்துக்குத் தெற்குப் புறத்தில் இருக்கிறது. தற்போது இது திருநாவுக்கரசர் மண்டபமாக விளங்கு கிறது. உட்புறம் அப்பர் சிலையுடன் கூடிய அலங்கார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முகப்பில், திருக் கைலாயக் காட்சியும், நால்வரின் வடிவங்களும் அழகுற விளங்குகின்றன. ஆண்டுதோறும், அப்பர் ஐக்கியமான சித்திரை சதயத்தில் தேவாரத் திருமுறைகள் மகாநாடு இங்குதான் நடைபெறுகிறது. அச்சமயம் நூற்றுக்கணக் கான திருமுறைச் செல்வர்கள் பல ஊர்களிலிருந்தும் வர வழைக்கப்பட்டுப் பன்னிரு திருமுறை பாராயணம் செய்யப் படுகிறது. சிறந்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இங்குள்ள கலைக்கோயிலில் பலவகைப்பட்ட நூல் களுள்ள நூல் நிலையம் ஒன்றும், திலகவதியார் பெயரில் சித்த மருத்துவ நிலையம் ஒன்றும் இருக்கின்றன.

இக்கோயிலில், ஸ்ரீ சோமாஸ்கந்தர் இருக்குமிடத்தில் ஸ்ரீ சந்திரசேகரமூர்த்தியே உள்ளார். இந்த வடிவில்தான் சிவபெருமான் ஸ்ரீ அக்னிதேவனுக்குக் காட்சியளித்தார். இவரது சந்நிதி, ஸ்ரீ அக்னீச்வரருக்குத் தென்புறத்தில், கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது. அம்பிகையோடு எழுந் தருளியிருக்கும் இவரே விழா கொண்டருளும் பெருமான். ஸ்ரீ சந்திரசேகரமூர்த்தியின் புராதன சிலா உருவம் ஒன்று அக்னிதீர்த்தக் கரையில் கிழக்கு நோக்கிய சிறு மண்டபத்தில் இருக்கிறது. எதிரில் முக்தி கணபதி அமர்ந்திருக்கிறார். இக்கரையில் உள்ள மண்டபத்தில்தான் ஸ்ரீ அக்னீச்வரர் தீர்த்தம் தந்தருளுகிறார். சித்திரை சதயத்தில் அப்பர் விழாவில் அப்பர் சுவாமிகள் கட்டமுது உண்ணும் விழா நடைபெறும். அக்னி தீர்த்தத்தில்தான், அப்பர் விழாவில், அப்பர், கல்லையே தெப்பமாகக் கொண்டு மிதந்த நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஸ்ரீ சந்திரசேகரர் சந்நிதிக்கு நேரே, இன்றும் அவரைத் தரிசித்துக் கொண்டிருப்பதற்கு அடையாளமாக ஸ்ரீ அக்னி பகவானின் திருவுருவம் இருக்கிறது. அழகானதொரு உற்சவமூர்த்தியும் இருக்கிறது. ஏழு தீக்கொழுந்து எரிவது போன்ற இரண்டு தலைகளும், நான்கு கொம்புகளும், ஏழு கைகளும், மூன்று கால்களும் உடைய அபூர்வ திருமேனி.

உட்பிராகாரத்தில் கன்னிமூலையில் தல விநாயகராக வாதாபி கணபதி எழுந்தருளியுள்ளார். திருச்செங்காட்டான் குடியிலுள்ள வாதாபி கணபதியைப் போன்ற திருவுருவம்.

இங்குள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தமூர்த்தத்தில், அம்பிகை சிறு ரிஷபத்தை இடக் கையால் பற்றிக் கொண்டிருப்பது போன்று இருக்கிறது.

ஸ்ரீ நடராஜர் மிக அழகான திருமேனி. உட்பிரா காரத்தில் ஈசானிய மூலையில் எழுந்தருளியுள்ளார்.

உள்கோஷ்டத்தில் எட்டு கைகளுடன் ஒரு துர்க்கையின் வடிவம் இருக்கிறது. வெளிப்பிராகாரத்தில் புதிதாக ஒரு துர்க்கையைப் பிரதிஷ்டை செய்து, சிலைக்குக் கண் திறக்கும்போது ஸ்தபதி இறந்து விட்டதாகக் கூறினார்கள். சுவாமி கருவறையின் வெளிப்புறம் பிட்சாடன மூர்த்தி, ஆடவல்லான், அகஸ்தியர் சிலைகளும் உள்ளன,

கடந்த குடமுழுக்கின் போது கட்டப்பட்ட நவக்ரக மேடை மட்டும் இருக்கிறது. இக்கோயிலில் நளனும் சனீச்வரனும் அருகருகே இருக்கின்றனர். பறவை, மனிதன், மிருகம்—மூன்று முகங்களும் கொண்ட திரிமுகாசுரனின் சிலையும் இருக்கிறது.

அக்னி தீர்த்தத்துக்கு மேற்கே பாம்பு சித்தர் கோயில் இருக்கிறது. அந்த சித்தர் பற்றிய வரலாற்றை அறிய முடியவில்லை. அவர் ஸ்ரீ அக்னீச்வரரிடம் தீவிர பக்தி கொண்டு நாள் தவறாது வடுபாடுகள் செய்து வந்தவர்.

அக்னி தீர்த்தத்துக்குத் தெற்கில் ஞான விநாயகர் ஆலயம் இருக்கிறது. மேற்பகுதியில், தென்புறத்தில் நெற்குன்றவாணர் விநாயகரின் அருளாசியோடு திருப்புகலூர்த் திரிபந்தாதியைப் பாடி அரசனுக்கு வரிகட்டப் பணம் பெற்ற நிகழ்ச்சி பொறிக்கப் பெற்றுள்ளது. வடிவங்கள் பின்னப்பட்டுப் போயிருக்கின்றன.

நெற்குன்றவாணர் செல்வந்தராக இருந்தும் கவிஞராக விளங்கியவர். கொடைத் தன்மையும் நிரம்பப் பெற்றவர். இவர் களப்பாளர் கோத்திரத்தில் தோன்றியவர். வேளாளர் மரபினர். இவர் ஊர், சென்னை சைதாப்பேட்டையை யடுத்த நெற்குன்றமாகும்.

நெற்குன்றவாணர் சிவபக்தி மிக்கவர். அவ்வப்போது தல யாத்திரை செல்வது வழக்கம். திருப்புகலூர்த் திருத்தலத்தின் மீது அவருக்கு அதிகப் பற்று உண்டானதால் அடிக்கடி அங்கு சென்று தரிசித்து வருவார்.

ஒரு சமயம் மழையின்மையால் கடும் பஞ்சம் ஏற்பட, நெற்குன்றவாணர் 'தான தர்மங்கள் செய்ய முடிய வில்லையே' என்று வருந்தியதோடு, அரசனுக்கு வரி செலுத்த முடியாமலும் தவித்தார். அவரைக் கைது செய்யும்படி மன்னன் உத்தரவிட்டான்.

இந்நிலையில், புகலூர்ப்பெருமானிடம் புகலிடம் தேடிய நெற்குன்றவாணரைக் கைது செய்ய அதிகாரிகள் உத்தரவிட்டனர். அப்போது அவர்களிடம் அனுமதி பெற்று, விநாயகரைக் குறித்து ஒரு பாடல் இயற்றி வழிபடத் தொடங்கினார்.

அச்சமயம் அவ்வழியே சென்ற உள்ளூர் உருத்திர கணிகை ஒருத்தி அப்பாடலைக் கேட்டு மெய்யுருகி, நெற் குன்றவாணரை அணுகி, 'இப்பாடல் அருமையாக இருக் கிறதே, இதையே விநாயகர் காப்பாகக் கொண்டு திருப் புகலூர்ப் பெருமானுக்கு ஒரு அந்தாதி பாடினால் நன்றாக இருக்குமே' என்றாள்.

அதைக் கேட்ட நெற்குன்றவாணர், ''உண்மைதான். பாட்டை அந்தாதிக்குக் காப்பாக்கலாம். காப்பாக்கினால் அரசனுக்குப் பணம் ஆகுமா?'' என்று வினவினார்.

இந்தக் கேள்வி கணிகைக்குப் புரியவில்லை. ஆனால், அவர் ஏதோ ஒரு இன்னலில் சிக்கிக் கொண்டுள்ளார் என்பது மட்டும் புரிந்தது. அருகிலுள்ள காவலாளிகளிடம் விசாரித்து. உண்மை நிலையை அறிந்து, ''அதிகாரிகளைப் பார்த்து அரசருக்குச் சேரவேண்டிய பணத்தை நான் கொடுத்து விடுகிறேன். இவரை விடுதலை செய்து விடுங்கள்'' என்று கூறினாள். இதைக் கேட்ட நெற்குனற வாணர் நன்றிக் கண்ணீர் பெருகக் கணிகைக்குக் கையெடுத் துக் கும்பிட்டு, 'இது பெருமானின் அருட்செயல்தான்' என்று பகன்று திருப்புகலூர் அந்தாதியைப் பாடி முடித் தார். பின்னர், தம் ஊர் திரும்பி, நல்ல காலம் மீண்டதும்,

ஆபத்தில் உதவிய அப்பெண்மணிக்குப் பெரும் செல்வத்தை அனுப்பி வைத்தார். அந்த அம்மையார், அப்பணத்தைப் பெருமானின் திருப்பணிக்கே வழங்கி விட்டாள்.

ஸ்ரீ அக்னீச்வரர் ஆலயத்தைச் சுற்றி அகழி போல் அக்னி தீர்த்தம் அமைந்துள்ள இயற்கையழகே அழகு. 'தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புகலூர்' என்று நாவுக்கரசரும், 'பொய்கை சூழ்ந்த புகலூர்' என்று சம்பந்தப்பெருமானும் சிறப்பாகக் கூறியுள்ளனர்.

கோயில் மதிற்சுவருக்கும் திருக்குளத்துக்கும் இடையே, நாற்புறமும் 'அப்பர் நந்தவனம்' உள்ளது.

இந்த அகழிக்குப் பாய்கால், ஏனங்குடி என்னும் ஊருக்கு அருகில் முடிகொண்டான் ஆற்றிலிருந்து ஒன்றரை மைல் தொலைவு வந்து மேற்குப்புறம் அகழியில் சேருகிறது. வடிகாலோ, அகழியின் வடகிழக்கு மூலையில் தொடங்கி, நேர் வடக்காக ஒரு மைல் சென்று திருமலைராஜன் ஆற்றில் கலக்கிறது.

திருக்குளத்துக்கு மொத்தமாக 'அக்னி தீர்த்தம்' என்ற பெயர் இருப்பினும், தென்புறமுள்ள படித்துறையே 'அக்னி தீர்த்தம்' என்று அழைக்கப்படுகிறது.

இத்தலத்தின் விருட்சம் 'புன்னை மரம்' என்பதையும், திருமாலே புன்னை மரமாக மாறினார் என்ற செய்தியையும் முன்பு அறிந்தோம். திரிமுகாசுரனே புன்னை மரமானான் என்ற ஓர் வரலாறும் கூறப்படுகிறது.

திரிமுகாசுரனுக்கு மனிதன், பறவை, பன்றி என்ற மூன்று முகங்கள். அவன் பன்றி முகத்தால் நீரும், பறவை முகத்தால் மலரும் கொண்டு வந்து, மனித முகத்தால் இறைவனை வழிபட்டதாக வரலாறு. மற்ற நேரங்களில், மக்களைத் துன்புறுத்தி வந்தான், இத்தலத்தில்

தவமியற்றிக் கொண்டிருந்த கந்தமாதன முனிவரைக் கொல்ல முயன்றான். அதைக் கண்டு வெகுண்ட புகலூர்ப் பெருமான், அசுரனை அழித்தார். உட்பிராகாரத்தின் வடக்குத் திருமாளிகைப் பத்தியில், காசிவிசுவநாதருக்கும் காலசம்ஹாரமூர்த்திக்கும் இடையில் திரிமுகாசுரனின் உருவச் சிலையைக் காணலாம்.

ஸ்ரீ அக்னீச்வரருக்குத் தென்புறமுள்ள ஸ்ரீ பூதேச்வரர் லிங்கத்தைக் காசியபரும், வலப்புறமுள்ள ஸ்ரீ வர்த்தமானேச்வரர் லிங்கத்தை ஜமதக்னியும், வடக்குப் பிராகாரத்தில் தலவிருட்சத்துக்கு அருகிலுள்ள ஸ்ரீபவிஷ்வேச்வர லிங்கத்தை வியாச மகரிஷியும் பிரதிஷ்டை செய்ததாகச் சரண்யபுர மகாத்மியம் கூறுகிறது.

மேற்கண்ட சிவலிங்கங்களைத் தவிர, உட்பிராகாரம் மேற்குத் திருமாளிகைப் பத்தியில் ததீசி, பராசரர், பிருகு, நீலகண்ட சிவாசாரியர், புலஸ்தியர், ஜாபாலி வாதராயர் பூஜித்த லிங்கங்களும், சண்டிகேச்வரருக்கு அருகில் வாமதேவர் பூஜித்த லிங்கமும் இருக்கின்றன. இரண்டாவது பிராகாரத்தில், வடகிழக்கில் பாரத்வாஜர் பூஜித்த லிங்கமும், தெற்குப் பிராகாரத்தில் மடைப்பள்ளியையடுத்து சிந்தாமணீச்வரரும், நர்த்தன கணபதியையடுத்து விஷ்ணு பூஜித்த லிங்கமும் இருக்கின்றன.

சித்திரை மாதச் சதயத் திருவிழாவின் பத்தாம் நாளன்று இரவில், அப்பர் சுவாமிகளைப் புஷ்பக விமானத்தில் எழுந்தருளப் பண்ணி, வீதிவலம் வந்து, 'எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ' என்ற பதிகம் பாடி, பிராகாரத்தை வலம் வந்து, பின்னர் மூலத் தானத்தில் உள்ள புகலூர்ப் பெருமானோடு ஜோதிவடிவாய் இரண்டறக் கலக்கும் மெய்சிலிர்க்கும் கோலாகல வைபவத்தைக் காணக் கண்கோடி வேண்டும்.

அப்பரடிகள், 'உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று கூறி, இறைவனின்

திருவடியில் இரண்டறக் கலந்த காட்சி, வெளிப் பிராகாரத்தில் ஈசானியத்தில் யாகசாலையையடுத்துள்ள மண்டபத்தில் புடைப்புச் சிற்பமாக அமைந்திருப்பதைக் கண்டு புண்ணியம் பெறலாம். அதற்கு எதிரில் ஸ்ரீ சண்டி கேச்வரிக்கு ஒரு சந்நிதியிருக்கிறது.

உட்பிராகாரத்தில், வடகிழக்கு மூலையில் ஸ்ரீநடராஜர் சந்நிதியையடுத்து சூரியனையும் பைரவரையும் தரிசிக்கலாம்.

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவிழாவையொட்டி, தேவாரத்திருமுறை மாநாடும், தேவாரப் பாராயணமும் நடைபெறும் நூற்றுக்கால் மண்டபம் தற்போது திருநாவுக்கரசர் மண்டபமாகத் திகழ்கிறது.

அடுத்து, கலைக்கோயில் மண்டபம் உள்ளது. அதில் நூல்நிலையம் உள்ளது. அடுத்து, கருணை இல்லமும் சுந்தரர் மண்டபமும் இருக்கின்றன. இவற்றுக்கு முன்புறம் திறந்த வெளியரங்கு இருக்கிறது.

இம்மண்டபங்களுக்கு எதிரே திலகவதியார் சித்த வைத்தியசாலையைக் காணலாம். தேவஸ்தானத்தாரால் நடத்தப்படும் இந்த வைத்தியசாலையில், இலவசமாக மருந்துகள் தரப்படுகின்றன. திருவைந்தெழுத்து ஓதித் திருநீறு அளித்து, அப்பரின் சூலை நோயைத் தீர்த்த மூத்த சகோதரி திலகவதியாரின் பெயரால் இது அமைந்திருப்பது மிக பொருத்தமாகும்.

சற்று கிழக்கே, முருகநாயனார் நந்தவனத்தையடுத்து சூளிகாம்பாள் பசு மடம் உள்ளது. இங்கிருந்து அபிஷேகத்துக்குப் பால் செல்கிறது. திருமாணிக்கம் செட்டியாரின் உபயம் இது.

திருப்புகலூர்க் கோயிலின் பரம்பரை தர்மகர்த்தரான வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேசவர

பண்டார சந்நிதி சுவாமிகள் ஆலயத்தில் தென்புறமுள்ள மடத்தில் தங்கியிருக்கிறார். அவர் துறவியல்ல. குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். அவரைச் சந்தித்துச் சிறிது நேரம் உரையாடினோம். சில நூல்களைக் கொடுத்து உதவிய சுவாமிகள், இக்கோயிலில் குடமுழுக்கு நடைபெற்று இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன என்றும், ஸ்ரீ அக்னீச்வரர் அருளால் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடைபெறப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார். அவ்வாறே நாங்களும் பிரார்த்தித்துக் கொண்டு திருப்புகலூர்த் திருத்தலத்திலிருந்து புறப்பட்டோம்.

ஸ்ரீ ராமனதீச்சரம்

திருப்புகலூரிலிருந்து திரும்பும் போது, தென்புறம் திருக்கண்ணபுரம் ஆலயத்துக்குச் செல்லும் அலங்கார வளைவு கண்ணில் படுகிறது. அதனுள் நுழைந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவு செல்கிறோம். திருக்கண்ணபுரத்திலிருந்து கிழக்கே திருச்செங்காட்டங்குடி திருக்கோயிலுக்குச் செல்லும் பாதையில் ஒரு பர்லாங் சென்று, ஸ்ரீ ராமனதீச்சரம் கோயிலை அடைகிறோம். திருப்புகலூர் ஸ்ரீ அக்னிபுரீச்வரர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கோயில் இது.

ஸ்ரீ ராமபிரான், ராவணனைக் கொன்ற பாவத்தைக் கழுவுவதற்காக சிவனை வழிபட்ட தலம் ஸ்ரீ இராமேச்வரம். அது பாண்டிய நாட்டிலுள்ளது. அதே போல், ஸ்ரீ ராமன் வழிபட்ட ஸ்ரீ இராமநாதர் சோழ நாட்டிலும் எழுந்தருளியிருக்கிறார். அதுதான் இந்த ஸ்ரீ ராமனதீச்சரம்.

ஸ்ரீ இராம நந்தீச்வரம் என்றும் ஒரு பெயர் வழங்கப்படுகிறது. அதற்கான ஒரு கதையும் கூறப்படுகிறது-

ஸ்ரீ ராமர் சிவலிங்கத்தை வழிபட வந்தபோது ஸ்ரீ நந்தி தேவர் அவரைத் தடுத்தாராம். ஆனால், கருணைக் கடலான அம்பிகை, நந்திதேவரை அடக்கி, ஸ்ரீ ராமரை உள்ளே வர அனுமதித்தாளாம். இதற்கு ஆதாரமாக, இக்கோயிலின் சோமாஸ்கந்தமூர்த்தத்தில் நந்தியம் பெருமானை அம்பிகை தன் கைக்குள் அடக்கி வைத்திருப்பது போன்று அமைந்திருக்கிறது. தற்போது திருப்புகலூர் கோயிலில் இருப்பது அந்த மூர்த்திதான்.

அந்த அபூர்வ மூர்த்தத்திலிருந்து இந்தக் கதை பிறந்ததா, அல்லது இந்தக் கதையின் அடிப்படையில் அந்த மூர்த்தம் வடிக்கப்பட்டதா என்பதற்கான விளக்கத்தைத் தேடிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, ஆலயத்தைத் தரிசனம் செய்வோம்.

கிழக்கு நோக்கிய சிறிய கோயில். ராஜகோபுரம் இல்லை. நுழைவாயில், மூன்று கலசங்களுடன் கூடிய தோரண வாயிலாக அமைந்துள்ளது. ஆலயத்துக்கு எதிரில் ஓர் அழகிய அல்லிக்குளம். அதுவே இராம தீர்த்தம்.

வெளிப்பிராகாரம் நந்தவனமாக அமைந்துள்ளது. கொடிமர விநாயகர் சந்நிதி, நந்தி, பலிபீடங்களை அடுத்துப் பெரிய மேடையுள்ளது. முன் மண்டபம் இல்லை.

பிராகாரத்தை வலம் வரும்போது கன்னிமூலைக் கணபதியை வழிபடுகிறோம். மூத்த பிள்ளை சற்றுப் பெரிய வராகவே அமர்ந்திருக்கிறார். மேற்கே உள்ள முருகனும் அழகுச் சிலைதான். 'தந்தமதத்தவன் தாதையோதான்' 'தழைமயிலேறவன் தாதையோதான்' என்று திருஞான சம்பந்தப் பெருமான் தமது பதிகத்தின் இரண்டாவது, மூன்றாவது பாடல்களில் ஸ்ரீ இராமநாதரைச் சிறப்பாகக் குறிப்பிடுவதற்கேற்ப, இவ்விரு மூர்த்திகளும் அழகுற அமைந்திருக்கக் கண்டு ஆனந்தமடைகிறோம்.

வடபுறத்தில், அம்பாள் கோயில் தனியாக இருக்கிறது. தெற்கே நோக்கி எழுந்தருளியுள்ள அம்பிகையை 'சரிகுழல் இலங்கிய தையல்' என்று அழைக்கிறார் சம்பந்தப் பெருமான் கருவார் குழலியம்மை என்று, திருப்புகலூர் தேவியின் திருநாமத்துடன் விளங்குகிறாள். வடமொழியில் சூளிகாம்பாள் என்ற அதே பெயர்தான்.

சுவாமி கருவறை விமானம் எழிலும் கம்பீரமும் மிக்கது. கோஷ்டத்தில் சனகாதி முனிவர்களுடன் ஆதி குருமூர்த்தி சின்முத்திரையுடன் ஞான வடிவாக அமர்ந்திருக்கிறார். எண்ணெயும் நீரும் காணாமல் வெளிறிப் போயிருக்கிறது அந்த அழகிய வடிவம். லிங்கோற்பவர், பிரமன், துர்க்கை, சண்டிகேச்வர மூர்த்திகளும் இருக்கின்றன.

ஸ்ரீ இராமநாத சுவாமி பெரிய திருமேனி. பாண லிங்கம். தரிசிப்போரைத் தன் வயப்படுத்தும் பேரருள் உடையது. கற்பூரத்தின் ஒளி சிவலிங்கத்தில் பிரதிபலித்து, ஜோதி வடிவானவனை நமக்குத் தரிசனம் செய்து வைக்கிறது.

மகாமண்டபம் கல் கட்டடமாக அமைந்துள்ளது. வடக்குப்புறமும் ஒரு நுழைவாயில் இருக்கிறது.

இக்கோயிலின் கிழக்குப்புறம் எழுந்தருளியுள்ள காலபைரவரின் திருமேனியும் பெரிதுதான். கண்கவர் சிற்பம்; உளம்கவர் வடிவம். நால்வர், நாகர், சூரியன் வடிவங்களும் உள்ளன. நவக்கிரகங்கள் இல்லை.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் இறைவன், இராமனதீச்சுரமுடையார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். குலோத்துங்கச் சோழன் பூசை, நைவேத்தியங்களுக்காக அளித்துள்ள நிலம் பின்னர், 'சிவபாதசேகரமங்கலம்' என்று அழைக்கப்பட்ட விவரத்தையும் நாம் அறிகிறோம்.

இத்திருத்தலத்துக்கு எழுந்தருளிய ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், சிவபெருமானது திருமேனியைத்

தரிசித்துப் பூரித்திருக்கிறார். அந்தப் பரவசத்தில் பாடல்கள் பிறந்திருக்கின்றன. அத்தெய்வத் திருமேனி யழகையும், அவரை அலங்கரித்த அணிகலன்களையும், அவர்தம் திருவிளையாடல் பெருமைகளையும் மகிமை களையும் மகிழ்ந்து மகிழ்ந்து பாடிப் பரவுகிறார்.

'சந்த நன் மலரணி தாழ் சடையன், அந்தமில் பாடலோன் அழகன் நல்ல எந்தவன். மழைபொழி சடையவன் மன்னுகாதில் குழையது இலங்கிய கோல மார்பின் இழையவன். அத்திய கையினில் அழகு சூலம் வைத்தவன். தாழ்ந்த குழற்சடை முடியதன்மேல் தோய்ந்த இளம் பிறை துளங்கு சென்னிப் பாய்ந்த கங்கையோடு படஅரவம் ஏய்ந்தவன். காளிதன் பெரிய கூத்தை அரியவன். ஆடலோன். அங்கையேந்தும் எரியவன். மாறிலா மாதொருபங்கன். நீள் சடைமேல் ஆறது சூடுவான். விடை ஏறவன். தடவரையரக்கனைத் தலைநெறித்தோன். நான் மறைக்கும் இடமவன்' என்று புனிதனின் புகழ் பாடித் திளைத்தவர் ஒன்பதாம் பாடலில்,

'தனமணி தையல்தன் பாகன் தன்னை
அனம் அணி அயன் அணி முடியுங்காணான்
பனம் அணி அரவரி பாதங்காணான்
இனமணி ராமனதீச்சரமே'

என்று கிண்கிணி நாதம் இழைய நாதன்தாளை வாழ்த்தி வணங்குகிறார்.

திருச்செங்காட்டங்குடி

அடுத்து, கஜமுகாசுரனைக் கொன்றதால் ஏற்பட்ட பாவமும் பழியும் தீர ஸ்ரீ விநாயகப்பெருமான் இறைவனை வழிபட்ட திருச்செங்காட்டங்குடிக்கு விரைகிறோம்.

திருக்கண்ணாபுரத்திலிருந்து கிழக்கே, மூன்றாவது கிலோ மீட்டரில் திருச்செங்காட்டங்குடி திருத்தலம் உள்ளது.

தஞ்சைத் தரணியிலுள்ள மிகப் பழமையான தலங்களில் இதுவும் ஒன்றாகும். கணபதி, கஜமுகாசுரனை வதம் செய்த பாவம் நீங்குவதற்காக சிவபெருமானை வழிபட்ட தலமாதலால் கணபதீச்சரம் என்று வழங்கப்படுகிறது. காவிரிக்குத் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற 127 தலங்களில் 79-வது தலமாக விளங்குகிறது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இங்கு உறையும் இறைவனை வழிபட்டுத் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

திருச்செங்காட்டங்குடிக்கு வடக்கில் முடிகொண்டான் ஆறும் தெற்கில் புத்தாறும் ஓடுகின்றன. ஊருக்கு திருச் செங்காட்டங்குடி என்றும், கோயிலுக்கு கணபதீச்சரம் என்றும் பெயர்கள் அமைந்துள்ளன. விநாயகப் பெருமான் கஜமுகாசுரனைக் கொன்றபோது அவனது இரத்தம் பெருகி அந்த இடம் செங்காடாய் மாறிவிட்டதால் இத் தலத்துக்கு 'செங்காட்டங்குடி' என்று பெயர் தோன்றியதாம். சத்தியாஷாட முனிவர் சிவபெருமானைக் குறித்துத் தவமியற்றியபோது ரத்த நாமுகி, ரத்தபீஜன் என்ற அசுரர்களைப் பெருமான் அழித்தார். அப்போது அவர்களுடைய ரத்தம் பூமியில் படிந்ததால் 'செங்காடு' என்று பெயர் தோன்றியதாகவும் கூறப்படுகிறது.

இத்தலத்துக்கு வேறு பெயர்களும் உண்டு. சிவபெருமான் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் சப்தகோடி மகா மந்திரங்களை அருளியதால் 'மந்திரபுரி' என்றும், சத்தியாஷாட முனிவர் வழிபட்டதால் சத்தியபுரி என்றும், பிரமன் வழிபட்டதால் 'பிரமபுரி' என்றும், பிரமனுக்காகப் பொய் சொல்லிய தாழம்பூ அப்பாவத்தைப் போக்குவதற்காக இங்கு ஆத்தி மரமாக முளைத்துத் தவம் செய்ததால் 'ஆத்திவனம்' என்றும், சூரியன் வழிபட்டதால் 'பாஸ்கர

புரி' என்றும், சமுத்திரராஜன் வழிபட்டதால் 'சமுத்திர புரி' என்றும், இந்திரன் வழிபட்டதால், 'இந்திரபுரி, என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

மாகதன் என்னும் முனிவருக்கும் விபுதை என்னும் அசுரப் பெண்ணுக்கும் யானை முகம் கொண்ட ஒரு புத்திரன் பிறந்தான். இவனே கஜமுகாசுரன். இவன் பரமசிவனை நோக்கித் தவமிருந்தான். அதன் பலனாக, தேவர்களாலோ, எந்த ஆயுதத்தாலோ தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்ற வரத்தைப் பெற்றான். விசித்திர சாந்தி என்பவளை மணந்து, மதங்கபுரம் என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான். அசுரனின் கொடுங்கோல் ஆட்சியால் துன்புற்ற தேவர்கள், சிவபெரு மானிடம் சென்று முறையிட்டனர். அப்போது விநாயகர் சிவகுமாரராக யானைமுகத்துடன் அவதரித்து, கஜமுகா சுரன் பெற்ற வரங்களின் தன்மைகளை அறிந்து, பூதகணங் களுடன் சென்று, தனது வலது கொம்பை ஒடித்து, அதை அவன் மீது எறிந்து அவனை வதைத்தார். பின்னர், அந்தக் கொம்பும் அவர் திருக்கரத்தை வந்தடைந்தது.

கஜமுகாசுர வதத்துக்குப் பின்னர், கணபதி ஈச்வரனை வழிபட்ட விழா ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் பூர்வ பட்சம் சுதயமும் சஷ்டியும் கூடிய நன்னாளில் நடை பெறுகிறது.

சிவ பக்தியிற் சிறந்த சத்தியாஷாட முனிவர் இத் தலத்தில் சிவபெருமானைக் குறித்துப் பல ஆண்டுகள் கடும் தவமிருந்தார். அத்தவத்துக்கு இடையூறாக இருந்த அசுரர்களை அழித்ததோடு, அவரது தவத்துக்கிரங்கி அவருக்கு வரங்களும் ஈந்தார் பெருமான். அதன் பலனாக தலத்துக்குச் சத்தியபுரியென்றும். தீர்த்தத்துக்கு சத்திய புட்கரணியென்றும், மூலவருக்கு சத்தியபுரீசர் என்றும் பெயர்கள் தோன்றின.

பாண்டிய நாட்டில் பொதிய மலைச்சாரலில், தாமிரபரணி நதிக்கரையிலுள்ள ஓர் ஊரில் வசுதேவன் என்ற உத்தம அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். எல்லா செல்வங்கள் இருந்தும் புத்திர செல்வமில்லாததால், பெருந்துயருற்று அகத்திய முனிவரைக் குறித்துத் தவமிருந்தான். அப்போது குறுமுனி அவன் முன் தோன்றி, சோழ நாட்டிலுள்ள திருச்செங்காட்டங்குடி திருத்தலம் சென்று தீர்த்தங்களில் நீராடி, பெருமானை வழிபட்டு, அடியார்களுக்கு அன்னதானம் செய்தால் புத்திரன் பிறப்பான் என்று கூறியருளினார். அவ்வாறே வசுதேவன், தல யாத்திரை புறப்பட்டு வந்து, பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு, இறுதியில் திருச்செங்காட்டங்குடியை அடைந்து முறைப்படி பெருமானை வழிபட்டு, புத்திரப்பேறு பெற்று, நலமுடன் வாழ்ந்து, நற்கதியடைந்தார்.

திருச்செங்காட்டங்குடி திருத்தலத்துக்கு மேலும் பெருமை சேர்த்த சிறுத்தொண்டர் வரலாறு பற்றிக் கோயில் தரிசனத்தின் போது அறிந்து கொள்வோம்.

கிழக்குப் பார்த்த கோயில். தென் கிழக்கில் சத்திய தீர்த்த திருக்குளம் இருக்கிறது. சிவபெருமானின் சூலத்தால் தோன்றியதால், இதற்கு சூல தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. பழுதடைந்த பழைய ஐந்து நிலைக் கோபுரம் புதுப்பிக்கப்பட்டு, 14-3-75 அன்று அதன் திருக்கதவு திறக்கப்பட்ட நற்செய்தியை அறிந்து, சுதைச் சிற்பங்களின் எழில்மிகுத் தோற்றங்களை ரசித்துக் கொண்டே உள்ளே செல்கிறோம். முன் மண்டபத்தையும் நந்தியையும் கொடிமரத்தையும் தரிசித்துக் கொள்கிறோம். திருமதிலையொட்டித் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளியும், வடகிழக்கு மூலையில் யாகசாலையும் இருக்கின்றன.

முன் மண்டபத்துக்கு வடக்கில், ஸ்ரீ வாய்த்தத் திருக்குழலிநங்கை என்ற அம்பிகையின் திருச்சந்நிதி, தெற்கு நோக்கியுள்ளது, வடமொழியில் சூளிகாம்பாள் என்ற

திருநாமம். கருவறையையொட்டிக் கிழக்கே ஸ்ரீ சண்டிகேச்வரி திருச்சந்நிதியுள்ளது. அம்பாள் சந்நிதிக்கு மேற்கே, அலங்கார மண்டபத்தைக் காணலாம். அதற்கு வடக்கே, சமுத்திரராஜ லிங்கத்தைத் தரிசிக்கலாம்.

வெளிப் பிராகாரத்தையும் உட்பிராகாரத்தையும் மூன்று நிலைகளுடன் கூடிய சிறு கோபுரம் இணைக்கிறது. உள்ளே நுழைந்து இடப்புறம் திரும்பினால் அதிகாரதிநந்தியையும், வலப்புறம் ஸ்ரீ பைரவரையும் சூரியனையும் தரிசிக்கலாம். வலம் வரும்போது கிழக்கில் சந்தன நங்கை, சீராளதேவர், வெண்காட்டு நங்கை, சிறுத்தொண்ட நாயனார் திருவுருவங்களையும், தெற்கில் அறுபத்துமூவர் சிலைகளையும். பிரும்மா, அர்த்தநாரீச்வரா, நால்வர், சங்கநிதி, பத்மநிதி, மேற்கில் சம்பந்தர்—விநாயகர், சத்தியாஷாட லிங்கம், முருகன் முதலியோரையும் வரிசையாகக் கண்டு ஆனந்திக்கலாம்.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் திருச்செங்காட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் பரஞ்சோதியார் என்பவர் தோன்றினார். அவர் குதிரையேற்றம், யானையேற்றம் முதலிய போர்த் தொழில்களில் சிறந்து விளங்கினார். போர் வீரர் மட்டுமின்றி, அவர் பெரும் சிவபக்தராகவும், சிவனடியார்களிடத்து அன்புமிக்கவராகவும் திகழ்ந்தார்.

கி. பி. 642-ல், வட தேசத்தில் வாதாபி நகரில் நடந்த போரில், தமது அரசனின் படைகளுக்குத் தளபதியாயிருந்து, போரில் வென்று, அங்கிருந்து பல பொருட்களைக் கொண்டு வந்து அரசனிடம் சேர்ப்பித்தார். அவற்றில் புதுமையான அழகிய கணபதி சிலையும் ஒன்றாகும். அந்த வாதாபி கணபதிக்கு உட்பிராகாரத்தில் தென்மேற்கில ஒரு சந்நிதியிருக்கிறது.

வாதாபி கணபதியின் தோற்றம், நமக்குப் பழக்கப்பட்ட தென்னாட்டுக கணபதிகளின் தோற்றம் போலன்றி.

புதுமையாயிருக்கிறது. சம்மணம் போட்டுக் கொண்டு உட்கார்ந்த நிலையில் இரு கைகளையும் தொடைகளில் வைத்துக் கொண்டிருக்கிறார் அவர். துதிக்கை இடப்புறம் சுழித்துள்ளது.

வாதாபி வெற்றிக்குப் பிறகு அரசுப் பணியைத் துறந்து சிவத் தொண்டராகி, திருவெண்காட்டுநங்கை என்னும் அம்மையாரை மணந்து. நல்லறம் நடத்தியவாறே கணபதீச்சரத்திலுள்ள பெருமானை வழிபட்டு, சிவனடியார்களுக்கு அமுது படைத்துத் தொண்டாற்றி வந்தார். சிவனடியார்களின் சிறு தொண்டராகத் தம்மைக் கருதியதால் அவர் சிறுத்தொண்டர் என்ற பெயரையும் பெற்றார்.

அப்போது அவருக்குச் சீராளன் திருவருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு சீராளதேவன் என்று பெயரிட்டு, அன்புடன் வளர்த்து வந்தார். தாதியாரின் பெயர் சந்தனநங்கை.

சிறுத் தொண்டர் என்ற பரஞ்சோதியார் திருச்செங் காட்டங்குடியில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, அங்கு திருஞான சம்பந்தமூர்த்தி வருகை தந்தார். அதைக் கேள்வியுற்ற சிறுத்தொண்டர், அச்சிவனடியாரை எதிர் கொண்டு அழைத்து, சகல மரியாதைகளுடன் தன் மனைக்கு அழைத்துச் சென்று அமுது படைத்தார். சம்பந்தப்பெருமான், சிறு தொண்டரின் பண்புகளைத் தமது பதிகத்தில் 'செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணி செய்ய' 'சீராளன் சிறுத்தெண்டன்' என்றெல்லாம் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

தமது அடியாரின் பெருமைகளை உலகறியச் செய்வது பகவானின் திருவிளையாடல்களில் ஒன்றல்லவா? சிறுத் தொண்டரின் பக்தியைச் சோதிக்கவும் அவர்தம் பெருமையை வெளியுலகம் உணரச் செய்யவும் திருவுளம் கொண்ட சிவபெருமான், பைரவ வேடம் புனைந்து

வடக்கிலிருந்து புறப்பட்டுத் தமிழ்நாட்டு செங்காட்டங் குடிக்கு வந்தார். வடக்கேயிருந்து வந்ததால் உத்தரா பதியார் என்று அழைக்கப்பட்டார். அவர் வந்த திருக்கோலத்தைச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார் !

'அயன் கபாலந் தரித்த
இடத்திருக்கையால் அணைத்த
வயங்கொளி மூவிலைச் சூலம்
மணித்திருத்தோள் மிசைப்பொலியத்
தயங்கு சுடர் வலத்திருக்கைத்
தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன் தவத்தால் பெறும்புவியும்
பாத தாமரை சூட...'

வலக் கரத்தில் தமருகமும், இடக்கையில் கபாலமும், தோளில் மூவிலைச் சூலமும் தாங்கி, திருமுகத்தில் அருளும் புன்னகையும் கொண்டு, இடுப்பு வளைந்து இரு பாதங் களையும் பூமியில் ஊன்றிச் சம்பாத நடனத்துடன் வந்தாராம் உத்தராபதியார்.

இவ்வாறு எழிற்கோலத்துடன் வந்த உத்தராபதியார் சிறுத்தொண்டரின் மனைக்குச் சென்றார். ஆனால், அங்கு அவர் இல்லை. எனவே, ஆலயத்தினுள் வந்து தலவிருட்ச மான ஆத்தி மரத்தினடியில் அமர்ந்தார்.

இந்த ஆத்தி மரம், உள்மண்டபத்தின் தென்புறம் உள்ளது. அதன் பூ, மகிழம்பூவை விடச் சிறியதாக இருக்கிறது,

சிறப்புமிக்க ஆத்தி மரத்தினடியில் அமைதி யாக அமர்ந்திருந்த உத்தராபாதியாரை அமுதுண்ணத் தன் மனைக்கு வரும்படி பணிவன்புடன் அழைத்தார் சிறுத்தொண்டர், அப்போது அடியார், எமக்கு அமுது படைப்பது அத்தனை எளிதல்லவே! எனக்குப் பிடித்தது நர மாமிசம். அதுவும் அந்த நரன், பெற்றோருக்கு ஒரே

மகனாயும், உடல் ஊனம் இல்லாதவனாயும் இருத்தல் வேண்டும். தாய் தந்தையர் உடனிருந்து அவனை அரிந்து கறி சமைத்துப் பரிமாற வேண்டும்'' என்று நிபந்தனை யிட்டார். சிவனடியார்களை மகிழ்விப்பதையே வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாகவும், பயனாகவும் கருதி வாழ்ந்த சிறுத்தொண்டர், உடனே விரைந்து சென்று மனைவியின் சம்மதம் பெற்று, பள்ளிக்குச் சென்றிருந்த சீராளனை அழைத்துவந்து நீராட்டி, யாருமே செய்யத் துணியாத செயற்கரும் செயலைச் செய்தார். திருவெண் காட்டு நங்கையும் சந்தன நங்கையும் பல்வகை உணவு களைச் சமைத்து வைத்தனர். சிறுத்தொண்டர் ஆத்தி மரத்தடிக்குச் சென்று உத்தராபதியாரை அன்புடன் அழைத்து வந்து முறைப்படி உபசரித்து ஓர் ஆசனத்தில் அமர்த்தி உணவு படைத்தார். அப்போது உத்தரா பதியார், 'உடனிருந்து உண்ண ஒரு சிவனடியாரை அழைத்து வாருங்கள்' என்று கூற, அச்சமயம் ஒருவரும் கிடைக்காமல் சிறுத்தொண்டர் வருந்தி நிற்க, 'உமது மகனையாவது அழைத்து வாருங்களேன்' என்றார். செய்வது அறியாமல் நின்ற சிறுத்தொண்டரிடம், 'வெளியே போய் அழையுங்கள். வருவான்' என்றார் அடியார். சிறுத்தொண்டர் வெளியே சென்று ''மைந்தா வருவாய்!'' என்றழைத்தார். அப்போது, பள்ளியிலிருந்து ஓடிவரு பவன் போல் சீராளன் ஓடி வந்தான். பெற்றோர் புளகிதம் பொங்க, அவனை அழைத்து வந்தனர். ஆனால், பைரவரின் உருவில் வந்த பெருமானை அங்கு காண வில்லை. இலையில் இருந்த உணவும் மறைந்து விட்டி ருந்தது. அடுத்த கணம் சிவபெருமான் உமாதேவி யாரோடும் முருகப் பெருமானோடும் காட்சி தரவே, சிறுத் தொண்டரும் மனைவியும் தாதியும் சீராளனும் அக்காட்சி யைத் தரிசித்தனர். பின்னர், அந்நால்வரையும் தம்முடன் திருக்கயிலைக்கு அழைத்துச் சென்றார் சிவபெருமான். இக்காட்சி, கருவறையின் வடபுறச் சுவரில் உள்ளது.

சொந்தப் பிள்ளைப் பாசத்தையும் விட, சிவனடியார்களின் திருத் தொண்டே சிறந்தது என்று கருதியதோடு மட்டுமின்றி, அவ்விதமே வாழ்ந்தும் காட்டிய சிறுத் தொண்டர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகக் கருதப்படுவதில் வியப்பென்ன?

திருச்செங்காட்டங்குடி ஆலயத்தின் வெளியே தென் மேற்கில் சூரிய புஷ்கரணியும், அதையடுத்து சிறுத் தொண்டர் கோயிலும் உள்ளன. அக்கோயில் இருக்கும் இடத்தில்தான் முன்பு சிறுத் தொண்டரின் இல்லம் இருந்த தாகக் கருதப்படுகிறது. கோயிலின் திருவாயிலுக்கு மேல் உத்தராபதியார், சிறுத்தொண்டர் முதலியோரது திருவுருவங்கள் இருக்கின்றன. உட்புறம் உத்தராபதியார் அமர்ந்த நிலையில அமுதுண்ணும் திருக்கோலத்தில் உள்ளார். திருவெண்காட்டு நங்கையாரின் உருவம் உணவு பரிமாறுவது போல் உள்ளது. சித்திரைப் பரணியில் உத்தராபதீச்வரர் இக்கோயிலில் எழுந்தலும் அமுதுபடையல் விழா வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

சித்திரை மாத பிரும்மோற்சவத்தில் ஆறாம் நாளான பரணியில் பிட்சாடன உற்சவம் நடைபெறுகிறது. அன்றே அமுதுபடையல் விழா. காலையில் உத்தராபதீச்வரர். கயிலையிலிருந்து புறப்பட்டு கஞ்சுகம், சூலம், கபாலம், தமருகம், பொக்கணம், மாணிக்கச் சந்தை, வட்டவார் சடை முதலிய கோலத்துடன் வெள்ளை சாத்தி எழுந்தருள்வார். அப்போது நட்டுமுட்டு, சிலம்பு வாத்தியங்கள் முழங்கப்படும். பகல் நேரத்தில் உததராபதியார் திருவமுது கேட்பதற்குச் சிறுத்தொண்டர் இல்லத்துக்கு வந்து, அவர் அங்கு இல்லாததால், ஆத்தி மரத்தினடியில் எழுந்தருளியிருப்பார். இரவில் திருவமுது செய்யும் பொருட்டு சிறுத்தொண்டர் கோயிலுக்கு மீண்டும் வருகை தருவார். அப்போது உத்தராபதியார் மறைந்து, ஸ்ரீ சோமாஸ்கந்தமூர்த்தி ரிஷப வாகனத்தில் அருட்ஜோதி

வடிவாய் எழுந்தருளி, சிறுத்தொண்டர் முதலியோருக்குக் காட்சி கொடுத்து, அவர்களைக் கயிலைக்கு அழைத்துச் செல்லுவார். இதுவே திருச்செங்காட்டங்குடியில் நடைபெறும் முக்கிய திருவிழாவாகும்.

ஸ்ரீ சிறுத்தொண்டர் கோயிலுக்கு வலப்புறம் ஒரு காளி கோயில் உள்ளது.

காஞ்சீபுரத்தில் ஆட்சிபுரிந்து வந்த ஸ்ரீ ஐயடிகள் காடவர் என்ற அரசன், சிவபெருமான் அருள்பெற்றுச் சிறுத்தொண்டர் கயிலை சென்ற செய்தியைக் கேள்வியுற்று, பெருமானைத் தரிசிக்கும் பொருட்டுத் திருச்செங்காட்டங்குடிக்கு வந்து. பரஞ்சோதியாருக்குக் காட்டியருளிய திருக்கோலத்தைத் தானும் காண வேண்டும். என்று நெக்குருகி வேண்டினான். அப்போது கணபதீச்வரர், ''நீ இருபத்தோரு நாட்களுக்குள் திருப்பணி செய்து உத்தராபதீச்வரின் திருவுருவம் ஒன்று அமைத்து. சித்திரைத் திருவோண நாளில் கும்பாபிஷேகம் செய்தால், வடக்கு வீதியில் உனக்கு செண்பகப் பூ மணத்துடன் தரிசனம் தருவோம்'' என்று அருளினார்,

உடனேயே செயலில் இறங்கினான் அரசன். ஆனால், எத்தனை முயன்றும், உத்தராபதியாரின் உருவச்சிலை மட்டும் சரிவர அமையவில்லை. அரசன் பெருந்துயர் கொண்டான். அப்போது சிவபெருமான் ஓர் சிவயோகியின் உருக்கொண்டு, உலைக்களத்தில் வந்து பருகுவதற்கு நீர் கேட்டார். கருமான்கள் அங்கு கருகொதிப்பதாகக் கூறவே, அதுவே வேண்டும் என்று கூறி வாங்கி உண்டார். அதுவே அழகியதோர் உருவாய் அமைந்தது. சிவயோகியார் மறைந்தார். பின்னர் அந்த உருவத்தில் சிற்றுளி பட்டபோது ரத்தம் பீரிட்டது. குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் சாத்தியவுடன் ரத்தம் நின்றது. அத்திருவுருவே தற்போது மூல லிங்கத்தின் பக்கத்தில் திருசந்நிதி கொண்டுள்ளது. உத்தராபதீச்வரருக்குக் குங்குமப்பூ. பச்சைக்-

கற்பூரம் போட்டு வருடத்துக்குப் பத்து அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. காஷாய உடுப்பு அணிந்திருக்கிறார்.

ஐயடிகள் காடவர்கோனின் திருவுருவம் சிறுத்தொண்டர் கோயிலில் உள்ளது.

தஞ்சைத் தரணிக்குப் பெருமை சேர்க்கும் தேவாரப் பாடல் பெற்ற பல தலங்களில், திருச்செங்காட்டங்குடி, பல வகைகளில் மேன்மையுற்று விளங்குவதைக் கடந்த பக்கங்களில் கண்டோம் 'வாளால் மகவரிந்து ஊட்டிய' சிவத்தொண்டரான சிறுத்தொண்டர் வாழ்ந்ததாலும், வாதாபியிலிருந்து கணபதியை அவர் இங்கு கொண்டு வந்ததாலும், அவர் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும வண்ணம் ஆண்டுதோறும் 'அமுதுபடையல் விழா' நடைபெறுவதாலும் இத்தலத்தின் சிறப்புப் பன்மடங்காகிறது. இத்தலத்தில் சிவதொண்டர்களுக்கு அன்னதானம் செய்தால பெரும் புண்ணியம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

சிறுத்தொண்டர் உத்தராபதியாருக்கு அமுதூட்டிய நிகழ்ச்சியைக் காளமேகப் புலவர் எளிய தமிழில் எடுத்துரைக்கும் பாடல் மறக்க முடியாது.

> "சட்டியிலே பாதியந்தச்
> சட்டுவத்திலேபாதி
> இட்டகலத்திற்பாதி
> யிட்டியிருக்கத் — திட்டமுடன்
> ஆடிவந்த கோணேசர் அன்றழைத்தபோது
> பிள்ளை ஓடிவந்த தெவ்வா றுரை."

சிறுத்தொண்டரின் பெருமையை அறிந்து ஞான சம்பந்தப்பெருமானும் நாவுக்கரசரும் திருச்செங்காட்டங் குடிக்கு வந்து, அவரது விருந்தினர்களாகத் தங்கியிருந்திருக்கின்றனர். இங்கு திருநீலநக்க நாயனாரும் வருகை தந்துள்ளார். அதற்கான பாடல் :

''பிள்ளையார் எழுந்தருளப்
பெருவிருப்பால் வாகீசர்
உள்ளமகிழ்ந்தெதிர் கொண்டங்குடன்
உறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர்
மற்றவர்பால் எழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநககர்
தாமும் எழுந்தருளினார்.''

தொண்டர்தம் பெருமை விளக்கும் செங்காட்டங்குடி, தீர்த்த மகிமையும் கொண்டதாகும்.

சத்திய திர்த்தம் ஆலயத்துக்கு முன்புறம் உள்ளது. சிவபெருமான் தனது சூலத்தால் பூமியில் ஊன்றி உண்டாக்கியதால் இதற்கு சூல தீர்த்தம் என்ற பெயரும் உண்டு.

கோயிலுக்குத் தென்மேற்கிலுள்ள சூரிய தீர்த்தத்தில் கார்த்திகைஞாயிறு தோறும் மூழ்கி இறைவனை வழி பட்டால் சகல நோய்களும் நிவர்த்தியாகும். இவற்றைத் தவிர, கிழக்கில் இந்திர தீர்த்தமும், தெற்கில் யம தீர்த் தமும், தென்கிழக்கில் அக்னி தீர்த்தமும், மேற்கில் வருண தீர்த்தமும், வடமேற்கில் வாயு தீர்த்தமும், சந்திரபுட்கரணி தீர்த்தமும் உள்ளன.

திருச்செங்காட்டங்குடி கோயிலில் குரு, லிங்க, சங்கம வடிவங்களாக மூர்த்திகள் அமைந்துள்ளன. ஸ்ரீ தட்சிணா மூர்த்தி குருவாகவும், மூலவரான கணபதீச்வரர் லிங்க வடிவிலும், உத்தராபதியார் சங்கமராகவும் அமர்ந்திருக் கிறார்கள். மூலவர் சற்றுப் பள்ளத்தில் வீற்றிருக்கிறார்' கணபதீச்வரர் மண்டபத்தில் டிண்டி, முண்டி என்ற துவார பாலகர்கள் இருபுறமும் நிற்கின்றனர். மேல் உள்ள கருங்கல் கொடுங்கையில் பல பூதங்கள் பல வாத்தியங் களை வாசிப்பது போல் காணப்படுகின்றன. 'பாடும் பறண்டையும் ஆந்தையும் ஆர்ப்பப் பரந்து பல்பேய் கூடி

முழவக்குவிகவிழ் கொட்ட — ஆடுந்திருவடிகாண்' என்றும் 'பேய்க் கணத்தோடிணங்கி நின்றாடின இன்னம்பரான்றன் இணையடியே' என்றும் அப்பரடிகள் பாடிய பாடல் வரிகளை இந்தச் சிற்பங்கள் நினைவூட்டுகின்றன. உத்தராபதியார் மண்டபத் தூண்களின் கீழ் சிங்கத்தின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

விமானத்தைச் சுற்றியுள்ள நீராழி மண்டபத் தூண்களில் சத்தியாஷாட முனிவர் பூஜிப்பது போன்றும், கணபதி சிவபெருமானை வழிபடுவது போன்றும் சிற்பங்கள் அமைந்துள்ளன.

இவ்வாறு புராணச் சிறப்பும் அடியார் மகிமையும் சிற்ப மேன்மையும் கொண்டு விளங்கும் இக்கோயில், 'நவ தாண்டவமூர்த்திகள்' என்றழைக்கப்படும் சிற்ப வடிவங்களால் மேலும் பெருமை சேர்த்துக் கொள்கிறது.

உட்பிராகாரத்தின் வடபுறம் லட்சுமி சந்நிதி, வசந்த மண்டபம், களஞ்சியம், இவற்றையடுத்து நவதாண்டவ மண்டபம் உள்ளது. 'அஷ்டமூர்த்தி மண்டபம்' என்றும் இது அழைக்கப்படுகிறது. அங்குள்ள சிலாவடிவங்கள் கொள்ளையழகுடன் நெஞ்சையள்ளிக் கொண்டு போகின்றன.

இக்கோயினுக்குச் செல்வோர் இவற்றை ஒவ்வொன்றாகப் பார்த்து ரசிப்பதற்கு நேரம் ஒதுக்கியே ஆக வேண்டும்.

புஜங்கலலிதர், தாருகாவனத்து முனிவர்கள் ஓர் யாகத்தின் மூலம் வரவழைத்துப் பெருமான் மீது ஏவிய பாம்புகளை அணிகலன்களாகப் பூண்டு நடனமாடியவர். 'புள்ளி வரி நாகம் பூண்டான்றன்னை' என்பார் அப்பரடிகள். புஜங்கலலிதர், பாம்பாபரணர் என்றும் அழைக்கப்படுகிறார்.

தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்திய கஜாசுரனைக் கொன்று, யானையின் தோலைப் போர்த்திக் கொண்டவர் கஜசம்ஹாரமூர்த்தி. அட்டவீரட்டானங் களில் ஒன்றான வழுவூரில் இந்த உற்சவம் நடைபெறு கிறது.

சிவபெருமான் காளியுடன் நடனப் போட்டியில் ஈடு பட்டபோது ஒரு காலை மேலே தூக்கியும் மற்றொரு காலைக் கீழே ஊன்றியும் நடம் புரிந்து வென்ற திருக் கோலம் ஊர்த்துவதாண்டவமூர்த்தி.

காலசம்ஹாரமூர்த்தி, மார்க்கண்டேயனுக்கு அபயம் அளித்து யமனைக் காலால் உதைத்துக் கொன்றவர். திருக் கடவூர் அட்டவீரட்டானத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

பிறதேவர்களின் முதுகெலும்புகளைத் தரித்துத் தாம் என்றும் அழியாதவர் என்பதைப் பறைசாற்றும் கோலம் கங்காளமூர்த்தியினுடையது.

கங்காளர் கயிலாய
　　மலையாளர் கானப் பேராளர்'

என்று போற்றுகிறார் சம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

தாருகாவனத்து முனிவர்களுக்கு புத்தி புகட்டப் பிரம கபாலம் ஏந்திப் பிச்சையெடுக்கச் சென்ற பெருமானுக்கு 'பிட்சாடனமூர்த்தி' என்று பெயர்.

சிவபெருமான் மேருமலையை வில்லாகவும், பாம்பை நாணாகவும் கொண்டு சென்று பொன், வெள்ளி, இரும் பாகிய மூன்று கோட்டைகளையுடைய அசுரர்களையும், அவர்களது இருப்பிடங்களையும் தகர்த்து எரித்தொழித்த திருக்கோலமே திரிபுர சம்ஹார மூர்த்தியினுடையது.

பெருமான், பைரவமூர்த்தியாய் தோன்றிப் பிரம்மனு டைய ஐந்து தலைகளில் ஒன்றை நகத்தாற்கிள்ளிக் கபாலத்தைக் கையிலேந்திய கோலமே பைரவருடையது.

'பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி' என்று வழி படுவார் அப்பரடிகள்.

இடுப்பு வளைத்து, இரு பாகங்களையும் பூமியில் ஊன்றிச் சமபாத நடனக் காட்சி அருளும் திருக்கோலம் கொண்டவர் உத்தராபதியார். இந்த ஒன்பதாவது மூர்த்தியே கோயிலின் பிரதம மூர்த்தியுமாவர்.

இந்த அற்புத மூர்த்திகளைத் தரிசித்த பூரிப்போடும் மனநிறைவோடும் திருமருகல் திருத்தலம் செல்வோம்.

திருமருகல்

திருச்செங்காட்டங்குடியிலிருந்து கிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவு சென்றால் திருமருகல் திருத் தலத்தை அடையலாம். நன்னிலம்தான் அருகிலுள்ள ரயில் நிலையம். அங்கிருந்து கிழக்கே ஏழு மைல் தொலை விலுள்ளது திருமருகல். நாகப்பட்டினம் செல்லும் பஸ்ஸில் செல்லலாம். நாகப்பட்டினம் ரயில் நிலையத்திலிருந்து பதினைந்து மைலில் உள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்திலுள்ள பல பாடல்பெற்ற தலங்களில், மிகச் சிறப்புப் பெற்றது திருமருகல். அப்பரும், திருஞானசம்பந்தரும் அருளிய மூன்று பதிகங்களைப் பெற்றுள்ளது காவிரியின் தென் கரையிலுள்ள நூற்றிருபத்தேழு பாடல் பெற்ற தலங்களில், இது எண்பதாவதாகத் திகழ்கிறது.

திருமருகல், நீர்வளமும் நிலவளமும் பொருந்திய அழகிய சிற்றூர். ஊருக்கு மாலையிட்டது போல், தெற்கே புத்தாறும் வடக்கே முடிகொண்டான் ஆறும் ஓடு கின்றன. நெல் சாகுபடியைத் தவிர வாழை, மூங்கில்,

தென்னை முதலியவை செழித்து வளர்ந்து கிராமத்தின் எழிலுக்கு மேலும் அழகூட்டுகின்றன.

ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான், 'மடையார் குவளை மலரும் மருகல்' என்றும், 'கொய்தார் குவளை குலவும் மருகல்' என்றும், 'மலிநீர் மருகல்' என்றும் இத்தலத்தைக் குறிப்பிடுகிறார்.

திருமருகலில் உள்ளது மாணிக்கவண்ணர் ஆலயம், வடமொழியில் 'இரத்தினகிரீச்வரர்' என்று பெயர். அம்பிகையின் பெயர் வண்டுவார்குழலி. வடமொழியில் 'ஆமோதளநாயகி.' மிகவும் பழமையான கோயில். கிழக்குப் பார்த்த திருச்சந்நிதியுடையது. ராஜகோபுரம் ஐந்து நிலைகள் கொண்டது, தெற்குக் கோபுரம் சிறியது. கோயிலுக்குள் இரண்டு பிராகாரங்கள். மடவிளாகத்தையும் வீதிகளையும் சேர்த்தால் நான்கு பிராகாரங்களாகின்றன.

திருக்கோயிலின் முன்புறம் உள்ள அழகிய குளத்துக்கு லட்சுமி தீர்த்தம் என்று பெயர். இத்தீர்த்தத்தில் வரலட்சுமி நோன்பு நாளில் நியமநிஷ்டையுடன் நோன்பு இருந்து நீராடி, மறுநாளும் நீராடி மாணிக்கவண்ணரைத் தரிசித்துப் பாரணை செய்தால் கடன் தொல்லை நீங்கி, செல்வம் பெருகுமாம். இப்போதும் இப்பழக்கம் இருந்து வருவதைக் காணலாம், குளக்கரையில் முத்துகணபதி கோயில் உள்ளது.

ராஜகோபுரத்தைக் கடந்து உட்சென்றதும் கொடிமர மண்டபம். அதையடுத்து, அம்மன் கோயில் மகா மண்டபம். பின்னர், மாணிக்கவண்ணரின் திருச்சந்நிதி.

இது ஒரு மாடக் கோயில். அதாவது, செயற்கை மலைக்கோயில். சோழன் கோச்செங்கணான் கட்டிய எழுபத்தெட்டு மாடக் கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்த சோழப் பேரரசன், முற்பிறவியில் திருவானைக் காவிலுள்ள ஒரு சிலந்தியாய் இருந்தான். அச்சிலந்தி, சிவபெருமான் மீது வெயில் படாமலும், தழைகள் விழாமலும் வலை பின்னிப் பந்தலிட்டுக் காத்து வந்தது. அப்பெருமானை ஒரு யானையும் வழிபட்டு வந்தது. சிலந்தி எச்சிற்பந்தல் போட்டியிருப்பது யானைக்குப் பிடிக்க வில்லை. தினமும் அதை அழித்துவிட்டே, சிவபெருமானின் வழிபாட்டில் ஈடுபட்டது. சிலந்தியும், தினமும் ஒரு புது வலை பின்னிக்கொண்டு வந்தது. இதனால், சிலந்திக்கும் யானைக்கும் பகை மூண்டது. யானையின் துதிக்கையினுள் சிலந்தி புகுந்தது. யானை மாண்டது. சிலந்தியும் இறந்தது. குற்றமே புரினும் குணம் பாராட்டி ஆட் கொள்ளும் பெருமான், சிலந்தியை அடுத்த பிறவியில் மன்னனாகப் படைத்தார். செங்கட்சோழன் என்று பெயர் படைத்த அம்மன்னன், 'சிலந்திச் சோழன்' என்று சிறப்புப் பெயர் பெற்றான். இந்நிகழ்ச்சியை அப்பரடிகள், 'புத்திரனார் சிலந்தியும் வாயினூலால் பொதுப்பந்தரது விழைத்துச் சருகால் வேய்ந்த. சித்தினாலரசாண்டு, சிறப்புச் செய்யச் சிவகணத்துப் புகப்பெய்தார்' என்று அருளிச் செய்திருக்கிறார்.

அச்சோழனுக்கு, முற்பிறவியின் நினைவு பசுமையாக இருக்கவே, யானையின் மீதுள்ள ஆத்திரத்தால், யானை ஏறமுடியாத பெருங் கோயில்களாகக் கட்டினான். அக் கோயில்கள் மாடக் கோயில்கள் என்றும், 'யானை ஏறாப் பெருங்கோயில்' என்றும் அழைக்கப்படுகின்றன.

திருமருகல் கோயிலில் மாணிக்கவண்ணர் சந்நிதிக்குச் செல்லும் படிக்கட்டுகள் முன்புறம் இருக்காது. பக்கத்தில் தான் இருக்கும்.

மலைக்கோயிலை விட்டுக் கீழிறங்கியதும் அம்மன் கோயில் மகாமண்டபம். இம்மண்டபத்தின் சுவரில் தல புராண வரலாறு சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

பராசரர் மச்சகந்திக் காதல், வியாசர் பிறப்பு, பராசரர் நாரதரைச் சந்தித்தல் போன்ற படங்களும், சீராளன் கல்வி பயிலுதல், செட்டி ப்பிள்ளைக்கு விஷம் தீண்டியது, ஞான சம்பந்தப் பெருமானால் உயிர் மீண்டு, செட்டிப்பெண்ணை மணம் புரிதல் போன்ற காட்சிகளும் இருக்கின்றன. (இந்த வரலாற்றைப் பின்வர் அறிவோம்.)

அம்பிகை தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரே தெற்குக் கோபுர வாயில் இருக்கிறது.

இறைவன் சுயம்புமூர்த்தி. அதாவது, உளிபடாமல் உருவானதாகும். சிவலிங்கத்தின் பீடம் சதுரமானது பாணத்தின் அடிப்பாகத்தில் ஒரு வெட்டு காணப்படுகிறது

குசகேது மகாராஜா இங்கு வந்த போது, இப்பகுதி அடர்ந்த வாழைக் காடாக இருந்ததாகவும், காட்டை வெட்டும் போது கீழிருந்து இரத்தம் பீரிட்டதாகவும், அரசன் சுற்றுப்புறமும் வெட்டிப் பார்த்து இறையுருவைக் கண்டு ஆலயம் எழுப்பியதாகவும் புராண வரலாறு. சிவலிங்கத்துக்கு வேர் நீளமாக ஓடியிருக்கிறதாம். அசைக்க முடியவில்லையாம்.

மாணிக்கவண்ணர் சந்நிதியின் வலப்புறத்தில் சோமாஸ் கந்தர் இருக்கிறார். கிழக்கே நவக்கிரகங்கள், சூரியன், பைரவர் முதலானோர் இருக்கிறார்கள். ஸ்ரீ நடராஜர் தெற்கு முகமாக எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீ ஞான சம்பந்தப் பெருமான் கூத்தாடும் பிள்ளையாராகக் காட்சி தருகிறார். தென்பிராகாரத்தில் அறுபத்துமூன்று நாயன் மார்களின் வடிவங்கள் தூய ஆடையணிந்து வரிசையாக நின்றிருப்பது, கண்கொள்ளாக் காட்சியாகும்.

வெளிப் பிராகாரம் தென்புறத்தில், சுரம் தீர்த்த விநாயகர் கோயிலைத் தரிசிக்கிறோம். சோழ மன்னன் ஒருவனுக்கு வெப்ப நோய் மிகுந்திருந்ததாகவும், அதனை

நீக்கிய காரணத்தால் அவருக்குச் 'சுரம் தீர்த்த விநாயகர்' என்று பெயர் வழங்கலாயிற்று என்றும் செவிவழி வந்த செய்தியால் அறிகிறோம். இன்றும் சுர நோய் உள்ளவர்கள் அந்த விநாயகப் பெருமானுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டு, அபிஷேக ஆராதனைகள் செய்வித்தால், சுரம் நீங்கப்பெற்றுச் சுகம் அடைகிறார்கள். வடக்குப் பிரா காரத்தில் வில்வ மரத்தடியில் ஸ்ரீ சந்தான விநாயகர் இருக்கிறார். அதற்கு எதிரில் ஒரு சிவலிங்க சந்நிதி மேற்குப் பார்த்து அமைந்திருக்கிறது. அது பழைமையானது. மருகலுடையார் என்றும் பிராவிடையார் என்றும் திருநாமங்கள். அதையொட்டி தெற்குப் பார்த்து வீற்றிருக்கும் அம்பாளுக்கு சௌந்தரநாயகி என்று பெயர். வடக்குப் பிராகாரத்தில் வாழை மரம் உள்ளது. அதுதான் தல விருட்சம். மருகல் அல்லது மருகு என்றால் வாழை.

திருமருகலுக்கு வடமொழியில் 'கதலிவன க்ஷேத்திரம்' என்று பெயர். சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'வாழை காய்க் கும் மருகல் நாட்டு மருகலே' என்று கூறியிருக்கிறார். 'வாழை காய்க்கும்' என்ற சொற்றொடர் வாழை தல விருட்சமாக அமைந்திருப்பதை அறிவிக்கிறது. இவ்வாழை தானாகவே பயிராகிறது. இதன் பழம், தேன் போன்ற சுவைமிக்கதாக உள்ளது. இந்த வாழையைக் கோயிலுக்கு வெளியே எடுத்துச் சென்று நட்டால் பயிராவதில்லை.

இத்தலத்தில் தேரோடும் வீதி நான்கின் மூலை களிலும் விநாயகர் கோயில்கள் உள்ளன. தென் கோபுர வாயிலின் எதிரே, தெற்கு வீதியில் 'விடந்தீர்த்த விநாயகர்' கோயில் இருக்கிறது. அவரே தல விநாயகர்.

விடந்தீர்த்த விநாயகர் கோயிலுக்கு அடுத்து தற்போது தேவஸ்தான அலுவலகம் உள்ள மடத்தில் முன்னொரு காலத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருந்ததாம். அங்குதான் சிறுத்தொண்டரின் மகன் சீராளன் படித்ததாகவும்,

தினமும் திருச்செங்காட்டங்குடியிலிருந்து அவன் இங்கு வந்து சென்றுகொண்டிருந்ததாகவும் கூறுகிறார்கள். இம் மடத்துக்குப் பின்புறமுள்ள குளத்துக்குச் 'சீராளன் குளம்' என்று பெயர். இக்குளத்தில் ஐப்பசி மாதத்திலும், சித்திரை மாதத்திலும் அமாவாசையன்று விதிப்படி நீராடி, மாணிக்கவண்ணரையும் வண்டுவார்குழலியம்மையையும் வழிபட்டால் புத்திரப்பேறு கிட்டுவதாக நம்பப்படுகிறது.

இந்த 'விடந்தீர்த்த விநாயகர்' கோயிலுக்கருகில், விடுதியில் பாம்பு தீண்டி மரித்த ஒரு செட்டிப் பிள்ளையை உயிர்ப்பித்து அற்புதம் ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார் ஸ்ரீ திருஞானசம்பந்தப் பெருமான். மருகல் தலத்துக்குப் பெருமை சேர்க்கும் நிகழ்ச்சிகளில் இது புகழ்பெற்றது.

செட்டியார் குலத்தைச் சார்ந்த ஒரு கன்னிப் பெண்ணும் அவளது மாமனும் திருமணம் செய்து கொள்வ தென்று முடிவு செய்து வீட்டுக்குத் தெரியாமல் மாணிக்க வண்ணரின் தரிசனத்துக்காகத் திருமருகல் வந்தனர். அன்று இரவு தரிசனம் முடிந்ததும் அவர்கள் ஒரு விடுதியில் தங்கினர். திருமணம் முடியாததால் ஒருவரையொருவர் தீண்டாமல் சற்றுத் தள்ளியே படுத்திருந்தனர். அப்போது ஒரு பாம்பு செட்டிப் பிள்ளையைத் தீண்டிவிடவே, விடம் ஏறி அவன் மாண்டு போனான். இதைக் கண்டு கன்னிப் பெண் கண்ணீர்விட்டு அழுதாள். 'நான் உன்னைத் தீண்டுவதற்கு முன் பாம்பு உன்னைத் தீண்டி விட்டதே' என்று கதறியழுதாள். அந்நிலையிலும் தெய்வத்தை இகழாமல், 'சடையாய், விடையாய், மருகலுடையாய், வீரக்கழலணிந்த வேந்தே. அரவும் பிறையும் அணிந்த அரனே, ஆலகால விஷத்தின் ஆண்மை ஒடுங்க நீலகண்டம் கொண்ட நெடியோய் காக்க வேண்டும்' என்று இரவெல் லாம் புலம்பினாள். பொழுதும் புலர்ந்தது.

அச்சமயம், மாணிக்கவண்ணரின் வழிபாட்டுக்காகத் திருமருகலுக்கு எழுந்தருளித்த ஞானசம்பந்தர் அவ்வழியே

செல்கிறார். கன்னியின் அழுகுரல் அவர் காதுகளில் விழுகிறது. அந்த அவல நிலையிலும், ஆண்டவனின் புகழ்பாடும் அவளது உள்ளமும் பண்பும் பக்தியும் அவரைக் கவர்ந்திழுக்கின்றன. அவள் அருகில் சென்று, 'நீ யாரம்மா, உனக்கு நேர்ந்த துன்பம் யாது?' என்று வினவுகிறார். அவள் தனது ஊர் வைப்பூர் என்றும் தந்தையின் பெயர் தாமன் என்றும், அவர் பெற்ற ஏழு பெண்களில் தான் கடைசிப் பெண் என்றும், தன் மாமன் மீது தான் கொண்ட மையலுக்குப் பெற்றோர் தடையாய் இருந்ததால், வீட்டைவிட்டு அவருடன் வெளியேறிவிட்டதாகவும், திருமணம் முடியும் முன்பே காதலர் பாம்பு தீண்டி இறந்துவிட்டதாகவும் கூறினாள். இதைக் கேட்டு சம்பந்தரது உள்ளம் கரைந்தது. உடனே ஒரு பதிகம் பிறக்கிறது. 'சடையாயெனுமால்' என்று தொடங்கும் அந்தப் பதிகத்துக்கு 'விடந்தீர்த்த பதிகம்' என்று பெயர். கற்புடைய இக்கன்னிக்காக சம்பந்தர் மாணிக்கவண்ணரிடம் மன்றாடுகிறார். 'உரியவளின் உடல் மீது விழுந்து அழுது புரள வேண்டியவள் உன்னையே போற்றிப் புகழ்கிறாள். 'பாழும் தெய்வமே' என்று கதற வேண்டியவள். 'பெருமான் கழல் வாழ்க' என்னே வாழ்த்துகிறாள். இப்படிப்பட்ட உத்தமியை நீ சோதனைக்குள்ளாக்கலாமா? இப்படிப்பட்டவளைத் துயரத்துக்குள்ளாக்கினையே' அலராக்கினையே, அயர்வாக்கினையே, புலருந்தனையும் துயிலாள் புலரப்போந்து அலரும் படுமோ அடியாள் இவளே' என்றெல்லாம் பெருமானிடம் பரிந்துரைக்கிறார்.

உள்ளம் கரைந்து மெய்யடியார் எழுப்பிய கூக்குரலைக் கேட்டு, ஆண்டவனின் திருவருள் வெள்ளம் பெருகிப் பாய்ந்தது. துயில் நீங்கி எழுந்தவன் போல் வணிகன் உயிர்பெற்று எழுந்தான். காதலர் இருவரும் சம்பந்தரின் திருவடிகளை வணங்கினர். வள்ளல் மாணிக்கவண்ணர் வன்னி மரம் சாட்சியாக, வணிகனுக்கும் அந்தக் கன்னிகைக்கும் மணம் முடித்து வைத்தார்.

அந்த வன்னி மரம் கோபுர வாயிலுக்கருகில் இருப்பதை இன்றும் காணலாம்.

ஆண்டுதோறும் திருமருகலில் செட்டிப்பிள்ளை—செட்டிப் பெண் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. முதல் நாள் விடந்தீர்த்த விநாயகர் கோயிலுக்ும் சீராளன் கல்வி பயின்ற மடத்துக்கும் இடையே கொட்டகை போட்டு, மணமக்களின் விக்ரகங்களை எழுந்தருளப் பண்ணுகிறார்கள். அங்கு 'விடந்தீர்த்த பதிகம்' ஓதப் பட்டு, வணிகனைத் திருஞானசம்பந்தப்பெருமான் உயிர் பிழைக்க வைக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மறுநாள் இரவு ஏழரை மணிக்குக் கோயில் முன்மண்டபத்தில் சுவாமி யையும் அம்பாளையும் அலங்காரம் செய்து எழுந்தருளச் செய்தார்கள். 'பின்னர், வாணவேடிக்கைகளுடன் சுவாமி யும் அம்பாளும் புறப்பட்டனர். பிராகாரத்தை வலம் வந்து மீண்டும் மண்டபத்தில் வந்து அமர்ந்தனர். தீபாரா தனைக்குப் பின்னர் பஞ்சமூர்த்திகள் புறப்பாடாயிற்று, முன்னே விநாயகர், சுப்ரமணியர் செல்ல, மாணிக்க வண்ணரும் வண்டுவார்குழலியும் நடுவில் செல்ல பின்னால் சண்டிகேச்வரர் தொடர, பஞ்சமூர்த்திகளும் வன்னி மரத் துக்குத் தென்புறம் வடக்கு நோக்கி வீற்றிருந்தனர். அடுத்து, உட்புறமிருந்து ஸ்ரீ சம்பந்தருடன் மணமக்கள் வந்து மணமேடையில் அமர்ந்தனர். 'விடந்தீர்த்த விநாயகர்' ஆலயத்திலிருந்து மேள தாளத்துடன் சீர் வரிசைகள் வந்து சேர்ந்தன.

பின்னர், திருமணச் சடங்குகள் தொடங்கி, இரவு பதினோரு மணியளவில், வணிக மாப்பிள்ளை தன் முறைப் பெண்ணுக்குத் திருமாங்கல்யதாரணம் செய்து திருமணம் செய்து கொண்டார். ஈராயிரம் பேர் இக்காட்சியைக் கண்டு களித்தனர். திருமணம் முடிந்து, மணமக்கள் பல்லக்கில் அமர்ந்து, பஞ்சமூர்த்திகளுடன் வீதி உலா

வந்து, விடியற்காலை சுமார் மூன்று மணியளவில் மீண்டும் கோயிலை அடைந்தனர்.

திருமருகல் திருத்தலத்துக்குத் தென்மேற்கில் சுமார் இருபது மைலில் உள்ளது வைப்பூர் என்ற ஊர். புத்தாறு, வனப்பாறுகளைக் கடந்து இங்கு செல்ல வேண்டும். அவ்வூரின் தலைவனான தாமனின் ஏழாவது மகள், தன் மாமனுடன் திருமருகல் வந்து, திருமணம் புரிந்து கொள்ளும் நோக்கத்துடன் ஓரிரவு தங்கியிருந்த போது, அந்த வணிக மகனைப் பாம்பு தீண்டியதால், நஞ்சு ரத்தத்தில் கலந்து அவன் மரணமடைய, தனிமையில் விடப்பட்ட அப்பெண், அவனது உயிரை மீட்டுத் தரும்படிப் பலவாறு கதறியழுது மருகல்பெருமானிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தபோது, அழுகுரலின் அரவம் கேட்டு அங்கு வந்த சீகாழிப் பிள்ளையார் மனம் மிகக் கரைந்து, அப் பெண்ணின் துயர் தீர்க்கும்படி மருகலுறை மாணிக்கத் திடம் பரிந்துரையாகப் பாடிய பதிகம், தெய்வீகக் காதலின் இலக்கணத்துக்கு ஓர் அமர காவியமாக அமைந்துள்ளது. தூய காதல், மலிவான உடல் இன்பத்தைக் கடந்து, மாறாகப் பேரன்பின் உறைவிடமாகி, இருவரையும் பேரின்பத்தில் நிலைகொள்ளச் செய்யும் சக்தியும் தன்மையும் வாய்ந்தது என்பதை ‘சடையா எனுமால்’ எனத் தொடங்கும் இப்பதிகம் பறைசாற்றுகிறது.

அடுத்து, ஒரே பரமாத்ம தத்துவம்தான் பல வடிவங்களும் பல நாமங்களும் கொண்டு அனைத்துக் கோயில்களிலும் எழுந்தருளி, பக்தர்களுக்கு அடைக்கலம் தந்து அவர்களை ஆட்கொள்கிறது என்பதை ‘அங்கமும் வேதமும் ஓதும் நாவர்’ என்று தொடங்கும் அவரது திருமருகல் தேவாரப் பதிகம் நமக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது.

இளம் வணிக மகனுக்கும் மகளுக்கும் திருமணம் முடித்து, திருமருகலில் சில காலம் தங்கியிருந்தார் சம்பந்தப்

பெருமான். அச்சமயம் திருச்செங்காட்டங் குடியிலிருந்து சிறுத்தொண்டநாயனார் அங்கு வந்து, மீண்டும் தம் ஊருக்கு எழுந்தருளும்படி சம்பந்தரிடம் விண்ணப்பித்துக் கொண்டார். அத்திருத்தலம் செல்ல இறைவனது அருளை பெறும் எண்ணத்துடன் அடியார் திருக் கூட்டத்துடன் மாணிக்கவண்ணர் ஆலயத்தினுள் சென்ற சம்பந்தர், அம்மையப்பர் திருவுருவை மனத்தில் தியானித்து, துதித்து வணங்கினார். அப்போது சிவபெருமான், திருச்செங் காட்டங்குடி மேவும் கணபதீச்சரரின் திருக்கோலத்தில் ஞானசம்பந்தப் பெருமானுக்குத் தரிசனம் தந்தருளினார். அக்காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பொழிய, இவ்விரு தலைகளையும் இணைத்து. இணை யிலாப் பதிகம் ஒன்று பாடியருளினார் சம்பந்தர்.

இப்பதிகம் முழுவதும், 'மருகல் நிலாவிய மைந்த கணபதீச்சரம் காமுறவே சொல்லாய்' என்று, வினாவும் உரையுமாக அமைந்துள்ளது. முன் நான்கு அடிகள் திருமருகலின் பெருமையையும், பின் நான்கு அடிகள் திருச் செங்காட்டங்குடியின் மகிமையையும் விளக்குவதாக அருள்வாக்கு வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

சம்பந்தரின் இவ்விரு தேவாரப் பதிகங்கள் தவிர, திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரப் பதிகம் ஒன்றும் திருமருகலுக்குப் பெருமை கூட்டுகிறது. 'பெருகலாம் தவம் பேதமை தீரலாம்' என்று தொடங்கும் இப்பதிகத்தின் முதல் மூன்று பாசுரங்களில் மருகல் இறைவனான மாணிக்க வண்ணரை வழிபடுவதால் கிட்டும் பெரும் பேற்றினைக் கூறுகின்றார்.

இவரது திருவடி வாழ்த்தி வணங்கினால், தவம் பெருகலாம்; அறியாமை தீரலாம். மாறுபட்டதாகிய சிந்தை திருந்தலாம். ஒப்பற்ற பேரானந்தத்தைப் பருக லாம். இதன் பயனாக, ஞான மோட்சமும் எளிதாகும் என்கிறார் நாவுக்கரசர்.

நான்காவது பாசுரத்திலிருந்து ஒன்பதாவது பாசுரம் வரை அகப்பொருள் விளக்கம் சுவைபடக் கூறப் பட்டுள்ளது.

'ஒரு தலைவி, கிளிக்குப் பாலமுதூட்டிப் பரிவுடன் வளர்க்கிறாள். பற்பல சொற்களைக் கற்றுத் தருகிறாள். எதற்காக? மருகல்பெருமானிடம் தூது அனுப்புவதற்காக. அதுமட்டுமின்றி, இப்பெண் இறைவனை நினைந்து உள்ளம் உருகுகிறாள். கைவளையல்கள் சோரா நின்று கண்ணீர் மல்குகின்றாள். ஆடை அவிழ, மருகல்பெருமான் வரும் வழி நோக்கி ஓடுகின்றாள். அத்தலைவனிடம் மனதைப் பறிகொடுத்தவள், அவனைக் காண முடிய வில்லை. இருப்பினும், தன் காதலினின்றும் விடுபட முடியாமல், அவனை அடைய வேண்டும் என்ற வேட்கை யால் மருகுகிறாள். மணம் வீசும் தன் நீண்ட கூந்தலை முடியாதவளாய், இப்பெண் 'மருகல் பெருமானே, இடப வாகனத்தோடு வந்திடாய்' என்று வேண்டுகிறாள்.

ஜீவாத்மா என்ற பெண்தலைவி, பரமாத்மாவென்ற தலைவனைக் குறித்து உருகி உருகி, காதலாகிக் கண்ணீர் மல்கி, கசிந்துருகி அவன் சிந்தனையையே தவமாகக் கொண்டு, தன்வயமிழந்து, அவனோடு இணைந்து உய்ய வேண்டும் என்ற தூய பக்தி நிலையை இங்கு உருவகப் படுத்திக் காட்டுகிறார் அப்பரடிகள். ஞானசம்பந்தரது 'சடையா எனுமால்' என்ற பதிகமும், அப்பரடிகளின் 'பெருகலாம்தவம்' என்ற பதிகமும், தெய்வீகக் காதலின் தன்மையையும் தூய பக்தியின் இலக்கணத்தையும் ஒருங்கே படம்பிடித்துக் காட்டும்வண்ணம் அமைந்திருக்கும் ஒற்றுமை, திருமருகல் திருத்தலத்தின் உயர்வுக்கும் பெரு மைக்கும் மேன்மைக்கும் கட்டியம் கூறித் திகழ்கிறது.

அருணகிரியார், பழநி முருகனை அழைக்கும்போது, அவர் தந்தையார் எழுந்தருளியிருக்கும் இடங்களைத் தொகுத்து, 'தமிழ்க் காழி மருதவனம் மறைக்காடு

திருமருகல் தனுக்கோடி வருகுழகர் தருவாழ்வே' என்று கூறுகிறார்.

திருமருகலை விட்டுப் புறப்படும் முன், அங்குள்ள ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயிலுக்குச் சென்றோம். அங்கு மூலவரும் உற்சவமூர்த்தியும் வரதராஜப்பெருமாள் என்ற திருநாமத்துடனேயே விளங்குகிறார்கள். ஆண்டுதோறும் மகத்தின் போது, சமுத்திரக் கரைக்குச் சென்று திருமலை ராயன்பட்டினம் என்ற ஊரில் தீர்த்தவாரி நடைபெறுகிறது. தனியாக ஸ்ரீ ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. சாதாரணமாக, சிவன் கோயில் புகழ்பெற்றிருக்கும் ஊர்களில், பெருமாள் கோயில் கவனிப்பாரற்று இருக்கும். ஆனால், இங்கு பெருமாள் கோயில் துப்புரவாகப் பாதுகாக்கப்பட்டு வருவது போற்றப்பட வேண்டிய செய்தியாகும். விவேகாநந்தர் நற்பணி மன்ற'த்தைச் சேர்ந்த இளைஞர்கள், ஆலயத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதில் பெரும் அக்கறை காட்டி வருகிறார்கள் என்ற செய்தி காதில் தேனாகப் பாய்ந்தது. இந்த மன்றத்தின் சாதனை, பிற ஊர்களில் உள்ள இளைஞர்களின் உள்ளங்களில் புகுந்து, அவர்களுக்கு உற்சாகமூட்டி, அவர்களையும் தெய்வத் தொண்டில் ஈடுபடுத்தும் என்ற நம்பிக்கையுடன், செங்குந்த முதலியார்களுக்குச் சொந்தமான ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயிலுக்குச் சென்றோம். கீழ வீதியும் வடக்கு வீதியும் கூடுமிடத்தில் அக்கோயில் இருக்கிறது. அங்கு உற்சவங்கள் முறைப்படி நடப்பதாக அறிந்தோம். கோயிலும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

திருச்சாத்தமங்கை

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் திருநீலநக்கர். அந்தணர் குலத்தில் தோன்றிய அவர்,

சிவபெருமானையும் அவருடைய அடியார்களையும் வணங்குவதையே தம் வாழ்வின் பெரும் பயனாகக் கருதியவர். தினமும் முறைப்படி சிவபெருமானை வழிபட்டு வந்ததோடு, சிவனடியார்களுக்குத் திருவமுது அளித்துப் பணிவிடைகள் செய்து வந்தவர்.

அன்று திருவாதிரை நன்னாள். சிவபூஜை செய்வதற்காக அவ்வூரிலுள்ள கோயிலுக்குச் சென்றார். அவரது அன்புத் துணைவியார் மங்கையர்க்கரசியும் பூஜைக்குரிய பொருட்களை எடுத்துக் கணவருடன் ஆலயத்துக்கு வந்தார். இருவரும் உட்பிராகாரத்தை வலம் வந்து மூலஸ்தானத்தின் முன்பு நின்று, சிவலிங்கத்தைத் தரிசித்தார்கள். 'ஓம் நமசிவாய' என்ற திருவைந்தெழுத்தை ஓதி, மெய்ம்மறந்திருந்தார் திருநீலநக்கர்.

அப்போது சுதைச்சிலம்பி என்ற பூச்சியொன்று, உத்தரத்திலிருந்து சிவலிங்கத்தின் மீது விழுந்தது. அது நூல் நூற்கும் சிலந்தியாகும். தீண்டிய இடமெல்லாம் கொப்புளங்களாக்கி விடும் விஷத்தன்மை வாய்ந்த ஒரு வகை பூச்சியாகும் அது.

அப் பூச்சி சிவலிங்கத்தின் மீது விழுந்ததைக் கண்ட திருநீலநக்கரின் துணைவியார் பதறிப் போய் விட்டார். அது சுவாமியைத் தீண்டினால், அவர் மேனியில் கொப்புளங்கள் ஏற்பட்டுவிடுமே என்று அஞ்சி, சட்டென்று வாயால் ஊதி அப் பூச்சியை அகற்றினார். அப்போது அவர் வாயிலிருந்த உமிழ் நீரும் சிவபெருமான் மேல் பட்டுவிட்டது, அதைக் கண்ட திருநீலநக்கர் கடுங்கோபம் கொண்டார். மனைவியின் செய்கையால், சிவபூஜையில் அபசாரம் நேர்ந்து விட்டதே என்று உள்ளம் நொந்தார். மனைவியை நோக்கிச் சுடுசொல் உதிர்த்தார்: ''அச் சிலம்பியை வேறு வகையினால் துரத்தாமல், எந்தையின் மீது எச்சில் படும்படி செய்து விட்டாயே...இனி உனக்கும்

எனக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. உன்னை நான் இக்கணமே துறந்தேன்'' என்று சபதமிட்டார்.

கணவர் ஆணைப்படியே மனைவி ஒதுங்கி ஒருபுறம் நிற்க, திருநீலநக்கர் வழிபாட்டினை முடித்துக் கொண்டு, மாலைப் பொழுதில் தம் இல்லத்தை அடைந்தார். மனைவியோ, மனைக்குத் திரும்பாமல் கோயிலிலேயே தங்கி விட்டார்.

அன்றிரவு நாயனாரின் கனவில் சிவபெருமான் தோன்றி, ''பக்தரே, என் திருமேனியைப் பாருங்கள். தங்கள் மனைவியார் ஊதி எச்சில் பட்ட இடம் தவிர, பிற இடங்களிலெல்லாம் கொப்புளங்கள் தோன்றியுள்ளன' என்று காட்டினார். பக்தியினால் மங்கையர்க்கரசி செய்த அன்புத் தொண்டை, அபச்சாரமாகக் கருதாமல், பெருங்கருணையோடு பெருமான் அதை ஏற்றுக் கொண்டதை நினைத்து ஆனந்தக் கூத்தாடினார் நீலநக்கர். கண்ணப்ப நாயனார் உள்ளன்புடன் அளித்த எச்சில் அமுதை உண்டுகளித்த உமாமகேச்வரன் ஆயிற்றே!

மறுநாள் ஆலயத்துக்குச் சென்று, தன் குற்றத்தை மன்னித்தருளும்படி பெருமானின் திருவடிகளில் விழுந்து வணங்கி, கண்ணீர் மல்கி, மனைவியை அழைத்துக் கொண்டு இல்லம் திரும்பினார் நாயனார்.

திருநீலநக்க நாயனார் பிறந்து வளர்ந்த திருத்தலம் சாத்தமங்கையாகும். அது தற்போது 'சீயாத்தமங்கை' என்று அழைக்கப்படுகிறது. அது திருமருகலுக்கு வடகிழக்கே ஒரு மைலில் அரிசொல் ஆற்றுக்கு வட கரையில் உள்ள தலம். திருச்செங்காட்டங்குடியிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ளது. அடுத்து அத் தலத்தைத் தரிசிக்கச் செல்கிறோம்.

பஸ் பாதையிலிருந்து சீயாத்தமங்கைக்குத் திரும்பிச் செல்லும் வழியில் இருபுறமும் தென்னைமரங்கள் வரிசை

யாக நின்றிருப்பது அப்பகுதியின் வனப்பை மேலும் கூட்டுகிறது.

அத்தலத்தில் மாதர்கள் தாமரைத் தடாகத்தில் நீராடும்போது அவர்களுடன் அன்னப்பறவைகளும் நீராடுமாம். வேதம் ஓதும் சிறுவர்களுடன் சேர்ந்து தாம் கற்ற சாமவேதத்தைப் பல நாகணவாய்ப் பறவைகள் தம் குஞ்சுகளுக்குக் கற்றுத் தருமாம். அங்கு வாழ்ந்த அந்தணர்கள், திருவெண்ணீறே உண்மைப் பொருள் என்று உணர்ந்த சான்றோர்கள். தட்சிணாக்னி, காருகபத்தியம், ஆகவநீயம் என்ற மூன்று தீயை வளர்த்து அறம் வளர்த்தவர்கள். பெண்டிரோ, இம் முத்தீயுடன் கற்புத் தீயையும் வளர்த்து நான்கு தீயாக வளர்த்து வந்தார்கள்.

திருச்சாத்தமங்கையில் சிவபெருமான் திருக்கோயில் கொண்டுள்ள ஆலயத்துக்கு அயவந்தி என்று பெயர். பிரும்மதேவனான அயன் போற்றி வழிபட்டு சரஸ்வதியை அடைந்ததால் இப்பெயர் ஏற்பட்டது.

மேற்கே பார்த்த திருச்சந்நிதி, கருங்கல் கட்டடம். நகரத்தார் திருப்பணி. சுவாமியின் பெயர் பிரும்மபுரீச்வரர் அல்லது அயவந்தீச்வரர். அம்பாளின் திருநாமம் இருமலர்க் கண்ணி அல்லது உபய புஷ்ப விலோசினி.

ஆலயத்துக்கு வெளியே பிரும்ம தீர்த்தம் என்ற பெரிய குளம் உள்ளது. கரையில் சித்தி விநாயகர் ஆலயம் இருக்கிறது. இரண்டு பிராகாரங்கள். மேற்குப் பிராகாரத்தில், சனீச்வரரும் சூரியனும் இருக்கின்றனர். வடக்குப் பிராகாரத்தில் சப்த கன்னிகள் உள்ளனர். நவக்கிரகங்கள், மகாலிங்கம், விசுவநாதர், விசாலாட்சி முதலியோர் இருக்கிறார்கள். தெற்கே சந்திரனும், பழம்பெரும் விநாயகரும் இருக்கின்றனர்.

மண்டபத்திலுள்ள ஸ்ரீ நடராஜ சந்நிதிக்குச் செல்ல தென் பிராகாரத்திலிருந்து தனி வழியிருக்கிறது.

மண்டபத்தில், நால்வர், திருநீலநக்க நாயனார், மங்கையர்க்கரசி, சோமாஸ்கந்தர், மகாகணபதி, சுப்ர மணியர், மகாலட்சுமி முதலியோரைத் தரிசிக்கிறோம்.

சுவாமி சந்நிதியின் முன்பு, துவாரபாலகருக்கு அருகில் விநாயகரும் தண்டாயுதபாணியும் உள்ளனர். துவார பாலகரின் (முண்டி) அருகில் சம்பந்தரின் தேவாரப்பதிகம் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

பெரிய நடாரஜர், சிறிய நடராஜர், திருநீலநக்க நாயனார், சுப்ரமணியர், அப்பர், சம்பந்தர், சரஸ்வதி முதலியோரின் உற்சவ விக்கிரகங்கள் இருக்கின்றன.

சுவாமி கோஷ்டத்தில் அனைத்துப் பரிவார தேவதை களும் அழகுற அமைந்திருக்கின்றன. அகஸ்தியர், நர்த்தன கணபதி, கௌரி லீலை அனைத்தும் அரிய சிற்பங்களாகும்.

இக்கோயிலில் தட்சிணாமூர்த்தி, கோஷ்டத்திலிருந்து சற்று வெளியே வந்து அமர்ந்திருப்பது புதுமையாக உள்ளது. பின்புறம் ஆலமரம் இல்லை.

இக்கோயிலுக்குக் கொன்றைமரம் தலவிருட்சம், அம் மரத்தில் வருடம் பூராவும், நாள் தவறாமல் ஒரு மலராவது இருக்குமாம்.

இக்கோயிலில் சிவராத்திரியன்று நான்கு கால பூஜைகள் நடைபெறுவதாகவும், ஆவணி மூலத்தன்று உற்சவம் நடைபெறுவதாகவும், மாதாந்திர உற்சவம் எதுவும் நடைபெறுவதில்லையென்றும் தண்டபாணி குருக்கள் கூறினார்.

அம்மன் கோயில், தனி மதிற்சுவருடன் தென்புறம் தனிக் கோயிலாக அமைந்திருக்கிறது. அங்கு பைரவர் இருக்கிறார். நவராத்திரி மண்டபம் ஒன்று இருக்கிறது. அருகில் ஒரு கணபதி அமர்ந்திருக்கிறார்.

திருநீலநக்கநாயனார் சாத்த மங்கையில் சிவத் தொண்டு புரிந்துவரும் நாளில், திருஞானசம்பந்தரின் புகழ் அவர் செவிக்கு எட்டியது. அக்கணம் முதல் அன்னாரைத் தரிசித்து வணங்க வேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தார். அச்சமயம் சற்றும் எதிர்பாராமல் வந்த நற்செய்தி, நீலநக்கரைப் பேரானந்தத்தில் ஆழ்த்தியது. திருஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் அவரது துணைவியார் மதங்கசூளாமணியாரும் உடன் வர அடியார் திருக்கூட்டத்துடன் தல யாத்திரையாக சாத்த மங்கைக்கு எழுந்தருளப் போகிறார் என்பதுதான் தேனினும் இனிய அச்செய்தி.

திருநீலநக்கர், ஊர் முழுவதும் மலர்ப் பந்தலிட்டு, தோரணங்களால் அலங்கரித்து. மலர் மாலைகளுடன் சென்று சம்பந்தர்பெருமானை எதிர் கொண்டழைத்து, முறைப்படி உபசரித்துப் பரவசமெய்தினார். பின்னர், அடியார்கள் புடைசூழ, ஆளுடைய பிள்ளையாரைத் தம் மனைக்கு அழைத்து வந்து, திருவமுது செய்வித்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க, திருஞானசம்பந்தர் அன்றிரவு அம்மனையிலேயே தங்கினார். சம்பந்தர் கோரியபடி, திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது துணைவியாரும் கூட அன்றிரவு அங்கு தங்குவதற்கு நீலநக்கர் வசதிகள் செய்து தந்தார்.

மறுநாட்காலை எழுந்து, ஸ்ரீ அயவந்திநதாரைத் தரிசிக்கச் சென்ற திருஞானசம்பந்தர், ஒரு தேவாரப் பதிகம் பாடியருளினார். இப்பதிகம் முழுவதும் சிவபெருமான் அம்பாளுடன் இணைந்திருக்கும் அர்த்தநாரீச்வரர் திருக்கோலம் போற்றப்பட்டுள்ளது. பெருமானின் திருமேனியழகையும், ஈட்டிய பெருமைகளையும், ஆற்றிய வீரதீரப் பிரதாபங்களையும் கூறும் வகையிலும், உமையவளின பேரழகைப் பலவாறு வர்ணிக்கும் வகையிலும் இப்பதிகம் அழகுற அமைந்துள்ளது. 'பொடிதனைப் பூசும்

மார்பில் புரிநூலொருபாற் பொருந்தக் கொடியன சாயலோடு உடனாவதும் கூடுவதே' என்றும், 'மானன நோக்கி தன்னோடனாவது மாண்பதுவே' என்றும், 'புற்றரவல் குலாளோடுடனாவதும் பொற்பதுவே' என்றும், 'வெந்த வெண்ணீறு பூசி விடையேறிய வேதகீதன் பந்தணவும் விரலாளுடனாவதும் பாங்கதுவே என்றும், 'பண்ணுலாம் பாடல் வீணை பயில்வானோர் பரமயோகி விண்ணுலா மால்வரையான் மகள் பாகமும் வேண்டினையே' என்றும், 'பேரெழில் தோளரக்கன் வலிசெற்றதும் பெண்ணோர் பாகம், ஈரெழிற்கோலமாகியுடனாவதும் ஏற்பதொன்றே' என்றும், 'கங்கையோர் வார்சடைமேல் அடையப் புடை யேகமழும் மங்கையோடொன்றி நின்றம் மதிதான் சொல்லவாவதொன்றே' என்றும் வினாக்கள் தொடுத்து அம்மையப்பனின் அருமை பெருமைகளை அகமகிழ்ந்து அழகுறப் பாடிப் பரவுகிறார்.

செய்யாத்தமங்கையென்றும், சீயாத்தமங்கையென்றும் அழைக்கப்படும் சாத்தமங்கையின் புகழும் இப்பதிகத்தில் பரவிக் காண்கிறது. 'பெருமலர்ச் சோலைமேகம் உரிஞ்சும் சாத்தமங்கை' 'கடிமணம் மல்கி நாளும் கமழும் சாத்த மங்கை' 'தானலங்கொண்டு மேகம் தவழும் பொழிற் சாத்தமங்கை' 'சந்தமாறங்கம் வேதம் தரித்தார் தொழும் சாத்தமங்கை' 'சாதியால்மிக்க சீரால் தகுவார் தொழும் சாத்தமங்கை' 'சமயம் ஆறங்கம் வேதந்தரித்தார் தொழும் சாத்தமங்கை' 'தண்ணிலா வெண்மதியம் தவழும் பொழிற்சாத்தமங்கை' 'சங்கையில்லா மறையோர் அவர்தாம் தொழுத சாத்தமங்கை, என்று அத்தலத்தின் சிறப்பங்களைக் கூறிச் சிந்தைக்கு விருந்து படைத்திருக்கிறார்.

இரண்டாம் பாடலிலும் பதினோராவது பாடலிலும் திருநீலநக்கரைக் குறிப்பிட்டிருப்பது, அவர்பால் திருஞான சம்பந்தர் கொண்டிருந்த மதிப்புக்கும் நட்புக்கும்அடையாள

மாக அமைந்து விட்டிருக்கிறது. 'அடிகள் நக்கன்பரவ அயவந்தி அமர்ந்தவனே' என்றும், 'தமிழ் ஞானசம்பந்தன் மன்னும் நிறையனார் நீலநக்கனொடு மாநகரென்று தொண்டர் அறையுமூர் சாத்தமங்கை அயவந்திமேலாய்ந்த பத்தும்' என்றும் பாடி நண்பர்க்குப் பெருமை சேர்க்கிறார் சம்பந்தப்பெருமான்.

பிரும்மதீர்த்தக் குளத்தையொட்டி, அம்மன் கோயில் நுழைவாயிலுக்கு அருகில் பெரிய வேப்பமரமும் அரச மரமும் சேர்ந்துள்ள மேடையில் நாகப் பிரதிஷ்டைகள் செய்யப்பட்டுள்ளன. குளத்துக்கு மேற்கே செல்லக்குட்டி ஐயனார் கோயில் இருக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன் அதற்குக் குடமுழுக்கு செய்விக்கப்பட்டது.

ஆலயத்துக்கு வெளியே, வடக்கு மதிற்சுவரையொட்டி னாற்போல் பிடாரியம்மன் கோயிலிருக்கிறது. நான்கு கரங்கள் உடைய அம்மன். அவற்றில் பாசாங்குசமும், கபாலமும் டமருகமும் ஏந்தியிருக்கிறாள் தேவி. வலக் காலை மடித்து, இடக் காலைத் தொங்கவிட்டபடி அமர்ந்த திருக்கோலம். வடக்குப்புறத்தில் பசுமடமும் நந்தவனமும் இருக்கின்றன.

அகரக் கொந்தை

சீயாத்தமங்கையிலிருந்து புறப்பட்டு பஸ் பாதைக்கு வந்து, கிழக்கே திட்டச்சேரியைக் கடந்து, நாகூருக்குச் செல்லும் பிரிவுப் பாதையையும் கடந்து சென்றால், திருமலைராயன்பட்டினம் ரோடில் கொந்தை என்ற ஊர் வருகிறது. அதையடுத்து அகரக்கொந்தை என்ற கிராமம். அங்கு அண்மையில் கும்பாபிஷேகம் நடைபெற்ற ஒரு சிறிய சிவன் கோயிலில் தரிசனம் செய்து கொண்டோம்.

பச்சைவண்ணம் பூசப்பட்ட கோயில் எழிற்கோலம் பூண்டிருந்தது. எங்கோ ஓர் மூலையில் இருக்கும் குக்கிராமத்தில், நல்ல முறையில் திருப்பணி செய்து குடமுழுக்கும் நடைபெற்றுள்ள கோயிலைக் காணும்போது, மக்களின் பக்தி உணர்ச்சியையும், நமது சமயத்தின்மீது அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது.

அக்கோயிலில் ஸ்ரீ கைலாசநாதரும் காமாட்சியம்மனும் உறைகிறார்கள். சிறிய வடிவங்கள். விச்வநாதர் சந்நிதியிலும் சிவலிங்கம் மிகச் சிறியதாக உள்ளது. வரசித்த விநாயகர் அமர்ந்திருக்கிறார். கருவறைக் கோஷ்டத்தில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியும் துர்க்கையும் மட்டும்தான் இருக்கிறார்கள். கிழக்குப் பார்த்த கோயில். எதிரில் குளம் இருக்கிறது.

அந்தணர் தெருவில், ஸ்ரீ லட்சுமி நாராயணப்பெருமாளை மூலவராகக் கொண்ட கோயில் இருக்கிறது. அங்குள்ள ஸ்ரீ கோதண்டராமசுவாமி பெரிய விக்ரகம். உற்சவமூர்த்தி, சீதை, லட்சுமணர், ஆஞ்சநேயர், சகிதம் எழுந்தருளியுள்ளார்.

சிவன் கோயிலுக்கு வடக்கே ஸ்ரீ மந்தைவெளிப் பிள்ளையார் கோயில் இருக்கிறது. பக்கத்தில் வீரன், பிடாரி யம்மன் எழுந்தருளியிருக்கும் கோயில் உள்ளது. சிவன் கோயிலோடு, இக்கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

திருப்பனையூர்

காவிரிக்குத் தென்கரையில், தேவாரப் பதிகங்கள் பெற்றுத் திகழும் 127 சிவத் தலங்களில் திருப்பனையூரும் ஒன்று. இது 'நன்னிலம்' 'விசலூர்' என்னும் இரண்டு

ரயில் நிலையங்களுக்கும் இடையே கிழக்குத் திசையில் ஒரு கல் தொலைவில் இருக்கிறது. திருக்கண்ணபுரத்திலிருந்து பாக்கம், கோட்டூர் வழியாகத் திருவாரூர் செல்லும் பா..தயில் எட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. சன்னாநல்லூரிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவு. திருவாரூர் — பொறக்குடிப் பேருந்து பாதையிலிருந்து பிரியும் சாலையில் ஆறுபர்லாங் சென்றாலும் இக்கோயிலை அடையலாம்.

பழம்பெரும் சிவத் தலங்களில் இது ஒன்றாகும். ஒரு காலத்தில் பனையூர் நாட்டின் தலைநகரமாக இப்பனையூர் விளங்கியிருக்கிறது. இப்பகுதியில், பனை மரங்கள மிகுந்து காணப்பட்டதால் இக்காரணப் பெயர் ஏற்பட்டுள்ளது. பனை மரங்களின் நடுவே எழுந்தருளிய சிவலிங்கமே மூலஸ்தானமாகி, பின்னர் பெரிய கோயிலாக வளர்ந்திருக்கிறது. 1,300 ஆண்டுகளுக்கு முன்னர் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசு நாயனாரும், பனையடி அமர்ந்தானைப் போற்றிப் பாடினர், பின்னர், சுந்தரரும் மாணிக்கவாசகரும் பனையூர் இறைவனைப் போற்றியுள்ளனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'மாட மாளிகை கோபுரத்தோடு மண்டபம் வளரும் வளர்பொழில் பாடல் வண்டறையும் பழனத் திருப்பனையூர்' என்று அக்காலப் பனையூரைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். 'பாவிரி புலவர் பயிலும் பனையூர்' என்றும், 'மண்ணெலாம் முழவம் அதிர்தர மாடமாளிகை கோபுரத்தின் மேல் பண்ணியாழ் முரலும் பனையூர்' என்றும் போற்றுவதன் மூலம், சுவாமிகள் இப்பனையூரில் வாழ்ந்த காலமும் உண்டு என்பது புலனாகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புகலூர்ப் பெருமானை வணங்கிய பின்னர் திருப்பனையூர் வருகிறார். அப்போது ஆடவல்லான் திருவீதி உலா வந்து கொண்டிருக்கிறார்.

இறைவன் திருக்கூத்தாடிய காட்சியைக் கண்டு பரவசமாகிப் பதிகம் ஒன்று பாடி அருள் பெற்றதைச் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார். சம்பந்தர், 'பொறையார் மிகுசீர் விழா மல்கப் பறையார் ஒலி செய் பனையூர்' என்று, இங்கு மாதந்தோறும் பல வகையான திருவிழாக்கள் நடைபெற்று வந்த செய்தியைக் கூறுகிறார். இத்தனை சிறப்புக்களும் பெருமைகளும் பெற்றிருந்த திருப்பனையூர், இன்று எளிமை மிக்க ஒரு சிற்றூராக விளங்குகின்றது.

மூர்த்தி, தீர்த்தம், தலம் மூன்றும் இணைந்து சிறப்புப் பெற்றுள்ளது திருப்பனையூர்.

'இறைவன் உலகினுக்குத் தொடர்பாக உயிர்களைப் படைத்தான். உயிர்கள் நுகர்தற்குரிய அறிவு, அறிவற்ற பொருள்களை நிலம், நீர், தீ, வான், காற்று ஆகிய ஐம்பூதங்களின் அடிப்படையில் படைத்தான். இவை தோன்றுவதையும், மறைவதையும் பல்லூழிக் காலங்களிலும் காண்பவன் இவன் ஒருவனே. அந்த இறைவன் விரும்பியுறையும் தலம் இத்திருப்பனையூரே என்று சம்பந்தர் தமது பதிகத்தில் கூறியிருப்பது இத்தலத்தின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

ஆலயத்துக்கு எதிரிலுள்ள அமிர்த்த புஷ்கரணியும், வில்லூன்றிய தீர்த்தமும், ஊருக்கு வடகிழக்கில் உள்ள மாணிக்க நாச்சியார் திட்டுக்கு அருகேயுள்ள குளமும் அதாவது 'கொங்கையார் பலரும் குடைந்தாடும்' சுந்தரர் சந்தித்த தீர்த்தமும் ஆக, மூன்று தெய்வத் தீர்த்தங்கள் கொண்டது இத்தலம். கல்வெட்டுக்களில் 'அழகிய தேவர்' என்றும் 'அழகிய நாயனார்' என்றும் தேவாரங்களில் 'அழகியார்' என்றும் குறிக்கப் பெறுகின்ற ஸ்ரீ சௌந்தரேச்வரர் — அழகியநாதர் — பராசர முனிவரால் வழிபாடு செய்யப்பட்ட மூர்த்தியாவார்.

திருப்பனையூர் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நுழைவாயில் ராஜகோபுரமின்றித் தோரண வாயிலாகக் காணப்படுகிறது. மதில்களோடு அமைந்த இரண்டு திருச்சுற்றிடங்களின் நடுவே விமானத்தோடு கூடிய கருவறை மண்டபங்களுடன் அமைந்துள்ளது. தேரோடும் திருவீதிகளையும் சேர்த்துக் கொண்டால் மூன்று பிராகாரங்கள் ஆகின்றன.

இரண்டாவது நுழைவாயில் திருமுற்றவாயிலாகும். இவ்விரண்டு வாயில்களுக்கும் இடையேயுள்ள இரண்டாம் பிராகாரத்தின் முன்புறம் தவிர்த்து இதர மூன்று பக்கங்களிலும் மலர்ச் செடிகளும், மா, நெல்லி, தென்னை போன்ற மரங்களும் அடர்ந்து காணப்படுகின்றன.

முதல் வாயிலைக் கடந்ததும், வலப் பக்கத்தில் அம்பிகை பெரியநாயகியின் திருக்கோயில், தென்புறம் நோக்கி அமைந்துள்ளது அம்பிகை கோயில் மண்டபத்தில், கிழக்கு நோக்கியவாறு விமானத்துடன் கூடிய அழகிய சிறு விநாயகர் கோயிலைக் காண்கிறோம். இவருக்குப் பெயர் 'துணையிருந்த விநாயகர்'. வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்.

காவிரிக்குக் கரை கண்ட கரிகாற்சோழன், தாய் வயிற்றிலிருந்தபோதே தந்தை இளஞ்சேட்சென்னியை இழந்து அரசனாகும் உரிமையுடனேயே பிறந்தான். மகவைக் கொன்று அரசைக் கைப்பற்றச் சூழ்ச்சிகள் நடைபெற்றதால் கரிகாலனின் தாய் மாமனான 'இரும்பிடர்த் தலையார்' என்னும் சங்க காலப் புலவர், அரசியையும் குழந்தையையும் பனையூருக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் கோயிலில் அடைக்கலம் புகுந்தார்கள். எட்டு வயது வரை கரிகாலன் இங்கேயே வளர்ந்தான். அச்சமயம் அவனுக்குப் பெருந்துணையாக இருந்து காப்பாற்றியதால் இவ்விநாயகருக்குத் 'துணையிருந்த விநாயகர்' என்ற திருநாமம் ஏற்பட்டது.

இத் துணையிருந்த விநாயகர், தல விருட்சமான பனைமரத்தினடியில் கோயில் கொண்டுள்ளார். இச் சந்நிதிக்குப் பின்புறம் ஆண், பெண் ஆகிய இரண்டு பனை மரங்கள் இருக்கின்றன. இவற்றின் வளர்ச்சியில் ஒரு புதுமையையும், தெய்வத் தன்மையையும் காணலாம். இப்பனைமரங்கள் வளர்ந்து முதிர்ச்சியடையும் காலத்தில், வித்திட்டு முளைக்காததாக இரண்டு பனைகளின் அடியி லும் முறையே ஆண், பெண் வாரிசு மாறாமல் அடி வேரி லிருந்து பனங்கன்றுகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. ஆண் பனை, பெண் பனையைவிட உயரமாக இருக்கிறது. இப்பனைமரம் பிணிகள் போக்கும் கற்பக விருட்சமாக விளங்குகிறது. ஒரு மண்டலம் இதனை வணங்கினால் பல பிணிகள் நீக்குகின்றனவாம்.

இரண்டாவது வாயிலைக் கடந்தவுடன், கொடிமரத் தையும், நந்தி மண்டபத்தையும் காண்கிறோம். உட்பிரா காரத்தின் தென்மேற்கு மூலையில் இருக்கும் விநாயகருக்கு 'மாற்றுரைத்த பிள்ளையார்' என்று பெயர். சுந்தரர், திருப்புகலூரில் இறைவனை வேண்டிப் பொன் பெற்றுத் திருப்பனையூர் வந்தபோது அப்பொன்னை மாற்றுரைத்த காரணத்தால் பிள்ளையார் இப்பெயர் பெற்றார் என்று கூறுகிறார்கள்.

மேற்குப் பிராகாரத்தில் முருகன் சந்நிதியையடுத்து ஏழு சிவலிங்கங்கள் இருக்கின்றன. இவை சப்த ரிஷிகள் வழிபட்ட லிங்கங்கள் என்று கருதப்படுகின்றன. பனையூர் நாட்டிலுள்ள ஏழு சிவத் தலங்களின் சின்னங்கள் இவை என்றும், திருப்புகலூர், திருப்பயற்றங்குடி, திருவிற்குடி, திருவாஞ்சியம், நன்னிலம் பெருங்கோயில், திருக்கண்டீச் வரம், திருஅம்பர் மாகாளம் ஆகிய ஏழு பாடல் பெற்ற தலங்களையும் இங்கே ஒருசேர வழிபடலாம் என்று கூறு வோரும் உண்டு.

கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் மேற்கு நோக்கி அமைந்துள்ள பழமையான சிறிய கோயிலில் இருக்கும் சிவலிங்கம் 'தாலயமேச்வரர்' என்று அழைக்கப்படுகிறது

மூலஸ்தான கருவறையில், 'பழனத் திருப்பனையூர் அண்ணலாகி நின்றார் அவரே அழகியரே' என்று சுந்தரர் போற்றித் துதித்த சிவலிங்கத் திருமேனி, அழகும் ஒளியும் பொருந்தி விளங்குகிறது.

கருவறையின் தென்புறத்தில் முதல் மாடத்தில் பராசர முனிவரின் சிலை இருக்கிறது. அவரது இடக் கையில் அமுத கலசம் இருக்கிறது. பாற்கடலில் கடைந்தெடுத்த அமுத்தில் ஒரு பகுதியைக் கலசத்தில் எடுத்து வந்து, எல்லா நதிகளிலும் நீர்நிலைகளிலும் சேர்ப்பித்த இந்த முனிவர். பனையூர் திருக்குளத்திலும் ஒரு துளியைச் சேர்த்தார். அதனாலேயே அது அமுத தீர்த்தம் என்று பெயர் பெற்றது.

இக்கோயிலிலுள்ள சோமாஸ்கந்த மூர்த்தி விக்ரகம் தனிச் சிறப்பு பெற்றது. சிவபெருமானது இடக் கையில் மாங்கனி ஒன்று இருக்கிறது. அதன் புராண வரலாறு தெரியவில்லை. (அது பனம்பழமோ?)

திருப்பனையூர் ஸ்ரீ சௌந்தரேச்வரர் ஆலயத்தில் உள்ள பனை மரங்களின் அருகில் ஒரு கற்சிலையைக் கண்டோம். அதில், கூப்பிய கரங்களுடனும் மீசை தாடியுடனும் முனிவர் போன்ற ஒரு சிறிய உருவமும் பக்கத்தில் உருத்திராட்சம் அணிந்த ஒரு சிவனடியாரின் பெரிய வடிவமும் உள்ளன. சிவனடியாரைப் பார்த்தால் மாணிக்கவாசகர்போல் தோன்றியது. ஆனால், அதை உறுதிப்படுத்திக் கூற ஒருவராலும் இயலவில்லை. அச்சிலை, அக்கோயிலைச் சேர்ந்ததுதானா என்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. விவரம் அறிந்தவர்கள்தான் கூற வேண்டும்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் தமது கீர்த்தித் திருவக வலில், 'துருத்தி தன்னில் அடுத்தியொடு இருந்தும் திருப்பனையூரில் விருப்பன் ஆகியும்' என்று குறிப்பிட் டுள்ளார்.

திருப்பனையூரில் உறையும் பெருமானின் பெருமை களைப் பலவாறாகப் பேசுகிறார் திருஞானசம்பந்த சுவாமிகள்.

'அலரும் எரிசெஞ் சடை தன் மேல்
மலரும் பிறையொன் றுடையானூர்'

என்றும்,

'இடியார் கடல்
நஞ்சமுதுண்டு
பொடியா டிய
மேனியினானூர்'

என்று ,

'இலகும் முடிபத் துடையானை
அலல் கண்டருள் செய்
தவெம்மண்ணல்'

என்றும் ஏற்றிப் போற்றுகிறார்.

'பரவி எரியும் தீப் போன்ற சடை. அச்சடைமேல் வளரும் பிறை. இவற்றை உடைய எம்பெருமான் இப் பனையூரில் கோயில் கொண்டருளியுள்ளார். முன்பு தேவர்களும், அரக்கர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்த போது, இடி போன்ற முழக்கத்துடன் நஞ்சு வெளிப் போந்தது. சிவபெருமான் அந்த ஆலகால விஷத்தை அமிர்தமாக உண்டு அகில உலகங்களையும் காத்தார். திருக்கயிலையைப் பெயர்த்த இராவணனைத் துன்புறுத் திய சிவபெருமானே பின்னர் அவன்பட்ட துயரத்தைக்

கண்டு மனமிரங்கி அருளவும் செய்தார். அந்த சிவ பெருமான் விரும்பி உறையும் திருத்தலம் இத்திருப் பனையூரே.'

திருப்பனையூரில் சிவத் தொண்டர்களும், இன்னிசை யாலும், தோத்திரங்களாலும் வழிபடுகின்ற அடியார்களும் நிறைய இருந்திருக்கின்றனர். மூன்றாம் பாடலில், 'சிலரென் றுமிருந் தடி பேணப் பலரும் பரவும் பனையூரே' என்கிறார் சம்பந்தர். நான்காம் பாடலில், 'அடியார் தொழ மன்னவரேத்தப் படியார் பணியும் பனையூரே' என்று உறுதிப்படுத்துகிறார். ஆறாம் பாடலில் மீண்டும் 'தணியார் மலர் கொண்டிரு போதும் பணிவார் பயிலும் பனையூரே' என்று கூறி, 'தணியாத ஆர்வத்துடன் காலை மாலை இருவேளையும் மலர் கொண்டு பணிகின்ற சிவனடியார்கள் உறைகின்ற திருத்தலம் இது' என்கிறார்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருப்பனையூரின் இயற்கை வளத்தை அழகுற வர்ணித்து, 'அழகியர்' உறை யும் இத்தலத்தைப் போற்றியுள்ளார்.

'செங் கண் மேதிகள் சேடெறிந்து
தடம் படிதலிற் சேலினத் தொடு
பைங்கண் வாளைகள் பாய்...'

சிவந்த கண்களை உடைய எருமைகள் குளங்களில் இறங்கி அமிழ்வதால், சேறு வாரி இறைக்கப்படுகிறது. சேல் மீனினங்களும் வாளை மீன்களும் பக்கத்தில் உள்ள வயல்களில் பாய்கின்றன.

'கொங்கையார் பலருங் குடைந்
தாட நீர்க் குவளை மலர்தரப்
பங்கயம் மலரும் பழனத் திருப்பனையூர்

பெண்டிர் குளங்களில் நீராடுகின்றனர். நீர்க்குவளை மலர்கள் அவர்கள் கண்களைக் கண்டு மலர்கின்றனவாம்.

தாமரையோ, அவர்கள் அழகிய முகங்களைக் கண்டு மலர்கின்றனவாம்.

'குரங்கினங்குதி கொள்ளத் தேனுகக்
குண்டுதன் வயற்கெண்டை பாய்தரப்
பரக்குந் தண்கழனிப் பழனத் திருப்பனையூர்.''

குரங்கினங்கள் குதித்து விளையாடுகின்றன. அதனால் தேன் அடை சிதைந்து, அதிலிருந்து தேன் சொட்டுகிறது. அந்தத் தேனை வயலில் இருக்கும் கெண்டை மீன்கள் உண்டு மகிழ்ச்சியுடன் துள்ளுகின்றன. இத்தகைய வளம் மிக்க வயல்கள் சூழ்ந்த திருப்பனையூரில், 'அழகியர்' திருக்கோயில் கொண்டுள்ளார்.

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் திருவதிகை வீரட்டானம் காப்புத் திருத்தாண்டகம் ஐந்தாம் பாடலில், 'பழி நீர்மையில்லாப் பனங்காட்டூரும் பனையூர் பயற்றூர் பராய்த் துறையும்' என்று கூறியுள்ளார்.

இவ்வாறு சமயக்குரவர் நால்வராலும் பாடப்பெற்ற திருப்பனையூரைப் பற்றி ஸ்ரீ ராமலிங்க அடிகளார் 'நண்பனையூரன் புகழும் நம்பவென உம்பர் தொழுந் தண்பனையூர் மேஷம் சடாதரனே' என்று போற்றியுள்ளார்.

இளமைப் பருவத்தில் கரிகாற்சோழன் இக்கோயிலில் தஞ்சம் புகுந்து, விநாயகரின் துணையால் பின்னர் அரசுரிமை பெற்ற செய்தியை முன்பு கண்டோம். நன்றி மறவா அம்மாமன்னன், இக்கோயிலைப் பழுது பார்த்துச் செப்பனிட உத்தரவிட்டான். ஆனால், திருப்பணிக்குத் தேவையான பொருட்கள் கொண்டுவரப்பட்டபோது, வழியில் மடக்கப்பட்டு, அவை திருப்புகலூர் கோயில் கட்டப் பயன்படுத்தப்பட்டு விட்டனவாம். திருப்பனையூர் குடமுழுக்கைத தரிசிக்க வந்த கரிகாலன் இச்செய்தி அறிந்த, பூத கணங்களின் உதவியுடன் மீதியுள்ள பொருள்களைக் கொண்டு திருப்பணிகளை முடித்த, இரு-

கோயில்களின் குடமுழுக்கினை ஒரே நேரத்தில் நிறைவேற்றி மகிழ்ந்தானாம். இப்படியொரு செவிவழி வந்த செய்தி கூறப்படுகிறது.

புத்தகரம்

திருப்பனையூரிலிருந்து திரும்பி, நன்னிலம்—நாகப்பட்டினம் ரோடில் மூன்றாவது கிலோ மீட்டரில் உள்ள புத்தகரம் சிவாலயத்துக்கு வந்து சேர்ந்தோம். மிகச் சிறிய கோயில். ஸ்ரீ கைலாசநாதரும் ஸ்ரீ அகிலாண்டேச்வரியும் உறையும் அக்கோயில், மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. நந்திக்கு மேலுள்ள ஓலைக் கொட்டகை சிதிலமாகிக் கேவலமாகக் காட்சி தந்தது. இங்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன் திருப்பணி தொடங்கப்பட்டதாக அறிந்தோம். சுமார் பத்து சிமெண்ட் மூட்டைகள் கட்டித் தட்டிப்போய்க் கோயிலுக்குள் கேட்பாரற்றுக் கிடந்தன. நன்கொடை வசூலிக்க எத்தனை சிரமப்பட்டிருப்பார்களோ, பாவம்!

சிறிய தட்சிணாமூர்த்தியும் துர்க்கையும் இருக்கிறார்கள். விநாயகர், சுப்ரமணியர் சந்நிதிகள் இருக்கின்றன. சண்டிகேச்வரரும் பைரவரும் இருக்கின்றனர். பைரவர் பக்கத்தில் சிறிய சுப்ரமணிய சுவாமி எழுந்தருளியுள்ளார்.

ஆதலையூர்

புத்தகரத்திலிருந்து சன்னாநல்லூர் திரும்பி வரும் வழியில் ஆதலையூர் அடைந்தோம். இங்குள்ள கோயிலும்

பாழடைந்துள்ளது. சுவாமியின் பெயர் ஸ்ரீ பீமேச்வரர். பீமசேனன் பூஜை செய்த சிவலிங்கம் என்று கூறப்படுகிறது. அம்பிகையின் திருநாமம் ஆனந்தவல்லி. தட்சிணாமூர்த்தி, நவக்கிரகங்கள் உள்ளன. நந்தி அழகான மூர்த்தி. விநாயகர், சுப்ரமணியர் சந்நிதிகள் இருக்கின்றன. தனியாக ஒரு பாணம் மட்டும் இருக்கிறது. கருவறையில் ஒரு விநாயகர் இருக்கிறார். அவருக்கு 'அழகியநாதர்' என்று பெயராம்.

இக்கோயிலுக்கு எதிரில் ஓர் அல்லிக்குளம் இருக்கிறது

இக்கோயில் வேறொரு இடத்தில் இருந்ததாகவும் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் இங்கு மாற்றிக் கட்டப் பட்டதாகவும், பழைய இடம் திடலாக மாறி, தற்போது அது கைமாறிப் போய்விட்டதாகவும் அறிந்தோம்.

பா. கொந்தகை

ஆதலையூர் ஆலய குருக்களை, அகரக் கொந்தகையில் சந்தித்தோம். அவர் எங்களை, திட்டச்சேரி ரோடிலுள்ள பா. கொந்தகை என்ற கிராமத்துக்கு அழைத்து வந்தார். ஸ்ரீ பஞ்சவனநாதசுவாமியையும், பெரியநாயகியையும் தரிசித்துக் கொண்டோம். சிவலிங்கம் தட்டையாக நாகர்பிரதிஷ்டை சிலையைப் போலிருக்கிறது. அங்குள்ள பெரிய நடராஜர் சிலைக்கு, திருவாதிரை ஒரு நாள்தான் அபிஷேகம். தட்சிணாமூர்த்தி எண்ணெய் காணாமல் வெளிறிப் போயிருக்கிறார். பிராகாரத்தில் உள்ள வேர்ப்பலா மரத்தில் நிறைய காய்கள் இருந்தன. அதனடியில் சிவலிங்கங்களும், சில விக்ரகங்களும் காணப் பட்டன. தற்போது (1985) இடிந்த மதில் சுவரைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 1970 ல் திருப்பணி தொடங்கப்பட்டதாக அறிந்தோம்.

ஊரில் உள்ள பெருமாள் கோயில் மோசமான நிலையி லுள்ளது. விமானத்தில் பெரிய பெரிய செடிகள் மண்டிக் கிடந்தன.

திருக்கண்ணபுரம்

நன்னிலம் வட்டத்தில், திருப்புகலூரில் தொடங்கி திருப்பனையூர் வரையிலான தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலங்களையும், கிலமாகி புதுப்பிக்கப்பட வேண்டிய நிலை யிலுள்ள வேறு சில கிராமக் கோயில்களையும் தரிசித்து விட்டு, இவற்றுக்கு இடையே இருக்கும் திருக்கண்ணபுரம் என்ற வைணவத் திருப்பதியைத் தரிசிக்கச் செல்கிறோம்.

திருப்புகலூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தெற்கே யுள்ளது இத்திருத்தலம். 108 திவ்விய க்ஷேத்திரங்களில், இத்தலம் 'கீழை வீடு' என்று அழைக்கப்படுகிறது. மேலை வீடு ஸ்ரீரங்கம். ஏழு புண்ணியங்கள் நிரம்பப்பெற்ற தலம். கிருஷ்ண க்ஷேத்திரம், கிருஷ்ணாரண்யம், கிருஷ்ணபுரம், நித்ய புஷ்கரணி, உத்பலாவதக விமானம், காவிரி நதி, கிழக்கே சமுத்திரம். இந்த ஏழு புண்ணியங்களும் ஒருங்கே வாய்த்துள்ளதால் இங்கு திருவஷ்டாட்சர மந்திர ஸித்தி எளிதில் கிடைக்கும். இங்கு உறையும் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளே இம்மந்திரத்தைப் பலருக்கு உபதேசித்தருளிய தாக வழக்கு. இங்கு மங்களாசாசனம் செய்துள்ள திருமங்கையாழ்வார், 'கண்ணபுரத்து அம்மானே! மற்றெல் லாம் பேசிலும், திருவெட்டெழுத்தும் கற்று, நான் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை' என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

சர்வேச்வரனான ஸ்ரீமந் நாராயணன் கிருதயுக ஆதியில் பூர்ணிமை, ஹஸ்த நட்சத்திரத்தில் திங்கட்கிழமை

மாலையில் புஷ்கரணிக் கரையில் தோன்றிய தலம் இது. பெருமாளது மகிமைகளையும், தலத்தின் பெருமைகளையும் நைமிசாரணியத்தில் உள்ள முனிவர்களுக்குச் சூத புத்திரர் எடுத்துரைத்தார். இதன் விவரங்கள் ஸ்ரீபாத்ம புராணத்தில் ஐந்தாவது காண்டத்தில் பதினாறு அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளது.

உத்பலாவதகம் என்ற விமானத்தில் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். ஆலயத்துக்கு முன்னுள்ள தீர்த்தத்துக்கு நித்திய புஷ்கரணி என்று பெயர். அதில் எப்போதும் நீராடலாம். உத்தராயண காலத்தில் அனைத்துப் புண்ணிய தீர்த்தங்களும் முழு அம்சங்களோடு இதில் உறைகின்றன.

நித்திய புஷ்கரணி தோன்றிய விவரத்தை அகஸ்தியர் உரைக்கிறார். ஒரு நாள் அவர் பிரமலோகம் சென்றிருந்த போது, பல புண்ணிய தீர்த்தங்கள் பிரமனைக் காணவந்து, நீராடும் மக்கள் தங்கள் பாவங்களைக் கழிப்பதால் அந்தச் சுமையைத் தங்களால் தாங்க முடியவில்லை என்று முறையிட்டனவாம். அதனைக் கேட்ட பிரமன் அவற்றைத் திருக்கண்ணபுரம் திருத்தலத்துக்குச் செல்லுமாறும் அங்குள்ள நித்திய புஷ்கரணியில் கலந்தால் அனைத்துப் பாவங்களும் நீங்கப் பெறலாம் என்றும் பணித்தாராம். அகஸ்தியரும், அத்தீர்த்தங்களுடன் திருக்கண்ணபுரம் சென்றார். ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் இத்தீர்த்தங்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அவை உத்தராயண புண்ணிய காலத்தில் தங்கள் முழு அம்சத்துடன் நித்திய புஷ்கரணியில் படிய வேண்டி கட்டளையிட்டார். அன்று அந்தப் புண்ணிய காலத்தில் தீர்த்தங்கள் அனைத்தும் இப்புஷ்கரணியில் தங்கியிருப்பதால், மக்கள் இதில் நீராடி எல்லா விருப்பங்களையும் பெற்று இன்புறுகின்றனர்.

நித்தியபுஷ்கரணியில் உண்ணா நோன்பு போன்ற விரதங்கள் இருந்து நீராடுபவர்கள் பெறும் பலன்கள் பற்றி

புராணம் விரிவாக உரைக்கும். இரண்டு ஆண்டுகள் நீராடினால், மலடி கூடப் புத்திர பாக்கியம் பெறுவாள். மூன்று வருடங்கள் நீராடினால், உடல்நலம் பெறுவர். நான்கு வருடங்கள் நீராடினால் சிறந்த வாழ்வும், ஐந்து வருடங்களில் பல்கலை ஞானமும், ஆறு வருடங்களில் வளமுடைய பல ஸ்தானங்களும் சம்பத்தும் பெறலாம், ஏழு வருடங்கள் நீராடினால் உலகைக் காக்கும் வாய்ப்பும் கிட்டும். எட்டு ஆண்டுகள் நீராடினால் சித்த சுவாதீன மின்மை நீங்கும். ஒன்பது ஆண்டுகளில் இந்திர பதவியும். பத்தாவது ஆண்டில் பிரம்ம பதவியும், அதன் பின்னர், திருநாடும் பெறலாம். இத்தீர்த்தக்கரையில் நாம் செய்யும் தானம் பல்கிப்பெருகி நற்பலன்களை அளிக்கும்.

நித்திய புஷ்கரணி தவிர, வடக்குத் திருவீதியில் முக்தாகரம் தீர்த்தமும், தெற்கு வீதியில் பூதாவடம் தீர்த்தமும், மேலைத் திருவீதியில் அநந்தசரஸ் தீர்த்தமும் உள்ளன. பூதாவடத்தின் கரையில் உள்ள பூதம் உலக சிருஷ்டியின் போது தோன்றியது. இதன் பெயரைக் கூறியதுமே கொடிய நோய்கள் நீங்கி விடும் சக்தி பெற்றது

இத்தலத்துக்கு இரண்டு மைல் கிழக்கே கடல் உள்ளது. அக்கடலில் கருடனின் வடிவங்கொண்ட ஒருமலை மூழ்கியுள்ளது. அதற்குக் கருடமலை என்று பெயர். முன்னொரு காலத்தில் தேவேந்திரன் மலைகளின் சிறகுகளை வெட்டியபோது இம்மலை இத்தலத்தருகில் கடலில் ஒளிந்து கொண்டது. ஒரு சமயம் அதன் மீது பறந்த கருட பகவான், அத்தலத்தின் க்ஷேத்திரபாலகரை மதிக்காத காரணத்தால் வலுவிழந்து, அம்மலை மீது விழுந்தான். தன் கர்வபங்கத்தை உணர்ந்ததும், பெருமாளைக் குறித்துத் தவமியற்றத் தொடங்கினான். இதைக் கண்ட இந்திரன் அங்கிருந்து அகன்றான். அநேக ஆண்டுகள் தவத்தின் பயனாய், கருடன் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளது அருளைப் பெற்று, முன்புபோல் அவருக்கு ஊர்தியாகி, அவர் திருமுன்

எந்நேரமும் நின்று வணங்கும் பேறு பெற்றான். கருடன் தங்கியதால் இம்மலை அவரது வடிவமும் திருநாமமும் பெற்றது.

ஸ்ரீ சௌரிராஜப்பெருமானது அருளாசியால், விருத்திரன் என்ற அசுரனைக் கொன்று அதனால் ஏற்பட்ட பிரும்மஹத்தி தோஷம் நீங்கும் பொருட்டு நித்திய புஷ்கரணியின் கரையில் இந்திரன் அசுவமேத யாகம் செய்திருக்கிறான்.

உபரிசரவசு என்னும் மன்னன் இந்திரனின் நண்பன். ஒரு சமயம் இந்திரன் பூலோகத்தில் யாகம் செய்யும் நோக்கத்துடன், அதற்கான தீட்சை பெற்றதும், அசுரர்கள் தேவலோகத்துள் புகுந்து தேவர்களைத் துன்புறுத்தி, அவர்களை வெளியேற்றினர் உடனே இந்திரன், தன் படைகளுடன் சென்று அசுரர்களை வென்று வரும்படி உபரிசரவசு மன்னனை அனுப்பினான். அவனும் நண்பனின் பொருட்டுத் தேவலோகம் சென்று அசுரர்களுடன் போரிட்டு வென்று, தேவர்களை மீண்டும் அவரவர் ஸ்தானத்தில் அமரச் செய்தான்.

உபரிசரவசு பூமிக்குத் திரும்பும்போது, பசியும் தாகமும் எடுத்தது. பூமியில் இறங்கியதும் அங்கு ஒரு குளமும், தினைத் தோட்டமும் இருக்கக் கண்டான். அவசர அவசரமாகத் தினைக் கதிர்களைப் பறித்தான். அங்கிருந்த பதினாறு வயதுச் சிறுவன் ஒருவன் அதைத் தடுத்தான். இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. உபரிசரவசு அச்சிறுவனிடம் தோல்வி அடைந்தான். பின்னர், அச்சிறுவனின் சொற்படி திருக்குளத்தில் நீராடிவிட்டு எழுந்தபோது, அத்தோட்டத்தில் ஒரு விமானத்தையும், அதில் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளையும் கண்டான். தன்னைத் தோற்கடித்த சிறுவன், ஸ்ரீமந் நாராயணனே என்பதை உணர்ந்து, ஸ்ரீசௌரிராஜப் பெருமாளிடம் தன்னை மன்னித்தருளும்படி வேண்டினான். மன்னனை மன்னித்த

தோடு, தினைக் கதிர்கள் உத்பலர் என்ற ரிஷிகள் என்பதையும் விளக்கினார். பின்னர். அத்தலத்தை ஒரு நகரமாக நிர்மாணிக்கப் பெருமானிடம் அனுமதி பெற்ற உபரிசரவசு, விசுவகர்மாவைக் கொண்டு திருக்கண்ண புரத்தை அமைத்தான்.

முன்பு கருட மலைக்குத் திருவஷ்டாட்சர மந்திரத்தை உபதேசித்ததுபோல், உபரிசரவசு மன்னனுக்கும் பெருமாள் இம்மந்திரத்தை உபதேசித்தருளினார். இவ்வாறு ஒரு சோழ மன்னனுக்கும், பாண்டிய மன்னனுக்கும்கூட திருவஷ்டாட்சரத்தை உபதேசித்திருக்கிறார் சுவாமி.

சித்தசர்வசு என்ற பாண்டிய மன்னன் மணலூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தான். ஓர் உத்தராயண புண்ணிய காலத்தில் அவன் தாமிரவருணி நதியில் நீராடச் சென்றான். அவன் தன் பெண் உத்தமையின் கையைப் பிடித்துக் கொண்டு நதியில் இறங்கு கையில், திடீரென்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் இருவருமே அடித்துச் செல்லப்பட்டனர். இந்த விபத்துக் குறித்து மன்னனின் மைந்தர்களும் அமைச்சர்களும் பெரும் வேதனையுற்றிருக்கையில், ஆகாயத்திலிருந்து சித்தர் ஒருவர் இறங்கி வந்து, மன்னனும் மகளும் உயிரோடிருப்ப தாகவும் விரைவிலேயே அவர்களைக் காணலாம் என்றும் கூறினார்.

பாண்டிய மன்னது மைந்தரும், அமைச்சர்களும் அவனது வரவை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருந்தனர். அச்சமயம் சோழ மன்னனிடமிருந்து ஒரு தூதுவன் அங்கு வந்து, பாண்டிய மன்னன் சோழ மன்னனின் பாதுகாப்பில் இருப்பதாகவும். அவன் தன் மக்களைக் காண விரும்புவ தாகவும் கூறினான். அனைவரும் சோழ நாடு சென்றனர். அங்கு மன்னனையும் உத்தமையையும் கண்டனர். தீர்த்தங்கள் யாவும் தாமிரவருணியில் பெருகி, தன்னையும் தன் மகளையும் பிரமனது சபைக்கு அழைத்துச் சென்று

பின்னர் திருக்கண்ணபுரத்தில் கொண்டு போய்ச் சேர்த்த செய்தியை மன்னன் கூறக் கேட்டு மகிழ்ந்தனர். சோழ மன்னனது மைந்தனை உத்தமைக்குத் திருமணம் செய்து வைப்பது ஸ்ரீ சௌரிராஜப்பெருமாளுடைய திருவுளம் என்றும் அறிந்தனர். பெருமாளும் உடனிருந்து அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்துவிட்டு, பாண்டிய மன்னனுக்கும் சோழ மன்னனுக்கும் திருவஷ்டாட்சர மந்திரத்தை உபதேசித்தருளினார்,

ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளின் அனுமதி பெற்று, உபரிசரவசு மன்னன், விசுவகர்மாவின் உதவியோடு திருக்கண்ணபுரத்தை அமைத்தான் அல்லவா? அந்நகரில் பத்து வீதிகள் இருந்தன. விமானத்தை அடுத்த வீதிகவில் மாளிகைகள் உயர்ந்து விளங்கின. அவை அரசர்களுக் குரியவை. ஐந்து சுற்றுகள் மதில்கள் இருந்தன. ஆறாவது வீதி பொதுமக்களுக்கும், ஏழாவது வீதி அந்தணர்களுக்கும் ஒதுக்கப்பட்டன. நான்கு கடை வீதிகள். இடையிடையே யானைகளும், குதிரைகளும் கட்டுமிடங்கள் இருந்தன.

நகரத்தை அமைத்த பின்னர் வசுமன்னன் பெருமாளி டம் விடைபெற்றான். ஆனால், விஷ்வக்சேனரிடம் உத்தரவு பெறவில்லை. அதன் விளைவாக, அவன் பாதாளத்தில் வசிக்க நேரிடும் என்றும், ஆனால், அவன் எந்நேரமும் தம்மையே மனத்தில் தியானித்துக் கொண்டி ருப்பதால், அத்தண்டனையிலிருந்து விடுபடுவான் என்றும் சுவாமி கூறினார்.

இந்திரனைக் காண வேள்விச்சாலைக்குச் சென்றான் வசுமன்னன். அங்கு தேவர்களுக்கும் முனிவர்களுக்மிடையே ஒரு கருத்து வேற்றுமை நிலவக் கண்டான். யாகத்துக்கு உயிருள்ள ஆடுகளே பயன்படுத்தப்பட வேண்டுமென்று தேவர்கள்கூற, மாவினால் செய்த ஆடுகளே போதும் என்று முனிவர்கள் வாதித்தனர். நடுவராக இருந்து இதற்கொரு

தீர்வு காணும்படி வசுமன்னன் கேட்டுக்கொள்ளப் பட்டான். சாத்திரப்படி உயிருள்ள ஜீவன்களே சிறந்தவை என்று வசு மன்னன் தீர்ப்புக் கூற, கோபமுற்ற முனிவர்கள் 'நீ பாதாளம் செல்வாயாக' என்று சபித்தனர்.

வசு மன்னன் தன் இறுதிக் காலத்தில் பாதாளம் சேர்ந்தான். அசுரர்கள் அவனுடன் போரிட்டுத் தோற்றனர். அவனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் தங்கள் குருவான சுக்கிரனிடம் சென்றனர். வசுவை ஒரு நாஸ்திகனாக்கினால் அவனை எளிதில் வென்று விடலாம் என்றார் சுக்கிரன். அசுரர்கள் அந்தணர் வேடம் புனைந்து, வசுவிடம் சென்று நாஸ்திக வாதம் புரிந்தனர். ஆனால், அம்மன்னன் பெருமாளையே நினைத்துக் கொண்டிருந்ததால், அசுரர்களால் அவன் மனத்தை மாற்ற முடியவில்லை.

ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் கருட பகவானைப் பாதாளத்துக்கு அனுப்பி வைத்து, வசு மன்னனை அழைத்துவரச் சொன்னார். கருட பகவானோடு திரும்பிய உபரிசரவசு மன்னன், வடக்குத் திருவீதியிலுள்ள முக்தா கரம் என்ற திருக்குளத்தின் வழியாகப் பெருமாளது உப தேசம் பெற்று, முக்தியடைந்தான்.

இந்த வசுமன்னன், சேர மன்னின் மகள் சுந்தரியை மணந்து கொண்டான், நெடுங்காலம் அவனுக்கு மகப்பேறு கிட்டவில்லை. அதனால் வருந்தியவன், வசிஷ்ட முனிவரை அணுகி, அவரது கட்டளைப்படி அசுவமேத யாகம் செய்தான். பின்னர், மகப்பேற்றுக்கான இஷ்டி (யாகமும்) நடந்தது. அக்னிக் குண்டத்தினின்றும் ஒரு புருஷன் வெளிவந்து இரண்டு செங்கழுநீர் மலர்களை அரசனிடம் கொடுக்க, அவனது கட்டளைப்படி அரசி அவற்றை முகர்ந்து பார்க்க, அவள் கருவுற்றாள். பதுமினி என்ற பெண்ணையும், பதுமன் என்ற மகனையும் ஈன்றாள் சுந்தரி.

பதுமினி வளர்ந்து பருவமடைந்தாள். மனத்தால் ஸ்ரீ சௌரிராஜப்பெருமாளையே வரித்தாள். அவரையே திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள். அரசன், இளவரசியின் மனத்தை மாற்ற முயற்சித்து, தோல்வி கண்டான்.

மீண்டும் ஒரு முறை தேவலோகத்துக்குச் சென்ற வசு மன்னன் இந்திரனுக்குச் சேவை புரிந்துவிட்டுத் திரும்புகையில் திருக்கண்ணபுரத்தில் இறங்கி, பெருமாளைத் தரிசித்து தன் மகள் பதுமினியின் விருப்பத்தைக் கூற, அதைக் கேட்ட பெருமாள் அவளை மணந்து கொள்ள இசைந்தார். அதன் படி, வைகாசி பௌர்ணமியும் அனுஷ நட்சத்திரமும் கூடிய திங்கட்கிழமையன்று பெருமானுக்கும் பதுமினிக்கும் திருமணம் இனிது நடந்தேறியது. சுவாமி பதுமினியைத் தனது திருமார்பில் ஏற்றுக் கொண்டார்.

முன்னொரு காலத்தில் அச்சுதன் என்ற அர்ச்சகர் பெருமாளுக்குச் சிரத்தையுடன் முறை தவறாமல் பூஜை செய்து வந்தார். அவரது மகன் ஸ்ரீதரன் சிறந்த ஞானம் பெற்றவன். சாத்திரம் புராணங்கள் கற்றவன். மன்மதனுக்கு ஒப்பான அழகு வாய்ந்தவன்.

அச்சமயம் கோயிலில் கணிகை ஒருத்தி பணியாற்றி வந்தாள். இனிய சொல்லும் மான் போன்ற கண்ணழகும் உடைய அவள் ஸ்ரீதரனைத் தன் மாயவலையில் சிக்க வைத்தாள். ஒரு நாள் அர்த்தஜாமத்தின் போது சோழ மன்னன் பெருமாளைச் சேவிக்க வந்தான். அப்போது சுவாமியின் மீதிருந்த மாலையை எடுத்து அரசனுக்கு அணிவித்தான். அதில் ஒரு தலைமுடி இருந்ததைக் கண்டு அரசன் வெகுண்டான். அவனுக்குச் சந்தேகம் எழுந்தது. அப்போதுதான் அர்ச்சகருக்கு உண்மை உதயமாயிற்று. முதல் நாள் இரவு, கணிகையின் தலையை அலங்கரித்த

மாலை அது. அதை அவர் பெருமாளுக்குச் சாத்தியிருக்கிறார். மாபெரும் பாவம் அல்லவா?

அரசன் அர்ச்சகரைக் காவலில் வைத்து மறுநாள் விசாரணை செய்யும்படி உத்தரவிட்டான். அவ்விரவு முழுவதும் ஸ்ரீதரன் பெருமாளையே தியானம் செய்து கொண்டிருந்தார். தனது தவற்றை உணர்ந்து கண்ணீர் விட்டு அழுதார். தவறான பாதையிலிருந்து திரும்புவதாகச் சபதம் செய்தார். அரச தண்டனையிலிருந்து எப்படியாவது தன்னைச் காக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

மறுநாள் காலை தரிசனத்துக்குச் சென்றபோது, பெருமாளுடைய சிரசில் கேசம் இருப்பதைக் கண்ட மன்னன் திடுக்கிட்டான். தன் கண்களையே நம்ப முடியாமல், அர்ச்சகர் ஒருவரை அழைத்து முடியை இழுக்கச் செய்தான். அவ்வாறு செய்தபோது, ரத்தத் துளிகள் மன்னன் மீது படிந்தது. அர்ச்சகரைக் காப்பாற்ற பெருமாள் இப்படியொரு திருவிளையாடல் புரிந்தது கண்டு ஆச்சரியமடைந்தான். வேறு வழியின்றி ஸ்ரீதரனை விடுவித்து, அவன் பக்தியைப் போற்றும்வகையில் நிலதானம் செய்தான். அன்று முதல், கணிகையின் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு, தூய தெய்வீகப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் அர்ச்சகர்.

சௌரிராஜன் என்ற பெயர் தோன்ற இந்த நிகழ்ச்சி தான் காரணம்.

வீரசோழ பூபாலன் என்ற மன்னன் ஆண்டுவரும் காலத்தில் கிழக்குக் கடலருகே இருபது ஊர்களிலிருந்து வரி வசூலித்து மன்னனிடம் சேர்ப்பிக்கும் பணியைச் செய்து வந்தார் முனியன் என்ற முனியதரன். அவர் சிறந்த அறிஞர். ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டவர். திருக்கண்ணபுரத்தில் தங்கிப் பணியாற்றிக் கொண்டிருந்தவர், அர்ச்சகரைப் போன்றே

ஒரு கணிகையிடம் மையல் கொண்டு இன்ப வாழ்வில் ஈடு பட்டிருந்தார்.

ஒரு சமயம் கடும் பஞ்சம் வந்தது. மக்கள் பட்டினியால் வாடினர். கோயில் ஆராதனையும் சரிவர நடைபெற முடியாத நிலை. இதைக் கண்ட முனியன், வரிப் பணத்தைக் கோயில் பூஜைக்காகவும், ஏழைகளுக்காகவும் செலவு செய்தார். அவரது இரக்க குணத்தைக் கண்டு பாராட்டாமல் அவர் மீது பொறாமை கொண்ட சிலர் வரிப்பணத்தையெல்லாம் எடுத்துத் தன் காதலிக்குத் தானம் செய்து விட்டதாகப் புகார் கொடுக்க, அரசன் அவரைச் சிறையிலிட உத்தரவிட்டான்.

காதலி ஆறாத்துயருற்றாள். வேதனைத் தீயில் கருகினாள். ஊணும் உறக்கமும் ஒழித்தாள். பெருமாவிடம் சென்று கதறித் தீர்த்தாள். விரைவிலேயே தன் காதலன் விடுதலை பெறாவிடில், தான் தீக்குளிக்கப் போவதாகச் சபதமிட்டாள். அவள் கொடுத்திருந்த கெடுவுக்கு முதல் நாள் இரவு, சுவாமி அரசனின் கனவில் தோன்றி உண்மையை உரைத்தார். அரசன் தன் தவற்றை உணர்ந்து, முனியனைச் சிறையினின்றும் விடுவித்தான். அவர் திருக்கண்ணபுரத்துக்குத் திரும்பி, தீயில் விழுவதற்குத் தயாயிருந்த கணிகையைக் காப்பாற்றி ஆறுதல் கூறினார்.

அன்றிரவு மனைவி 'விரகாதிபோகம்' சமைத்த பொங்கலைச் சாப்பிடுவதற்கு முன் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளை நினைத்து ''இவ்வடிசில் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளுக்கு அர்ப்பணம்'' என்று கூறினார் முனியன். மறுநாள்காலையில் பெருமாளின் மீது பொங்கல் சிதறியிருப்பதோடு, முனியதரனின் இல்லம் வரை அது சிந்தியிருப்பதையும் கண்ட பக்தர்கள் பெருமாளது மகிமைகளைப் பற்றி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். முனியன் நினைத்தபடி அப் பொங்கலைப் பெருமாள் ஏற்றுக் கொண்டதைப் பலவாறு பாராட்டிப் பேசினர். அன்று முதல் அர்த்த

ஜாமத்தில் பெருமாளுக்குப் பொங்கல் அமுது படைக்க ஏற்பாடு செய்தார் முனியதரன். அதற்காக மானியமும் விட்டார். அது இன்றும் நடைபெறுகிறது. அதற்கு முனியோதனம் என்று பெயர். ஓதனம் என்றால் சமைத்த சோறு. 'முனீயோதனம்' என்றால் முனியன் கட்டளைப்படி பெருமானுக்கு வழங்கும் பொங்கல் என்று பொருள். வழக்கில் 'முனியோதரன் பொங்கல்' என்று கூறப்படுகிறது. ஆழ்வார் சந்நிதிக்கு வடக்கில் முனியதரன் சிலையும் விரகாதிபோக நாச்சியார் சிலையும் இருக்கின்றன.

திருக்கண்ணபுரத் திருக்கோயிலின் ராஜகோபுரம் ஏழு நிலைகள் கொண்டது. அதன் இடப்புறத்தில் கோபுரம் ஏறும் இடத்துக்குக் கிழக்கில் கோபுரச் சுவரில் மேற்குத் திசை நோக்கி ராசிகளுடன் நவக்கிரகச் சக்கரம் பதித்கப் பட்டுள்ளது. அதற்கு இரு வேளைகளிலும் திருவாராதனம் நடைபெறுகிறது.

கோபுரத்தின் வலப் பக்கத்திலுள்ள மேற்குச் சுவரில், நின்ற திருக்கோலத்தில் கிழக்கே நோக்கிய திருமுக மண்டலத்துடன் கூடிய ஸ்ரீ தாமோதரக் கண்ணனைத் தரிசிக்கலாம். அச்சந்நிதியிலும் இரு வேளை திருவாராதனம் உண்டு. உற்சவமூர்த்தி மூலவரின் கருவறையில் உள்ளது.

பலிபீடத்தையும் துவஜஸ்தம்பத்தையும் தரிசித்துக் கொண்டு, மூன்று நிலைகளுடன் கூடிய சிறிய கோபுரத்தைக் கடந்து செல்கிறோம். அங்கு சிறிய பலிபீடத்தைக் காண் கிறோம்.

சிறிய கோபுரத்தின் இடப் புறமாக நெற்களஞ்சியமும், அதையடுத்து ஆழ்வார்கள் சந்நிதியும் இருக்கின்றன.

தெற்குப் பிராகாரத்தில் மதிற்சுவரையொட்டி ஸ்ரீ விபீஷணாழ்வார், ஸ்ரீ ரங்கனாதரும், ஸ்ரீ சௌரிராஜனும் ஒருவரே என்ற தியான பாவத்தில் கரம் கூப்பி நின்றபடி சேவை சாதிக்கிறார். திருவரங்கச்செல்வரின் நடையழகைச்

சேவிக்க விரும்பிய விபீஷணாழ்வாருக்கு ஒவ்வொரு அமாவாசையும், 'நமது நடையழகைக் கீழவீடான திருக்கண்ணபுரத்தில் கண்டு களிப்பீராக' எனக் கூறியபடி, ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் விபீஷணாழ்வாருக்கும், பக்தகோடிகளுக்கும் திவ்ய தரிசனம் தந்தருளுகிறார்.

விபீஷணாழ்வார் சந்நிதியிலிருந்து வடக்கே, தாயார் சந்நிதி வரையில் கருங்கல்லாலான பத்தி உலா மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தில் பெருமாளும் தாயாரும் எழுந்தருளும் பஞ்சபர்வ உற்சவங்களில் பத்தி உலாத்துதல், சேவாகாலங்கள்'' திருவந்திக்காப்பு முதலியன நடைபெறும்.

பத்தி உலாமண்டபத்தில் வடக்கிலுள்ள படிகளில் ஏறிப் பெரிய மண்டபம் வந்து மேற்கில் திரும்பினால், பெருமாள் சந்நிதியில் இருப்போம். மகாமண்டபத்தின் வாயிலின் இருபுறமும் ஜெய - விஜய துவாரபாலகர்கள் கம்பீரமாக காட்சி தருகிறார்கள். மகாமண்டபத்தைக் கடந்தால் அர்த்தமண்டபம்.

கருவறையில் 'கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ண புரத்தமுதன்' சிலாருபத்தில் அருள்வரதராக, பத்மாசனத்தில் பதித்த திருவடிகளுடன் சர்வாங்க சுந்தரரராக எழுந்தருளியுள்ளார். ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள் ஆகிய நான்கு தேவிகளுடன் நின்ற திருக்கோலத்தில், பிரயோகச் சக்கரத்துடன், திருக்கரத்தல் திருச்சங்கம் பொலிய, காட்சி தருகிறார். உற்சவமூர்த்தி கண்ணபுரமுடையான் உபநாச்சியாருடன் எழுந்தருளியுள்ளார். வெள்ளியிலான செல்வரும், சந்தானகிருஷ்ணனும் சக்கரத்தாழ்வாரும் அங்கு கொலுவீற்றிருக்கின்றனர்.

இமவானின் புத்திரனான கருடபர்வதம், சக்ரதாரியாகத் தன் கண் முன்னால் காட்சி தந்து ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளை, அடி முதல் முடிவரைத் தரிசித்து மகிழ்ந்தான். அப்போது, தோளை அலங்கரிக்க வேண்டிய தோள் வளை பெருமாளது மணிக்கட்டை அலங்கரிக்கக் கண்டு,

ஆபரணம் இடம் மாறியிருக்கும் விசித்திரத்தைப் பற்றிக் கேட்டான். அதற்குப் பெருமாள், சித்தரவசு என்ற பாண்டிய மன்னனின் குமாரத்தி உத்தமைக்கும், சோழ மன்னனின் புத்திரனான ஸுசங்கனுக்கும் தாம் திருமணம் முடித்து வைத்தபோது, சித்தரவசு இத்தோள்வளையைத் தனக்கு அளித்ததாகவும், அதை அணிய விருப்பிக் கை மணிக்கட்டுவரை மாட்டிக் கொண்டிருந்ததாகவும், அதைப் பார்த்த பாண்டிய மன்னன், 'பிரபோ, இது தங்கள் திருமணிக்கட்டில் இருப்பது மிக அழகாய் இருக்கிறது' என்று கூறவே, மன்னனது மகிழ்ச்சிக்காக தோள்வளையை மணிக்கட்டிலேயே அணிந்திருப்பதாகவும் கூறி, இதைக் காண்பவர் யாவரும், பரமபதம் அடைவர் என்றும் அருளினார்.

விமானத்தில், வாடிய உடலுடன் கூடிய முனிவர்கள் தவமியற்றிக் கொண்டிருப்பதால் அது உத்பலாவதக விமானம் என்று பெயர் பெற்றது. இந்த விமானத்தின் தென்புறம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியின் சிதைந்த வடிவத்தைக் கண்டோம்.

மகாமண்டபத்தின் வடக்கே திருமஞ்சன மண்டபம். அதன் கீழ்ப்புறம் பள்ளியறை. பள்ளியறையின் கீழ்ப்புறம் சேனைமுதலியார் சந்நிதி.

பெருமாள் சந்நிதியின் வடப்புறம், ஸ்ரீசௌரிராஜப் பெருமாள் சிலா வடிவத்திலும் பஞ்சலோகத்திலும் எழுந்தருளியிருக்கிறார். இவருக்கு மணியம் சௌரிராஜப் பெருமாள் எனப் பெயர். இவர் ஒவ்வொரு பங்குனி மாதம் ஹஸ்த நட்சத்திரத்தின்போதும் மாட வீதியில் எழுந்தருளுவார். இச்சந்நிதிக்கு வடக்கில் வாகன மண்டபம் இருக்கிறது.


மகாமண்டபத்தில் வடக்குச் சுவர் பக்கமாக, ஸ்ரீராமர் சந்நிதி அமைந்துள்ளது.

ஸ்ரீ சௌரிராஜப்பெருமாளின் வலப் பக்கம் ஸ்ரீ கிருஷ்ணபுரநாயகியின் சந்நிதியைத் தரிசிக்கிறோம். உற்சவரின் பெயர் கண்ணபுரநாயகி. பிரதிவெள்ளிக்கிழமை தோறும் தாயார் புறப்பாடு உண்டு. பெருமாள் அத்யயன உற்சவம் முடிந்த பிறகு தாயாருக்கும் ஒன்பது நாள் உற்சவம் நடைபெறுகிறது. அன்று தாயார் பெருமாள் சந்நிதிக்கு எழுந்தருளி, பெருமாளுடன் சேர்த்து உற்சவம் கண்டருளுகிறார். பங்குனி உத்தரத்தன்று ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தாயார் சந்நிதிக்கு எழுந்தருளி தாயாருடன் சேர்த்து உற்சவம் நடைபெறுகிறது.

நம்மாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் ஆகியோர் கண்ண புரம் அமுதனை மங்களாசாசனம் செய்திருக்கிறார்கள்.

கருடபர்வதம், ''அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபிக்காமலே அதன் பலனை அடைய வேறு ஏதாவது உண்டா?'' என்று பெருமாளைப் பார்த்துக் கேட்டதாம். அதற்கு ஸ்ரீசௌரிராஜப்பெருமாள் ''ஸ்ரீரங்கம், வேங்கடமலை, ஸ்ரீமுஷ்ணம், வானமாமலை, சாலக்கிராமம், புஷ்கரம், நரநாராயணாச்சரமம், நைமிசாரண்யம் என்ற முக்தி தரும் தலங்களில் அஷ்டாக்ஷரத்தின் ஒவ்வொரு அக்ஷர சொரூபியாய் நான் இருந்து கொண்டு மோட்சமளிக்கிறேன். சப்த புண்ணியங்கள் கொண்ட இத்திருக் கண்ணபுரத்திலே மட்டும் அஷ்டாக்ஷரத்தின் சர்வாட்சர சொரூபியாய் நான் பக்தர்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருக்கிறேன். நித்யபுஷ்கரணியில் நீராடி தானங்கள் செய்பவர்களுக்கு அஷ்டாக்ஷர ஜபத்தின் பயன் கிட்டும், மகாமகத்தில் பிராகாரப் பிரதட்சிணம் செய்வோர், பதினாறு முறை நித்தியபுஷ்கரணியை வலம் வருவோர், உத்பலாவதக விமானத்தை 108 முறை வலம் வருவோர், நித்யபுஷ்கரணிக் கரையில் துளசி வனம் வைத்து வளர்ப்போர், அஷ்டாக்ஷர மந்திர ஜப பலனை எளிதாகப் பெறுவர்'' என்று கூறியருளினார்.

'திருத்தலப் பெருமை' நிறைவுற்றது.



ஞான சரஸ்வதி

(கங்கை கொண்ட சோழபுரம்)